බලශක්ති අමාත්‍යාංශය
வலுசக்தி அமைச்சு
Ministry of Energy





# 2025
# ප්‍රගති වාර්තාව
# முன்னேற்ற அறிக்கை
# Progress Report

# வலுசக்தி அமைச்சு

## முன்னேற்ற அறிக்கை – 2025

## (2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்)


இல. 437 காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி: 011 2574922
தொலைநகல்: 011 2574741
இணையத்தளம்: www.powermin.gov.lk
www.energymin.gov.lk

# உள்ளடக்கம்


பக்கம்

கௌரவ. அமைச்சரின் ஆசிச் செய்தி VII

செயலாளரின் செய்தி IX

அறிமுகம் XI

**அத்தியாயம் 01 – வலுசக்தி அமைச்சு 1**

நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று
1.1 வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்
1.2 வலுசக்தி அமைச்சின் பிரதான பிரிவுகள்
1.3 வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்
1.4 2025 ஆம் ஆண்டில் மின்சக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
1.5 2025 ஆம் ஆண்டில் வலுசக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
1.6 2025செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறான வலுசக்தி அமைச்சின் நிதியியல் முன்னேற்றம்

**அத்தியாயம் 02 – இலங்கை மின்சார சபை (CEB) 48**

**அத்தியாயம் 03 – வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம 61**

**அத்தியாயம் 04 – இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை 65**

**அத்தியாயம் 05 – இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை 78**

**அத்தியாயம் 06 – இலங்கை அணுசக்தி சபை 85**

**அத்தியாயம் 07 – வரையஞக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம் 99**

**அத்தியாயம் 08 – ஶ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் 102**

**அத்தியாயம் 09 – எல்.ரி.எல் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் 105**

**அத்தியாயம் 10 – இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 124**

**அத்தியாயம் 11 – வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் 133**

**அத்தியாயம் 12 – இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை 139**

# அட்டவணைகள்

பக்கம்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | 2025 செப்ரெம்பரின் இறுதியில் உள்ளவாறு நுகர்வோரின் என்னிக்கை | 6 |
| அட்டவணை 1.2 | 2025 ஜுன் இறுதியில் உள்ளவாறான மின்சார உற்பத்திக் கலவை | 7 |
| அட்டவணை 1.3 | 2025 யூன் இறுதியில் உள்ளவாறான நிறுவப்பட்ட திறன் | 9 |
| அட்டவணை 1.4 | தற்போதுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் இலக்குகளின் செயற்திறன் | 19 |
| அட்டவணை 1.5 | நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளின் முன்னேற்றம் | 19 |
| அட்டவணை 1.6 | 2025 ஆசிய-பசிபிக் பிராந்திய மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலை போக்குகள் - 2025 | 28 |
| அட்டவணை 1.7 | பெற்றோலியப் பொருட்களின் சராசரி, அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச விலைகள் - 2025 | 29 |
| அட்டவணை 1.8 | எரிபொருளின் சராசரி மாதாந்த இறக்குமதி செலவு - 2025 | 29 |
| அட்டவணை 1.9 | இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் - 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு | 30 |
| அட்டவணை 1.10 | 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி செலவினம் | 31 |
| அட்டவணை 1.11 | எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை (2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு) | 31 |
| அட்டவணை 1.12 | 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள் | 32 |
| அட்டவணை 1.13 | நாளாந்த சராசரி எரிபொருள் நுகர்வு | 33 |
| அட்டவணை 1.14 | 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நுகர்வோர் சேவை மையங்களின் எண்ணிக்கை | 36 |
| அட்டவணை 1.15 | 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சந்தை விலைகள் | 37 |
| அட்டவணை 1.16 | 2025 ஆம் ஆண்டின் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் செயற்பாடுகள் | 39 |
| அட்டவணை 1.17 | எரிபொருள் களஞ்சிய விரிவாக்கல் திட்டத்தின் விபரங்கள் | 45 |
| அட்டவணை 1.18 | எரிபொருள் குழாய் அபிவிருத்தி திட்டங்கள் | 46 |
| அட்டவணை 1.19 | 2025 ஆம் ஆண்டுக்கான மூலதன வரவுசெலவுத்திட்டத்தின் நிதியியல் முன்னேற்றம் - வலுசக்தி அமைச்சு (தலைப்பு 119) | 46 |
| அட்டவணை 2.1 | பாரிய மின் பிறப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் | 49 |
| அட்டவணை 2.2 | சக்திச் சேமிப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் | 49 |
| அட்டவணை 2.3 | றைமை நவீனப்படுத்தல் மற்றும் துணைச் செயற்றிட்டங்கள் | 49 |
| அட்டவணை 2.4 | NCRE அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் | 49 |
| அட்டவணை 2.5 | நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின்சார பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் | 52 |
| அட்டவணை 2.6 | மின்சார விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும் | 58 |

# அட்டவணைகள்

பக்கம்


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.7 | உறுதி செய்யப்படாத மின் பிறப்பாக்கம், சேமிப்பு, NCRE, மற்றும் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் | 60 |
| அட்டவணை 3.1 | நிறுவனத்தின் நிதி நிலை யூன் 2020 - 2025 | 62 |
| அட்டவணை 4.1 | இ.நி.பெ.த.அ.ச வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் | 66 |
| அட்டவணை 4.2 | EOI செயற்பாட்டின் கீழான கருத்திட்டங்கள் பற்றிய விபரம் | 68 |
| அட்டவணை 4.3 | ஆகஸ்ட் மாத இறுதியாகும்போது பல்வேறு மட்டங்களில் செயற்படுகின்ற கருத்திட்டங்கள் பற்றிய விபரம் | 69 |
| அட்டவணை 4.4 | முன்மொழியப்பட்டுள்ள மின்சார உற்பத்தி சேர்க்கை | 72 |
| அட்டவணை 4.5 | தேசிய கருத்திட்டங்கள் பற்றிய விபரம் | 74 |
| அட்டவணை 5.1 | ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் | 80 |
| அட்டவணை 5.2 | தேசிய பயிற்சிப் பாடநெறிகள் | 81 |
| அட்டவணை 5.3 | பிரமாணங்கள், விதிகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல் | 81 |
| அட்டவணை 5.4 | ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் | 82 |
| அட்டவணை 6.1 | ஆகஸ்ட் 2025 வரையான மொத்த வருமானம் - ரூ. 52.9 மில்லியன் | 86 |
| அட்டவணை 6.2 | 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் இறுதி வரை கதிரியக்க சேவைகள் மூலம் இகாநி பெற்ற வருமானம | 86 |
| அட்டவணை 6.3 | முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் | 94 |
| அட்டவணை 10.1 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (202 -2025.09.30) | 125 |
| அட்டவணை 10.2 | சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் (மெற்றிக் தொன்) (2022-2025.09.30) | 127 |
| அட்டவணை 10.3 | 2025.09.30 ஆம் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் | 127 |
| அட்டவணை 10.4 | மொத்த எரிபொருள் விற்பனை (2023 - 2025.09.30) | 128 |
| அட்டவணை 10.5 | மின்சார உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்ட எரிபொருட்கள் (2022 - 2025.09.30) | 129 |
| அட்டவணை 10.6 | ஜெட் A-1 விற்பனைகள் - (2022 - 2025.09.30) | 129 |
| அட்டவணை 10.7 | உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனைகள் - (2022 - 2025.09.30) | 130 |
| அட்டவணை 11.1 | கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் களஞ்சியசாலை தகவல்கள | 134 |
| அட்டவணை 11.2 | 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறான எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் | 135 |

# வரைபு/வரைபடம்/விளக்கப்படம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| வரைபு 1.1 | 2025 அக்டோபர் 14 ஆம் திகதியில் உள்ளவாறான மின்சார உற்பத்தி விவரக்குறிப்பு, பகல் நேரத்தில் ஒவ்வொரு மூலத்தின் அளவுகளுடன | 7 |
| வரைபு 1.2 | மொத்த மின்சார உற்பத்தியில் மின்சார உற்பத்தி கலவை வீதத்தில் | 8 |
| வரைபு 1.3 | நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தில் உள்ளதைப் போல இலக்கு கொள்ளளவு விரிவாக்கங்கள் | 9 |
| வரைபு 1.4 | 2025 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த சராசரி நாளாந்த எரிபொருள் நுகர்வு | 33 |
| வரைபு 1.5 | 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட சந்தை விலைகள் | 37 |
| வரைபு 4.1 | ஜேஉசுநுதிரட்டிய மொத்த திறன் | 68 |
| வரைபு 4.2 | கூரைகள் மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய வலுசக்தி அமைப்புக்களின் விருத்தி | 69 |
| வரைபு 10.1 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்கள் (2022-2025.09.30) | 126 |
| வரைபு 10.2 | ஜெட் A-1 விற்பனை - (2022 - 2025.09.30) | 130 |
| வரைபு 11.1 | எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் - 2025 | 135 |
| வரைபடம் 1.1 | தற்போதுள்ளள, உறுதிசெய்யப்பட்ட மற்றும் மின் நிலையங்களின் அமைவிடம் | 10 |
| வரைபடம் 1.2 | 2030 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்சார பரிமாற்றல் அமைப்பு | 16 |
| வரைபடம் 12.1 | 2025 மன்னார் கடற்படுகை அனுமதிப்பத்திர சுற்றுக்கு ஒதுக்கப்பட்ட அண்ணளவான பகுதி: 2025 - 01) | 141 |
| விளக்கப்படம் 1 | LECO விநியோக மின்மாற்றிகளில் உலர்மின்கல சேமிப்பு அமைப்புகள் (மூலம் - LECO) | 22 |
| விளக்கப்படம் 2 | திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணை | 42 |



# கௌரவ. அமைச்சரின் ஆசிச் செய்தி

தற்போதைய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், **"முன்னேற்ற அறிக்கை – 2025"** க்காக இவ் ஆசிச் செய்தியை தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, "வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப அமைச்சு பல நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆரம்பித்து பூர்த்திசெய்துள்ளது. பல கொள்கை மட்டத்திலான தலையீடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது செயல்பாட்டிலுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் கிடைத்த மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாக, **2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தில்** செய்யப்பட்ட திருத்தம் குறிப்பிடத்தக்கது. அனைத்து பங்குதாரர்களுடனும் விரிவான ஆய்வும் ஆலோசனைகளும் மேற்கொண்ட பின்னர் இந்த திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. திருத்தப்பட்ட சட்டத்தில் தற்போது, இலங்கை மின்சார சபையின் (CEB) கீழ் நான்கு புதிய நிறுவனங்களை உருவாக்குவது உள்ளிட்ட முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களுக்கு தேவையான அனைத்து விதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மின்சார சபையின் பிரிவாக்க (unbundling) செயல்முறை தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளது.

மின்சாரம் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் முறையே ஆண்டுக்கு இரண்டு முறை மற்றும் மாதந்தோறும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மதிப்பாய்விலும், பொது மக்களுக்கும் தொழில்துறையினருக்கும் அதிகபட்ச நிவாரணத்தை உறுதி செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, முன்னைய ஆண்டை விட மின்சாரக் கட்டணங்கள் கிட்டத்தட்ட 05% குறைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் எரிபொருள் விலைகளும் 10% குறைக்கப்பட்டுள்ளன. இவ் அனைத்து முயற்சிகளும் தொடர்ச்சியான சீர்திருத்தங்களும் மின்சாரம் மற்றும் பெற்றோலியத் தொழிற்துறைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் இறுதி இலக்கு பிராந்தியத்தில் மிகக் குறைந்த கட்டண விகிதங்களை உறுதி செய்வதாகும்.

நாட்டின் வளர்ந்து வரும் சக்தி வளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (Renewable Energy) வளங்களை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. உலகளவில், சுற்றாடல் பாதுகாப்பினை பிரதானமாகக் கொண்டு புதைபடிவ (Fossil) எரிபொருட்களிலிருந்து மீள புதுப்பிக்கத்தக்க சக்திக்கு மாறுவது, இப்போது பொருளாதார ரீதியாக சாத்தியமான பாதையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச் சூழலில், சர்வதேச உறுதிமொழிகளுக்கு இணங்க மின்சாரத் தொழிற்துறையில் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை 25% குறைப்பதற்கும் 2050 ஆம் ஆண்டுக்குள் காபன் நடுநிலைமையை அடைவதற்கும் , 2030 ஆம் ஆண்டுக்குள் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து 70% மின்சார உற்பத்தியை அடைவதற்கும் இலங்கை செயல்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டில் இது தொடர்ச்சியாக 50% க்கும் அதிகமான மீள புதுப்பிக்கத்தக்க சக்தியை பராமரித்து வருகிறது. 2025 ஆம் ஆண்டில், இலங்கை தொடர்ந்து 50மூக்கும் மேற்பட்ட மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து பெற்றதைப் பராமரித்து வருகிறது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையால் நடாத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டதன் படி, இலங்கையின் மீள புதுப்பிக்கத்தக்க சக்தியின் திறன், தேசிய சக்தி வளத் தேவையை விட மிகவும் அதிகமானதாகும். எனவே, இம்மகத்தான ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு விவேகமான உத்திகளை வகுப்பதே எங்கள் முன்னுரிமை ஆகும். உலர் மின்கல சக்தி சேமிப்பு அமைப்புகள், ஹைட்ரஜன் சக்தி பயன்பாடுகள் மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற முயற்சிகள் ஏற்கனவே செயற்பாட்டில் உள்ளன, மேலும் அவை படிப்படியாகவும் முறையாகவும் செயற்படுத்தப்படும்.

இந் நேரத்தில், இந்த தேசியப் பொறுப்பை நிறைவேற்றுவதில் அயராது பங்களித்த வலுசக்தி அமைசசின் செயலாளர், அமைச்சின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள், அதன் கீழ் உள்ள பன்னிரண்டு நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் ஊழியர்கள் மற்றும் அனைத்து பிற பங்குதாரர்களுக்கும் எனது

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலக்கரி மற்றும் அனல் மின்சார மின் உற்பத்திக்கு மாற்றாக, அடையாளம் காணப்பட்ட குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்கள் மூலம் சூரிய ஒளி மின் உற்பத்தி, காற்று மற்றும் அலை சக்திகளைப் பயன்படுத்தி மீள புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி அதிகரிக்கப்பட உள்ளது. இதற்கிணங்க, அடையாளம் காணப்பட்ட அந்தந்தப் பகுதிகளில் வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் புதிய தொழில்நுட்பத்தையும் போதுமான முதலீடுகளையும் பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படையான வழிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பொறியியலாளர். குமார ஜெயகொடி** (பா.உ)
அமைச்சர், வலுசக்தி அமைச்சு



# செயலாளரின் செய்தி

லங்கையின் முழு மக்களுக்கும் இடையறாத மின்சாரம் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த தேசிய கடமையை நிறைவேற்றும் பொறுப்பு வலுசக்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, நம்பகமான மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோக வசதிகளை வழங்குவதே எங்களின் பிரதான பணியாகும். இதை அடைவதற்காக, வலுசக்தி தொழிற்துறையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பரந்த அளவிலான நடவடிக்கைகளை அமைச்சு ஆரம்பித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில், பல புதிய கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, **தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து** தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டது. இக்கருத்திட்டங்கள் தற்போது நிதி ஆதாரங்களைப் பெறுதல், கொள்வனவு செய்தல் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், இவ் ஆண்டுக்குள் 600 **மெகாவாட்டிற்கும் அதிகமான சூரிய மின்சக்தி திறன்** அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்த சூரிய மின்சக்தி திறன் 2,000 மெகாவாட்டிற்கு மேல் அதிகரித்துள்ளது. மேலும், பல **காற்றாலை மின் கருத்திட்டங்கள், உலர்மின்கல சேமிப்பு கருத்திட்டங்கள் மற்றும் ஒரு பம்ப்-ஹைட்ரோ (Pumped-hydro) கருத்திட்டத்திற்கான** ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**தேசிய கொள்கை அறிக்கையில்** கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல உறுதிமொழிகளை செயற்படுத்துவதில் அமைச்சு ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. **சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை** மேம்படுத்துதல் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் இதற்கு இணையாக புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவது குறித்து ஆராய்வதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பெற்றோலியத் தொழிற்துறையில் தற்போதுள்ள ஒப்பந்தங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன, **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகள்** மற்றும் பங்குடமை **நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் 61 தாங்கிகள்** தேசியப் பொருளாதாரத்திற்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் புதிய வணிக மாதிரி உருவாக்கப்பட்டு வருகிறது.

தேவையுள்ள நேரங்களில் கூடுதல் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைப்பதற்கு சக்தியளிக்கும் வகையில், மீள புதுப்பிக்கத்தக்க சக்திக்கு அதிக பங்களிப்பை வழங்குவதனை ஊக்குவிப்பதற்காக, கவர்ச்சிகரமான கொள்வனவு விகிதத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், **உலர்மின்கல சேமிப்புடன் கூரையின் மேல் சூரிய மின் உற்பத்திக்கு** ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதற்கு இணையாக, மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தூய தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பது, பல முக்கிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. **இலங்கை மாற்றீட்டு எரிசக்தி உச்சி மாநாடு 2025, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ISA பிராந்தியக் குழுவின் ஏழாவது கூட்டம், அணுசக்தி அமுலாக்க அமைப்பின் பங்குகள் மற்றும் பொறுப்புகள் குறித்த தேசிய பயிற்சிப்பட்டறை**, “மூலோபாயத்திலிருந்து செயற்படுத்தல் வரை” என்ற கருப்பொருளின் கீழ் **பசுமை ஹைட்ரஜன் பங்குதாரர் ஆலோசனை பயிற்சிப்பட்டறை** ஆகியவை இதில் அடங்கும். மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், இராஜதந்திரிகள், அபிவிருத்தி பங்காளர்கள், நிதி நிறுவனங்கள், சர்வதேச நிபுணர்கள் மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களின் தீவிர பங்கேற்புடன், அமைச்சால் வசதியளிக்கப்பட்ட இந்த மாநாடுகள், எதிர்கால எரிசக்தி அபிவிருத்தி குறித்த உரையாடலுக்கான மதிப்புமிக்க தளங்களை வழங்கியுள்ளன.

மேலும், வலுசக்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான அனைத்து சட்டங்களையும் மதிப்பாய்வு செய்து, தொடர்புடைய பங்குதாரர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்றதன் பின்னர், **புதிய வலுசக்தி மாற்றச் சட்டத்தை** வரைவதற்கு **உயர்மட்டக் குழு** நியமிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டுதல்களுக்கிணங்க, **இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள்** (2135/61

ஆம் இலக்கமிடப்பட்ட 2019 ஆகஸ்ட் 9 ஆம் திகதியிடப்பட்ட் அதி விசேட வர்த்தமானி) மற்றும் அதன் **பெறுபேறு விநியோக கட்டமைப்பை (Result Delivery Framework)** மதிப்பாய்வு செய்வதற்கும், மற்றொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

**"கிளீன் இலங்கை" திட்டம், டிஜிட்டல் பொருளாதார நிகழ்ச்சி நிரல்** மற்றும் அரசாங்கத்தின் **ஊழல் எதிர்ப்பு இயக்கம்** போன்ற தேசிய முன்னுரிமை முயற்சிகளுக்கும் இவ் அமைச்சு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

2025 ஆம் ஆண்டு முழுவதும் அமைச்சிற்கு ஆதரவளித்து, இந்த நடவடிக்கைகளை சரியான நேரத்தில் பூர்த்திசெய்வதை உறுதி செய்த அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் சக்தி வள இலக்குகளை அடைவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்பட்டது போல, 2026 ஆம் ஆண்டிலும் உங்கள் தொடர்ச்சியான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

**பேராசிரியர்.கே.ரி.எம். உதயங்க ஹேமபால**
செயலாளர்,
வலுசக்தி அமைச்சு

# அறிமுகம்

2025 ஆம் ஆண்டை இலங்கையின் வலுசக்தித் தொழிற்துறையில் ஒரு முன்னேற்ற ஆண்டாகக் கருதலாம், இது உயிரியல் எரிபொருள்கள் மற்றும் புதைபடிவ எரிபொருட்களிலிருந்து நீர் மின்சக்திக்கும், நிலக்கரி மற்றும் பெற்றோலியத்திலிருந்து சூரியசக்தி மற்றும் காற்றுவலு போன்ற மீள புதுப்பிக்கத்தக்க மின்சாரத்திற்கும் மாறி வருகிறது. நிறுவன சீர்திருத்தங்களுடன் துறைசார் சீர்திருத்தங்களும் நடைபெற்று வருகின்றன, மேலும் நாட்டில் தற்போதைய வலுசக்தி மாற்றத்திற்கு குறிப்பிடத்தக்க உதவியை வழங்கும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் இணைப்புகளைச் சேர்ப்பதற்கான புதிய வழிகளைத் தேடுகின்றன.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு வலுசக்தித் தொழிற்துறையின் அனைத்து கொள்கை அபிவிருத்திக்கும் வலுசக்தி அமைச்சு (MOE) பொறுப்பாகும். இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL), இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை (SLAERC) உள்ளடங்கலாக பல வலுசக்தி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுக்கு கொள்கை வழிகாட்டுதல்களை வழங்கும் பொறுப்பையும் MOE கொண்டுள்ளது. மேலும் மின்சாரம், பெற்றோலியம், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் அணுசக்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல அரசுக்கு சொந்தமான நிறுவனங்களையும் மேற்பார்வையிடுகிறது.

2412/08 ஆம் இலக்கமிடப்பட்ட 2024 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி மூலம் நிறுவப்பட்ட வலுசக்தி அமைச்சு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நல்வாழ்வை ஆதரிப்பதற்காக பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நிலையான எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசாங்கத்தின் கொள்கை கட்டமைப்பான "வளரும் தேசம், அழகான வாழ்க்கை" ஆல் வழிநடத்தப்படும் இவ் அமைச்சு, செயற்திறன், புதுமை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பை வளர்க்கும் அதே வேளையில், நாட்டின் எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மூலோபாயங்களை வகுத்தல், சீர்திருத்தங்களை செயற்படுத்துதல் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை வழிநடத்துதல் ஆகிய பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மின்சாரத் தொழிற்துறையில் அரசுக்குச் சொந்தமான, செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கை மின்சார சபை (CEB) ஆதிக்கம் செலுத்துகிறது, அதே நேரத்தில் தனியார் துறை மின்சார உற்பத்தியில், குறிப்பாக சூரியசக்தி மற்றும் காற்றாலை சார்ந்த உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்கை அதிகரித்து வருகிறது. மின்சார பரிமாற்றம் CEB-யின் கீழ் உள்ளது, மேலும் மின்சார விநியோகம் CEB மற்றும் அரசுக்கு சொந்தமான இலங்கை மின்சார நிறுவனம் (LECO) ஆகியவற்றால் கையாளப்படுகிறது. மின்சாரத் தொழிற்துறை 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது, மேலும் உற்பத்தி, பரிமாற்றம், அமைப்பு செயற்பாடு மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான செயற்பாட்டு ரீதியாக பிரிக்கப்பட்ட நிறுவனங்களாக CEB-ஐப் பிரிப்பதற்கு அரசாங்கம் சமீபத்தில் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தை இயற்றியுள்ளது. 2024ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் சில திருத்தங்களுடன் 2025 ஆகஸ்ட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் நிறுவப்படும் தேசிய அமைப்பு செயற்பாட்டாளர், தேசிய எரிசக்திக் கொள்கையின்படி நீண்டகால மின் அபிவிருத்தி திட்டத்தை (LTPDP) தயாரித்து LTPDP ஐ செயற்படுத்தும் ஆணையைக் கொண்டுள்ளது.

அரசாங்கம் பதவியேற்ற ஒரு வருடத்திற்குள், தேசிய கொள்கை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சு

ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சப்புகஸ்கநந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவது குறித்து ஆராய்வதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பெற்றோலியத் தொழிற்துறையில் தற்போதுள்ள ஒப்பந்தங்கள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 24 தாங்கிகள் மற்றும் பங்குடமை நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் 61 தாங்கிகள் தேசிய பொருளாதாரத்திற்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் புதிய வணிக மாதிரி உருவாக்கப்பட்டு வருகிறது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோகத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அமைச்சு முன்னெடுத்துள்ளது. தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்காக புகையிரத எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோக அமைப்பில் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன, அதே நேரத்தில் கொழும்பு துறைமுகத்திற்கும் கொலன்னாவ முனையத்திற்கும் இடையிலான சேதமடைந்த குழாய், பெற்றோலிய எரிபொருள் பொருட்களை நம்பகமான முறையில் இறக்குதல் மற்றும் ஏற்றுவதை உறுதி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் (CPSTL) முதலீடுகள் மூலம் புனரமைக்கப்படுகிறது. இவ் முயற்சிகளுக்கு இணையாக, புதைபடிவ எரிபொருள் ஆய்வு மற்றும் உற்பத்தியை விரைவுபடுத்த தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மன்னார் மற்றும் காவிரி படுகைகளில் அடையாளம் காணப்பட்ட இயற்கை வாயு மற்றும் பிற புதைபடிவ எரிபொருட்களைப் பிரித்தெடுப்பதற்கான புதிய ஒப்பந்தங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இவ் முயற்சிகள் இலங்கையின் எரிசக்தி துறையில் தன்னிறைவை நோக்கிய பிரதான படியைக் குறிக்கின்றன.

அதே நேரத்தில், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்கால அபிவிருத்தி குறித்து விவாதப்பதறகான ஒரு தளத்தை வழங்கும் பொருட்டு, அமைச்சால் மூன்று முக்கிய மாநாடுகள் நடாத்தப்பட்டன. இலங்கை மாற்றீட்டு எரிசக்தி உச்சி மாநாடு-2025, 2025 பிப்ரவரி 27 ஆம் திகதி கொழும்பில் உள்ள சினமன் லை/ப் ஹொட்டலில் RE அபிவிருத்தியாளர்கள், தீர்மானம் எடுப்பவர்கள், இராஜதந்திரிகள், அபிவிருத்திப ங்காளர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ISA பிராந்தியக் குழுவின் ஏழாவது கூட்டம் இலங்கையின் தலைமையில் 2025 ஜூ லை 15 - 17 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றுள்ளது. இதில் ஊடாடும் அமர்வுகள் மற்றும் கண்காட்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மூலோபாயத்திலிருந்து செயற்பாடுகள் வரை என்ற தொனிப்பொருளில் பசுமை ஹைட்ரஜன் பங்குதாரர் ஆலோசனைப் பட்டறை 2025 செப்ரெம்பர் 11 ஆம் திகதி சர்வதேச நிபுணர்கள் மற்றும் உள்நாட்டு ஆர்வமுள்ள குழுக்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இக் காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல காற்றாலை திட்டங்கள், உலர்மின்கல சேமிப்புத் திட்டங்கள் மற்றும் பம்ப் ஹைட்ரோ திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டதுடன் மின்சாரக் கட்டமைப்பில் 600 மெகாவாட் சூரிய மின்சக்தி திறனும் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை பூராகவும் மின்சார வாகனங்களுக்கான் உலர்மின்கல மின்னேற்றல் மையங்களின் வலையமைப்பு நிறுவப்பட்டு வருகிறது, ஏழு மையங்கள் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன, மேலும் மூன்று கட்டுமானத்தில் உள்ளன. மேலும், 2023 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டிருந்த, USD 40 மில்லியன் பெறுமதியான BOOT ஏற்பாட்டின் கீழ், FSRU-வை கெரவலப்பிட்டி மற்றும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களுடன் இணைப்பதற்கு வடிவமைக்கப்பட்ட R-LNG குழாய் திட்டம், 2025 மார்ச மாதத்தில் மீண்டும் நியமிக்கப்பட்ட திட்டக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழுவின் மூலம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் முயற்சிகளுக்கு மேலதிகமாக, அமைச்சு அதன் பிரதான நிறுவனங்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL), இலங்கை மின்சார சபை (CEB), இலங்கை மின்சார நிறுவனம் (LECO),

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) மற்றும் நிலைபெறு தகு வலு அதிகாரசபை (SEA) ஆகியவற்றின் கொள்கை வழிகாட்டுதலையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த நிறுவனங்கள் இணைந்து, மீள புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாடு மற்றும் எரிசக்தி திறன் அபிவிருத்திகளை மேம்படுத்தும் அதே வேளையில், எரிசக்தி வளங்களின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், களஞ்சியம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு பங்களிக்கின்றன. இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை (SLAERC), இலங்கை அணுசக்தி சபை (SLAEB) ஆகியவை நாட்டில் அணுசக்தி பயன்பாடுகளை உருவாக்குவது தொடர்பான தங்கள் செயற்பாடுகளைத் தொடர்ந்தன, அதே நேரத்தில் மின்சார உற்பத்திக்கான அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் திட்டம் தொடர்ந்து நடைபெறுகின்றன. இக் காலகட்டத்தில் லங்கா நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (LCC), ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (SLE) மற்றும் எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் ஆகியவை தங்கள் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

இவ் வருடாந்த அறிக்கை, அறிக்கையிடல் ஆண்டின் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் முன்னேற்றம், செயல்திறன் மற்றும் பிரதான சாதனைகளை முன்வைக்கிறது. இது கொள்கை அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு முதலீடுகள், செயற்பாட்டு விளைவுகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது, அதே நேரத்தில் எரிசக்தி பாதுகாப்பைப் பாதுகாக்கவும், மீள புதுப்பிக்கத்தக்க சக்தியை விரிவுபடுத்தவும், தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் தொழிற்துறையை சீரமைக்கவும் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிகளை கோடிட்டுக் காட்டுகிறது.

வினைத்திறன்மிக்க நிர்வாகம், வலுப்படுத்தப்பட்ட நிறுவன ஒத்துழைப்பு மற்றும் நிலையான நடைமுறைகள் மூலம் வலுசக்தித் தொழிற்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சு உறுதிபூண்டுள்ளது, இதன் மூலம் இலங்கையின் மீள்தன்மை மற்றும் எரிசக்தி-பாதுகாப்பான எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வைக்கு பங்களிக்கிறது.

# அத்தியாயம் 01

# வலுசக்தி அமைச்சு

## தொலைநோக்கு

"இலங்கையை
தெற்காசியாவின் சக்திவலு
கேந்திரமாக மாற்றுதல்"

## பணிக்கூற்று

### மின்சக்தி பிரிவு

தேசிய பொருளாதார சுபீட்சத்திற்காக தரமான, நம்பகமான, நிலைபேறான விலையைத் தாங்கக் கூடியவாறான மின்சார வழங்கலொன்றை உறுதி செய்தல்.

## பணிக்கூற்று

### வலுசக்தி பிரிவு

"பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்துவதன் ஊடாக சக்தி வளம் தொடர்பான கொள்கைகளை ஒழுங்கமைத்து சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத நிலைபேறான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துதல் மற்றும் புதிய உள்நாட்டு சக்தி வளங்களை முன்பிருந்த சக்தி வளத்துடன் ஒருங்கிணைத்தல் மற்றும் இறக்குமதிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றின் மூலம் குறைந்த விலையில் சக்தி வளங்களை கிடைக்கக்கூடிய வழிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் சக்தி வளத் தேவையினை பூர்த்திசெய்தல"

## 1.1 வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்

2412/08 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.11.25 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட வலுசக்தி அமைச்சின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு

- சூரிய, நீர், அனல், நிலக்கரி, கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின் மூலம் மின்சக்தியையும், ஏனைய எரிசக்தியையும் உற்பத்தி செய்தல் தொடர்பான செயற்பாடுகளை நுண்ணாய்வு செய்தல், திட்டமிடுதல், விருத்திசெய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
- இலங்கையின் மின்சாரத் தேவையை நிவர்த்திசெய்தல் மற்றும் வலுசக்தியின் பாதுகாப்பு
- வலுசக்தியை வினைத்திறனாக்கும் வகையில் ஏற்படும் கேள்விகளை முகாமைத்துவம் செய்தல்
- நீண்டகாலத் தேவையினை அடிப்படையாகக்கொண்ட புதுப்பிக்கத்தக்க மின்உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்
- மின் சேகரிப்பு மற்றும் விநியோகிக்கும் செயற்பாட்டினை வினைத்திறனாக்குதல்
- உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியை உச்சளவிலான வினைத்திறனுடனான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக நேர்த்தியான வலையமைப்பொன்றை நிருமாணித்தல்
- மின் உற்பத்திக்காக செலவிடப்படும் செலவினைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியின்போது ஏற்படும் நிச்சயமற்ற தன்மையை அகற்றுதல்
- தற்போதுள்ள செலவு கூடிய மின் உற்பத்தி மூலங்களை குறைந்த செலவு, சூழலுக்கு அனுசரணையான மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களுடன் பதிலிடுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- தேசிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு கம்பனிகளுக்கு சமவாய்புக்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்.
- கைத்தொழில் கழிவுகளைப் பயன்படுத்தி வலுசக்தி உற்பத்தியை அதிகரித்தல்.
- கூட்டுறவு தத்துவங்களின் அடிப்படையில் வலுசக்தி அலகுகளாக நுண்வலையமைப்பு களை தாபித்தல்.
- வலுசக்தி துறையின் உபாயவழிமுறை கூட்டாண்மை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- விசேடமாக காணப்படும் ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பதன் மூலம் சிறிய அளவு நீர்மின் உற்பத்திக்கான மீள் முதலீட்டை ஊக்குவித்தல்
- மின்சாரக் கட்டணத்தை இற்றைப்படுத்து வதற்காக நியாயமான வெளிப்படைத் தன்மையான முறையினை அறிமுகம் செய்தல், மற்றும் பெற்றோலியம், எரிவாயு தொடர்பில் விலை சூத்திரத்தை பிரயோகித்தல்
- நீண்டகாலத் தேவையினை அடிப்படையாகக்கொண்ட புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- நிறுவனம் சார் முகாமைத்துவ மட்டத்தில் ஏற்படும் நட்டங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி, விநியோக முறைமைக்கு ஏற்படும் தொழில்நுட்ப ரீதியான பாதிப்புகளை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- மின்சார வாகனப் பாவனைக்கான

வசதிகளை வழங்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

- இலங்கையை வலுசக்தி மத்திய நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- பச்சைவீட்டு வாயு வெளியேற்றுதலைக் கட்டுப்படுத்தல்.
- கிராமிய மின்வலுப்படுத்துகை
- பெற்றோலியம்சார்ந்த உற்பத்திகள், இயற்கை வாயு என்பனவற்றின் இறக்குமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை
- பெற்றோலிய உற்பத்தியும் சுத்திகரிப்புத் தொடர்பான பணிகளும்
- பெற்றோலிய வளம் மற்றும் இயற்கைவாயு ஆய்வும் அதுசார்ந்த விடயங்களும்
- பெற்றோலிய உற்பத்திகள் முதலிய வளமூலங்களிலிருந்து எரிவாயு மற்றும் இடை உற்பத்தி நடவடிக்கைகள், மொத்த வைப்பு, உற்பத்தி மற்றும் விநியோகம்
- எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
- வலுசக்தி வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்
- எண்ணெய் சுத்திகரிக்கும் இயலளவை செம்மைப்படுத்தல் மற்றும் பெற்றோலியம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை ஊக்கவித்தல்.
- எரிபொருள் விநியோகத்தின் நம்பகத் தன்மை மற்றும் செயற்திறனை செம்மைப்படுத்தல்

## 1.2 வலுசக்தி அமைச்சின் பிரதான பிரிவுகள்

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவ் பிரிவுகளின் விபரங்கள் பின்வருமாறு

- அபிவிருத்திப் பிரிவு
- மின்சக்தி மற்றும் மின்சக்தி சீர்திருத்தங்கள்
- தொழிநுட்பப் பிரிவு
- மனிதவள முகாமைத்துவ பிரிவு
- வழங்கல பிரிவு
- திட்டமிடல் பிரிவு
- பெறுகைப் பிரிவு
- நிதிப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- மின்சக்தி பிரிவு சீர்திருத்தங்கள் செயலகம்

## 1.3 வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்

- இலங்கை மின்சார சபை
- வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (LECO)
- எல் ரி எல் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிட்டெட்
- இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை (SLSEA)
- இலங்கை அணுசக்தி சபை (SLAEB)
- இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (SLAERC)
- வரையறுக்கப்பட்ட(தனியார்) இலங்கை நிலக்கரி கம்பனி
- வரையறுக்கப்பட்ட(தனியார்) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் கம்பனி
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்
- இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை

2412/08 ஆம் இலக்கமிடப்பட்ட 2024 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு, 2458∴65 ஆம் இலக்கமிடப்பட்ட 2025 அக்டோபர் 18 ஆம் திகதியிடப்பட்ட்ட அதிவிசேடவர்த்தமானி அறிவிப்பால் திருத்தப்பட்டு, பின்வரும் நிறுவனங்களை வலுசக்தி அமைச்சகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

- இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (SLAERC)
- இலங்கை அணுசக்தி சபை (SLAEB)

மேலும் பின்வரும் புதிய நிறுவனங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன

- நேஷனல் சிஸ்டம் ஆபரேட்டர் (பிரைவேட்) லிமிடெட்.
- நேஷனல் டிரான்ஸ்மிஷன் நெட்வொர்க் சர்வீஸ் புரொவைடர் (பிரைவேட்) லிமிடெட்.
- மின்சார விநியோக லங்கா (பிரைவேட்) லிமிடெட்.
- மின்சார உற்பத்தி லங்கா (பிரைவேட்) லிமிடெட்.

## 1.4 2025ஆம் ஆண்டில் மின்சக்தி துறையின் செயல்திறன்

2025 ஆம் ஆண்டில், பாரிய அளவிலான புதிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்படலாம். அவை சம்பூர் 50 மெகாவாட் சூரிய மின்சக்தித் திட்டம், மன்னார் கட்டம் II - 50 மெகாவாட் காற்றாலை மின்சக்தித் திட்டம், சியம்பலாண்டுவ 100 மெகாவாட் சூரிய மின்சக்தித் திட்டம், கொலன்னாவையில் 100 மெகாவாட்/100 மெகாவாட் பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பை நிறுவுதல் உள்ளிட்ட மின் அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் 7 பொதிகள் மற்றும் BOO அடிப்படையில் 2x50 மெகாவாட் காற்றாலைத் திட்டத்தை முள்ளிகுளத்தில் நிறுவுதல். இதற்கு மேலதிகமாக, தேசிய மின்பகிர்வு மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் செயற்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் நான்கு பொதிகள், துணை மின்சார விநியோக நம்பகத்தன்மை அபிவிருத்தி திட்டம் (SESRIP) - பொதி 4, புதிய ஹபரானை - கப்பல்துறை 220kV மின்பகிர்வு அபிவிருத்தித் திட்டம், சம்பூர் கப்பல்துறை மின்பகிர்வு அபிவிருத்தித திட்டம் மற்றும் புதிய அனுராதபுரம் புதிய ஹபரானை, 220kV மின்பகிர்வு பாதைத் திட்டம் ஆகியவை CEB இன் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன. இந்திய கடன் திட்ட வசதியால் நிதியளிக்கப்பட்ட திட்டமும், இந்திய மானிய வசதியால் நிதியளிக்கப்பட்ட புங்குடுதீவு, அனலதீவு, நயினாதீவு ஆகிய சிறிய தீவுகளில் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டுமானமும், மத வழிபாட்டுத் தலங்களுக்கான கூரையின் மேல் சூரிய மின்சக்தி வசதிகளை நிறுவல், இலங்கை நிலைபெறு தகு வலு அதிகாரசபையின் (SLSEA) மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வரும் திட்டங்களாகும்.

மேலும், கெரவலப்பிட்டியிலிருந்து கொழும்பு மின்சார வலையமைப்பு துணை மின்நிலையத்திற்கு 220 kV இரண்டாவது நிலத்தடி கேபிளை நிர்மாணித்தல் மற்றும் BOO அடிப்படையில் கடல்சார் கெரவலப்பிட்டியில் மிதக்கும் களஞ்சிய மீளவாயுவாக்கல் அலகை (FSRU) நிறுவுதல் ஆகியவை ஆரம்ப திட்ட செயற்படுத்தல் கட்டத்தில் உள்ளன. மகா - ஓயா நீரேந்து பகுதியில் உள்ள களஞ்சிய நீர்மின் நிலையத்தின் விரிவான வடிவமைப்பு, வடக்கு 400kV மின்சார பரிமாற்றல் வலையமைப்பு அபிவிருத்தி, பாதுக்க 220kV GSS இல் STATCOM நிறுவுதல், பதிய ஹபரணையில் 75 MWA ஒத்திசைவான கண்டன்சர் அலகு நிறுவுதல் மற்றும் நீர்கொழும்பு பகுதியில் LECO விநியோக அமைப்பை வலுப்படுத்தும் திட்டம் ஆகியவை கடன் பேச்சுவார்த்தை கட்டத்தில் உள்ள புதிய திட்டங்களாகும். இலங்கையின் கட்டடத் தொழிற்துறையில் எரிசக்தி செயற்திறனை மேம்படுத்தும் கட்டடங்களில் எரிசக்தி

திறனுக்கான கூட்டாண்மை (PEEB) திட்டம், கூரையின்மேல் சூரிய திரட்டுதல் மற்றும் மெய்நிகர் நிகர அளவீட்டு திட்டம் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி சேர்க்கை மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு திட்டம் (LECO) ஆகியவை வெளிநாட்டு மானிய உதவியின் கீழ் அரம்பிப்பதற்கு உறுதிபூணப்பட்டுள்ளன. 10MW/40MWh AC திறன் கொண்ட 160MW/640MWh Standalone Battery Energy Storage System (BESS), 15 வருட செயற்பாட்டு காலத்துடன் நிர்மாணித்தல் உரிமைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் (BOO) அடிப்படையில் 16 இடங்களில் ஆரம்பிக்கப்படும். 2025 ஆம் ஆண்டுக்குள் மேற்கூறப்பட்டட திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளன, மேலும் அவை நிதி ஆதாரங்களைச் சரிபார்த்தல், பெறுகை செயற்பாட்டில் அல்லது செயற்படுத்தும் நிலை போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

2025 ஆம் ஆண்டில் பல கருத்திட்டங்கள் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன, அவை கெரவலப்பிட்டி சோபாதனவி (350 மெகாவாட் திறன்) இரண்டாவது கூட்டு சுழற்சி திட்டம் மற்றும் ஹபரணை-வியாங்கொடை 220kV மின்சார பரிமாற்றல் பாதை. ஹம்பாந்தோட்டை மின்சார வலையமைப்பு துணை மின்நிலையத்தில் பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பை நிறுவுதல் மற்றும் மேற்கு மாகாண தெற்கு 1 க்கான SCADA ஆதரவுடன் மேம்பட்ட விநியோக கட்டுப்பாட்டு மையத்தை நிறுவுதல் திட்டங்கள் மற்றும் மொறகொல்ல நீர்மின்சார கருத்திட்ட ம் (30.5 ஆறு) 2025 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் ஆரம்பிப்பதற்கு தயாராக உள்ளன.

2025 ஆம் ஆண்டிற்குள் 600 மெகாவாட்டிற்கும் அதிகமான சூரிய மின்சக்தி திறன் அமைப்பில் சேர்க்கப்பட்டு மொத்தமாக 2000 மெகாவாட்டிற்கும் அதிகமான சூரிய மின்சக்தி திறன் சேர்க்கப்பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல காற்றாலை திட்டங்கள், பேட்டரி சேமிப்புத் திட்டங்கள் மற்றும் பம்ப் ஹைட்ரோ திட்டங்கள் போனற்ன ஆரம்பிக்கப்பட்டன. அதிக பெறுகை விகிதத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பேட்டரி சேமிப்புடன் கூரையின் சூரிய மின்சக்தி உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் தேவைப்படும் போதெல்லாம் அதை தேசிய மின்கட்டமைப்பில் ஒருங்கிணைக்க முடியும். இதற்கு இணையாக, எதிர்கால அபிவிருத்தி குறித்து விவாதிக்க பரந்த மன்றத்தை வழங்கும் பொருட்டு, அமைச்சால் வசதியளிக்கப்பட்ட மூன்று பிரதான மாநாடுகளை நடத்துவதன் மூலம் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தூ ய்மையான தொழில்நுட்பங்களின் ஊக்குவிப்பு துரிதப்படுத்தப்பட்டுள்ளது. “இலங்கை மாற்று எரிசக்தி உச்சி மாநாடு 2025”, “ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ISA பிராந்தியக் குழுவின் ஏழாவது கூட்டம்”, “அணுசக்தி அமுலாக்க அமைப்பின் பங்குகள் மற்றும் பொறுப்புகள் குறித்த தேசிய பட்டறை” மற்றும் “மூலோபாயத்திலிருந்து செயற்பாடு வரை என்ற கருப்பொருளுடன் கூடிய பசுமை ஹைட்ரஜன் பங்குதாரர் ஆலோசனை பட்டறை” ஆகியவை மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியாளர்கள், முடிவெடுப்பவர்கள், இராஜதந்திரிகள், அபிவிருத்தி பங்குதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், சர்வதேச நிபுணர்கள் மற்றும் உள்நாடட்டு ஆர்வமுள்ள குழுக்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களின் முன்னிலையிலும் நடைபெறும்.

வலுசக்தி அமைச்சின் கீழ் உள்ள அமைப்புகளின் அனைத்து சட்டங்களையும் மதிப்பாய்வு செய்து, தொடர்புடைய பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர், புதிய “எரிசக்தி மாற்றச் சட்டம்” தயாரிப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. 2019 ஆகஸ்ட் 9ஆம் திகதி அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி இல. 2135/61 இல் வெளியிடப்பட்ட தற்போதைய “இலங்கையின் தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயங்களை” மதிப்பாய்வு செய்வதற்கு மற்றொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் அதன் “பெறுபேறு விநியோக கட்டமைப்பு” தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுடன் இணைந்து மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.4.1 2025 ஆம் ஆண்டின் மின்சார நுகர்வுகள்

CEB மற்றும் LECO ஆகியவை நாட்டின் மின்சார விநியோக அனுமதிப்பத்திரதாரர்கள் ஆவார்கள், மேலும் அவை நுகர்வோருக்கு எளிதாக அணுகுவதற்காக "CEBAssist" மற்றும் "MyLECO" பயன்பாடுகளை அறிமுகப்படுத்தின. குறித்த நேரத்தில் பட்டியல்களை செலுத்துதல்களை உறுதி செய்வதற்காக SMS மற்றும் நிகழ்நிலை பட்டியலிடல் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் செப்ரெம்பர் வரை பதிவான மொத்த மின்சார நுகர்வோர் 7,772,159. LECO 148,000 ஸ்மார்ட் மீட்டர்களையும் மற்றும் CEB கிட்டத்தட்ட 500,000 ஸ்மார்ட் மீட்டர்களை வழங்கியுள்ளது மற்றும் அண்ணளவாக 110,000 கூரையின் மேல் பொருத்தப்படும் சூரியசக்தி PVகளும் இணைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1**
**2025 செப்ரெம்பரில் உள்ளவாறான நுகர்வாளர்களின் எண்ணிக்கை**

| | பிரிவுகள் | இ.மி.ச (CEB) | ல.மி.க (LECO) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வீட்டுப் பாவனை | 6,114,071 | 518,875 | 6,632,946 |
| 2 | சமய வழிபாட்டு ஸ்தலங்கள் | 44,533 | 2,820 | 47,353 |
| 3 | கைத்தொழில் | 72,556 | 3,550 | 76,106 |
| 4 | பொதுத் தேவைகள் | 892,790 | 105,969 | 998,759 |
| 5 | ஹோட்டல்கள் | 866 | 100 | 966 |
| 6 | அரசாங்க நிறுவனங்கள் | 9,271 | 432 | 9,703 |
| 7 | விவசாய நடவடிக்கைகள் | 4,377 | - | 4,377 |
| 8 | வீதி விளக்குகள் | - | 1,949 | 1,949 |
| | மொத்தம் | **7,138,464** | **633,695** | **7,772,159** |


நிதி நெருக்கடிகள் காரணமாக கடந்த ஆண்டுகளில் மின்சார நுகர்வுக்கான கேள்வி குறைந்துள்ளது, மேலும் பொருளாதாரம் மற்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை இயல்பாக்கப்படுவதால் இது படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் மின்சாரத்திற்கான கேள்வி வருடாந்தம் சராசரியாக 4.1% என்ற விகிதத்தில் அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் உச்ச கேள்வி வருடத்திற்கு 2.6% அதிகரித்துள்ளது.

நாட்டின் தற்போதைய மின்சாரக் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில், நிகர மின்சார உற்பத்தி 16,802 GWh ஆக இருந்தது, இது 2023 ஐ விட 7.9% அதிகமாகும். அதிகபட்ச கேள்வி 2024 இல் 2,673 MWh ஐ எட்டியது, இது முன்னைய ஆண்டை விட 10.7% அதிகமாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு, நிகர மின்சார உற்பத்தி 8,678 GWh ஆக இருந்தது, இது 4.7% அதிகரிப்பையும், அதிகபட்ச கேள்வி 2,778 MW ஆகவும் இருந்தது, இது முன்னைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 10% அதிகரிப்பைக் காட்டுகிறது.

பின்வரும் வரைபடம் CEBயின் வலைத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட சமீபத்திய மின் உற்பத்தி விவரக்குறிப்பை (2025ஒக்டோபர்14) காட்டுகிறது. இது அதிகாலை மற்றும் இரவில் இரண்டு உச்சங்களைக் காட்டுகிறது, அதே நேரத்தில் இரவுநேர உச்சளவிலான மின்சாரம் அனல் மற்றும் பாரிய நீர் மின்சாரத்தில் இருந்து பெற்றுக்கொள்வதால் அதிகளவு செலவினம் ஏற்பட்டுள்ளது. சூரியசக்தி, காற்று மற்றும் சிறிய-நீர் மின்சாரம் உற்பத்தி மந்தநிலை இல்லாததாகவும் மொத்த உற்பத்தியில் 60% க்கும் அதிகமாகவும் இருக்க வேண்டும். VRE இன் அதிக ஊடுருவலுடன் மின்சார வலையமைப்பின் நிலையான தன்மையை உறுதி செய்வது இலங்கையில் மின்சார வலையமைப்பிற்கு மிகவும் அவசரமான பிரச்சினையாக உள்ளது.

வரைபு 1.1

2025 அக்டோபர் 14 ஆமதிகதியல் உள்ளவாறான மின்சார உற்பத்தி விவரக்குறிப்பு, பகல் நேரத்தில் ஒவ்வொரு மூலத்தின் அளவுகளுடன் (மூலம்: இ.மி.ச)




*Sorce: CEB*

### 1.4.2 மின்சார உற்பத்தி

**அ) மின்உற்பத்திக் கலவை**

இலங்கையில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (பிரதான நீர்மின்சாரம், சிறிய நீர்மின்சாரம், காற்று, சூரிய சக்தி, டென்ட்ரோ, உயிரியல் எரிபொருள் மற்றும் நகராட்சி கழிவுகள்) மற்றும் CEB மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமான புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான (நிலக்கரி, அனல் மின்சாரம்) மின்சார உற்பத்தி நிலையங்கள் உள்ளடங்கலான பன்முகப்படுத்தப்பட்ட மின்சார உற்பத்தி கலவை உள்ளது. முதல் ஆறு மாதங்களுக்கான மின்சார உற்பத்தி தரவுகள் அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளது மற்றும் மொத்த மின்சார உற்பத்தியின் சதவீதத்தில் மின் உற்பத்தி கலவை விபரங்கள் வரைபு 03 இல் தரப்பட்டுள்ளது.


அட்டவணை 1.2

2025 ஜூன் இறுதியில் உள்ளவாறான மின்சார உற்பத்திக் கலவை (GWh இல் அலகுகள்)

| | இலங்கை மின்சார சபையின் மின்சார உற்பத்தி | சுதந்திரமான மின்சார நிலையத்தின் (IPP) மின்சார உற்பத்தி |
|---|---|---|
| 01. பிரதான நீர் மின்சாரம் | 2,975 | |
| 02. அனல்மின்சாரம் எரிபொருள் | 619 | 395 |
| 03. அனல்மின்சாரம் நிலக்கரி | 2,682 | |
| 04. காற்று | 166 | 181 |
| 05. சிறிய -நீர் மின்சாரம் | | 712 |
| 06. சூரியசக்தி (நிலத்தில் பொருத்தப்பட்டது) | | 136 |
| 07. கூரையின் மேல் பொருத்தப்பட்ட சூரிய சக்தி | | 711 |
| விறகு | | 53 |
| உயிரில் எரிபொருள் | | 10 |
| மாநகர கழிவு | | 37 |
| மொத்தம் | 6,442 | 2,236 |
| முழு மொத்தம் | **8,678** | |

***Source** - CEB, LECO, SLSEA*

**வரைபு 1.2**
**மொத்த மின்சார உற்பத்தியில் மின்சார உற்பத்தி கலவை வீதத்தில்**




***Source*** *- CEB*

### ஆ) நிறுவப்பட்ட திறன்

தற்போது இலங்கையில் மின்சார உற்பத்திக்காக 6,521 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் உள்ளது. இது மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (மொத்தம் 4,338 மெகாவாட் மொத்த நிறுவப்பட்ட திறனில் கிட்டத்தட்ட 66.5%) மற்றும் மீள புதுப்பிக்க முடியாதது (மொத்த புதைபடிவ எரிபொருள் 2,183 மெகாவாட்) என வகைகளாகப் பிரிக்கப்படலாம். பிரதான நீர்மின்சாரம் வழக்கமான மீள புதுப்பிக்கத்தக்க சக்தியாகவும், ஏனைய மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் மரபுசாரா புதுப்பிக்கத்தக்கசக்தியாகவும் கருதப்படுகின்றன.


இலங்கை அரசாங்கம் 2050 ஆம் ஆண்டிற்குள் காபன் நடுநிலைமையை அடைவதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளது, 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் மின்சாரத்தில் 70% புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது. PUCSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட CEB "நீண்ட கால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2025-2044" இலிருந்து திட்ட வகையின் அடிப்படையில் ஒட்டுமொத்த திறனின் தூர நோக்கு வரைபடத்தை கீழே உள்ள வரைபு காட்டுகிறது. 2050 ஆம் ஆண்டிற்குள் காபன் நடுநிலைமையை அடைவதற்கு பாரழுய அளவிலான VRE கள் நிறுவப்படும். புதிய தொழில்நுட்பங்கள் மின்சார வலையமைப்பின் நிலையான தன்மையைப் பராமரிக்கும் அதே வேளையில் VREகளின் அதிக ஊடுருவலை செயற்படுத்தும்.

அட்டவணை1.3
**2025 யூன் இறுதியில் உள்ளவாறான நிறுவப்பட்ட திறன்**
**(அலகுகள் MW இல் குறிப்பிடப்பட்டுள்ளது)**

| மின்சார உற்பத்தி மூலவளங்கள் | இலங்கை மின்சார சபை | துனியார் முதலீட்டாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| **மீள புதுப்பிக்கத்தக்க சக்தி** | | | |
| 01. பாரிய நீர் வலு/ சிறிய நீர்வலு | 1,533 | 435 | 1,968 |
| 02. காற்றுு சக்தி | 104 | 163 | 267 |
| 03. சூரிய சக்தி- தரையில் பொருத்தப்பட்டவை | - | 172 | 172 |
| 04. சூரிய சக்தி- கூரையின் மேல் பொருத்தப்பட்டவை | - | 1,868 | 1,868 |
| 05. விறகின் (Dendro) மூலமான மின்சாரம் | - | 27 | 27 |
| 06. உயிரியல் வாயு | - | 26 | 26 |
| 07. மாநகர கழிவு | - | 10.00 | 10.00 |
| மொத்தம் | 1,637 | *2,701* | *4,338* |
| **புதைபடிவ எரிபொருள்** | | | |
| 08. உலை எண்ணெய் | 801 | 482 | 1,283 |
| 09. நிலக் கரி | 900 | - | 900 |
| மொத்தம் | 1,701 | *482* | *2,183* |
| **முழு மொத்தம்** | | | **6,521** |

***Sorce:** CEB*

**வரைபு 1.3**
**நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தில் உள்ளதைப் போல இலக்கு கொள்ளளவு விரிவாக்கங்கள்**





**Sorce:** *CEB*

தற்போது CEB, 19 பாரிய நீர் மின் நிலையங்கள், 8 அனல் மின்சார நிலையங்கள், ஒரு நிலக்கரி மின்சார நிலையம் மற்றும் ஒரு காற்றாலை பூங்கா என மொத்தம் 19 நிறுவனங்களை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. IPP 217 சிறிய நீர் மின் நிலையங்கள், 19 காற்றாலை பூங்காக்கள், 93 வலைப்பின்னலால் இணைக்கப்பட்ட சூரியசக்தி மின் நிலையங்கள், 15 ஏனைய சுநு மின்சார நிலையங்கள் மற்றும் இரண்டு

அனல் மின்சார நிலையங்கள் என மொத்தம் 346 நிறுவனங்களை கொண்டுள்ளது.

கீழே உள்ள வரைபடம் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் உறுதிசெய்யப்பட்ட (நடைபெற்றுக் கொண்டிருக்கும் மற்றும் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள்) மின் உற்பத்தி நிலையங்களைக் காட்டுகிறது.

**வரைபடம் 1.1**
**தற்போதுள்ளள, உறுதிசெய்யப்பட்ட மற்றும் மின் நிலையங்களின் அமைவிடம்**




| No | POWER PLANT | CAPACITY MW |
|---|---|---|
| Hydro Power Plants (Existing) | | |
| 1 | Canyon | 60 |
| 2 | Wimalasurendra | 50 |
| 3 | New Laxapana | 100 |
| 4 | Old Laxapana | 50 |
| 5 | Polpitiya | 90 |
| 6 | Kotmale | 201 |
| 7 | Victoriya | 210 |
| 8 | Randenigala | 120 |
| 9 | Rantembe | 50 |
| 10 | Ukuwela | 40 |
| 11 | Bowatenna | 40 |
| 12 | Samanalawewa | 120 |
| 13 | Udawalawe | 06 |
| 14 | Inginiyagala | 11 |
| 15 | Nilambe | 03 |
| 16 | Kukule | 75 |
| 17 | Upper Kotmale | 150 |
| 18 | Broadlands | 35 |
| 19 | Uma Oya | 122 |
| Hydro Power Plants (Committed) | | |
| 20 | Moragolla | 30 |
| Other Renewable(Existing) | | |
| 21 | Mannar Wind Park | 100 |
| Thermal Power Plants (Existing) | | |
| A | Lakvijaya Coal Power Plant | 900 |
| B | Kelanithissa CCY1, CCY2 | 165,163 |
| C | Sapugaskanda PP | 160 |
| D | Uthuru Janani | 27 |
| E | CEB Barge Mounted Plant | 62 |
| F | West Coast PP | 270 |
| Thermal Power Plants (Committed) | | |
| G | Sobadhanavi Combine Cycle Plant | 350 |
| H | Natural Gas Combine Cycle Plant Kelawarapitiya - ii | 350 |
| I | IC Engine | 200 |
| J | Kelanithissa GT | 130 |

*Sorce: CEB*

## இ) மின்சார உற்பத்தி விரிவாக்கல் கருத்திட்டங்கள்

### i. பாரியளவான நீர்மின்சாரத் திட்டங்கள்

- **மொரகொல்ல நீர்வலு மின் உற்பத்திக் கருத் திட்டம் (30.5 ஆறு)**

மொரகொல்ல திட்டம் கண்டி மாவட்டத்தின் உலப்பனை பகுதியில் அமைந்துள்ளதுடன், இது மகாவலி நதியின் நீரைப் பயன்படுத்துகிறது. இவ் கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருடாந்த மின் உற்பத்தி 100.5 GWh ஆகும். இவ் கருத்திட்டத்தின் அணைக்கட்டு, மின் உற்பத்தி நிலையம் மற்றும் சுரங்கப் பாதைகள் 2025 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்யப்படும். இவ் கருத்திட்டம் 90மூ பௌதீக முன்னேற்றத்தையும் 90மூ நிதி முன்னேற்றத்தையும் செப்ரெம்பர் இறுதியில் அடைந்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதி உதவி வழங்கியுள்ளது, மேலும் இத் திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ. 19,288 மில்லியன் ஆகும்.



கட்டுமானத்தில் உள்ள அணை



மின்சாரத்தில் மின்சாரம் மற்றும் மின்னணு

### ii. சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டங்கள்

- **சியம்பலாண்டுவ நிலஅடிப்படையிலான சூரிய சக்தி பூங்கா – 100 MW**

இவ் சூரியசக்தி மின் நிலையத்தின் மூலம் 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக தற்போது நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் மற்றும் போக்குவரத்திற்கான வீதிகளை செப்பனிடும் பணிகள் மற்றும் வேலிகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான கேள்விமனு வழங்கப்பட்டுள்ளதுடன். மின்சார உற்பத்திக்கான அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மினசார பெறுகை உடன்படிக்கையும் 2024.08.02 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் கருத்திட்டம் Wind Force PLC, Lakdhanavi Limited மற்றும் The Blue Circle Pvt. Ltd, ளுயைபெயிழசந நிறுவனங்களின் பங்குடமையின் கீழ் செயற்படுத்தப்படும். அபிவிருத்தியாளருடன் மின்சார பரிமாற்றல் ஒப்பந்தம், செயற்படுத்தல் ஒப்பந்தம் மற்றும் நில குத்தகை ஒப்பந்தம் ஆகியன கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டம் 18 மாதங்களுக்குள் பூர்த்தியடையும்.

- **சாம்பூர் சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டம் – கட்டம் ஐ (50 MW)**

இவ் இரண்டு கட்டத் திட்டமானது 135 மெகாவாட் வரை விரிவுபடுத்தும் திறனுடன் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், 50 மெகாவாட்க்கான முதல் கட்டத்தின் பணிகளை இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இந்தியாவின் National Thermal Power Corporation (NTPC) ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் Trincomalee Power Company Limited (TPCL) நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

இவ் கருத்திட்டம் சம்பூர் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்துகிறது. மின்சார பரிமாற்றக் பாதையை

நிர்மாணிப்பதற்கு ஏற்கனவே ஆரம்ப கட்ட நடவடிக்கைகள எடுக்கப்பட்டுள்ளன. மின்சார கொள்வனவு ஒப்பந்தம் (PPA) ஏப்ரல் 2025 இல் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மின்சார பரிமாற்றல் பாதையின் நிர்மாணப்பணிக்கான கேள்விமனுக்கோரல் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இவ் கருத்திட்டம் 2027 இல் பூர்த்தியடையும்.

- **இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் கூரையின் மேல் பொருத்தும் சூரிய சக்தி திட்டத்தை அமுல்படுத்துதல்**

இத் திட்டம் 5,000 மதத் தலங்களுக்கு சூரிய சக்தி தகடுகளை கூரையின் மேல் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சூரிய சக்தி அமைப்பு கருவிகளின் இறக்குமதி மற்றும் விநியோகம் பூர்த்தியடைந்துள்ளதுடன் நாடு முழுவதும் இதனை பொருத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டம் 2025 ஒக்ரோபர் மாதத்திற்குள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 5000 மதவழிபாட்டு இடங்களில் 5 கிலோவாட் சூரிய சக்தி மின்சக்தி கூரையின் மேல் பொருத்தும் அமைப்புகளை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், சோதனை செய்தல், ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக USD 17 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சூரியசக்தி தகடு நிறுவலின் முன்னேற்றம் - செப்ரெம்பர் மாத இறுதியில் 100% சூரியத்தகடுகள் விநியோகிக்கப்படட்டுள்ளன, 98% சூரியத்தகடுகள் நிறுவப்படட்டுள்ளன, 74% செயற்பாட்டுக்கு வநதுள்ளன.

**iii. காற்றாலைத் திட்டங்கள்**






சூரிய சக்தி மின் நிலைய வசதியை நிறுவுதல்

- **மன்னார் "தம்பபன்னி" காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் (50 MW) – கட்டம் II**

100 MW திறன் கொண்ட தம்பபவன்னி கட்டம் I வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. கட்டம் II க்கு EOI கோரப்பட்டுள்ளதுடன், தெரிவுசெய்யப்பட்ட கேள்விமனுதாரான Hayleys Fentons Ltd நிறுவனத்துடன் 2025 மே மாதத்தில் PPA கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதேவேளை, நிலத்தை குத்தகைக்கு எடுத்தல் மற்றும் உடன்படிக்கை அமுல்படுத்தன என்பன நிலுவையில் உள்ளன. இவ் கருத் திட்டம் 2027 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படும்.

- **முள்ளிகுளத்தில் 50 MW x 2 காற்றாலைப் பண்ணையை நிறுவுதல்**

திட்டத்தின் ஆரம்ப கட்ட பணிகள், தளப் பாதைகளை உருவாக்குதல், விசையாழி தடங்களை (turbine footprints) அகற்றுதல் மற்றும் எல்லை நிர்ணயம் செய்தல் மற்றும் தள தங்குமிடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளதுடன் இப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை (CEB) இத் திட்டத்தை உருவாக்கி, திட்ட முயற்சியாளர்களுக்கு இதனை செயற்படுத்துவதற்கான வாய்பபுக்களை வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 284.00 மில்லியன் மற்றும் காற்றாலை பண்ணையை செயற்படுத்துவதற்கான RFP கோரப்படும் பணிகள் செயற்பாட்டில் உள்ளன. இவ் கருத்திட்டம் 2027 இல்

பூர்த்திசெய்யப்படும்.

**iv. வடக்கு தீபகற்பத்தில் உள்ள மூன்று தீவுகளிலும் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அமைப்புகளை நிறுவுதல்**

இத் திட்டம் வடக்குத் தீவுகளான நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகியவற்றிற்கு சூரியசக்தி, காற்றுவலு, டீசல் மின்பிறப்பாக்கி மற்றும் லித்தியம்-அயன் உலர்மின்கல சேமிப்பு முறைகளை உள்ளடக்கியதான கலப்பினத் திட்டமாக மின்சாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்திற்கு இந்தியா இந்திய மானிய திட்டத்தின் கீழ் நிதியளித்துள்ளது.

2023 டிசம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி, இத் திட்டத்திற்கான ஒப்பந்தம் இந்தியாவின் M/S U-Solar Clean Energy Solutions (Pvt) Ltd நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை SLSEA செயல்படுத்துகிறது, மேலும் திட்டத்தின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உள்ளடங்கலாக ஆலோசனை சேவைகளை இலங்கை மின்சார சபையிடமிருந்து (CEB) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவ் கருத் திட்டம் 2026 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

ஒவ்வொரு தீவுக்கும் PV, காற்றாலை மற்றும் டீசல் மின்பிறப்பாக்கி திறன்கள், உகந்த உற்பத்தி கலவைக்கு ஒத்த உலர்மின்கல சேமிப்பு அமைப்புகள் அகிய திறன்கள் தீர்மானிக்கப்படும்.

*Module & Structure Installation in-*

**Analativu Island**



**Delft Island**



**Nainativu Island**



| தீவு | டீசல் மின்உற்பத்தி | PV மின்உற்பத்தி | காற்றாலை மின்உற்பத்தி | பேட்டரி சேமிப்பு |
|---|---|---|---|---|
| நயினாதீவு | 300kW + 500kW | 700kW | 200kW | 1000kWh (550kW) |
| அனலதீவு | 150kW + 300kW | 300kW | 80kW | 550kWh (250kW) |
| நெடுந்தீவு | 300kW + 500kW | 700kW | 250kW | 800kWh (650kW) |

**v. அம்பாந்தோட்டையில் உலர்மின்கல சக்திவள சேமிப்பு அமைப்பை (BESS) நிறுவுதல்.**

இத் திட்டம் இலங்கையில் முதல் உலர்மின்கல சக்திவள சேமிப்பு அமைப்பாகும், மேலும் இது அம்பாந்தோட்டைவலைப்பின்னல் உப மின்நிலையத்தில் நிறுவப்படும். இது 5MW/10.7MWh திறன் கொண்ட ஒரு முன்னோடித் திட்டமாகும். முன்மொழியப்பட்ட BESS இன் மொத்த மதிப்பீடுசெய்யப்பட்ட செலவினம் அண்ணளவாக USD 11.9 மில்லியன் ஆகும், இது கொரியாவின் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் எரிசக்தி அமைச்சின் மானியத்தாலும், கொரியா தொழில்நுட்ப முன்னேற்ற நிறுவனத்தின் (KIAT) தொழில்நுட்ப உதவியுடனும் செயற்படுத்தப்படுகிறது.

வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன, மேலும் ஒப்பந்ததாரரின் பிரதிநிதிகள் மற்றும் CEB உடன் இணைந்து வடிவமைப்பு மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதுடன், இவை 2025 பெப்ரவரி மாத இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படும். 2025 மார்ச்/ஏப்ரல் க்குள் பொருட்கள் தளத்திற்கு வழங்கப்படும், மேலும் திட்டம் 2025 இல் பூர்த்திசெய்யப்படும்.





**II. மீள புதுப்பிக்க முடியாத மின் உற்பத்தி**

**i. திரவ இயற்கை வாயு (LNG) கருத்திட்டங்கள்**

சர்வதேச உறுதிமொழிகளை அடைவதற்கு கணிசமாக பங்களிக்கும் மாறிகள் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி சேர்க்கைகளை பூர்த்தி செய்வதற்கு இரட்டை எரிபொருள் திறன் மற்றும் LNG மின்சார நிலையங்களைக் கொண்ட இயற்கை வாயுவில் இயங்கும் உளளக் எரிப்பு (IC) இயந்திர மின் உற்பத்தி நிலையம் அவசியமானது என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 2024-2044 ஆம் ஆண்டுக்கான நீண்டகால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. மின் உற்பத்தியில் டீசலை LNG மூலம் மாற்றுவதன் மூலம் ஒரு கிலோவாட் மணி நேரத்திற்கு ரூ.30க்கும் அதிகமாக சேமிப்பதற்கு உதவும்.

- **கெரவலப்பிட்டியில் 350MW RLNG/டீசல் ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்திதை நிர்மாணித்தல்**

சோபாதனவி 350 MW LNG இல் செயற்படக்கூடிய ஒருங்கிணைந்த சுழற்சி மின்சார நிலையத்தின் முதல் கட்டம் லக்தனவியால் (Lakdhanavi) கெரவலப்பிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் திறந்த சுழற்சி எரிவாயு விசையாழி (Open cycle Gas turbine) 2024 ஆகஸ்ட் இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீராவி விசையாழி (Steam turbine) 2025 இல் ஆரம்பிக்கப்படும்.



- **FSRU கருத்திட்டம்**

இத் திட்டம், CEB ஆல் கெரவலப்பிட்டியின் கடல் பகுதியில் நங்கூரமிடல் அமைப்பு மற்றும் FSRU ஐ நிறுவவும், CPC

ஆல் FSRU இலிருந்து கெரவலப்பிட்டி மற்றும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களுக்கு குழாய் அமைப்பை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 2022 ஆகஸ்ட முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இவ் திட்டத்தை தொடர்வதற்கான அமைச்சரவை ஒப்புதல் 2024 டிசம்பர் 9 ஆம் திகதி வழங்கப்பட்டது. திட்டக் குழு (PC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) ஆகியவை 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி மறுசீரமைக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட அபிவிருத்தியாளாரான China Harbour Engineering Corporation Limited (China) மற்றும் Engro Corporation Limited (Pakistan) -(CHEC-Engro Consortium) ஆகியவற்றின் கூட்டமைப்பு ஆகும். FSRU இன் திட்ட விவரங்கள் பின்வருமாறு;

| | |
|---|---|
| திட்ட தொடக்க திகதி - முடிவு திகதி | 2020 யூலை15<br>2028 டிசம்பர் 31 |
| மீதமுள்ள நேரம் (மாதங்கள்) | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| நிதி ஆதாரம் | திட்ட அபிவிருத்தியாளரால் (PPP அடிப்படையில்) |
| (உள்ளூர்/வெளிநாட்டு கடன் மானியம்) | 60,000 |

ii. **அணுசக்தி திட்டம்**

இத் திட்டத்தின் பிரதான நோக்கம், நிலைபேறான, நம்பகமான, நிலையான மற்றும் சுற்றாடலுக்கு சிநேகபூர்வமான சக்திவளத்தை உருவாக்குவதற்கு, குறிப்பாக அணுசக்தி மூலம் மின்சார உற்பத்திக்கு, அணுசக்தி தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதற்கு தேவையான கொள்கை தீர்மானங்களை எடுப்பதில் அரசாங்கத்திற்கு உதவிபுரிவதாகும். எதிர்பார்க்கப்படும் பிரதிபலன் என்னவெனில், ஆரம்பத்தில் 30-400 MW திறனுடன் கூடிய அணு மின் நிலையம் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இவ் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளில் சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை ஆகியவை உள்ளடங்குவதோடு, இவ் இரண்டு நிறுவனங்களும் அணுசக்தி பொறுப்பு தொடர்பான இரண்டு சர்வதேச மாநாடுகளின் ஒப்புதல் மற்றும் ஒருங்கிணைந்த பணித் திட்டத்தை (IWP) தயாரித்தல் போன்றவற்றில் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. வழிகாட்டுதல் குழு, கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) மற்றும் 09 பணிக் குழுக்கள் 2024 ஆகஸ்ட்டில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளன. இவற்றின் செயற்பாடுகள் பின்வருமாறு

- **நன்கு நிறுவப்பட்ட பொருத்தமான அணுசக்தி விற்பனையாளர்களிடமிருந்து ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகளை (EOI) கோருதல்**

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசல் குழுவிற்கு (CANC) சமர்ப்பிப்பதற்கான EOI ஆவணத்தை மதிப்பாய்வு செயவதற்கு 14 உறுப்பினர்களைக் கொண்ட திட்டக் குழு நியமிக்கப்பட்டது. தகவலுக்கான கோரிக்கை (RFI), தகுதிக்கான கோரிக்கை (RFQ) மற்றும் முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) ஆகியவையும் தயாரிக்கப்படடுள்ளன.


- IAEA-வின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த அணுசக்தி உட்கட்டமைப்பு மதிப்பாய்வு (FU-INIR) திட்டத்தின் சிபார்சுகள் மற்றும் பரிந்துரைகளை மேம்படுத்துதல்
- 2026 ஆம் ஆண்டில் IAEA-வின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் தேசிய பயிற்சி பட்டறைகளை நடத்துதல்
- இலங்கையில் எதிர்கால அணுசக்தி நிறுவலுக்கான தள ஆய்வு, தளத் தேர்வு செயல்முறை மற்றும் தள பண்புக்கூறு ஆகியவற்றை நிறைவு செய்தல்
- அணுசக்தி கல்வி மற்றும் பயிற்சி வசதியை நிறுவுதல்
- தொடர்புடைய மனித வளங்களுடன் SLAEB நிறுவன கட்டமைப்பின் கீழ் அணுசக்தி திட்டமிடல் பிரிவை நிறுவுதல்

### 1.4.3. மின்சார பரிமாற்றல் மற்றும் விநியோகம்

CEB, PUCSL இன் ஆலோசனையுடன் நீண்டகால பரிமாற்றத் திட்டத்தைத் தயாரித்துள்ளது மற்றும் அபிவிருத்தி பங்குதாரர்களின் கடன் வசதிகள் மற்றும் CEB யின் நிதி வசதியுடன் திட்டங்களை செயற்படுத்துகிறது.

தற்போதுள்ள மற்றும் 2030 வரையான திட்டமிடப்பட்ட மின் இணைப்புகள் கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1.2**
**2030 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்சார பரிமாற்றல் அமைப்பு**




**Sorce:** *CEB*

**அ).மின்சார பரிமாற்றல் விரிவாக்கல் திட்டம்**

**i. மின்சார அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு திட்டம் (PSSREIP)**

இத் திட்டத்திற்காக 2025 ஆம் ஆண்டு முதல் ADB USD 150 மில்லியனை கடனாக ஒதுக்கியுள்ளது. இவ் கடன் பொதியின் கீழ் ஆறு பொதிகள் செயற்படுத்தப்படுகின்றன. இவ் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம், தேசிய மின்கட்டமைப்பில் மேலும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின்சார உற்பத்தியைச் சேர்ப்பதாகும், பின்வரும் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் CEB ஆல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன மற்றும் பெறுகை செயற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆறு பொதிகள் CEB ஆல் கையாளப்படுகிறது.

- **பொதி 1A**, மீரிகம 220/33 kV GSS (2×63 MVA) மற்றும் பேலியகோடை 132/33 kV GSS (2×45 MVA) நிர்மாணப் பணிகள் உள்ளடங்கலாக, உட்புற GIS வலையமைப்பு உப மின்நிலையங்களை turn key அடிப்படையில் கொள்வனவு செய்வதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 16,408 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2027 ஆகஸ்ட் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான கேள்விமனு 2025 ஜூன் 18 ஆம் திகதி நிறைவடைந்துள்ளதுடன் மற்றும் தொழில்நுட்ப கேள்விமனு மதிப்பீட்டு அறிக்கை 2025 செப்ரெம்பர் 23 ஆம் திகதி ADB ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- **பொதி 1B**, ஹோமகம 132/33 kV GSS (2×45 MVA) மற்றும் நீர்கொழும்பு 132/33 kV GSS (2×63 MVA) நிர்மாணப் பணிகள் உள்ளடங்கலாக, 132 kV வெளிப்புற AIS வலையமைப்பு உப மின்நிலையங்களை turn key அடிப்படையில் கொள்வனவ் செய்வதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,021 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2028 ஜனவரி வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கான TEC நியமிக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப கேள்விமனு மதிப்பீட்டு அறிக்கை HLPC இன் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.
- **பொதி 2**, மேல்நிலை மின் இணைப்புகளை turn key அடிப்படையில் கொள்வனவுல் செய்வதை உள்ளடக்கியது, இதில் அம்பாந்தோட்டை-மாத்தறை 132 kV DC மின் இணைப்பு (78 கி.மீ), பல்வேறு உப மின்நிலையங்களுக்கான 132 kV SC LILO க்கள் மற்றும் மீரிகம GSS க்கான 220 kV DC LILO உள்ளடங்கலான பல இணைப்புகளின் நிர்மாண பணிகளும் உள்ளடங்கும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,025 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 செப்ரெம்பர் முதல் 2028 ஆகஸ்ட் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பெறுகை செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது.
- **பொதி 3**- இவ் திட்டத்தின் நோக்கத்தை மாற்றுவதற்காக பணிப்பாளர் சபை தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 10,060 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 டிசம்பர் முதல் 2027 நவம்பர் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- **பொதி 4**- களனி-கொட்டுகொடை DC மின் பரிமாற்றல் பாதையில் (2 கி.மீ) இருந்து பேலியகொட GSS வரை SC நிலகீழ் கேபிள் LILO நிர்மாணம் உள்ளடங்கலாக, 132 kV நிலகீழ் கேபிள் பரிமாற்றல் பாதைகளை turn key அடிப்படையில் கொள்வனவு செய்வதை உள்ளடக்கியது ஆகும். இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 3,567 மில்லியன் ஆகும், இத் திட்டத்தை 2025 டிசம்பர் முதல் 2027 நவம்பர் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

- **பொதி 5–** கொலன்னாவ வலைப்பின்னல் உப மின்நிலையத்தில் BESS அமைப்பை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கொலன்னாவ வலைப்பின்னல் உப மின்நிலையத்தை விரிவுபடுத்துவதற்கும், கொலன்னாவவில் 100MW/100MWh உலர்மின்கல சக்தி சேமிப்பை வழங்குவதல், நிர்மாணிப்பதல் மற்றும் விநியோகிப்பதற்கு ரூ. 9,600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- **பொதி** 6- தேசிய அமைப்பு கட்டுப்பாட்டு மையத்தில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மேசையின் அபிவிருத்தி செயற்படுத்தப்படும். கேள்விமனு செயல்முறை மற்றும் சந்தை ஆய்வு நடைபெற்று வருகிறது.





*De-stringing works at section H107 – H115 in Package 4A , Anuradhapura- New Habarana Line*

**ii. தேசிய மின்பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி (NTDND & EIP)**

இந்த JICA உதவி கடன் JPY 24,930 மில்லியன் கீழ் நான்கு மின்சார பரிமாற்றல் பாதை அபிவிருத்தி மற்றும் வலைப்பின்னல் உப மின்சார நிலைய அபிவிருத்தி பொதிகள் உள்ளன. ஒப்பந்ததாரர்களின் குறைந்த செயற்திறன் காரணமாக 2026 ஏப்ரல் 28 வரை நீட்டிக்கப்பட்ட அசல் திட்ட நிறைவுத் திகதி திருத்தப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் இரண்டு பொதிகளுக்கான இடைநீக்க கோரிக்கைகளை சமர்ப்பித்தனர், மற்றைய இரண்டு பொதிகளுக்கான மீள கேள்விமனுக்கோரல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **பொதி 01** கம்பஹா, கொழும்பு மற்றும் குருநாகல் பகுதிகளில் (400 kV, 220 kV, மற்றும் 132 kV) மின்பரிமாற்றல் இணைப்புகளை நிர்மாணிப்பதை உள்ளடக்கியுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ. 14,623 மில்லியன் ஆவதோடு, இத் திட்டம் 2020 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2026 ஆகஸ்ட் பூர்த்தியடையும்.
- **பொதி 02** கம்பஹா, கொழும்பு, கண்டி மற்றும் கேகாலையில் மின்சார வலையமைப்பு உப மின்னிலையங்களை நிர்மாணிப்பதில் கவனம் செலுத்துகிறது. இதற்கான மொத்த செலவினம் ரூ. 8,531 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2019 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டு 2026 ஒக்ரோபர் பூர்த்தியடையும்.
- **பொதி 03** அநுராதபுரம், மாத்தளை, கண்டி, கேகாலை மற்றும் நுவரேலியா ஆகிய இடங்களில் மின்பரிமாற்றல் இணைப்புகளை (220 kV, 132 kV) நிர்மாணிப்பதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த செலவினம் ரூ. 11,253 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2019 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2027 ஆகஸ்ட் பூர்த்தியடையும்.
- **பொதி 04** கொழும்பில் விநியோக கேபிள்கள் (33 மஏ, 11 மஏ, மற்றும் 0.4 மஏ) நிர்மாணிப்பதை உள்ளடக்கியதாகும். இதற்கான மொத்த செலவினம் ரூ. 7,183 மில்லியன் ஆகும், இத் திட்டம் 2020 செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2028 யூன் திட்டமிட்டதன் படி பூர்த்தியடையும்.

அட்டவணை1.4
**தற்போதுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் இலக்குகளின் செயற்திறன்**

| ஒப்பந்தம் | பூர்த்திசெய்யப்படவேண்டிய இலக்கு திகதி | திரட்டு செயற்பாடு (%) | JICA கடன் இடைநீக்கம் காரணமாக ஒப்பந்தங்களின் நிலை |
|---|---|---|---|
| பொதி 1 | 2026 ஆகஸ்ட் 31 | 76.1% | தற்காலிகமாக நிறுத்தப்பட்டது - 2022 டிசம்பர் 15 மீண்டும் தொடங்கப்பட்டது மற்றும் முன்னேற்றம் |
| பொதி 2 | 2026 ஒக்ரோபர் 30 | 78.5% | மெதுவான விகிதம் - 2022 செப்ரெம்பர் 06 |
| பொதி 3 | கட்டம் I - 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி நிறுத்தப்பட்டது<br>புதிய இலக்கு கட்டம் II - 2027 ஆகஸ்ட | 59.8% (T)<br>4% | மீண்டும் தொடங்கப்பட்டது மற்றும் முன்னேற்றம் |
| பொதி 4 | கட்டம் I - வுநசஅயையவநன ழுெ 15 ழுஉவ 2022 ஒக்ரோபர் 15 ஆம் திகதி நிறுத்தப்பட்டது<br>புதிய இலக்கு கட்டம் II - 2028 யூன் | 41%<br>2% | தற்காலிகமாக நிறுத்தப்பட்டது - 2022 ஆகஸ்ட் 10<br>நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளது - 2022 ஒக்ரோபர் 15<br>மீதி பணிகளுக்கான மீள கேள்விமனு கோரல் |

### iii. மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் திட்டத்தை ஆதரித்தல் (SESRIP)

இத் திட்டத்தில், தீவு முழுவதும் அமைந்துள்ள 300 கி.மீ நீளமுள்ள 33kV கோபுர மின்சார பாதைகள் மற்றும் 13 33kV சுவிட்சிங் கேன்ட்ரிகள் (பொதி 4) நிர்மாணம் ஆகியவை அடங்கும். இதற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ. 7,314.052 மில்லியன் ஆகும், இது 2019.10.28 ஆம் திகதி நடைமுறைக்கு வரும். இத் திட்டத்திற்கு ADB மற்றும் GOSL நிதியளிக்கின்றன. ஆகஸ்ட் மாத இறுதியில் உள்ளவாறான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை1.5
**நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் (De-liverables) | 2025.08.31 ஆம் திகதியில் உள்ளவாறான திரட்டப்பட்ட இலக்கு (%) | 2025.08.31 ஆம் திகதியில் உள்ளவாறான திரட்டப்பட்ட சாதனைகள் (%) |
|---|---|---|
| வடிவமைப்பை பூர்த்திசெய்தல் | 100 | 99 |
| லைன் மற்றும் கேன்ட்ரி பொருள் கொள்வனவு | 99 | 95 |
| கோபுர அடித்தள நிர்மாணம் | 95 | 85 |
| கோபுர நிர்மாணம் | 82 | 65 |
| ஸ்ட்ரிங்கிங் | 60 | 43 |
| கேன்ட்ரி நிர்மாணம் | 87 | 82 |



*Maho - Ma-eliya Line*



*Bibile Gantry*

**iv. ஹபரணையிலிருந்து திருகோணமலை வரையிலான போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

AIIB-இன் கடன் உதவியுடன் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு RE-ஐ ஒருங்கிணைக்க உட்கட்டமைப்பை நிறைவு செய்வதற்காக இரண்டு மின்சார பரிமாற்றல் அபிவிருத்தி திட்டங்கள் தயாராக உள்ளன. கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

- **சம்பூர் கப்பல்துறை 220kV மின்சார பரிமாற்றல் அபிவிருத்தி திட்டம்**

பெறுகை செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் AIIB இன் முன்கூட்டிய பெறுகை அனுமதிக்காக காத்திருக்கிறோம். இந்த திட்டத்தின் கீழ் சம்பூர் வலைப்பின்னல் உப மின்நிலையம் மற்றும் மின்மாற்ற பாதை நிர்மாணிக்கப்படும்.

- **புதிய ஹபரணை – கப்பல்துறை 2200kV மின்சார பரிமாற்றல் அபிவிருத்தி**

புதிய ஹபரானை கப்பல்துறை 220kV மின்மாற்றல் பாதை மற்றும் புதிய ஹபரானை SS விரிவாக்கல் மற்றும் கப்பல்துறை GS மறுசீரமைப்பு ஆகியவை இத் திட்டத்தின் மூலம் பூர்த்திசெய்யப்படும்.

**v. கெரெவலப்பிட்டி முதல் கொழும்பு துறைமுகம் வரையான 2200kV இரண்டாவது நிலகீழ் மின்பரிமாற்றல் கேபிள் நிர்மாணம்**

கெரவலப்பிட்டி வலையமைப்பு உப மின்நிலையத்திலிருந்து கொழும்பு துறைமுக வலையமைப்பு உப மின்நிலையம் வரை 220kV இரண்டாவது நிலகீழ் மின்பரிமாற்றல் அமைப்பை நிர்மாணிப்பதற்கான மொத்த செலவினம் ரூ. 9,119 மில்லின் ஆகும். இத் திட்டத்திற்கான நிதி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் (AIIB) வழங்கப்படுகிறது. இதற்கான அமைச்சரவை ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டு பெறுகை செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. கடன் உடன்படிக்கை 2025 செப்ரெம்பரில் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் கருத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- 

- **எ. இந்தியா – இலங்கை மின்சார வலையமைப்பு இணைப்பு**

2025.03.28 ஆம் திகதியிடப்பட்டு “இந்தியா - இலங்கைக்கு இடையில் மின்சார இறக்குமதி/ஏற்றுமதிக்கான HVDC இணைப்பை செயற்படுத்துவதற்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இந்திய குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்” எனத் தலையங்கமிடப்பட்டு வலுசக்தி அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சால் கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனற்கு அமைச்சரவை அமைச்சர்களால் 25/0569/825/029-I ஆம் இலக்கமிடப்பட்டு 2025.04.01 ஆம் திகதியிடப்பட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தியா - இலங்கைக்கு இடையில் மின்சார இறக்குமதி/ஏற்றுமதிக்கான HVDC இணைப்பை செயற்படுத்துவதற்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இந்திய குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) 2025.04.05 ஆம் திகதி வலுசக்தி அமைச்சின் செயலாளரினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன, மேலும் திட்டத்தின் செயல்படுத்தல் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவில் 2025 ஏப்ரலில் கூட்டு தொழில்நுட்பக் குழு விவாதங்கள் நடத்தப்பட்டன.

**ஆ).விநியோக அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்**

இலங்கை மின்சார சபை (CEB) நான்கு விநியோகப் பிரிவுகளை நிர்வகிக்கிறது, அதே நேரத்தில் லங்கா மின்சார நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் (LECO) ஐந்தாவது விநியோகப் பிரிவாக செயற்படுகிறது. நுகர்வோருக்கு மேம்பட்ட மற்றும் நம்பகமான சேவையை வழங்கும் நோக்கத்துடன் இரண்டு நிறுவனங்களும் மின்சார விநியோக வலையமைப்பின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலில்

ஈடுபட்டுள்ளன. இதற்கிடையில், விநியோக அனுமதிபத்திரதாரர்களிடையே கூரையின் மேல் சூரிய மின்சக்தி ஒருங்கிணைப்பு மூலோபாயங்களில் உள்ள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், சீரான தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும் வலுசக்தி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது. விநியோக முறையை வலுப்படுத்துதல், எதிர்கால திறன் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் பல திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. பழைய உட்கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட திறன் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் தற்போதைய விநியோக வலையமைப்பு, அமைப்பின் நம்பகத்தன்மையைக் குறைத்துள்ளது, இது சரியான நேரத்தில் நவீனமயமாக்கல் மற்றும் முதலீட்டின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

- இலங்கை மின்சார சபையால் (CEB) செயற்படுத்தப்படும் தொடர்ச்சியான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதியுதவியின் கீழ் இரண்டு புதிய திட்டங்கள் 2026 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டங்கள் நான்கு விநியோகப் பிரிவுகளுக்கும் மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் (SCADA) மற்றும் மேம்பட்ட அளவீட்டு உட்கட்டமைப்பு (AMI) ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் மேம்பட்ட விநியோக முகாமைத்துவ அமைப்பு (ADMS) பொருத்தப்பட்ட நான்கு விநியோகக் கட்டுப்பாட்டு மையங்களை (DCCs) நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ் முயற்சிகள் கூரையின் மேல் சூரிய மின்சக்தி ஒருங்கிணைப்பு மற்றும் மெய்நிகர் நிகர மீட்டரிங் அறிமுகப்படுத்தலை எளிதாக்குவதையும், இதன் மூலம் செயற்பாட்டு திறன் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- LECO மின் அமைப்பின் திறன், நம்பகத்தன்மை மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து USD 50 மில்லியன் கடன் பெறப்பட்டதுடன், இதன் பெறுகை செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் முயற்சி 2030 ஆம் ஆண்டுக்குள் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து 70% மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலங்கையின் லட்சிய தேசிய இலக்கோடு மூலோபாய ரீதியாக இணைக்கப்பட்டுள்ளது. LECO இன் திட்டம் அதன் MV விநியோக அமைப்பு முழுவதும் வலையமைப்பு நம்பகத்தன்மை, செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மை மற்றும் சூரிய ஹோஸ்டிங் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பாக இத் திட்டம் களனி, நீர்கொழும்பு, கோட்டை மற்றும் நுகேகொடை ஆகிய அடர்த்தியான நகர்ப்புற வலங்களில் கவனம் செலுத்தப்படுகிறது.
- இத் திட்டத்தின் பிரதான படியாக 33kV விநியோக மின்னழுத்த LECO வின் வலையமைப்பை அறிமுகப்படுத்துதல் உள்ளது. இவ் மின்னழுத்த மேம்படுத்தல் சுமை முகாமைத்துவ திறன்களை கணிசமாக மேம்படுத்தும், மின் தடைகளைக் குறைக்கும் மற்றும் விநியோகிக்கப்பட்ட சூரிய ஒளிமின்னழுத்த உற்பத்தியை ஒருங்கிணைக்கும் வலையமைப்பின் திறனை விரிவுபடுத்தும். விரிவான நவீனமயமாக்கல் திட்டம் மூன்று முக்கியமான மேம்பாடுகளை வழங்கும். அவையாவன, உட்கட்டமைப்பு நவீனமயமாக்கல், மின்னழுத்த நிலை மாற்றம் மற்றும் டிஜிட்டல் வலையமைப்பு பரிணாமம்.
- நீர்கொழும்பு பகுதியில் LECO விநியோக அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்திற்காக இரண்டாவது ADB உதவி பெறப்படும்.
- மேலும், பின்வரும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக LECO ஐரோப்பிய ஒன்றிய மானிய ஆதரவைப் பெறும் செயற்பாட்டில் உள்ளது.

➢ மின்சார விநியோக வலையமைப்புகளில் குறைந்த தொய்வு (low sag) குறைந்த இழப்பு HTLS கடத்திகளை அறிமுகப்படுத்துதல்.

➢ மெய்நிகர் மின் நிலைய செயற்பாட்டை செயற்படுத்தவும் சூரிய PV ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் LECO விநியோக மின்மாற்றிகளில் உலர்மின்கல சேமிப்பு அமைப்புகளை நிறுவுதல்


➢ பயன்பாடு சார்ந்த சூரிய PV ஒருங்கிணைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

சமர்ப்பிக்கப்படுகிறது.

- உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் மீதான கூட்டங்களின் போதும், 2025 ஜுலை 11, 15 மற்றும் 17 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நாடாளுமன்றத்தின் உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய மேம்பாடு குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் போதும், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பிற வணிக சங்கங்களின் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை மின்சார (திருத்தப்பட்ட) சட்டத்தில் மேலும் பல

**விளக்கப் படம் 1**

**LECO விநியோக மின்மாற்றிகளில் உலர்மின்கல சேமிப்பு அமைப்புகள் (மூலம் – LECO)**




### 1.4.4 நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கை தலையீடுகள்

#### அ) மின்சக்தி பிரிவின் நிறுவன சீர்திருத்தங்கள்

- மின்சாரத் துறை மற்றும் எரிசக்தி கொள்கைகளில் முக்கிய பங்குதாரர்கள், நிபுணர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டு, மின்சாரச் சட்டம் மற்றும் அதன் மாற்றம் குறித்த தற்போதைய நிலை மற்றும் அடிப்படைக் கருத்துகளை அடையாளம் கண்டு, முன்மொழிவு மற்றும் பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை 2025.01.20 ஆம் திகதி வலுசக்தி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது. இது 2025.01.23 ஆம் திகதி அமைச்சரவையில்

திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டன.

- இலங்கை மின்சார (திருத்தப்பட்ட) சட்டம் 2025.08.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 2025.08.18 ஆம் திகதி கௌரவ சபாநாயகரால் சான்றிதழில் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னர், 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்த) சட்டமாக நடைமுறைக்கு வந்தது. இது 2025.08.26 ஆம் திகதியிடப்பட்ட 2451/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது.
- மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், இலங்கை மின்சார சபை ஊழியர்களின் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்திற்கான கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- இலங்கை மின்சார (திருத்த) சட்டத்தின் துணைப்பிரிவு 8(2) இன் படி, தேசிய எரிசக்தி கொள்கையின் ஒரு பகுதியாக தேசிய மின்சாரக் கொள்கை நகல் வரைவை உருவாக்குவதற்கு கௌரவ வலுசக்தி அமைச்சரால் குழுவொன்றை நியமிப்பதற்கு 2025.09.08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**ஆ) எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயங்களை மேம்படுத்த அமைச்சால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன**

- அறிக்கையின் உறுதிமொழிகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துதல்.
- அரசாங்கக் கொள்கைகளுடன் இணைந்த சக்திவளப் பாதுகாப்பு, செயற்திறன் மற்றும் நிலையானதன்மையை உறுதி செய்வதற்கான மூலோபாயங்கள், தற்போதுள்ள தேசிய சக்திவளக் கொள்கையைப் புதுப்பித்தல்.
- நீண்டகால வலுசக்தித் தொழிற்துறை திட்டமிடல் மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் சீரமைக்க தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- நகல் வலுசக்தி மாற்றச் சட்டம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து எளிதாக்குதல், சட்டமன்றப் பணிகளின் சரியான நேரத்தில் முன்னேற்றத்தை உறுதி செய்தல்.

**இ) மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு**

- மீள புதுப்பிக்கத்தக்க சக்தியை அமுல்படுத்துவதற்கான கழுவை நியமித்தல்

மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு வளர்ந்து வரும் சூழலில், பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நிலையான எரிசக்தி எதிர்காலத்தை உறுதி செய்வதை பிரதான குறிக்கோளாகக் கொண்டு, மின்சார அமைப்பின் நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னெச்சரிக்கை கொள்கை நடவடிக்கைகளை செயற்படுத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழு பின்வரும் பிரதான பகுதிகளில் சிபார்சுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது:

1. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான பகுதியை நிறுவுதல்
2. செலவு-பிரதிபலிப்பு பயன்பாட்டு நேர (ToU) கட்டணங்களை செயற்படுத்துதல்
3. கேள்வி-மாற்றும் வழிமுறைகளின் அறிமுகம் செய்தல்

சுமை சுயவிவரங்களை மேம்படுத்த தொழிற்துறை மற்றும் வணிகத் துறைகளை இலக்காகக் கொண்டது.

4. உலர்மின்கல சக்தி சேமிப்பு அமைப்புகளை (BESS) முன்கூட்டியே கொள்வனவு செய்தல்
5. கூரையின் மேல் சூரியசக்தி மின் உற்பத்தியின் தெரிவுநிலை மற்றும் கண்காணிப்பை செயற்படுத்துதல்
6. ஒப்பந்த ஒப்பந்தங்களில் தொடர்புடைய பிரிவுகளைத் திருத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல்
7. வளர்ந்து வரும் தொழில்நுட்ப மற்றும் கொள்கைத் தேவைகளுக்கு ஏற்ப ஒப்பந்த கட்டமைப்புகள் ஒத்துப்போவதை உறுதி செய்தல்

- மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்ட அபிவிருத்தி திட்டம் (2025-2030)

CEB மற்றும் SLSEA ஆகியவற்றின் ஆதரவுடன், 2025-2030 காலகட்டத்தில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஒரு விரிவான செயற் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் முன்னுரிமை எரிசக்தி தேவைகளை

நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைப்பை திறம்பட இடமளிக்கும் வகையில் தேசிய மின்சார வலையமைப்பின் முறையான மற்றும் இலக்கு சார்ந்த அபிவிருத்தியை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியை இது குறிக்கிறது.

- மின்சார வாடிக்கையாளர்களுக்கு பவர் வீலிங் (Power Wheeling) வசதியை செயற்படுத்துதல்.

பாரிய அளவிலான மீள புதுப்பிக்கத்தக்க சக்தி நுகர்வோரை ஆதரிப்பதற்கும், தொலைதூரத்தில் அமைந்துள்ள தங்கள் சொந்த மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மின்சார நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம் அவர்களின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், மின்சார வீலிங் பொறிமுறையானது 2024 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பொருந்தக்கூடிய வீலிங் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு "ருஊளுடு மற்றும் CEB-க்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் கீழ், மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்ட அபிவிருத்தியாளர்களை, அவர்களின் செயற்திறனின் அடிப்படையில் தரவரிசைப்படுத்த அனுமதிக்கும் ஒரு இணைய அடிப்படையிலான சுய மதிப்பீட்டு முறையை CEB செயற்படுத்தியுள்ளது. இருப்பினும், வலைத்தளத்தில் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக குழு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை கூட வேண்டும் என்றாலும், அத்தகைய கூட்டங்கள் இன்னும் நடைபெறவில்லை.

- மீள புதுப்பிக்கத்தக்க சக்தியின் கூட்டுப் பணிக்குழு (JWG)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான மீள புதுப்பிக்கத்தக்க சக்தித் தொழிற்துறையில் 2வது கூட்டு முயற்சி மாநாடு 2025 செப்ரெம்பர் 23 ஆம் திகதி நிகழ்நிலையில் நடைபெற்றது. இந்த தொடர்ச்சியான ஒத்துழைப்பு இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இரு நாடுகளிலும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கூரையின் மேல் சூரிய PV அமைப்புகளின் ஒருங்கிணைப்பு

தேசிய மின்சார வலையமைப்பில் கூரையின் மேல் சூரிய PV ஒருங்கிணைப்பை நெறிப்படுத்தி மேம்படுத்தும் நோக்கத்துடன், கூரையின் மேல் சூரிய PV அமைப்புகளின் எதிர்கால செயற்படுத்தல் குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**ஈ. மின்சார விலைகளின் திருத்தம்**

"கட்டணக் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்களாக மாற்றுவதற்கான கொள்கை வழிகாட்டுதல்களைத் திருத்துதல்" என்ற தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் வலுசக்தி அமைச்சரால் 2024.12.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. 2024.12.18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போது நடைமுறையில் உள்ள மின்சாரக் கட்டணத் திருத்தக் காலங்களைத் திருத்துவது குறித்த விரிவான முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை உத்தரவிட்டது. இது இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்து கொண்ட நீட்டிக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் தகவல்கள் அடுத்த பதவி நிலை உத்தியோகத்தர் கூட்ட மதிப்பாய்வில் சமர்ப்பிக்கப்படும்.

இதற்கிணங்க, CEB 2025.07.01 ஆம் திகதி -கட்டணக் காலத்தை 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்த அறிக்கையை IMF க்கு- சமர்ப்பித்துள்ளது, மேலும் வலுசக்தி அமைச்சு 2025.08.26 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார

அபிவிருத்தி அமைச்சிடம் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

### உ. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டணங்களின் திருத்தம்

2024 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துவதற்கு நிலையான கட்டண தெரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் பயன்படுத்தப்பட்ட மூன்று அடுக்கு கட்டண (three-tier tariff) அமைப்பு மற்றும் மாறி கட்டணங்கள் (variable tariff) 2024 ஆம் ஆண்டு முதல் தொடரப்படாது.2025 ஆம் ஆண்டிற்கு, 10 மெகாவாட் அல்லது அதற்கும் குறைவான திறன் கொண்ட மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களுக்கும், கூரையின் மேல் பொருத்தும் சூரிய சக்திக்கும் 2025 ஜூன் 16 ஆம் திகதி முதல் கட்டணம் திருத்தப்படடுள்ளது.கூரையின் மேல் பொருத்தும் சூரிய சக்தியுடன் இணைக்கப்பட்ட உலர்மின்கல சக்தி சேமிப்பு அமைப்பு (BESS)-க்கான கட்டணம் இவ் ஆண்டு அறிமுகப்படுத்தப்படடுள்ளது.கூரையின் மேல் பொருத்தும சூரிய சக்தி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட BESS-ஐ செயற்படுத்துவதற்கான கொள்கை கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அதனை செயற்படுத்துவது தொடர்பான தீர்மானங்கள் இன்னும் எடுக்கப்படவில்லை.

குறித்த நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காக, தற்போது CEB ஆல் முறையாக செயற்படுத்தப்படாத மாறி கட்டணத்தை மறுபரிசீலனை செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 10 மெகாவாட் மற்றும் அதற்கும் குறைவான திறன் கொண்ட மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மின்சார நிலையங்களை தேசிய மின் கட்டமைப்பில் ஒருங்கிணைப்பதற்கான கட்டண சூத்திரத்தை உருவாக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### ஊ. நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை (SPPA)

1996 ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வந்த 10 MW க்கு குறைவான மின்சார நிலையங்களிற்கான நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கை, 2024.03.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி திருத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபரிடமிருந்து அனுமதியை பெற்றதன் பின்னர், உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பிரிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, திட்ட முயற்சியாளர் மற்றும் மின்பரிமாற்றல் அனுமதிப்பத்திரதாரர் ஆகிய இருவருக்குமே உடன்படும் வகையில் திருத்தப்பட்டுள்ளது.

மேலும், திட்ட முதலீட்டாளர்களின் ஆர்வத்தை ஈர்ப்பதற்காகவும், திட்ட வங்கித்திறன் அம்சங்கள் குறித்த கடன் வழங்குநர்களின் மதிப்பீடுகள் விரைவாக மாற்றப்பட்டதாலும், தற்போதுள்ள நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) சமர்ப்பித்த கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, திருத்தங்கள் நிலையான மின்சார பெறுகை உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

2024 ஆகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு CEB க்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பின்னர், 2024 டிசம்பர் 6 ஆம் திகதி சட்டப்பூர்வ அனுமதிக்காக CEB திருத்தப்பட்ட SPPA-வை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்தது. எவ்வாறாயினும், இற்றை வரை எந்த பதிலும் கிடைக்கவில்லை.

### எ. மின்சாரத் தொழிற்துறையின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளைக் கண்காணித்தல்

2021 முதல் 2030 வரை மின்சாரத் தொழிற்துறை தொடர்பான NDC இலக்குகளை செயற்படுத்துவதற்கு வலுக்தி அமைச்சு பொறுப்பாகும். தற்போதுள்ள NDC 2.0 உறுதிமொழி 2026 முதல் 2035 வரையிலான காலத்திற்கு NDC 3.0 ஆக புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதில் உலர்மின்கல சக்தி சேமிப்பு அமைப்பு (BESS), கடல் காற்று மற்றும் பம்ப் சேமிப்பு அமைப்பு

சேர்த்தல் போன்ற புதிய செயற்பாடுகள் அடங்கும்

### 1.4.5. 2026 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டம்

பின்வரும் திட்டங்கள் 2026 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படும்

- 04 விநியோகப் பிரிவுகளுக்கு SCADA மற்றும் AMI ஆல் ஆதரிக்கப்படும் ADMS உடன் 04 DCCகளை நிறுவுதல்
- 600 MW மகா - ஓயா பம்ப் செய்யப்பட்ட சேமிப்பு நீர்மின் நிலையத்தின் (PSHP) (CEB ஆல் ADB கடன்) விரிவான வடிவமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, மேலும் பின்வரும் திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

- கிளிநொச்சியிலிருந்து புதிய ஹபரணை வரையிலான வடக்கு 400kV மின்மாற்ற வலையமைப்பின் மேம்பாடு.
- நுரைச்சோலை - வாரியபொல 220kV மின்மாற்றல் பாதை மற்றும் வாரியபொல சுவிட்சிங் நிலையத்தின் நிர்மாணம்
- பாதுக்கை 220kV மின்மாற்றி துணை நிலையத்தில் நிலையான ஒத்திசைவான இழப்பீட்டு கருவி (STATCOM) நிறுவுதல்.
- புதிய ஹபரணை கிரிட் துணை நிலையத்தில் 75 MVA ஒத்திசைவான கண்டன்சர் அலகு நிறுவுதல்.
- நீர்கொழும்பு பகுதியில் LECO விநியோக அமைப்பை வலுப்படுத்தும் திட்டம்.
- பூண்டலு ஓயா மற்றும் பூண்டல் நீர்வீழ்ச்சி இரண்டாம் நிலை பிரிவு திட்டம் - மேல் கொத்மலை நீர்மின்சார திட்டம்.
- காற்றாலை வள மதிப்பீடு, தெதுரு ஓயா மிதக்கும் ஒளிமின்னழுத்த சூரிய மின்சக்தி திட்டம், கராச்சி காற்றாலை மின் திட்டம்.

## 1.5 2025ஆம் ஆண்டில் வலுசக்தி துறையின் செயற்திறன்

நாட்டின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பை வழங்குவதில் வலுசக்தி அமைச்சின் பெற்றோலியப் பிரிவு பிரதான பங்கு வகிக்கிறது. மக்களின் அன்றாட வாழ்வில் எரிபொருள் ஒரு பிரதான அங்கமாக விளங்குவதுடன் இது, போக்குவரத்து, தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் பொது சேவைகளின் சீரான செயற்பாட்டையும் உறுதி செய்கிறது. எரிபொருள் விநியோகத்தின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துதல், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை அமைச்சு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

இவ் ஆண்டில் சர்வதேச பெற்றோலிய சந்தையில் ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், நாட்டின் அதிகரித்து வரும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் நிலையான தன்மையைப் பேணுவதற்கும், பெற்றோலியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்கும் இத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் பிரிவு, உலகளாவிய எரிபொருள் விலைப் போக்குகள் உள்நாட்டு விலைகளில் ஏற்படுத்தும் தாக்கம், தேசிய எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதில் அளிக்கப்படும் பங்களிப்பு, பெற்றோலியத் தொழிற்துறையில் செயற்படுத்தப்படும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள், பெற்றோலியத் தொழிற்துறையில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் 2026 இல் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் தொடர்பான கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.

### 1.5.1 பெற்றோலியத் தொழிற்துறை செயற்பாடுகளின் சாராம்சம் – 2025

| | |
|---|---|
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் மொத்த இறக்குமதி | 3,749,896.33 MT |
| மசகு எண்ணெயின் மொத்த இறக்குமதி | 1,319,299.00 MT |
| சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி | 1,287,215 MT |
| பெற்றோலியப் பொருட்களின் மொத்த இறக்குமதி செலவு | USD 2,423.139 Mn |
| பெற்றோலியப் பொருட்களின் மொத்த விற்பனை | 4,656,810 MT |
| செயற்பாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை | 1,436 |
| ஊீளூவுடு இன் பெற்றோலிய களஞ்சியத் திறன் | 474,043 MT |

### 1.5.2 உலகளாவிய பெற்றோலிய விலைத் தளம்பல்களால் இலங்கையில் எரிபொருள் விலையில் ஏற்படுத்தும் தாக்கம்

#### i. உலகளாவிய பெற்றோலிய விலைத் தளம்பல்கள்

சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2025 ஆம் ஆண்டில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்குள் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டன.

2025 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலைகள் மிதமான ஏற்ற இறக்கத்தைக் காட்டின. மசகு எண்ணெயின் சராசரி விலை பரல் ஒன்றிற்கு USD 63 முதல் USD 80 வரை ஏற்ற இறக்கமாக இருந்தது, அதே நேரத்தில் பெற்றோல் (92 மற்றும் 95 ஒக்டேன்) மற்றும் டீசல் (ஓட்டோ மற்றும் சுப்பர்) விலைகள் இதே போன்ற நகர்வுகளைப் பிரதிபலித்தன. முதன்மையாக மந்தமான உலகளாவிய கேள்வி மற்றும் மேம்பட்ட விநியோக நிலைமைகள் காரணமாக ஆண்டின் முதல் பாதியில் விலைகளில் படிப்படியான சரிவு பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சி மற்றும் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடுகளால் உற்பத்தி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட சீராக்கங்கள் ஆகியவற்றால் யூன் முதல் லேசான மீளெழுச்சிப் போக்கு காணப்பட்டது. இந்த உலகளாவிய விலை ஏற்ற இறக்கங்கள் இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விலை நிர்ணயக் கட்டமைப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி, அந்த ஆண்டில் பெற்ரோலிய இறக்குமதிச் செலவில் பாரிய செல்வாக்கை செலுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களை நாடு பெரிதும் சார்ந்திருப்பதால், சர்வதேச சந்தை விலைகளில் ஏற்படும் மாறுபாடுகள் உள்நாட்டு எரிபொருள் செலவினத்தில் நேரடியாகப் தாக்கத்தை செலுத்துகின்றன. உலகளாவிய விலை நகர்வுகள் மற்றும் நாணயமாற்று விகித மாறுபாடுகளை பிரதிபலிக்கும் உள்நாட்டு விலைச் சூத்திரம், விலையின் நிலையான தன்மை மற்றும் தடையற்ற எரிபொருள் விநியோகத்தில் உறுதி செய்வதற்காக அவ்வப்போது சீராக்கம் செய்யப்படுகிறது. ஆண்டின் ஆரம்ப மாதங்களில் உலகளாவிய விலைகளில் ஏற்பட்ட சரிவு இறக்குமதி செலவினங்களைக் குறைப்பதற்கு உதவியது எனினும், 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ஏற்பட்ட மீளெழுச்சி சில்லறை எரிபொருள் விலைகளில் மேல்நோக்கிய நகர்வை ஏற்படுத்தியுள்ளது. வலுசக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் (CPC) இணைந்து, தடையற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிக்கவும், உள்நாட்டு விலைகளில்

ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் குறைக்கவும், பெற்றோலியத் தொழிற்துறையின் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில் நுகர்வோருக்கு மலிவான விலையை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

USD 79.413 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ஜனவரி மாதத்தில் பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 86.750 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 76.467

**அட்டவணை 1.6**

**Price Trends – 2025 ஆசிய-பசிபிக் பிராந்திய மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலை போக்குகள் – 2025**

| மாதம் | பரல் ஒன்றிற்கான விலை (USD) | | | | |
|---|---|---|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் | பெற்றோல் 95 ஒக்டேன | சுப்பர் டீசல் | ஓடோ டீசல் | மசகு எண்ணெய் |
| ஜனவரி | 84.482 | 86.750 | 95.412 | 94.765 | 72.81 |
| பெப்ரவரி | 84.833 | 86.301 | 91.706 | 90.625 | 73.28 |
| மார்ச் | 79.558 | 81.001 | 86.477 | 85.129 | 80.22 |
| ஏப்ரல் | 75.303 | 76.754 | 81.774 | 80.480 | 77.62 |
| மே | 75.029 | 76.467 | 79.365 | 78.851 | 72.63 |
| யூன் | 80.103 | 82.006 | 87.032 | 86.587 | 67.73 |
| யூலை | 77.929 | 79.597 | 90.889 | 89.819 | 63.62 |
| ஆகஸ்ட் | 77.964 | 80.127 | 86.373 | 85.475 | 69.81 |
| செப்ரெம்பர் | 79.515 | 81.556 | 89.081 | 88.222 | 71.12 |

(மூலம *Asia–Pacific Petroleum Market Statistics (2025)*)

**பெற்றோலியப் பொருட்களின் விலைப் போக்குகள் – 2025 (சிங்கப்பூர் பிளாட் விலைகளின் அடிப்படையில்)**

2025ஆம் ஆண்டில் சிங்கப்பூர் பிளாட் விலைகளைக் கவனத்தில் எடுத்து,

- மார்ச் மாதத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் அதிகபட்ச விலை USD 80.22 ஆகவும், யூலையில் குறைந்தபட்ச விலை USD 63.62 ஆகவும் பதிவாகியுள்ளது. அவ் ஆண்டில் பரல் ஒன்றிற்கான சராசரி மசகு எண்ணெயின் விலை USD 72.093 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பெப்ரவரி மாதத்தில் ஒரு பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 84.33 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 75.029 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை

ஆகவும் பதிவாகியுள்ள அதேநேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 81.173 ஆகவும் பதிவாகியுள்ளது.

- ஜனவரி மாதத்தில் ஓட்டோ டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 94.765 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 78.851 ஆகவும் பதிவாகியுள்ளது. அதேநேரத்தில், ஓட்டோ டீசல பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை 86.661ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஜனவரி மாதத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 95.412 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 79.365 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 87.568 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மாதம் பதிவு செய்யப்பட்ட சராசரி விலை (USD/ பரல்)

**அட்டவணை 1.7**
**பெற்றோலியப் பொருட்களின் சராசரி, அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச விலைகள் – 2025**
**(சிங்கப்பூர் பிளாட் விலைகளின் அடிப்படையில்)**

| பெற்றோலியப் பொருட்கள | அதிகபட்ச விலை (USD/ பரல்) | பதிவு செய்யப்பட்ட மாதம் | குறைந்தபட்ச விலை (USD/ பரல்) | பதிவு செய்யப்பட்ட மாதம் | சராசரி விலை (USD/பரல்) |
|---|---|---|---|---|---|
| மசகு எண்ணெய் | 80.22 | மார்ச் | 63.62 | யூலை | 72.093 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 84.833 | பெப்ரவரி | 75.029 | மே | 79.413 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 86.750 | ஜனவரி | 76.467 | மே | 81.173 |
| ஓட்டோ டீசல் | 94.765 | ஜனவரி | 78.851 | மே | 86.661 |
| சுப்பர் டீசல் | 95.412 | ஜனவரி | 79.365 | மே | 87.568 |

*(**Source:** Ceylon Petroleum Corporation)*

### ii. உள்நாட்டு எரிபொருள் விலைகளில் உலகளாவிய விலைகளின் தாக்கம்

இலங்கை முழுமையாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களைச் சார்ந்து இருப்பதால், சர்வதேச எரிபொருள் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் ஓட்டோ டீசலின் நாளாந்த விற்பனைத் தொகை அதிகமாக இருப்பதால், இந்த எரிபொருட்களின் உலகளாவிய விலை மாற்றங்கள் உள்நாட்டு சில்லறை விலைகளில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், பெற்றோல் 95 ஒக்டேன் மற்றும் சுப்பர் டீசல் மொத்த விற்பனையில் ஒப்பீட்டளவில் சிறிய பங்கைக் கொண்டிருப்பதால், இந்த தயாரிப்புகளில் சர்வதேச விலை மாற்றங்கள் குறிப்பிடத்தக்க உள்நாட்டு விலை மாற்றங்களை ஏற்படுத்தாது.

2025 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) செய்த சராசரி மாதாந்த இறக்குமதிச் செலவுகளின் அடிப்படையில், பெப்ரவரியில் பெற்றோல் 92 ஒக்டேன் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 84.833 ஆகவும், மே மாதத்தில் குறைந்தபட்ச விலை USD 75.029 ஆகவும் பதிவு செய்யப்பட்டது. அதேபோல், ஓட்டோ டீசலுக்கு, ஜனவரியில் பரல் ஒன்றிற்கு அதிகபட்ச விலை USD 94.765 ஆகவும், மே மாதத்தில் குறைந்தபட்ச விலை USD 78.851 ஆகவும் பதிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1.8**
**எரிபொருளின் சராசரி மாதாந்த இறக்குமதி செலவு – 2025**
**(இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)**

| மாதம் | பரல் ஒன்றிற்கான சராசரி இறக்குமதி செலவு (USD) | |
|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் (USD/ பரலட) | லங்கா ஓடோ டீசல் (USD/ பரல்) |
| ஜனவரி | 94.73 | 106.95 |
| பெப்ரவரி | 100.28 | 106.95 |
| மார்ச் | 105.44 | 109.51 |
| ஏப்ரல் | 108.34 | 109.32 |
| மே | 102.29 | 101.34 |
| யூன் | 93.17 | 103.23 |
| யூலை | - | - |
| ஆகஸ்ட் | 89.93 | 94.99 |
| செப்ரெம்பர் | 83.66 | 86.82 |

*(**Source:** Ceylon Petroleum Corporation)*

### 1.5.3 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலிய விநியோகத்திற்கான பங்களிப்பு

#### i. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகம்

பொருளாதார நெருக்கடிகளுக்கு பின்னர் பொருளாதார செயற்பாடுகள் மீளெழுச்சி பெறத் தொடங்கியதிலிருந்து, அந்நியச் செலாவணி நெருக்கடிகள் சற்று தளர்வடைந்ததனால், 2025 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் முன்பு போல் இடம்பெறத் தொடங்கியுள்ளது. இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக ஐந்து (05) பிரதான வழங்குனர்களால் 3,749,896.33 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளடங்கலாக 08 பெற்றோலியப் பொருட்கள் USD 2,423.139 மில்லியன் செலவின் இறக்குமதி செய்யப்பட்டதோடு இதற்காக பெருந்தொகை பணம் செலவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**அட்டவணை 1.9**
**இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் – 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு**

| உற்பத்தி வகைகள் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லுங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சீனோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர். எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் (மெ.தொ) |
|---|---|---|---|---|---|
| மசகு எண்ணெய் | 1,319,299 | | | | **1,319,299** |
| லங்கா ஓடோ டீசல் | 408,450.03 | 255,183.91 | 143,781 | 109,095.31 | **916,510.25** |
| லங்கா சுப்பர் டீசல் | 15,098.09 | 7,955.97 | 5,988 | 6,016.79 | **35,058.85** |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 465,751.15 | 241,242.46 | 125,977 | 110,834.25 | **943,804.86** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 10,277.91 | 13,989.28 | 3,000 | 6,081.76 | **33,348.95** |
| விமான எரி-பொருள் | 219,142.59 | - | - | - | **219,142.59** |
| லங்கா உலை எண்ணெய் குறை சல்பர் (800 செக்) | - | - | 19,122 | - | **19,122.00** |
| கப்பலுக்கான உலை எண்ணெய் | - | 140,078.83 | 123,531 | - | **263,609.83** |
| மொத்தம் | **2,438,018.77** | **658,450.45** | **421,399** | **232,028.11** | **3,749,896.33** |

(மூலம்: *Ceylon Petroleum Corporation (CPC), Lanka Indian Oil Company (LIOC), Sinopec Energy Lanka (Pvt) Ltd, and R.M. Parks (Pvt) Ltd)*

அட்டவணை 1.10

**2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி செலவினம**

| உற்பத்தி வகைகள் | இறக்குமதி செலவினம் (USD மில்லியன்) – Import Expenditure | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லுங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சீனோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர். எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
| மசகு எண்ணெய் | 761.473 | - | - | - | **761.473** |
| லங்கா ஓடோ டீசல் | 222.047 | 170.421 | 136.63 | 73.87 | **602.968** |
| லங்கா சுப்பர் டீசல் | 10.106 | 5.559 | 3.99 | 4.16 | **23.815** |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 328.771 | 173.935 | 121.98 | 79.66 | **704.346** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 7.215 | 10.170 | 2.33 | 4.58 | **24.295** |
| விமான எரி-பொருள் | 152.269 | - | - | - | **152.269** |
| லங்கா உலை எண்ணெய் உயர் சல்பர் | - | - | 8.99 | - | **8.99** |
| லங்கா உலை எண்ணெய் குறை சல்பர் | - | 77.043 | 67.94 | - | **144.983** |
| மொத்தம்ட | **1,481.881** | **437.128** | **341.86** | **162.27** | **2,423.139** |

(மூலம்: *Ceylon Petroleum Corporation (CPC), Lanka Indian Oil Company (LIOC), Sinopec Energy Lanka (Pvt) Ltd, and R.M. Parks (Pvt) Ltd)*

## ii. பெற்றோலியப் பொருட்களின் விநியோகம்

2025 ஆம் ஆண்டில், எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நான்கு எரிபொருள் விநியோக நிறுவனங்களான இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் லங்கா இந்தியன் ஒயில் கம்பெனி, ஆர். எம். பார்க் கம்பெனி மற்றும் சினோபெக் எனர்ஜி லங்கா தனியார் கம்பெனி ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டு, நாடு முழுவதும் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை 1.11

**எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை (2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு)**

| மாகாணம் | CPC | LIOC | RM Parks | Sinopec Energy Lanka (Pvt) Ltd | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மத்திய | 71 | 36 | 10 | 11 | **128** |
| கிழக்கு | 90 | 19 | 13 | 15 | **137** |
| வடமத்திய | 59 | 14 | 9 | 9 | **91** |
| வடக்கு | 96 | 16 | 7 | 7 | **126** |
| வடமேல் | 129 | 28 | 23 | 28 | **208** |
| சபரகமுவ | 57 | 17 | 10 | 10 | **94** |
| தெற்கு | 119 | 27 | 11 | 13 | **170** |
| உவா | 40 | 16 | 8 | 9 | **73** |
| மேல் | 226 | 96 | 39 | 48 | **409** |
| மொத்தம் | **887** | **269** | **130** | **150** | **1,436** |

(மூலம்: *Ceylon Petroleum Corporation (CPC), Lanka Indian Oil Company (LIOC), Sinopec Energy Lanka (Pvt) Ltd, and R.M. Parks (Pvt) Ltd)*

### iii. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

போக்குவரத்து, மின்சாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி போன்ற தேசிய பொருளாதாரத்தின் அனைத்துத் தொழிற்துறைகளும் வினைத்திறன் மிக்கதாக செயற்படுவதோடு இவை நம்பகமான பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்தைச் சார்ந்து இருப்பதால், அத் தொழிற்துறைகளின் சீரான செயற்பாட்டின் தேவைக்கு ஏற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிப்பது அவசியமானதாகும். இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையில் ஒவ்வொரு எரிபொருள் வழங்குனரின் பங்களிப்பையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்த பெற்றோலிய பொருட்களின் விற்பனை 4,656,810 மெற்றிக் தொன் ஆகும்.

**அட்டவணை 1.12**
**2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்**

| உற்பத்தி வகைகள் | விற்பனை செய்யப்பட்ட தொகை (மெற்றிக் தொன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சீனோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர். எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 1,078,772 | 223,069.104 | 120,178.74 | 82,210 | **1,504,230** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 31,958 | 12,893.404 | 4,253.87 | 3,488 | **52,593** |
| லங்கா ஓடோ டீசல் | 1,076,668 | 264,484.367 | 139,547.34 | 93,701 | **1,574,401** |
| லங்கா சுப்பர் டீசல் | 28,112 | 9,190.909 | 5,453.71 | 4,731 | **47,488** |
| லங்கா மண்ணெண்ணெய் | 179,270 | - | - | - | **179,270** |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் | 10,529 | - | - | - | **10,529** |
| லங்கா இரசாயன நெப்தா | 186,320 | - | - | - | **186,320** |
| லங்கா உலை எண்ணெய் 800 செக் | - | - | - | - | - |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | 83,864 | - | - | - | **83,864** |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்)) | 96,443 | 169,360.955 | - | - | **265,804** |
| லங்கா சுப்பர் உலை எண்ணெய் | 132,012 | - | - | - | **132,012** |
| ஜெட் A-1 | 598,656 | - | - | - | **598,656** |
| லங்கா சோல்வண்ட்(SBP) | 1,618 | - | - | - | **1,618** |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 19,918 | - | - | - | **19,918** |
| லங்கா AV வாயு | 108 | - | - | - | **108** |
| **மொத்தம்** | **3,524,248** | **678,999** | **269,434** | **184,130** | **4,656,810** |

(மூலம்: *Ceylon Petroleum Corporation (CPC), Lanka Indian Oil Company (LIOC), Sinopec Energy Lanka (Pvt) Ltd)*

**தகவல்:**

1 பரல் = 159லீற்றர்

1 கிலோ லீற்றர் = 1000 l = 6.29 பரல்

மசகு எண்ணெய் : 1 மெ.தொ. = 7.33 பரல் = 1.165 கிலோ லீற்றர்

டீசல் : 1 மெ.தொ = 7.45 பரல் = 1.19 கிலோ லீற்றர்

பெற்றோல் : 1 மெ.தொ = 8.5 பரல் = 1.36 கிலோ லீற்றர்

**அட்டவணை 1.13**
**நாளாந்த சராசரி எரிபொருள் நுகர்வு**

**அனைத்து வழங்குனர்களின் ஒட்டுமொத்த சராசரி நாளாந்த எரிபொருள் நுகர்வு (மெற்றிக் தொன்களில்) – இலங்பை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்(ஊீஊ)இ ஆர்எம் பாாக், சினோபக் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி(டுஐழுஊ) – சேர்க்கப்பட்டது**

| மாதம் | பெற்றோல் 92 ஒக்டேன் (MT/day) | பெற்றோல் 95 ஒக்டேன (MT/day) | சுப்பர் டீசல் (MT/day) | ஒடோ டீசல் (MT/day) | நாளாந்த எரிபெ–ாருள் நுகர்வு |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 3,689.01 | 130.8 | 500.43 | 3,876.75 | **8,196.99** |
| பெப்ரவரி | 3,836.91 | 130.95 | 549.13 | 4,653.61 | **9,170.60** |
| மார்ச் | 3,823.75 | 129.88 | 552.49 | 4,380.14 | **8,886.26** |
| ஏப்ரல் | 4,154.48 | 142.43 | 536.64 | 4,144.41 | **8,977.96** |
| மே | 4,024.81 | 142.64 | 504.25 | 4,014.56 | **8,686.26** |
| யூன் | 4,299.94 | 175.92 | 618.38 | 4,579.44 | **9,673.68** |
| யூலை | 3,823.03 | 144.26 | 516.83 | 3,956.86 | **8,441.00** |
| ஆகஸ்ட் | 3,973.43 | 164.71 | 571.51 | 4,306.96 | **9,016.61** |
| செப்ரெம்பர் | 3,939.96 | 173.72 | 573.34 | 4,362.38 | **9,049.40** |
| சராசரி (ஜனவரி - செப்ரெம்பர்) | **3,951.48** | **148.15** | **547.89** | **4,252.90** | **8,900.42** |

**பிரதான குறிகாட்டிகள்:**


மொத்த சராசரி நாளாந்த எரிபொருள் நுகர்வு (ஜனவரி- செப்ரெம்பர் 2025) ≈ 8900 மெ.தொ/நாள்

ஆகக்கூடிய மொத்த நுகர்வு: யூன் (9,674 மெ.தொ/நாள்)

ஆனகக் குறைந்த நுகர்வு: யூலை (8,441 மெ.தொ/நாள்)

92 ஒக்டேன்க்கான அதிகபட்ச நாளாந்த நுகர்வு, சராசரி - மொத்த எரிபொருள் நுகர்வில் 44%

**வரைபு 1.4**
**ஒட்டுமொத்த சராசரி நாளாந்த எரிபொருள் நுகர்வு 2025**



### 1.5.4 2025 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்

- **பெற்றோலியத் தொழிற்துறைக்கு புதிய ஒழுங்குபடுத்துனரை அறிமுகம் செய்தல்**

இதுவரை, இலங்கையில் கீழ்நிலை பெற்றோலியத் தொழற்துறைக்கு விரிவான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையொன்று இல்லை. பெற்றோல், டீசல், உலை எண்ணெய், விமான எரிபொருள், திரவ பெற்றோலிய வாயு (LPG) மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் போன்ற பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை மற்றும் மின்சாரம் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி தொழிற்துறைகளின் மேற்பார்வை ஆகியவற்றை உள்ளடக்கிய இத் தொழிற்துறை, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறது. இவ் சட்டங்கள் தற்போது சட்ட கட்டமைப்பிற்குள் செயற்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைப்பு இல்லாமை மற்றும் ஒருங்கிணைந்த ஒழுங்குபடுத்தல் அணுகுமுறை காரணமாக, ஒரே பணிகள் பெரும்பாலும் பல தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்றன, சில நேரங்களில் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்படுகின்றன, இதன் விளைவாக செயற்திறன்யின்மை ஏற்பட்டு நாட்டின் எரிசக்தித் துறையை திறம்பட நிர்வகிப்பது சவாலாக உள்ளது. பெற்றோலிய சந்தை செயற்பாடுகளின் விரிவாக்கம் மற்றும் புதிய போட்டி நிறுவனங்களின் உள்நுழைவுடன், தயாரிப்பு தரத்தை உறுதி செய்வதற்கும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் ஒரு சுயாதீனமான ஒழுங்குபடுத்தல் அமைப்பு மற்றும் வலுவான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் அவசியத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இதற்கிணங்க, தொழிற்துறை தொடர்பான பிற சட்டங்களை ஒருங்கிணைத்து உயர் மட்ட எரிசக்தி மாற்றச் சட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது எரிசக்தி நுகர்வோரின் விருப்பங்களை நிறைவேற்றும் மற்றும் எரிசக்தி தொழிற்துறையில் பொதுமக்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், உராய்வுநீக்கி எண்ணெய் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கு, ஒரு நிரந்தர ஒழுங்குபடுத்துனர் இன்னும் நியமிக்கப்படவில்லை. அத்தகைய நியமனம் செய்யப்படும் வரை, அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் அடிப்படையில், இந்தப் பகுதியில் ஒழுங்குபடுத்தல் அதிகாரத்தைப் பயன்படுத்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- **வூ எரிபொருள் நிரப்பும் நிலையத்தை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான வழிகாட்–டுதலை அறிமுகப்படுத்துதல்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மட்டுமே ஆரம்பத்தில் பெற்றோலியம் மற்றும் அது தொடர்பான அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்து விநியோகித்திருந்தது. எவ்வாறாயினும், சந்தை தாராளமயமாக்கப்பட்டதனால், தற்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) நீங்கலாக லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் (Sinopec), R.M. Park (Pvt) Ltd மற்றும் United Petroleum Lanka (Pvt) டுவன ஆகிய நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், சில சிக்கல்கள் காரணமாக, United Petroleum Lanka (Pvt) Ltd; தற்போது இலங்கை சந்தையில் அதன் செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளது.

தற்போது, புதிய போட்டி நிறுவனங்கள் சந்தையில் உள் நுழைந்துள்ளதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக குறைந்தபட்ச தகுதிநிலைகளை உள்ளடக்கிய தெளிவான வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பின்வரும் பிரதான பகுதிகளை உள்ளடக்கிய வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது.

- எரிபொருள் நிரப்பு நிலைய அமைவிடத் தெரிவு தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணம் தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான பிரமாணங்கள்

இவ் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்குத் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் தகவல்களுக்காக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ் வழிகாட்டுதல்களுக்கிணங்க புதிய எரிபொருள் விநியோக நிறுவனங்கள் செயல்படுகின்றனவா என்பதையும் அமைச்சு கண்காணிக்கும

மேலும், புதிய அரசாங்கக் கொள்கை தீர்மானத்தின் கீழ், இலங்கையில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்கான ஒப்புதல் வழங்குவதற்கான திருத்தப்பட்ட நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான அனைத்து எதிர்கால ஒப்புதல்களும் தொடர்புடைய நடவடிக்கைகளும் இக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பெற்றோலியப் பொருட்களை நேரடியாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு வழங்கும் செயல்முறையை நெறிப்படுத்துதல்**

எரிபொருள் விநியோக நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சில அரச நிறுவனங்கள் உள்ளடங்கலாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், நாடு முழுவதும் நிறுவப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாகவும் எரிபொருளை விநியோகிக்கின்றன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டாலும், அத்தகைய நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாக மொத்தமாக எரிபொருளை வழங்குவதற்கு அமைச்சிடமிருந்து முன்னர் உத்தியோகபூர்வ ஒப்புதல் பெறப்படவில்லை. 2023 அக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, நாடு முழுவதும் எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் அண்ணளவாக 3,385 நுகர்வோர் சேவை மையங்களை செயற்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ் நுகர்வோர் சேவை மையங்கள் மூலம் தினமும் கணிசமான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், அத்தகைய மையங்களை நிறுவி செயற்படுத்தும் செயல்முறையை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. இதற்கிணங்க, தற்போது பதிவுசெய்யப்பட்ட நுகர்வோர் சேவை மையங்களில் எது தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க குறைந்தபட்ச அளவுகோல்களை அறிமுகப்படுத்தவும், புதிய மையங்களின் பதிவை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் குறைந்தபட்ச தரநிலைகளை பூர்த்தி செய்யும் நுகர்வோர் சேவை மையங்களை செயற்படுத்துவதற்கு எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் அமைச்சிடமிருந்து உத்தியோகபூர்வ ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு, செயற்படும் நுகர்வோர் சேவை மையங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.14**
**2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு**

| எரிபொருள் விநியோக நிறுவனம் | நுகர்வோர் சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (ஊீஊ) | 521 |
| 02. லங்கா இந்திய ஒயில் கம்பனி (டுஐழுஊ) | 178 |
| 03. சினோபெக் எனர்ஜி லங்கா நிறுவனம் | 14 |
| மொத்தம் | **713** |

(மூலம்: *Ceylon Petroleum Corporation, Lanka Indian Oil Company, Sinopec Energy Lanka (Pvt) Ltd.)*

- **புதிதாக நிறுவப்பட்ட மற்றும் ஏற்கனவே உள்ள நுகர்வோர் சேவை மையங்களை பதிவுசெய்தல்**

புதிதாக நிறுவப்பட்ட நுகர்வோர் சேவை மையங்களின் பதிவு மற்றும் ஏற்கனவே உள்ள மையங்களின் மீள்பதிவு ஆகியவை வலுசக்தி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

- **எரிபொருள் விலைச் சூத்திரத்தை அமுல்படுத்துதல்**

குஇலங்கையில் எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறை நீண்ட காலமாக ஒழுங்கற்றதாகவும், முறையற்றதாகவும் செயற்பட்டதால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) பாரிய நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டது. நிலையான அமைப்பு இல்லாத நிலையில், முன்னைய விலை திருத்தங்கள் பெரும்பாலும் எரிபொருள் விலைகளில் திடீர் மற்றும் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களுக்கு வழிவகுத்தன.

இவ் சவால்களை எதிர்கொள்வதற்கு, அரசாங்கம் 2022 மே மாதத்தில் செலவு-பிரதிபலிப்பு எரிபொருள் விலை நிர்ணய சூத்திரத்தை அறிமுகப்படுத்த முன்முயற்சி எடுத்தது. இது எரிபொருள் விலைகள் உண்மையான செலவுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதை உறுதிசெய்து அதன் மூலம் சந்தையில் அதிகளவில் நிலையான விலையை பராமரிக்க உதவுகிறது.

2025 ஆம் ஆண்டில், ன்பர் (09) சந்தர்ப்பங்களில் எரிபொருள் விலை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2025 செப்ரெம்பர் எரிபொருள் விலைகளை 2024 செப்ரெம்பர் விலைகளுடன் ஒப்பிடும் போது, விலைகள் பின்வருமாறு குறைந்துள்ளதைக் அவதானிக்க முடிந்தது:


- பெற்றோல் (ஒக்டேன் 92) - 10% அதிகரிப்பு
- பெற்றோல் (ஆக்டேன் 95) - 11% அதிகரிப்பு
- ஓட்டோ டீசல் - 9.7% அதிகரிப்பு
- சூப்பர் டீசல் - 11% அதிகரிப்பு
- மண்ணெண்ணெய் - 10.89% அதிகரிப்பு


**அட்டவணை 1.15**
**2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சந்தை விலைகள்**


| உற்பத்தி | ஆகக்கூடிய விலை (ரூ.ஃ லீற்றர்) | பதிவு–செய்யப்பட்ட மாதம் | ஆகக்கூடிய விலை (ரூ./லீற்றர்) | பதிவு–செய்யப்பட்ட மாதம் |
|---|---|---|---|---|
| பெற்றோல் 92ஒக்டேன் | ரூ. 309.00 | (ஜனவரி/பெப்ரவரி) | ரூ. 293.00 | (ஏப்ரல்/மே) |
| பெற்றோல்95 ஒக்டேன் | ரூ. 371.00 | (ஜனவரி/பெப்ரவரி) | ரூ. 335.00 | (செப்ரெம்பர்) |
| ஓட்டோ டீசல் | ரூ. 289.00 | (யூன்/யூலை ) | ரூ. 277.00 | (செப்ரெம்பர்) |
| சுப்பர் டீசல் | ரூ. 331.00 | (ஜனவரி/பெப்ரவரி/மார்ச்) | ரூ. 313.00 | (செப்ரெம்பர்) |
| லங்கா மண்ணெண்ணெய் | ரூ. 185.00 | (யூன்/யூலை/ஆகஸ்ட்) | ரூ. 178.00 | (ஏப்ரல்/மே) |


*(**Source:** Ministry of Energy)*


**வரைபு 1.5**
**2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு அறிகையிடப்பட்ட சந்தை விலைகள**






### 1.5.5 பெற்றோலிய சந்தையின் தன்மைகள்

- **உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தகம்**

இலங்கை நுகர்வோருக்கு சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் உயர்தர உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் தயாரிப்புகளை போட்டி விலையில் வழங்குவதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 5(C) மற்றும் தொடர்புடைய திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் உராய்வு நீக்கி எண்ணெய் ஒரு பெற்றோலியப் பொருளாக வரையறுக்கப்படுகிறது. இதற்கிணங்க, தொடர்புடைய அதிகாரங்களின் படி, இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் சந்தை

06/0858/217/015 ஆம் இலக்கமிடப்பட்ட 2006.05.08 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் விஞ்ஞாபனத்தின் மீது 2006.05.24 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானற்கிணங்க, 1453/6 ஆம் இலக்கமிடப்பட்ட 2006.07.12 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் முழுமையாக தாராளமயமாக்கப்பட்டது.

இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டுக்குள், 34 நிறுவனங்கள் 45 வர்த்தக குறியீட்டடின் அடிப்படையில் நாட்டிற்குள் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் பெற்றுள்ளன, இவற்றில், 4 நிறுவனங்கள் உள்நாட்டில் உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்திகளை முன்னெடுக்கப்படுவதுடன், இவ் நிறுவனங்கள் 5 செயற்பாடுகளின் கீழ் செயற்படுகின்றன.

மேலும், இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறைக்கான புதிய கொள்கை கட்டமைப்பை அறிமுகப்படுத்த அமைச்சு தீவிரமாக செயற்பட்டு வருகிறது, இது 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **தார் வர்த்தகம்**

இலங்கையில் தார் உற்பத்தி முதன்மையாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) மேற்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும், உள்நாட்டு உற்பத்தி உள்நாட்டு கேள்வியை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை, எனவே, நிறுவப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் பிற நிறுவனங்களுக்கு தார் இறக்குமதிக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**அட்டவணை 1.16**
**2025 ஆம் ஆண்டின் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் செயற்பாடுகள்**

| செயற்பாட்டு இல. | விபரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| A1 | உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல், விநியோகம், கலத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் | 4 |
| A2 | உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 27 |
| B | கலவைசெய்யப்படாத பரிமாற்றல் எண்ணெய் (un-blended transmission oils) மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல | 1 |
| C1 | கப்பலுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 1 |
| C2 | கைத்தொழிலுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 1 |

2025 ஆம் ஆண்டில், CPC தவிர ஏனைய 10 நிறுவனங்களுக்கு 185,000 மெற்றிக் தொன் தார் இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இவ் அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 55,944.5 மெற்றிக் தொன் தார் தொடர்புடைய நிறுவனங்கள் இறக்குமதி செய்வதற்கு ஆட்சேபனை இல்லா கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும், இலங்கையில் தார் இறக்குமதிக்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் பணியில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

- **கப்பல்களுக்கான எண்ணெய் வர்த்தகம்**

தற்போது, 12 நிறுவனங்களுக்கு கப்பல்களுக்கான எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கப்பல்களுக்கான எண்ணெய் இறக்குமதிக்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

ஒப்புதலளிக்கப்பட்ட தொகையில், 778,979.13 மெற்றிக் தொன்களுக்கு ஆட்சேபனை இல்லா கடிதங்கள் மூலம் இவற்றை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. கப்பல்களுக்கான எண்ணெயைய் வர்த்தகத்தின் செயற்திறன் மற்றும் நோக்கத்தை மேம்படுத்த, மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வியாளரின் தலைமையில் புதிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது, கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதுடன், இதன் இறுதி அறிக்கை 2025 இல் வழங்கப்படுமென என எதிர்பார்க்கப்படுகிறது.

- **ஜெட் A-1**

விமானங்களுக்கான ஜெட் A-1 எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) முன்னெடுக்கப்படுகிறது. மேலும், ஜெட் A-1 எரிபொருள் இறக்குமதிக்கு Cannel (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின்படி, விமான எரிபொருள் விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் அவ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் உள்ளது. இலங்கையில் ஜெட் A-1 இறக்குமதிக்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதை அமைச்சு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **அனுமதிப்பத்திரம் வைத்திருப்ப–வர்களால் இறக்குமதி செய்யப்படாத பெற்றோலியம் தொடர்பான பொருட்களுக்கு ஆட்சேபனையின்மை கடிதங்கள் வழங்குதல் – 2025**

நாட்டில் கைத்தொழிற்துறை மற்றும் சேவைத் துறைகளுக்கு அத்தியாவசிய பெற்றோலியம் தொடர்பான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எப்போதாவது, ஏனைய நிறுவனங்கள் இவ் அனுமதிப்பத்திரதாரர்களால் இறக்குமதி செய்யப்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சிடம் தினசரி கோரிக்கைகளை சமர்ப்பிக்கின்றன. இவ் கோரிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளும் தனித்தனியாகப் பெறப்படுகின்றன.

- கைத்தொழில் அமைச்சு
- இலங்கை முதலீட்டு சபை
- இரசாயன ஆயுத மாநாட்டை செயல்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபை
- பிற தொடர்புடைய நிறுவனங்கள்

இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில், அமைச்சு பின்வரும் வகைகளின் கீழ் இறக்குமதிகளுக்கு ஆட்சேபனையின்மை கடிதங்களை வழங்கியுள்ளது:

- ரப்பர் தொடர்பான பொருட்கள்
- ஆடை தொடர்பான பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- மை தொடர்பான பொருட்கள்
- பிற தொழிற்துறை பொருட்கள்

- பிற தொழிற்துறை மற்றும் சேவை நிறுவனங்களுக்கு விற்பனைக்கான பொருட்கள்

2025 ஆம் ஆண்டில், அமைச்சினால் பின்வரும் ஆடசேபனையின்மை கடிதங்கள்
- பிற தொழிற்துறை பொருட்களுக்கு பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 383 ஆட்சேபனையின்மை கடிதங்கள்
- பிற தொழில்துறை மற்றும் சேவை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 69 ஆட்சேபனையின்மை கடிதங்கள்

### 1.5.6 பெற்றோலியம் சார்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்

- **ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுதல்.**

அம்பாந்தோட்டையில் ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ் திட்டத்திற்காக தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து 2023.02.24 ஆம் திகதி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகளை (EOI) கோரியிருந்ததுடன், இதற்கு பதிலளிக்குமுகமாக ஏழு (07) முதலீட்டாளர்கள் தங்கள் ஆர்வங்களை வெளிப்பாடுகளை சமர்ப்பித்திருந்தனர்.

இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ததன் பின்னர், இரு (02) நிறுவனங்கள் விரிவான முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கு தகுதிவாய்ந்தனவாகக் காணப்பட்டன. இவ் இரு நிறுவனத்தில், China Petroleum & Chemical Corporation நிறுவனம் மட்டும் விரிவான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தது. இவ் விரிவான முன்மொழிவானது திட்டக் குழுவினால் (PC)மதிப்பீடு செய்யப்பட்டு பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழுவுடன் (CANC) கலந்துரையாடி இவ் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் China Petroleum & Chemical Corporation நிறுவனத்துடன் உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு அமைச்சு, அமைச்சரவை அமைச்சர்களிடமிந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது.

இதற்கிணங்க, இது தொடர்பான உடன்பாடுகளை எட்டுவதற்கு China Petroleum and Chemical Corporation நிறுவனத்துடன் நான்கு சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதுடன் இவை தற்போது இறுதிநிலையில் உள்ளன. இறுதி உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படும்.

**கருத்திட்டத்திட்டத்தின் பிரதான விடயங்கள்**
- சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் - நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 10,000 பரல்
- எதிர்பார்க்கப்பட்ட முதலீடு - USD 1.5 பில்லியன் - USD 2 பில்லியன்
- கருத்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலம் - 2024 - 2028



*(A model of the proposed refinery - Hambanthota)*

இத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள்:

- நாட்டில் சக்தவளப் பாதுகாப்பை உறுதி செய்தல்
- புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- பெற்றோலியத் தொழிற்துறை தொடர்பான புதிய தொழிற்துறை வாய்ப்புகளை உருவாக்குதல்
- நாட்டிற்கு அன்னிச்செலாவணி நன்மையை பெற்றுக்கொடுத்தல்

- **திருகோணமலை தாங்கிப் பண்ணை அபிவிருத்தி**

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள மேல் நிலைத் தாங்கிப் பண்ணை பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கப்பல்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக பிரித்தானிய அரசால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இவை மீள புனரமைக்கப்பட்டுள்ளது. இவ் களஞ்சியத் தாங்கிகள் ஒவ்வொன்றும் 10,000 MT திறன் கொண்டதாக உள்ளதுடன், இவை ஒவ்வொன்றும் 99% உறுதியாக உள்ளன. மேலும், இல் எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்காக 21/2285/325/050 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.01.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இவ் களஞ்சியத் தாங்கிகளைபின்வரும் உடன்படிக்கைகள் மூலம் 50 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் விபரங்கள் பின்வருமாறு

- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 24 எண்ணெய் தாங்கிகள்
- லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு (LIOC) 14 எண்ணெய் தாங்கிகள்
- வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) 61 எண்ணெய் தாங்கிகள்

- **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான மொத்த செலவின் USD 20 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டம் இரு கட்டங்களாக அமுல்படுத்தப்படும்.

**விளக்கப் படம் 2**
**திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணை**







*Developing of 24 Trincomalee fuel tanks*

2025.09.30 ஆம் திகதியில் தாங்கி 40 மற்றும் 41 ஆகியவற்றின் நவீனமயப்படுத்தல் பணிகள் 75% பூாத்திசெய்யப்படும். இவ் திட்டம் 2027 மார்ச் மாதத்தில் திட்டமிட்டதன்படி பூாத்திசெய்யப்படும்.

- கட்டம் -1 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல் (12 தாங்கிகள்)
- கட்டம் -2 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல் (9 தாங்கிகள்)
- எரிபொருள் தாங்கி இல. 40 இனை புதுப்பித்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதற்குள் தண்ணீரை நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் அடுத்த மாதத்திற்குள் நீர் சோதனை நடத்தப்படும்.
- தாங்கி இல.41 இன் அடிப்பகுதி பழுதுபார்க்கப்பட்டு வருகிறது.
- திருகோணமலை துறைமுக இறங்குதுறையிலிருந்து களஞ்சிய முனையம் வரை குழாய் அமைப்பை நிர்மாணிப்பது தொடர்பான பெறுகை செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

- **வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) உரித்தான தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்**

வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL வழங்கப்பட்ட 61 எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்திக்கான முதல் படியாக பின்வரும் செயற்பாடுகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன:

- பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான பாதையினை துப்பரவு செய்தல்
- Bureau Veritas Lanka (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து இவ் பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான தர மேற்பார்வை அறிக்கையை பெற்றுக்கொள்ளல்
- நீண்ட கால மற்றும் குறுங்கால அபிவிருத்தி மூலோபாயங்களை அடையாளம் காண்பதற்கான சாத்தியவள ஆய்வுகளை முன்னெடுத்தல்

திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக, முன்மொழிவுக-ளுக்கான ஆர்வங்கள் கோரப்பட்டதுடன் இதற்கு பதிலளிக்குமுகமாக 05 நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட திட்டக் குழு (CAPC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) ஆகியவை இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்கின்றன.

எவ்வாறாயினும், திருகோணமலையை சக்தி வள மையமாக அபிவிருத்தி செய்வதற்காக இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இலங்கை இடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதால், இந்த 61 தாங்கிகளும் அதன் கீழ் அபிவிருத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக கொள்கை முடிவு எட்டப்படும் வரை இந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

- **திருகோணமலையை சக்தி வள மையமாக அபிவிருத்திசெய்வதில் இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய**

**அரபு இராஜ்சியத்தின் (UAE) ஒத்துழைப்புக்கள்**

திருகோணமலையை சக்திவள மையமாக அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பு வேண்டி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, இந்திய குடியரசு அரசு மற்றும் ஐக்கிய அரபு இராஜ்சிய அரசு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கைச்சாத்திடுவதற்கான ஒப்புதல் கோரி வலுசக்தி அமைச்சு மற்றும் வெநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைசசால் 2025.03.28 ஆம் திகதி கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் முன்மொழிவுக்கு அமைச்சரவை அமைச்சர்கள் 25/0567/825/031-I ஆம் இலக்கமிடப்பட்ட 2025.04.02 ஆம் திகதியிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் அளித்ததுள்ளனர். இதற்கிணங்க, இலங்கையின் சார்பாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் 025.04.05 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். இது தொடர்பாக தற்போது முத்தரப்பு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

### 1.5.7 எதிர்காலத் திட்டங்கள்

உள்நாட்டு எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் கனியவள எண்ணெய் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பதால், உள்நாட்டு எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் இலங்கையின் பங்களிப்பையும் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை செயற்படுததுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்**

இலங்கையின் பெற்றோலியத் தேவைகளில் சுமார் 25% சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமும , மீதி 75% இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றாலியப் பொருட்கள் மூலமும் பூர்த்திசெய்யப்படுகிறது இதனால், பெற்றோலியப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு அதிகளவான அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக, உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளுக்கான எரிபொருளை உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்வதே எங்கள் பிரதானமான நோக்கமாகும், இதனால், சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தைப் நவீனமயப்படுத்தும் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நாளொன்றுக்கு 100,000 பரல் உற்பத்தி திறன் கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்க வேண்டிய அவசியம் உள்ளது. தற்போது, சர்வதேச நிறுவனங்களிடமிருந்து ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகள் கோரப்பட்டுள்ளன, இதற்கு பதிலளிக்குமுகமாக 20 கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவை தற்போது ஆவண மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

- **திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்தல்**

தற்போது, திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பணிணையில் உள்ள 99 தாங்கிகளில், 24 தாங்கிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) புத்தாக்கத்தின் கீழ் உள்ளன, அதே நேரத்தில் 61 தாங்கிகள் திருகோணமலை பெற்றோலிய முனையம் (தனியார்) நிறுவனத்தின் கீழ் உள்ளன. CPC-க்குச் உரித்தான 24 தாங்கிகளில், இரண்டு தாங்கிகள் தற்போது மீள புதுப்பிக்கப்பட்டு வருகின்றன, மேலும் அதனுடன் தொடர்புடைய குழாய் அமைப்புகளை பழுதுபார்ப்பதற்கான பெறுகை செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **தீவு முழுவதும் மின்சார வாகனங்களுக்கான (நுஏ) மின்னேற்றல் நிலையங்களை நிறுவுதல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) முன்னெடுக்கப்பட்ட ஆய்வில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் தொடர்புடைய மின்சார வாகன (EV)

மின்னேற்றல் நிலையங்களுக்கான அதிக தேவை இருப்பது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வின் அடிப்படையில், நாடு முழுவதும் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள எரிபொருள் நிலையங்களில் EV மின்னேற்றல் நிலையங்களை நிறுவுவுதற்கு CPC திட்டமிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கு, இவ் முயற்சிக்காக ரூ. 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 10 மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது, அவற்றில் 7 நிலையங்கள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன, மேலும் அவை வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றன. இவ் செயற்பாட்டு நிலையங்கள் காலி, திவுலப்பிட்டி, அதுல்கோட்டே, கடவத்த, களுத்துறை, ஹிக்கடுவ மற்றும் பேலியகொட ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

அடுத்து, மேலதிகமாக அனுராதபுரம்,

சக்தி வளப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, நாடு போதுமான எரிபொருள் களஞ்சியத் திறனை பராமரிப்பது அவசியமாகும். தற்போது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன மொத்த களஞ்சிய முனையம் 440,147 மெற்றிக் தொன் மொத்த களஞ்சியத் திறனைப் பராமரிக்கிறது. இத் திறனை மேலும் அதிகரிக்குமுகமாக, தற்போதைய எரிசக்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய களஞ்சியத் தாங்கிகளைக் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறைமையை அபிவிருத்தி செய்தல்**

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்லும் குழாய் அமைப்பானது மிகவும் பழமையானதுடன் பழுதடைந்த நிலையிலும் உள்ளது.

**அட்டவணை 1.17**
**எரிபொருள் களஞ்சிய விரிவாக்கல் திட்டத்தின் விபரங்கள்**

| விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (இலங்கை ரூபாய் மில்லியன்) | நிதி மூலம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| கொலன்னாவை முனையத்தில் மொத்தம் 64,000 அ3 கொள்ளளவு கொண்ட 6 தாங்கிகளை நிர்மாணித்தல். | 3,374 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) | 6 தாங்கிகளின் நிர்மாணப் பணி-களைத் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| கொலன்னாவை முனையத்தில் மொத்தம் 22,000 அ3 கொள்ளளவு கொண்ட 2 தாங்கிகளை நிர்மாணித்தல். | 1,470.4 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) | இந்த இரண்டு தாங்கிகளின் நிர்மாணப் பணி-களைத் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| முத்துராஜவல முனையத்தில் மொத்தம் 40,000 அ3 கொள்ளளவு கொண்ட 3 தாங்கிகளை நிர்மாணித்தல். | 3,496 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) | அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டு, பெறுகை ஆவணங்கள் தய-ாரிக்கப்பட்டு வருகின்றன. |

தெமட்டகொட மற்றும் பம்பலப்பிட்டி ஆகிய மூன்று (03)இடங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

- **எரிபொருள் களஞ்சியத் திறனை அதிகரித்தல்**

இதனால் எரிபொருள் கசிவு ஏற்படுவதோடு, எரிபொருளை இறக்குவதற்கு அதிக நேரமும் செலவினமும் ஏற்படுகிறது. எனவே, எரிபொருள் இறக்குதல் மற்றும் பரிமாற்றுதல் ஆகிய செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக்கும் வகையில்

புதிய குழாய்த் தொகுதியொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.18**
**எரிபொருள் குழாய் அபிவிருத்தி திட்டங்கள்**

| விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (இலங்கை ரூபாய் மில்லியன்) | நிதி ஆதார | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ முனையத்திற்கு 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதை அமைத்தல். | 2,852.5 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) | திருத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் அமைச்சரவையால் நியமித்த பெறுகைக் குழு கூட்டம் நடததுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இறுதி ஆவணம் ஆய்வு செய்யப்பட்டு அமைச்சரவை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| கொலன்னாவை முனையத்திலிருந்து களனிதிஸ்ஸ மின் நிலையத்திற்கு 12 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதை-தயை நிர்மாணித்தல். | 1,444 | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL)) | தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன், அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட உள்ளது. |
| விமான எரிபொருள் பரிமாற்றத்திற்காக முத்துராஜவெலவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு குழாயை நிர்மாணித்தல் | 18,000 | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) | ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி அடிப்படையிலான கேள்விமனு கோரப்பட்டுள்ளன, மேலும் நவம்பர் நடுப்பகுதியில் கேள்வி மனுக்கள் திறக்கப்பட உள்ளன. |

## 1.6 2025 ஆம் ஆண்டின் நிதியியல் முன்னேற்றம்

**அட்டவணை 1.19**
**2025 ஆம் ஆண்டுக்கான மூலதன வரவுசெலவுத்திட்டத்தின் நிதியியல் முன்னேற்றம் – வலுசக்தி அமைச்சு( தலைப்பு 119)**

| | செலவின வகை | | ஒதுக்கீடு (ரூ.மில்.) | செலவு | |
|---|---|---|---|---|---|
| | | | | 30.09.2025 ஆம் திகதியில் உள்ளவாறு (Rs. Mn.) | % தத்தில் |
| | செயற்பாட்டு செயற்பாடுகள் | | | | |
| | அமைச்சர் அலுவலகம் | | | | |
| 1 | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு | கட்டடங்கள் | 0.50 | 0.00 | 0% |
| | | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 0.50 | 0.02 | 4% |
| | | வாகனங்கள் | 2.00 | 0.00 | 0% |
| 2 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல் | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 0.50 | 0.01 | 2% |
| | | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 0.50 | 0.00 | 0% |
| | நிர்வாகம் மற்றும் நிறுவன சேவைகள் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு | கட்டடங்கள் | 0.50 | 0.39 | 78% |
| | | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 1.00 | 0.27 | 27% |
| | | வாகனங்கள் | 1.00 | 0.37 | 37% |
| 2 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல் | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.00 | 0.20 | 20% |
| | | பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 7.00 | 0.04 | 1% |
| | | மென்பொருள் மேம்பாடு | 9.00 | 0.00 | 0% |
| 3 | திறன் விருத்தி | ஊழியர்களுக்கான பயிற்சி | 1.00 | 0.47 | 47% |
| 4 | பெற்றோலிய அபிவிருத்தி கட்டமைப்பு | அராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 0.50 | 0.00 | 0% |
| | **அபிவிருத்தி செயற்பாடுகள** | | | | |
| 1 | CEB கடனின் வெளிநாட்டு கொடுப்பனவுகளுக்கான கணக்கீடுகள் (ADB/JICA) | | 7,676.00 | 2,125.11 | 28% |
| 2 | கொழும்பு கழிவுகளிலிருந்து எரிசக்தி மின் உற்பத்தி நிலையம் | | 1,204.00 | 239.73 | 20% |
| 3 | மினசாரத் தொழிற்துறையில் திறன் அபிவிருத்திக்கான திட்டம் (JICA) | | 0.60 | 0.01 | 2% |
| 4 | கொரிய அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் உலர்மின்கல சக்திவள சேமிப்பு அமைப்பு | | 0.90 | 0.00 | 0% |
| 5 | அரசு கட்டடத்திற்கு (GOSL/இந்தியா) கூரையின் மேல் சூரிய மின்சக்தி வசதி நிறுவலை வழங்குதல் | | 290.00 | 222.54 | 77% |
| 6 | சிறிய தீவுகளில் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அமைப்பின் நிர்மாணம் (இந்திய மானியம்) | | 3,000.00 | 0.00 | 0% |
| 7 | இலங்கை எரிசக்தி திட்டம்-USAID | | 297.00 | 0.00 | 0% |
| 8 | SLAEB இன் திறன்கள் மற்றும் திறன்களை விரிவுபடுத்துதல் | | 163.00 | 0.00 | 0% |
| 9 | சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடமிருந்து SLAERC க்கு நன்கொடை | | 32.00 | 5.00 | 16% |
| 10 | கெரவலப்பிட்டி-துறைமுகம் 2வது மின்பரிமாற்றல் பாதை திட்டம் | | 7,000.00 | 0.00 | 0% |
| 11 | ஹபரானை-கப்பல்துறை புதிய மின்பரிமாற்றல் அபிவிருத்தி திட்டம் | | 1.00 | 0.00 | 0% |
| 12 | சம்பூர்-கப்பல்துறை மின்பரிமாற்றல் அபிவிருத்தி திட்டம் | | 1.00 | 0.00 | 0% |
| 13 | இலங்கை நிலை பெறு தகு வலு அதிகாரசபை | | 200.00 | 62.29 | 31% |
| 14 | இலங்கை அணுசக்தி சபை | | 30.00 | 4.76 | 16% |
| 15 | இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை | | 7.00 | 3.66 | 52% |
| 16 | இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை | | 50.00 | 0.00 | 0% |
| 17 | தேசிய மின்சார ஆலோசனைக் குழு | | 51.00 | 0.00 | 0% |
| 18 | மின்சார சீர்திருத்தங்களுக்கான செயலகத்தை நி-றுவுதல் | | 50.00 | 0.00 | 0% |
| 19 | அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் திட்டம் | | 2.50 | 0.00 | 0% |
| | மொத்தம் | | **20,081.00** | **2,664.87** | **13%** |

அத்தியாயம் 02

# இலங்கை மின்சார சபை (CEB)

## 1. அறிமுகம்

அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனமான இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுடன் அதன்பால் இலங்கையின் மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோகத்தில் பல தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டு, இ.மி.ச. ஐ இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) கீழ் கொண்டு வந்தது. ஆகப் பிந்தைய திருத்தமான 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டது. இது மின்வலுத் தொழிற்றுறையின் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் வினைத்திறன், பொறுப்புக்கூறல், மற்றும் சீரமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மின்சாரத் துறையை பிறப்பாக்கம், பரிமாற்றம், விநியோகம், மற்றும் முறைமைச் செயற்பாடு ஆகியவற்றுக்காகத் தனித்தனி வாரிசு நிறுவனங்களாகப் பிரிப்பதற்கான சட்டபூர்வ வேலைச் சட்டகத்தை வழங்குகிறது.

கடந்த15 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் மின்சாரத் தேவையானது 4.1% என்ற வருடாந்த சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ள அதே வேளை உச்சத் தேவையானது ஆண்டிற்கு 2.6% இனால் அதிகரித்திருந்தது. 2024 இல், நிகர மின் பிறப்பாக்கமாக 16,802 GW hகாணப்பட்டது. இது2023 உடன் ஒப்பிடுகையில் 7.9 % அதிகரிப்பாகும். 2024 இல் உயர்ந்தபட்சத் தேவையானது 2,673 MW இனை அடைந்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.7 % அதிகரிப்பைக் காட்டுகிறது. 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், நிகர மின் பிறப்பாக்கம் 8,675 GWh ஆகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.7% அதிகரிப்பாக உள்ளதுடன் உயர்ந்தபட்சத் தேவை 2,778 MW ஆகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 10% அதிகரிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## 2. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் பிரதான நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2025-08-31 வரை இ.மி.ச. இனால் மேற்கொள்ளப்பட்ட பிரதான மின் பிறப்பாக்கம், சேமிப்பு, NCRE, பரிமாற்றம் மற்றும் விநியோகச் செயற்றிட்டங்கள்/ நடவடிக்கைகளின் நிலையை இந்தப் பிரிவு கோடிட்டுக் காட்டுகிறது. இது அடையப்பட்ட மைல்கற்கள், நடந்துகொண்டிருக்கும் செயற்பாடுகள், மற்றும் எதிர்பார்க்கப்படும் நிறைவுக் காலக்கெடு பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது.

**அட்டவணை2.1**
**பாரிய மின் பிறப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டங்களா**

| இல | செயற்றிட்டம் ஃ நிகழ்ச்சித் திட்டம் | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| 1 | முதலாவது 350 MW RLNG/டீசலில் இயங்கும் மின்வலு ஆலையின் அபிவிருத்தி (சோபதனவி மின்வலு ஆலை) | இந்த ஆலை வர்த்தகச் செயற்பாடுகளை 2025-06-23 இல் ஆரம்பித்தது. | பூர்த்தி |
| 2 | 350 MW சஹஸ்தனவி இயற்கை எரிவாயு இணைந்த சுற்று ஆலை – கெரவலப்பிட்டிய. | PPA ஆனது 2025 ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்டது. EIA மற்றும் விபரமான வடிவமைப்பு வேலை நடைபெறுகிறது. | GT- அக்டோ. 2027<br>ST- அக்டோ. 2028 |
| 3 | 31 MW மொரகொல்ல நீர் மின்வலு ஆலை | நிருமாணம் நடைபெறுவதுடன் அது இறுதிக் கட்டத்தில் உள்ளது. | டிசெம். 2025 |
| 4 | 130 MW எரிவாயு விசையாழி – களனிதிஸ்ஸ | பெறுகை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | 2030 |
| 5 | 200 MW இயற்கை எரிவாயு IC எஞ்ஜின் மின்வலு ஆலை | RFP தயாரிப்பு நடைபெறுகிறது. | 2028 |

**அட்டவணை 2.2**
**சக்திச் சேமிப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களா**

| இல | செயற்றிட்டம் ஃ நிகழ்ச்சித் திட்டம் | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| 1 | 100 MW/ 100 MWh தனித்தனியான மின்கல சக்திச் சேமிப்பு | RFP இறுதி செய்யப்படுகிறது. | 2027 |
| 2 | 160 MW / 640 MWh BESS செயற்றிட்டம் | விலைமனு மிதக்க விடப்பட்டுள்ளது. | 2026 |
| 3 | 100 MW / 400 MWh BESS – தெற்குப் பிராந்தியம் | செயற்றிட்டத்தை ஆரம்பிக்க இ.மி.ச. இன் உள்ளக அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. | 2028 |
| 4 | 600 MW PSPP – மஹா ஓயா உந்தச் சேமிப்பு மின்வலு ஆலை | விபரமான வடிவமைப்புக்காக நிதியுதவியின் பெறுகை நடைபெறுகிறது. | 2034 |

**அட்டவணை 2.3**
**முறைமை நவீனப்படுத்தல் மற்றும் துணைச் செயற்றிட்டங்கள்**

| இல. | செயற்றிட்டம் / நிகழ்ச்சித் திட்டம் | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| 1 | மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மேசை - தேசிய முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம் | ஏல ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. | 2027 |

**அட்டவணை 2.4**
**ஊேசுநு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்**

| செயற்றிட்டத்தின் பெயர் | கொள்ளளவு | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| சியம்பலாந்துவ சூரியசக்தி மின்வலுச் செயற்றிட்டம் | 100 MW | ஒப்பந்தம் 2023 ஆகஸ்டில் வழங்கப்பட்டது.<br>2024பெப்ரவரியில் PPA கைச்சாத்திடப்பட்டது.<br>2024 ஏப்ரலில் மின் பரிமாற்ற உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.<br>2024 யூலையில் நடைமுறைப்படுத்தல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.<br>நிர்மாணத்தை ஆரம்பிக்கும் பொருட்டு SLSEA இனால் கைச்சாத்திடப்பட வேண்டிய நிலக் குத்தகை உடன்படிக்கைக்காக காத்திருக்கப்படுகிறது. | 2026 |

| செயற்றிட்டத்தின் பெயர் | கொள்ளளவு | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| மன்னார் 50 MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | 50 | 2025 மே இல் PPA கைச்சாத்திடப்பட்ட அதே வேளை நிலக் குத்தகை மற்றும் நடைமுறைப்படுத்தல் உடன்படிக்கை நிலுவையில் உள்ளது. | 2026 |
| முள்ளிக்குளம் 2 x 50 MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | 100 | RFP இன் முன்மொழிவு 2025-07-09மூடப்பட்டது. மதிப்பீட்டுச் செயன்முறை தற்போது நடைபெறுகிறது. | 2027 |
| 250 MW மன்னார் கட்டம் II காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | 250 MW | அதானி பசுமை சக்திக் குழுமம் மன்னார் மற்றும் பூநகரி காற்றாலைச் செயற்றிட்டங்களில் இருந்து 2025 பெப்ரவரியில் விலகியது. இ.மி.ச. ஆரம்ப அபிவிருத்திகளை (வழிவிடுகை தடையகற்றல், நிலம் கையகப்படுத்தல்) முகாமை செய்த அதேவேளை நிதியுதவி ஏற்பாடுகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. | வரையறை செய்யப்பட வேண்டும். |
| 1MW x90 சூரியசக்தி மின்வலுச் செயற்றிட்டம் | 68 MW | 1 MW x 50 ஆலைகள்- இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டது.<br>1 MW x 18 ஆலைகள்-இரத்துச் செய்யப்பட்டன. | பூர்த்தி |
| 10MW பொலநறுவை சூரியசக்தி ஆலை | 10 MW | இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. | பூர்த்தி |
| 10 MW மஹியங்கனை சூரியசக்தி PV மின்வலு ஆலை | 10 MW | இரத்துச் செய்யப்பட்டது. | - |
| 60MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் - (1-10) MW கொள்ளளவுகளில் | 35 MW | 15 MW (10 MW & 5 MW) ஆலைகள்- இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டது (மன்னார்)<br>10 MW Plant - இரத்துச் செய்யப்பட்டது (திருகோணமலை)<br>10MW (5 MW x 2) – PPAகைச்சாத்திடப்பட்டுள்ளது. (மாதம்பே) [தற்போது வலுக்கட்டாய நிலையில் உள்ளது (FM மற்றும் இ.மி.ச. இற்காக உரிமைக் கோரிக்கை இடப்பட்ட செயற்றிட்டக் கம்பனி இதை ஏற்றுக்கொண்டு 2025 ஆகஸ்ட் 18 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது)] | 2026 |
| 30 MW தரையில் பொருத்தப்பட்ட/ மிதக்க விடப்பட்ட சூரிய சக்தி PV மின்வலு ஆலைகள் விலைமனு (1-5MW) | 5 MW | 2MW ஆலையை இயக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. (பெலியத்த)<br>நாவலப்பிட்டியில் மீதமுள்ள 3 MW செயற்றிட்டத்திற்கு தவறுகை தொடர்பான அறிவிப்பு மற்றும் PPA முடிவுறுத்தல் பற்றிய அறிவிப்பு என்பன வெளியிடப்பட்டன. | 2025 |
| 30 MW தரையில் பொருத்தப்பட்ட/ மிதக்க விடப்பட்ட சூரிய சக்தி PV மின்வலு ஆலைகள் விலைமனு (1-5MW) **(மீள்–விலைமனு)** | 27 MW | PPAகைச்சாத்திடப்பட்டது (வவுணதீவு– 8MW, மாத்தறை– 10MW மற்றும் பல்லேகல– 5MW)<br>PPAகைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது. (4MW – 1MW x 4 ஆலைகள் - பல்லேகல) | 2026 |
| 20 MW கரையோர காற்றாலை மின்வலு ஆலைகள் (2.5-10 MW) | 20 MW | PPAகைச்சாத்திடப்பட்டது (5MW x 4). மேலும் செயற்றிட்டங்கள் தற்போது வலுக்கட்டாய நிலையில் (FM)உள்ளன. (FM மற்றும் இ.மி.ச. இற்காக உரிமைக் கோரிக்கை இடப்பட்ட செயற்றிட்டக் கம்பனி இதை ஏற்றுக்கொண்டு 2025-08-14 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது). | 2026 |

| செயற்றிட்டத்தின் பெயர் | கொள்ளளவு | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| 40 MW தரையில் பொருத்தப்பட்ட/ மிதக்க விடப்பட்ட சூரிய சக்தி PV மின்வலு ஆலைகள் | 40 MW | 5MW செயற்றிட்டத்தை இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது (காலி). காலியில் உள்ள மீதி 15MW (5MW x 3) செயற்றிட்டங்கள் நிர்மாணங்களின் கீழ் உள்ளன. கப்பல்துறையில் உள்ள 20MW (5MW x 4) செயற்றிட்டங்கள் தற்போது வலுக்கட்டாய நிலைமையின் கீழ் உள்ளன (FM மற்றும் இ.மி.ச. இற்காக உரிமைக் கோரிக்கை இடப்பட்ட செயற்றிட்டக் கம்பனி இதை ஏற்றுக்கொண்டு 2025-05-09 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது) | 2025 |
| 70 MW தரையில் பொருத்தப்பட்டசூரிய சக்தி PV மின்வலு ஆலைகள் (1-5 MW) | 51 MW | 24MW (06எண்ணிக்கையான) செயற்றிட்டங்களை இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. மீதி 27MW (06 எண்ணிக்கையிலான) செயற்றிட்டங்கள் நிர்மாணத்தின் கீழ் உள்ளன. | 2025 |
| 70 MW தரையில் பொருத்தப்பட்டசூரிய சக்தி PV மின்வலு (1-5 MW) (மீள்-விலைமனு) | 19 MW | PPAகைச்சாத்திடப்பட்டுள்ளது (கொஸ்கம– 5MW, பன்னல– 6MW, குருநாகல்– 1MW, அம்பாறை– 2MW) PPAகைச்சாத்திடுவது நிலுவையில் இருப்பவை (ஹபரணை– 2MW மற்றும் வெயாங்கொடை– 3MW ஆலைகள்) | 2026 |
| 165 MW தரையில் பொருத்தப்பட்டசூரிய சக்தி PV மின்வலு (1-5 MW) | 156 MW | 2025-01-31 இல் வழங்கப்பட்டது 156MW. LOIகைச்சாத்திடப்பட்டது– 72MW 2025 செப்ரெம்பர் இறுதிக்குள் 84 MW இன் மீதி LOI கைச்சாத்திட எதிர்பார்க்கப்பட்டது. | 2026 |
| 160 MW/640 MWh தனித்தனியான மின்கல சக்தி சேமிப்பு முறைமை (BESS) - 10 MW/40 MWh AC கொள்ளளவு செயற்றிட்டங்களில் இருந்து. | 160 MW | விலைமனு 2025-07-30 இல் பிரசுரிக்கப்பட்டது. இது2025-10-14 இல் மூடப்படும். | 2026 |
| 152 MW தரையில் பொருத்தப்பட்டசூரிய சக்தி PV மின்வலு (1-5 MW) | 152 MW | RFPஇன் வரைவு செயற்றிட்டக் குழுவால் (PC) மீளாய்வு செய்யப்படுகிறது. | 2028 |
| 234 MW பூநகரி காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | 234 MW | அதானி கிறீன் எனேஜி குழுமம் மன்னார் மற்றும் பூநகரி காற்றாலைச் செயற்றிட்டங்களிலிருந்து 2025 பெப்ரவரியில் விலகியது. இ.மி.ச. ஆரம்ப அபிவிருத்திகளை (வழிவிடுகை தடையகற்றல், நிலம் கையகப்படுத்தல்) முகாமை செய்த அதேவேளை நிதியுதவி ஏற்பாடுகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. | வரையறுக்கப்பட வேண்டும். |
| 100 MW ஓட்டமாவடி, மட்டக்களப்பு சூரிய சக்தி PV மின்வலுச் செயற்றிட்டம் | 100 MW | EOI செயற்றிட்டங்கள் MOE இனால் வேறாகக் கையாளப்படுகின்றன. | வரையறுக்கப்பட வேண்டும். |
| 50 MW சம்பூர் சூரியசக்தி PV மின்வலுச் செயற்றிட்டம் | 50 MW | PPAஆனது 2024 ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்டது. கப்பல்துறை – சம்பூர் மின் பரிமாற்ற மார்க்கம் ஆரம்பிக்கும் வரை இதற்கான நிருமாணப் பணிகளை மேற்கொள்ள காத்திருக்கப்படுகிறது. | 2027 |
| 60 MW சூரியசக்திPV மின்வலுச் செயற்றிட்டம் - ஹம்பாந்தோட்டை | 60 MW | EOI செயற்றிட்டங்கள் MOE இனால் வேறாகக் கையாளப்படுகின்றன. | வரையறுக்கப்பட வேண்டும். |

| செயற்றிட்டத்தின் பெயர் | கொள்ளளவு | 2025–08–31 இல் முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|
| 54 MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் - ஹம்பாந்தோட்டை | 54 MW | EOI செயற்றிட்டங்கள் MOE இனால் வேறாகக் கையாளப்படுகின்றன. | வரையறுக்கப்பட வேண்டும். |
| FITஇன் கீழான செயற்றிட்டம் | 2,769.2 MW | 63.7 MW -இயக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.<br>480.78 MW -SPPA கைச்சாத்திடப்பட்டுள்ளது.<br>452.05 MW -LOI விநியோகிக்கப்பட்டுள்ளது.<br>1955.83MW – சம்மதம் வழங்கப்பட்டுள்ளது. | 2025/2026 |
| 100 MW / 400 MWh தனித்தனி மின்கல சக்திச் சேமிப்பு முறைமை (BESS) – எம்பிலிப்பிட்டிய | 100 MW / 400 MWh | RFP ஆவணத்தைத் தயாரிப்பதற்காக ADB இடமிருந்து தொழினுட்ப உதவி நாடப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெறுகின்றன. | 2028 |
| 135 WM சம்பூர் சூரியசக்திச் செயற்றிட்டம் | 135 MW | PPA ஆனது 2025 ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மின் பரிமாற்ற மார்க்க நிர்மாணத்திற்கான விலைமனு கோரல் நடைபெறுகிறது. | டிசெம்.2027 |

மின்தொகுப்பை வலுப்படுத்தல், முறைமையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், எதிர்காலத் தேவை வளர்ச்சிக்கு இடமளித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்ட தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நிலை அட்டவணை 2.5 இல் முன்வைக்கப்பட்டுள்ளது. விநியோகத்திற்காக, பிரதான முயற்சிகளில் இடம்பெறுகின்ற முன்னேற்றம் மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. இது சேவைத் தரத்தை மேம்படுத்தல், வலையமைப்பு உள்ளடக்கத்தை விரிவாக்குதல், முறைமையை நவீனப்படுத்தல் போன்ற முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றது. இது பற்றிய விபரங்கள் அட்டவணை 2.6 இல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:2.5**
**நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் பரிமாற்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கிள்ன்˙ முன்னேற்றம்**

| செயற்றிட்டம்ஃ கிளை | பொதி | செலவு (ரூ. மில்லியன்) | 2025–08–31 இல் பௌதிக முன்னேற்றம் | பூர்த்தித் திகதி |
|---|---|---|---|---|
| தேசிய மின் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் EI செயற்றிட்டம் | பொதி 1: 400kV, 220kV, 132kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிர்மாணம் | 41,589 | 76.10% | ஆகஸ்ட்-2026 |
| | பொதி2 :மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிர்மாணமும் விருத்தியாக்கமும் | | 78.00% | அக்டோ-2026 |
| | பொதி 3: மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிர்மாணம் (220kV, 132kV) | | 70% (ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது-59.8%) | ஆகஸ்ட் 2027 (புதிய விலைமனுச் செயன்முறை கட்டம் II) |
| | பொதி 4: விநியோக உபமின் நிலையங்கள் மற்றும் கம்பி வடங்களின் நிர்மாணம் (33kV, 11kV, 0.4kV) | | 41% (ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது). | யூன்- 2028 (புதிய விலைமனுச் செயன்முறை கட்டம் II) |

| | | | | |
|---|---|---|---|---|
| WPS1 இற்கான SCADA இனால் ஆதரிக்கப்பட்ட மேம்பட்ட விநியோகக் கட்டுப்பாட்டு நிலையத்தின் தாபிப்பு | SCADA இன் தாபிப்பானது விநியோகப் பிரிவு 4 HO இல் மேம்பட்ட விநியோகக் கட்டுப்பாட்டு நிலையத்தை ஆதரிக்கிறது. அத்துடன் செயற்றிட்டத்தின் நோக்கெல்லையின்படி கட்டுப்பாட்டு நிலையத்துடனான WPS1 இன் முதன்மை உபமின் நிலையங்கள் மற்றும் களச் சாதனங்களை (AR/LBS) ஒருங்கிணைக்கிறது. | 2,003 | 100.00% | ஆகஸ்ட்-2025 |
| துணை மின் வழங்கல் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் செயற்றிட்டம் | 33kV மின் கோபுர மார்க்கங்கள் (285 km) 16 இன் நிர்மாணமும் இரண்டு பிரிவு ஒற்றை பஸ்பார் தாங்குசட்டங்கள் 13 இன் நிர்மாணமும். | USD 23.65 Mn & LKR 4,867.5 Mn | 86% | டிசெம்-2025 |
| கெரவலப்பிட்டிய-துறைமுகம் 220kV 2 ஆவது UG கம்பி வடச் செயற்றிட்டம் | கெரவலப்பிட்டிய தொடக்கம் துறைமுகம் GSS வரை 15.7 km நிலத்தடி கம்பிவடச் சுற்றின் நிர்மாணம் | USD 52 Mn | கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட வேண்டும். | |
| 100MW/100MWh மின்கல சக்திச் சேமிப்பு முறைமை - கொலன்னாவையில் | கொலன்னாவையில் 100MW/100MWh மின்கல சக்திச் சேமிப்பு முறைமையை நிர்மாணித்தல் | USD 26.3 Mn | பெறுகைச் செயன்முறை நடைபெறுகிறது. | |
| கொலன்னாவையில் 100MW/100MWh BESS அபிவிருத்திக்கான கொலன்னாவ மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம் | கொலன்னாவையில் 100ஆறு/100ஆறா டீநுளுளு அபிவிருத்திக்கான கொலன்னாவ மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம் | USD 5.7 Mn | பெறுகைச் செயன்முறை நடைபெறுகிறது. | |
| ஹம்பாந்தோட்டையில் 5MW/10.7MWh மின்கல சக்திச் சேமிப்பு முறைமை | ஹம்பாந்தோட்டையில் 5MW/10.7MWh மின்கல சக்திச் சேமிப்பு முறைமையை நிருமாணித்தல். | Rs. 3570 Mn | 80% | டிசெம்-2025 |
| மின்பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் | மெதகம - அம்பாறை132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மறுசீரமைப்பு | 3,206 | 71% | மே-26 |
| | விக்டோரியா - ரன்தம்பே 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணம் | 2,200 | - | ஏப்ரல்-27 |
| | அத்துருகிரிய - கொலன்னாவ 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் விருத்தியாக்கம் | 143 | கட்டம் 1 பூர்த்தி அடைந்துள்ளது | டிசெம்-2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் | பூநகரி - கிளிநொச்சி220kV D/C மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணம் | | பாதை உரிமைக்கான தடைநீக்கத்தை மாத்திரம் பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. DGM இடம் கையளிக்கப்பட்டுள்ளது. (பரிமாற்றச் செயற்றிட்டங்கள்) | N/A |
| | கொலன்னாவ - பன்னிப்பிட்டிய 132kV பரிமாற்ற மார்க்கத்தின் மறுசீரமைப்பு | 1,120 | 5% (வடிவமைப்பு வேலைகளும்மண் பரிசோதனையும்) | **டிசெம்–26** |
| | களனிதிஸ்ஸ - கொலன்னாவ132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் உயரத்தை அதிகரித்தல் | 702 | (RDA இனால் துறைமுகத்தை அடைவதற்கான மேலுயர்த்தப்பட்ட அதிவேக வீதிச் செயற்றிட்டமான நான்கு வழிச் சாலையின் நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டதால் இச்செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டது) | N/A |
| | கொத்மலை - புதிய பொல்பிட்டிய 220/132kV FC மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணம் | 1,947 | 220kV இரட்டைச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கம் துரிதப்படுத்தப்பட்டது. | மே-25 |
| | தம்புள்ள - புதிய ஹபரணை 220/132kV FC TL இன் நிர்மாணம் | 1,790 | 46% | மே-26 |
| | மன்னார் - நடுக்குடா 220kV TL இன் புதுப்பிப்பு | 550 | 7% | டிசெம்-26 |
| | புதிய அநுராதபுரம் GS இல் 2x50MVAr உலையின் நிறுவலும் மன்னார் GS இல் 1x50MVAr உலையின் நிறுவலும் | 1,463 | 100% | மார்ச்-22 |
| | வேகவத்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிர்மாணம் ( 2x45MVA T/F with DBB) | 2,278 | 100% | டிசெம்-24 |
| | களனிதிஸ்ஸ 132kV GIS இன் விரிவாக்கம் | 1,400 | கட்டம் 1 - 100% பூர்த்தி | செப்ரெ-25 |
| | புதிய பொல்பிட்டிய ஆளியிடல் நிலையத்தில் இரண்டு 220kV இரட்டை பஸ்பார் பரிமாற்ற மார்க்க நுழைவு வழியின் நிர்மாணம் | 170 | 100% | மார்ச்-23 |
| | கொட்டுகொட விருத்தியாக்க வேலைகள் | 960 | கட்டம் 1 100% | டிசெம்-24 |
| | பலாங்கொடை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 33kV ஊட்டி நுழைவு வழிகள் நிர்மாணம் | 702 | 85% | மார்ச்-26 |
| | அத்துருகிரிய விரிவாக்க வேலைகள் | 1,463 | 100% | மார்ச்-24 |
| | இரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 33kV ஊட்டி நுழைவுவழிகள் நிர்மாணம் | 1,898 | 100% | செப்ரெ-23 |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் | ரண்தம்பே ஆளி முற்றத்தில் 220kV GIS இன் நிர்மாணம். | 464 | | டிசெம்-2025 |
| | விக்டோரியாPS ஆளி முற்றத்தில் ஒரு 220kV ஊட்டி நுழைவுவழியின் நிர்மாணம் | 291 | 10% | டிசெம்-25 |
| | ரந்தெனிய (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்) இல் 132kV ஆளி முற்றத்தின் நிர்மாணம் | 73 | 100% | யூலை-24 |
| | அம்பாறை மின்தொகுப்பில் நிலையத்தில் ஒரு 132kV ஊட்டி நுழைவு வழி நிர்மாணம் | 67 | 85% | டிசெம்-25 |
| | 33kV பாதுகாப்பு அஞ்சலி மாற்றீடு | 15 | 45% | மார்ச்-26 |
| | கிரிந்திவெலGS இல் விருத்தியாக்க வேலை | 148 | 92% | நவெம்-25 |
| | புதிய அநுராதபுரம் GS இல் இரண்டு 220kV ஊட்டி நுழைவு வழிகளின் நிர்மாணம் | 2,809 | 65% | மே-26 |
| | சுன்னாகம் GS இன் விருத்தியாக்கம் | 229 | 38% | மே-26 |
| | ஆனியகந்தGS இன் விருத்தியாக்கம் | 350 | 48% | மார்ச்-26 |
| | குக்குளேகங்கை ஆளிமுற்றத்தின் விருத்தியாக்கம் | 85 | 72% | ஏப்ரல்-26 |
| | மத்துகமGS இன் விருத்தியாக்கம் | 212 | 40% | மே-26 |
| | நடுக்குடாGS இன் விருத்தியாக்கம் | 595 | 5% | மே- 26 |
| | எம்பிலிப்பிட்டிய GS இன் விருத்தியாக்கம் | 353 | 63% | டிசெம்-25 |
| மன்னார் - வவுனியா 220 kV மின் பரிமாற்ற மார்க்க கடத்தியை மேம்படுத்தும் செயற்றிட்டம் | ஏற்கனவேயுள்ள சீப்ரா கடத்தியை ஒரு புதிய HTLS கடத்தியால் (72 km) மாற்றீடு செய்தல் | 569 | 21.50% | செப்ரெ-2026 |
| முள்ளிக்குளம் காற்றாலை மின்வலு பரிமாற்றச் செயற்றிட்டம் | *இரட்டைச் சுற்று மன்னார் - முள்ளிக்குளம் 220kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணம் (28 km) | 5,951 | செயற்றிட்டம் 2026 சனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. | ஆகஸ்-2027 |
| | * மன்னார் மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 220kV மார்க்க நுழைவுவழிகளின் நிர்மாணம் / முள்ளிக்குளம் சேகரிப்பு மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் உள்வரும் பக்கத்தின் நிர்மாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள் | **பொருள்களின் பெறுகை** பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான பாகங்கள் மற்றும் கருவிகளாக பொருள்கள் / உபகரணத்தின் பெறுகை - சம்பூர் - கப்பல்துறை பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் பொதி 4,5,6,10, 11. | 4,381 | 98.00% | மார்ச்- 2025 |
| | பூநகரி - கிளிநொச்சி 220kV D/C பரிமாற்ற மார்க்க PSRSP-Ph-02-OU2 நிர்மாணத்தின் ஆரம்பகட்ட வேலைகள் | 3,400 | 12% | டிசெம்- 2025 |
| PSRSP : Ph II P 2 - OU 01 | ஹொரணை-பாதுக்க132 kV பரிமாற்ற மார்க்கத்தின் மீதி நிர்மாண வேலைகள் | 568 | 2% | டிசெம்-2026 |
| மின்வலு முறைமை வலுப்படுத்தல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைந்த செயற்றிட்டம் - PSSREIP | 6 பொதிகளைக் கொண்டது. | 76,281 | நிர்மாண ஒப்பந்தங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையின்படி, 2029 |
| மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் -PSRSP பொதி 4A - புதிய ஹபரணை - புதிய அநுராதபுர 220kV பரிமாற்ற மார்க்க நிர்மாணம் | 6(ii) புதிய ஹபரணை - புதிய அநுராதபுர 220 kV பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணத்திற்கான குடிசார் வேலைகள், மின்கோபுரங்களை நாட்டுதல் மற்றும் கம்பி இழுத்துக் கட்டல் வேலைகளும் ஏற்கனவேயுள்ள பழைய ஹபரண - புதிய அநுராதபுர 132 kV பரிமாற்ற மார்க்கத்தை அகற்றுதலும் | 1,911 | 23% | செப்ரெ-2026 |

## 3. நிறுவனத்தின் நிதி நிலைமை

2025-06-30 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான ஒரு நிகர நட்டமாக ரூபா 13.16 பில்லியனை இ.மி.ச. பதிவு செய்திருந்தது. இந்த நட்டத்திற்கு முதன்மையாக 2024 யூலை மற்றும் 2025 சனவரி மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டணக் குறைப்புகளே காரணமாக உள்ளன. திருத்தப்பட்ட கட்டணங்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஏற்பட்ட செலவுகளை முழுமையாக மீட்டெடுக்க போதுமானதாக இல்லை, இதன் விளைவாக வருமானத்தில் சரிவு ஏற்பட்டது.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த மின் பிறப்பாக்கச் செலவு குறைவடைந்துள்ளது. இதற்கு, பிரதானமாக மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) மூலங்களில் இருந்தான வெளியீடு அதிகரித்தமை மற்றும் நிலக்கரி, எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறைவுகள் ஆகியன காரணமாக அமைந்தன. மின் பிறப்பாக்க அளவுகளில் அதிகரிப்பு ஏற்பட்ட போதும் இந்தக் காரணிகள் நிதித் தாக்கத்தின் ஒரு பகுதியை ஈடு செய்தன. இதற்கிடையில், தேசிய பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சியானது அதிக மின்சாரத் தேவையை ஆதரித்தது. இது வருவாய் வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களிப்புச் செய்தது. வரலாற்றில், செலவைப் பிரதிபலிக்கும் கட்டணம் இல்லாதது மற்றும் தொற்றுநோயால் ஏற்பட்ட வசூலிப்பு இடையூறுகள் என்பன இ.மி.ச. இன் காசுப் பாய்வு மீது கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) போன்ற முக்கிய வழங்குநர்களுக்கான கொடுப்பனவை தாமதப்படுத்தியது. இத்தகைய தாமதங்கள் வட்டி மற்றும் அபராதக் கட்டணங்கள் வடிவில் கணிசமான மேலதிகச் செலவுகளை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், செலவுப் பிரதிபலிப்பு கட்டணத்தைச் செயற்படுத்தியதன் மூலம் காசுப் பாய்வு முகாமைத்துவம் மேம்படுத்தப்பட்டதுடன், இ.மி.ச. அதன் மரபார்ந்த கடன்களில் ஒரு பகுதியைத் தீர்க்க உதவியது. இது தாமதக் கட்டணங்களால் எழுகின்ற செலவினங்களைக் கணிசமாகக் குறைத்துள்ளது. மேலும்,வட்டி வீதங்களில் நிலவும் சரிவுகள் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் மீதான நிதிச் செலவுகளைக் குறைத்து, நிறுவனத்தின் நிதி நிலைக்கு மேலதிக நிவாரணத்தை வழங்கியுள்ளது.

## 4. 2026 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்றிட்டங்களும

பகுதி 2 இல் முன்வைக்கப்பட்டதைப் போன்று மின் பிறப்பாக்கம், சேமிப்பு, NCRE, மற்றும் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவது, 2026 ஆம் ஆண்டு நெடுகிலும் அல்லது அந்தந்தச் செயற்றிட்டங்கள் முழுமையாக நிறைவடையும் வரை தொடரும். இந்த நடவடிக்கைகள் முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தல், கொள்ளளவை விரிவாக்குதல், மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நீடித்திருக்கத்தக்க மின்வலுத் துறையை நோக்கிய மாற்றத்தை ஆதரிப்பதற்கு ஒரு மையமாக இருக்கும்.

மேலும், உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் புதிய முயற்சிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய விநியோக வலையமைப்பு அபிவிருத்திகளுக்காகத் திட்டமிடப்பட்ட நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் அட்டவணை 2.6 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் சேவைத் தரத்தை மேம்படுத்துதல், அணுகல்தன்மையை மேம்படுத்தல், மற்றும் நாடு முழுவதும் வளர்ந்துவரும் நுகர்வோர் தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டுள்ளன.

எதிர்கால முதலீடு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக பரிசீலனையில் உள்ள உறுதியளிக்கப்படாத மின் பிறப்பாக்கம், சேமிப்பு, NCRE, மற்றும் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அட்டவணை 2.7 இல் தனித்தனியாக பட்டியலிடப்பட்டுள்ளன. இவை நிதியுதவிகளின் கிடைப்பனவிற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும்

## அட்டவணை 2.6
## மின்சார விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

| தொடர்பு | நடவடிக்கை | அலகு | DD1 | | | DD2 | | | DD3 | | | DD4 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2025 இன் இலக்கு | 2025 (சனவரி – ஆகஸ்ட்) முன்னேற்றம் | 2026 இற்கான எறிவு | 2025 இன் இலக்கு | 2025 (சனவரி – ஆகஸ்ட்) முன்னேற்றம் | 2026 இற்கான எறிவு | 2025 இன் இலக்கு | 2025 (சனவரி – ஆகஸ்ட்) முன்னேற்றம் | 2026 இற்கான எறிவு ** | 2025 இன் இலக்கு | 2025 (சனவரி – ஆகஸ்ட்) முன்னேற்றம் | 2026 இற்கான எறிவு |
| 1 | MV கோபுரம் | கி.மீ. | 12.0 | 0 * | 25.1 | 66.4 | 18.9 | 52.2 | 25.5 | 10.0 | 13.0 | 40.3 | 7.0 | 40.0 |
| 2 | MV தூண் (Lynx, Racoon, Elm & UG) | கி.மீ. | 141.6 | 63.5 | 147.2 | 154.4 | 150.3 | 179.3 | 67.5 | 35.1 | 67.4 | 46.9 | 38.0 | 53.9 |
| 3 | ஆஎ தூண் (ABC) | கி.மீ. | 10.0 | 17.2 | 10.0 | 6.0 | 2.3 | 9.0 | 7.5 | 0.0 | - | 6.4 | 3.7 | 11.9 |
| 4 | LV (ABC) | கி.மீ. | 94.0 | 37.5 | 96.5 | 350.0 | 204.8 | 381.0 | 166.6 | 110.2 | 154.0 | 28.0 | 19.1 | 38.0 |
| 5 | MV மீள்-கடத்தல் மற்றும் மாற்றம் பூரணப்படுத்தப்பட வேண்டும். (மின் கோபுரம்) | கி.மீ. | 11.6 | 2 * | - | 2.5 | 0.0 | 16.5 | - | - | - | 0.0 | 0.0 | 2.0 |
| 6 | MV மீள் கடத்தல் மற்றும் மாற்றம் பூரணப்படுத்தப்பட வேண்டும். (தூண்) | கி.மீ. | 174.2 | 54.2 | 125.9 | 110.1 | 52.3 | 155.5 | 11.7 | 0.0 | 11.0 | 36.4 | 17.0 | 52.8 |
| 7 | LV மாற்றம் பூரணப்படுத்தப்பட வேண்டும். (கடல வழ ABC) | கி.மீ. | 275.0 | 36.7 | 200.0 | 555.0 | 335.2 | 932.0 | 134.0 | 168.2 | 541 ** | 167.0 | 84.6 | 180.0 |
| 8 | விநியோக உபமின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். (விநியோகம்/ வளையம்/ஆரம்/மீள் விநியோகம்) | எ/கை | 333 | 107 | 287 | 362 | 231 | 346 | 84 | 91 | 130 | 92 | 50 | 117 |
| 9 | முதன்மை உபமின் நிலையம் நிர்மாணிக்கப்பட வேண்டும். | எ/கை | 1 | - | 5 | 3 | 0 | 3 | - | - | - | 3 | 0 | 5 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | முதன்மை உபமின் நிலையம் விருத்தி செய்யப்பட வேண்டும். | எ/கை | 2 | - | - | 1 | 1 | 1 | - | - | - | 0 | 0 | 0 |
| 11 | தாங்குசட்டங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். | எ/கை | 5 | 2 | 8 | 18 | 3 | 17 | 6 | 1 | 3 | 5 | 0 | 5 |
| 12 | தாங்குசட்டங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும் / திருத்தியமைக்கப்பட வேண்டும். | எ/கை | 1 | - | - | 6 | 1 | 12 | - | - | - | 1 | 0 | 1 |
| 13 | தன்னியக்க மீள் மூடுகைகள் நிறுவப்பட வேண்டும் (புதிய தாங்குசட்டங்கள் தவிர்ந்த) | எ/கை | 14 | 3 | 12 | 40 | 20 | 55 | 20 | 9 | 15 | 11 | 5 | 20 |
| 14 | ஏனையவை (குறிப்பிடவும்) | எ/கை | | | | | | | | | | | | |
| | LBS நிறுவப்பட வேண்டும் (புதிய தாங்குசட்டங்கள் தவிர்ந்த) | | | | | | 21 | 83 | | | | | | |
| | புதிய LBS நிறுவல் | | | | | | | | - | - | - | 39 | 23 | 46 |
| | விநியோக உபமின் நிலையங்களின் விருத்தியாக்கம் | | | | | | | | | | | 24 | 9 | 26 |

**Note :**
*This figure includes the total completed MV tower line length.
Details of the cost paid jobs and the jobs under SESRIP were not included.
** This includes pending jobs and approved ABC conversion jobs for years 2024 & 2025 as well.

**அட்டவணை 2.7**

**உறுதி செய்யப்படாத மின் பிறப்பாக்கம், சேமிப்பு,ஜேஒசுநுஇ மற்றும் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்**

| உருப்படி | செயற்றிட்டம் / நிகழ்ச்சித் திட்டம் | பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படும் ஆண்டு[2] | மொத்தச் செலவு மதிப்பீடு (ரூ. மில்லியன்) | நிலைமை |
|---|---|---|---|---|
| 1 | புதிய ஹபரணை 75 MVA மின்தேக்கி | 2028 | 9,559[1] | உலக வங்கியின் ஆதரவுடன் நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. |
| 2 | வவுனியா 220 kV அபிவிருத்தி | 2028 | 9,351[1] | நிதியுதவி தொடர்பில் உலக வங்கியுடன் ஆலோசனை நடைபெறுகிறது. |
| 3 | 400 kV வடக்கு அபிவிருத்தி (220 kV செயற்பாட்டுக் கட்டம்) | 2030 | 62,400[1] | நிதியுதவி தொடர்பில் AIIB உடன் ஆலோசனை நடைபெறுகிறது. |
| 4 | பாதுக்கபுளுளு இல் 100 Mvar STATCOM அலகு நிறுவுதல் | 2028 | 6,760[1] | நிதியுதவி தொடர்பில் உலக வங்கியுடன் ஆலோசனை நடைபெறுகிறது. |
| 5 | நுரைச்சோலை- வாரியப்பொல 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிர்மாணம் | 2030 | 24,060[1] | நிதியுதவி தொடர்பில் AIIB உடன் ஆலோசனை நடைபெறுகிறது. |
| 6 | புதிய லக்ஷபான - பலாங்கொடை 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் சீப்ரா உடன் மறுசீரமைப்பு | 2028 | 5,309[1] | நிதி திரட்டல் நடைபெறுகிறது. |
| 7 | மகா ஓயா PSHP - விபரமான வடிவமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது. | 2034 | 750 | நிதி திரட்டல் நடைபெறுகிறது. |

[1] விலை உயர்வு, எதிர்பாரா நிகழ்வுகள், நிருவாகச் செலவுகள் மற்றும் வரிகள் உட்பட.

[2] பிந்தைய அங்கீகரிக்கப்பட்ட நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2025-2044 மற்றும் நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் 2025-2034 ஆகியவற்றின்படி.

# அத்தியாயம் 03
# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

## 1. அறிமுகம்

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார(தனியார்) நிறுவனம் (LECO) ஆனது 1982 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இலக்கம் 17 மற்றும் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இலக்கம் 07 ஆகியவற்றின் கீழ் 1983 ஆம் ஆண்டில் இணைக்கபட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த நிறுவனமாகும். இதன் முதன்மை நோக்கமானது கொழும்பு நகரம் மற்றும் தெஹிவளை-கல்கிசை பகுதிகளைத் தவிர்ந்த, இலங்கையின் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள நீர்கொழும்பு முதல் காலி வரையிலான பிரதான பொருளாதார வலயத்தை உள்ளடக்கிய அதன் தனியுரிமைப் பகுதிக்குள் மின்சாரத்தை விநியோகிப்பதாகும். அதைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்ட இலக்கம் 20 இன் மூலம், நிறுவனத்திற்கு விநியோக உரிமம் பெற்றுக்கொண்டதன் மூலம் LECO ஆனது பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுக்குள் உள்வாங்கப்பட்டது. LECO ஆனது 615,000 நுகர்வோருக்கு சேவை வழங்குகிறது, இது நாட்டின் ஆற்றலில் சுமார் 10% ஆகும்.

## 2. நிறுவனத்தின் குறிக்கோள்கள

**எங்கள் குறிக்கோள்கள்:**

- நிறுவனத்தின் செயல்பாடுகளை முறையாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளுதல், பங்குதாரர்களின் விழிப்புணர்வை உறுதி செய்தல் மற்றும் மூலோபாய பல்வகைப்படுத்தலை மேற்கொள்ளுதல்.
- ஒழுங்குமுறை தரப்படுத்தல் மற்றும் உள்ளக சேவைத் தரங்களுக்கு ஏற்ப விநியோக சேவைகளை மேம்படுத்துதல்.
- ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழினுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மூலம் நிறுவனத்தின் தொழில்நுட்ப திறனை மேம்படுத்துதல்.
- வீண்விரயத்தைக் குறைத்து வணிக இலாபம், செயல்திறன், உள்ளகச் செயல்முறைக் கட்டுப்பாடு மற்றும் மூலோபாய முதலீட்டை மேம்படுத்துதல்.
- தேசிய மற்றும் சர்வதேச நெறிமுறைகளால் தரப்படுத்தப்பட்ட ஆரோக்கியமான பணிச்சூழலின் மூலம் உற்பத்தித்திறன், திறமை, ஊக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை கொண்ட பணியாளர்களை உறுதி செய்தல்.

## 3. 2025 இல் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம் (ஜனவரி 2025 முதல் ஆகஸ்ட் 2025 வரை)

நிறுவனத்தின் அடைவு நிலைகளானது எங்களின் செயல்திறன் மற்றும் பங்குதாரர்களுக்கு உயர்தர சேவையை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

- LECO ஸ்மார்ட் வலைப்பின்னல்(கிரிட்) செயற்திட்டத்தின்படி, 2025 ஆம் ஆண்டிற்குள்:
  - ாலைக்கட்டுப்பாடு(தொலைவிலிருந்து) மூலம் செயற்படுத்தப்படும் மற்றும் கண்காணிக்கப்படும் 75 ஆளிகளை நிறுவுவதன் மூலம் மின்சார விநியோக வலையமைப்பில் விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேலும் மேம்படுத்துதல்.
  - இந்த முறைமையில் 30,000 ஸ்மார்ட் மீட்டர்கள் இணைக்கப்பட்டுள்ளன, தற்போது LECO ஸ்மார்ட் மின் அளவி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 148,000 ஆகும், இது மொத்தத்தில் 24% ஆகும்.
- இந்த ஆண்டில் LECO மின் கட்டமைப்பில் 72 மெகாவாட் கூரைமேல் நிறுவும் சூரிய PVஅமைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன,

இது எங்கள் மொத்த திறனை 332 மெகாவாட்டிற்கும் அதிகமாகக் கொண்டு வந்துள்ளது.

- LECO மின் அமைப்பின் திறன், நம்பகத்தன்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறப்பட்டது, மேலும் கொள்முதல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- விநியோக முறையை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் நிலையான வலையமைப்பு மறுசீரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டன, இந்தக் காலகட்டத்தில் நிலையான முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டது.
- ஏற்கனவே மேம்படுத்தியுள்ள உயர் மின்னழுத்தக் கம்பிகளின் செயல்திறனை, தொகுக்கப்பட்ட கடத்தி திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட நம்பகத்தன்மையை உண்டாக்குதல்.
- பழைய உயர் மின்னழுத்தக் கம்பிகளினை மறுசீரமைப்பு செய்து, வலையமைப்புப் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் செயலிழப்பைக் குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க இலக்குகளை அடைகின்றது.
- விநியோகத் தரத்தை மேம்படுத்துவதில் நிலையான முன்னேற்றத்தைக் காட்டும், வளர்ந்து வரும் ஸ்பாட் லோட் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, விநியோக வலையமைப்பை வலுப்படுத்தும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- புதிய தலைமை அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
- 33kV ஸ்விட்சிங் நிலையங்களைத் திட்டமிட்டு அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுடன், முக்கிய அபிவிருத்தி முயற்சிகள் மூலம் மேம்படுத்தப்பட்ட நம்பகத்தன்மைத் திட்டங்கள்.

## 4. நிறுவனத்தின் நிதி நிலை 2020– 06/2025

**அட்டவணை 3.1**
**நிறுவனத்தின் நிதி நிலை 2020 – யூன் 2025**

| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 YTD June |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு இறுதியில் நுகர்வோர் கணக்குகள் | 600729 | 608453 | 618516 | 624549 | 630859 | 631878 |
| விற்பனை GWh | 1573.43 | 1615.7 | 1565.7 | 1580.85 | 1727.4 | 902.84 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 1521 | 1500 | 1448 | 1413 | 1357 | 1217 |
| நுகர்வோர் / பணியாளர் விகிதம் | 395 | 406 | 427 | 442 | 465 | 519 |
| விநியோக இழப்புகள் | 3.63 | 4.08 | 4.09 | 3.55 | 3.36 | 2.86 |
| வருவாய் ரூமில்லியன் | 30,618 | 32,416 | 39,252 | 75,138 | 67,218 | 24,444 |
| செயல்பாடுகளிலிருந்து இலாபம் ரூ மில்லியன் | 1,543 | 4,328 | 991 | 4,129 | 9,842 | 3,697 |
| ஆண்டுக்கான இலாபம் ரூ மில்லியன் | 1,792 | 3,248 | 1,954 | 4,195 | 5,592 | 2,784 |
| மொத்த பங்கு ரூ மில்லியன் | 34,792 | 38,419 | 40,687 | 45,435 | 50,648 | 53,432 |
| மொத்த கடன் பொறுப்புகள் ரூ மில்லியன் | 12,630 | 14,202 | 12,015 | 21,708 | 22,477 | 22,409 |
| மொத்த சொத்துகள் ரூ மில்லியன் | 47,422 | 52,621 | 52,702 | 67,143 | 73,125 | 75,840 |

## 5. 2026 இற்கான எதிர்காலத் திட்டங்கள்

நவீனமயமாக்கல், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, LECO 2026 ஆம் ஆண்டிற்கான பல முக்கிய முயற்சிகளை அடையாளம் கண்டுள்ளது.

- **200,000 வரையிலான ஸ்மார்ட் மின் அளவிகளை நிறுவுதல்**

  LECO தற்போது 148,000 ஸ்மார்ட் மின் அளவிகளை சேவையில் கொண்டுள்ளது. மேலும் 52,000 அலகுகளைச் சேர்ப்பதன் மூலம், 2026 ஆம் ஆண்டளவில் எண்ணிக்கையை 200,000 ஆக அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த விரிவாக்கத்துடன், LECO இன் நுகர்வோர் தளத்தில் 30% இற்கும் அதிகமானோர் ஸ்மார்ட் மின் அளவிகளுடன் இணைக்கப்பட்டு, ஆற்றல் கண்காணிப்பு, துல்லியமான கட்டணம் வழங்குதல்(பில்லிங்) மற்றும் பிற ஸ்மார்ட் சேவைகளை கணிசமாக மேம்படுத்தும்.

- **வானிலை நிலையங்களை நிறுவுதல் மற்றும் சூரிய சக்தி முன்னறிவிப்பு மாதிரியை செயல்படுத்துதல்.**

  நிகழ்நேர காலநிலை தரவுகளை சேகரிக்க வானிலை நிலையங்கள் நிறுவப்படும், இது சூரிய சக்தி முன்கணிப்பு மாதிரிக்கு ஊட்டமளிக்கும். இந்த முன்முயற்சி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை முன்னறிவிக்கும் திறனை வலுப்படுத்தும், மேலும் சூரிய சக்தியை வலைப்பின்னலுடன்(கிரிட்) சிறப்பாக ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும். மேம்படுத்தப்பட்ட முன்கணிப்பு விநியோக நம்பகத்தன்மை மற்றும் கணினி நிலைத்தன்மையை மேம்படுத்தும்.

- **விநியோகக் கட்டுப்பாட்டு மையத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (சுநு) மேசையை நிறுவுதலயு**

  புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இணைப்புகளின் வளர்ந்து வரும் பங்கை நிர்வகிக்க, விநியோகக் கட்டுப்பாட்டு மையத்தில் ஒரு பிரத்தியேக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேசை அமைக்கப்படும். இந்த அலகு ஒப்புதல்கள், கண்காணிப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க உள்ளீடுகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வலைப்பின்னலில்(கிரிட்) ஒழுங்குபடுத்தும். நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கான மையப் புள்ளியாகவும் இது செயற்படும்.

- **LECO வாடிக்கையாளர் சேவை வழங்கல் நுழைவாயில்(போர்ட்டல்) அபிவிருத்தி**

  சேவைகளை விரைவாகவும் பயனர் நட்புடனும் அணுகும் வகையில் வாடிக்கையாளர் சேவை வழங்கல் நுழைவாயில் மேம்படுத்தப்படும். வாடிக்கையாளர்கள் தங்கள் பயன்பாடு, கட்டணங்கள் மற்றும் கோரிக்கைகளை மிகவும் திறமையாக கண்காணிக்க முடியும். இது வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்துவதோடு, நிறுவனத்துடனான வாடிக்கையாளர் தொடர்புகளை மேலும் டிஜிட்டல் மயமாக்கும்.

- **பில் கொடுப்பனவு செலுத்துவதனை தன்னியக்கமாக்குதல்**

  பில் கொடுப்பனவுகளை தானியக்கமாக்குவது கைமுறை செயலாக்கத்தைக் குறைத்து, அமைப்பு முழுவதும் செயல்திறனை மேம்படுத்தும். விரைவான கட்டண உறுதிப்படுத்தல் மற்றும் பரந்த அளவிலான தானியங்கு விருப்பங்கள் மூலம் வாடிக்கையாளர்கள் பயனடைவார்கள். இது பிழைகளைக் குறைக்கவும், வருவாய் சேகரிப்பை வலுப்படுத்தவும் உதவும்.

- **நிர்வாகத்தின் மதிப்பீட்டிற்கான விரிவான KPI அமைப்பைச் செயல்படுத்துதல்**

  முக்கிய பகுதிகளில் நிர்வாகத்தின் செயல்திறனை அளவிட ஒரு விரிவான KPI கட்டமைப்பு செயல்படுத்தப்படும்.

இந்த அமைப்பு பொறுப்புணர்வை மேம்படுத்துவதோடு, ஆதாரம் சார்ந்த முடிவெடுப்பதை ஆதரிக்கும். இந்த நடவடிக்கை நிறுவனத்திற்குள் தொடர்ச்சியான முன்னேற்றக் கலாச்சாரத்தையும் உருவாக்கும்.

- **உயர்ந்த வாடிக்கையாளர் சேவைக்கான அழைப்பு மையத்தின் சேவைகளின் விரிவாக்கம்**
அதிக சேவைத் திறன் மற்றும் நீட்டிக்கப்பட்ட இயக்க நேரங்களை வழங்க அழைப்பு மையம் விரிவுபடுத்தப்படும். வாடிக்கையாளர்கள் விசாரணைகள் மற்றும் புகார்களுக்கு விரைவான தீர்வுக்கான அணுகலைப் பெறுவார்கள். இது வாடிக்கையாளர் சேவையின் ஒட்டுமொத்த தரம் மற்றும் திருப்தி நிலைகளை மேம்படுத்தும்.

- **ERPமற்றும் பயன்பாட்டு கட்டணம் செலுத்தும் முறையைப் புதுப்பித்தல்**
வணிக செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்த LECO அதன் ERP மற்றும் பயன்பாட்டு பில்லிங் அமைப்புகளை நவீனமயமாக்கும். புதுப்பிக்கப்பட்ட அமைப்புகள் ஆனது நிதி பரிவர்த்தனைகள் மற்றும் சேவை நிர்வாகத்தில் துல்லியத்தை வலுப்படுத்தும். இந்த மேம்படுத்தல் டிஜிட்டல் மாற்றத்திற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்கும்.

- **அனைத்து நிர்வாக ஆவணங்களையும் டிஜிட்டல் மயமாக்குதல்**
நிறுவனம் தனது காகித அடிப்படையிலான பதிவுகளை முழு டிஜிட்டல் வடிவங்களாக மாற்றும். இந்த முன்முயற்சியானது உள் பணிப்பாய்வுகளை ஒழுங்குபடுத்தும் மற்றும் தகவலின் அணுகலை மேம்படுத்தும். இது அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் நீண்ட கால தரவு பாதுகாப்பையும் ஆதரிக்கும்.

- **அனைத்து செயல்பாடுகளுக்கும் காகிதமில்லா அலுவலகத்தை விரிவுபடுத்துதல்.**
முந்தைய முன்முயற்சிகளின் அடிப்படையில், காகிதம் இல்லாத அலுவலகக் கருத்து நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் விரிவுபடுத்தப்படும். இது காகிதத்தைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும், நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும். ஒரு முழுமையான டிஜிட்டல் பணிச்சூழல் செயல்திறனையும் ஒத்துழைப்பையும் அதிகரிக்கும்.

- **நிர்வாகத்திற்கான நெகிழ்வான வேலை நேரங்களை செயல்படுத்துதல்.**
LECO என்பது 24-மணி நேர பயன்பாட்டுச் செயல்பாடாகும், மேலும் முகாமையாளர்கள் கிடைக்கக்கூடியவர்களாகவும், எந்த நேரத்திலும் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தயாராகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழலில், தடையில்லா சேவை வழங்கலைப் பராமரிக்கும் அதே வேளையில் உற்பத்தித்திறனை அதிகரிக்க, முகாமைத்துவ-நிலை ஊழியர்களுக்கு நெகிழ்வான வேலை நேரம் அறிமுகப்படுத்தப்படும். இந்த முன்முயற்சியானது நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டுக் கோரிக்கைகளை ஊழியர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வேலை வாழ்க்கை சமநிலையுடன் சமப்படுத்தக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 04

# இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (இநிசஅச)

## 1. அறிமுகம்

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA), இலங்கையை ஒரு நிலைபெறுதகு வலுசக்தி பொருளாதாரமாக மாற்றுவதில் முன்னணி நிறுவனமாக தொடர்ந்து பணியாற்றி வருகிறது.இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்களை இனங்காணல்,அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியன உள்ளடக்கப்படுவதுடன், பல்வேறு துறைகள் ஊடாக வலுசக்தி பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துவதனையும் உறுதி செய்கின்றது. பசுமை வலுசக்தியை நோக்கிய உலகளாவிய மாற்றத்தில், இலங்கையின் வலுசக்தித் துறையை தேசிய மற்றும் சர்வதேச அர்ப்பணிப்புக்களுடன், குறிப்பாக பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள், தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபெறுதகுஅபிவிருத்தி இலக்குகள் (SDGs) ஆகியவற்றுடன் வரிசைப்படுத்தும்போது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை முக்கிய பணியை மேற்கொள்கின்றது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டாகும்போது பாரிய அளவிலான கருத்திட்டங்களுக்கான காணி கையகப்படுத்தல் மற்றும் சிக்கலான தரப்புக்களின் பங்கேற்பு போன்ற சவால்களுக்கு மத்தியிலும், இருந்தபோதிலும்,,லங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை 68% ஆன ஒட்டுமொத்த செயலாற்றுகை குறிகாட்டியை அடைந்து நிலையான முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றது.

இந்த அறிக்கையானது 2025ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை முக்கிய வெற்றிகள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவற்றுக்குப் பதிலளிப்பதற்காக செயற்படுத்தப்பட்ட உபாயவழிகளைசமர்ப்பிக்கின்றது. குறிப்பாக, பிரிவு 3.2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்த கூரை மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி அமைப்புகளின் முன்னேற்றம் இதனூடாக முன்வைக்கப்படுகின்றது. 100 மெகாவொட் சியம்பலாண்டுவ சூரிய சக்தி திட்டத்தின் முன் மேம்பாட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு செப்டம்பர் 6 ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியவர்களால் அடிக்கல் நடப்பட்டு பாரியளவிலான தேசிய கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் அடையப்பட்டது. அனுகூலங்களை உறுதி செய்தல், குறைந்த காபன் வெளியேற்றம்,வலுசக்தி -பாதுகாப்பான எதிர்காலத்திற்கு மாறுவதை விரைவுபடுத்தல் மீது கவனம் செலுத்தி, 2026 ஆம் ஆண்டுக்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின்தூரநோக்கு இந்த அறிக்கை மேலும் எடுத்தியம்புகின்றது.

## 2.0 முக்கிய சவால்கள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான செயல்முறைகள

அட்டவணை 4.1

இ.நி.பெ.த.அ.ச வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

| துறை | சவால்கள் | சவால்களை வெற்றிகொள்வதற்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் செயல்முறைகள் |
|---|---|---|
| கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பத் தடைகள் | நிர்வாக செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு இல்லாமையின் காரணமாக உபகரணங்கள் ஆற்றல் செயல்திறன் மற்றும் கட்டிடக் குறியீடுகள் போன்ற புதிய தரநிலைகளை அங்கீகரித்துக்கொள்ளல் தாமதங்களுக்கு முகங்கொடுத்துள்ளது. | ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் வெளியிடல்,குறிப்பாக கட்டிடங்கள் சட்டக் கோவை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக ஏனைய தரப்புக்களின் கவனத்தை கவனத்தை முன்கூட்டியே பெறுவதற்கு அமைச்சர்கள் மட்டத்தில் தலையீடு தேவைப்படுகிறது. |
| | வெளிநாட்டு நிதி மற்றும் அங்கீகாரங்களைப் பெறுவதற்கான நீண்ட நடைமுறைகள் காரணமாக புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான உபகரணங்களை கையகப்படுத்தல் தாமதமாகலாம்.<br><br>கொள்கைஉருவாக்கத்தின்போதான ஒரு முக்கியமான சவால், குறிப்பாக வலுசக்தி முகாமைத்துவ முயற்சிகளிலிருந்து கிகாவொட் சேமிப்பை அளவிடுவதற்கும் நாட்டின் வெப்ப வலுசக்திக்கான தேவையை துல்லியமாக மதிப்பீடு செய்தல் தொடர்பாக நம்பகமான தரவுகள் இல்லாமை.<br><br>வினைத்திறன்மிக்க தரவுகள் சேகரிப்பு, நிறுவனங்கள் ஊடாக முயற்சிகள் நகலெடுப்பதைத் தவிர்ப்பதன் மூலம் நேரத்தையும் வளங்களையும் மீதப்படுத்துதல் மற்றும் தொழிற்சாலை மட்டத்தில் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்காகISIC வகைப்பாட்டுடன் இணங்குதல் மிக முக்கியமாகும். | ஏற்கனவே உள்ள நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீளாய்வுக்குட்படுத்தல்.<br><br>தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் பொறிமுறை, நிகழ்கால கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் உரிய சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் வலுசக்தி கணக்காய்வுகளை ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான தேசிய வலுசக்தி தரவுகள் முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவுதல் அவசியமாகும். வலுசக்தி, நிதி மற்றும் சமூகம்சார் விடயங்களை உள்ளடக்கிய வகையிலானகைத்தொழில்துறை, வீட்டு மற்றும் வணிகம்சார் தரவுகளைச் சேகரிப்பதற்கு தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்துடன் இணைந்து ஒரு நடைமுறை கேள்விக் கொத்தின் அடிப்படையில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல். |
| புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்தி | காணிகள்கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் கருத்திட்டச் செலவுகள் அதிகரித்தல்.<br><br>பல்வேறுதரப்புக்களிடமிருந்து புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கான அங்கீகரிப்புக்கள் பெரும்பாலும் மந்த கதியில் நடைபெறுதல்.<br><br>தேசிய REகருத் திட்டங்களின் தாமதம்<br><br>பொருந்தாத கொள்கைகள் REகருத்திட்டங்களை அபிவிருத்தி செய்யும்போது முதலீட்டாளர்களை அதைரியப்படுத்தல்.<br><br>தற்போதுள்ள மின்சக்தி வலையமைப்புக்கு குறிப்பாக சூரிய / காற்றாலைகளுக்குREமூலங்களை ஒருங்கிணைத்தல் சிக்கலானதாக இருக்கலாம்.<br>புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் வலுசக்தி பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் புரிதல் இல்லாதது முன்னேற்றத்தைத் தடுக்கலாம். | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட மேம்பாட்டிற்கான காணிகள் கையகப்படுத்தும் நடைமுறைகளை மீளாய்வுக்குட்படுத்தல்.<br><br>ஒரு உயர் மட்டகருத்திட்ட அங்கீகரிப்புக் குழுவை நிறுவுதல்.<br><br>சிக்கல்கள் மற்றும் தடைகளை கண்காணிப்பதற்கு ஜனாதிபதி செயலணியொன்றை நியமித்தல்.<br><br>சட்ட இடைவெளிகளை அடையாளம் காணுதல், திருத்துதல் மற்றும் வழிகாட்டல்களை மற்றும் மீளாய்வுக்குட்படுத்தல்.<br><br>புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான வலையமைப்பை மேம்படுத்துதல். |


| | | |
|---|---|---|
| நிதிசார் தலையீடு | பொருளாதார சவால்கள் வெளிநாட்டு நன்கொடையாளர் உதவி மற்றும் கடன் வசதிகளின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளன. மத நிறுவனங்களுக்கான கூரை மீது பொருத்தப்படும் சூரிய வலுசக்தி திட்டம் போன்ற திட்டங்கள் இந்திய கடன் திட்டத்தில் தங்கியிருப்பதுடன், மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டங்களுக்கு கொரிய நன்கொடையாளர்களின்உதவி மிக முக்கியமானதாகும். | இருதரப்பு உதவி, நன்கொடையாளர் நிதியளிக்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் அரச -தனியார் கூட்டாண்மை போன்ற சுயாதீன நிதியீட்டல்பொறிமுறைகளை ஆராய்தல் ஊடாக SLSEA தனது நிதியத்தை பல்வகைப்படுத்துகின்றது.<br><br>செஸ் மற்றும் உரிமை அடிப்படையிலான நிதி வழிகள் (Royalty Based Fund Avenues ) நிறுவப்படல் வேண்டும்.<br><br>புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் கடன்களுக்கான கொள்கை.<br><br>NDC மற்றும் SDG இற்கு கூட்டாளர்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளல். |
| வளங்கள் | புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் வலுசக்தி முகாமைத்துவத் திட்டங்களை செயல்படுத்தும்போதுஏற்படுகின்ற முக்கிய சவால்களிடையே மனித வளங்கள் மற்றும் ஏனைய தேவையான வசதிகள் இல்லாமை அடங்கும். | நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு மாகாண வலுக்தி அமைச்சுக்களுடன் கூட்டு முயற்சிகளைத் ஆரம்பித்தல்.<br><br>மனிதவளங்கள் திறனை அதிகரிப்பதோடு நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்துவதன் மூலம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையை விரிவுபடுத்த வேண்டும். |

## 3. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்

### 3.1 வளங்கள் அபிவிருத்தி வசதிகளை வழங்கல்

2025 ஆம் ஆண்டில், இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி ஆணைக்குழு நாட்டிற்கு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திறனை அதிகரிக்கும் பணியை தொடர்ந்தும் செயல்படுத்தியது. இந்தக் காலப் பகுதியினுள் புதிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்களின் ஒட்டுமொத்த திறன் **2,923 மெகாவொட்** ஆக இருந்ததுடன், இது நாட்டின் மொத்த மின்சார உற்பத்தித் திறனில் 44% (கூரைகள் மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உட்பட) ஆகும். இது 2024 இல் பதிவு செய்யப்பட்ட 35.8% உடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிப்பதுடன் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையின் தொடர்ச்சியான விரிவாக்கத்தை பிரதிபலிக்கிறது. சூரிய சக்தி, காற்று, உயிரி பங்குகள் மற்றும் சிறிய நீர் மின்சார உற்பத்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியின் விருத்தி, நிலைபெறுதகு வலுசக்தி தீர்வுகளை ஊக்குவித்தல் மற்றும் தேசிய வலுசக்திப் பாதுகாப்பு மற்றும் காலநிலை சார்ந்த நோக்கங்களுக்கு உதவி வழங்கும்போது இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையின் தொடர்ச்சியான வகிபாகம் **வரைபு 01** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வரைபு 4.1**
**மீள புதுப்பிக்கத்தக்க சக்தி திறன் அதிகரிப்பு**




2025 ஆம் ஆண்டில், ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற (EOI) மீள புதுப்பிக்கத்தக்க புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களின் மொத்தம் 647.38 மெகாவொட் SPPA உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதுடன், இதில் மிகப்பெரிய பங்களிப்பு 474 மெகாவொட் சூரிய சக்தி தொழில்நுட்பத்திலிருந்து கிடைக்கின்றது. 322.45 மெகாவொட் ஒருங்கிணைந்த திறன் கொண்ட 61 திட்டங்களுக்கு வலுசக்தி அனுமதிப்பத்திரங்கள் (EP) வழங்கப்பட்டதுடன், அவற்றில் மிகப்பெரிய பங்கு (281.3 மெகாவொட்) சூரிய ஒளி மின்னழுத்தத்திற்குரியதாகும். அட்டவணை 4.2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, 1,075.49 மெகாவொட் கருத்திட்டங்களுக்கு தற்காலிக அங்கீகாரங்கள் (PA) வழங்கப்பட்டன.

**அட்டவணை 4.2**
**(EOI செயற்பாட்டின் கீழான கருத்திட்டங்கள் பற்றிய விபரம்**

| SPPA இன்கீழ் RE கருத்திட்டங்களின் சுருக்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வளங்கள்** | **SPPA** | | **செயற்படுகின்ற EP** | | **செயற்படுகின்ற PA** | |
| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) |
| சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் | 39 | 62.58 | 54 | 7 | 8 | 5.87 |
| சூரிய PV | 84 | 474.4 | 47 | 281.30 | 97 | |
| காற்று | 2 | 20.00 | 1 | 10.00 | 12 | 145 |
| உயிரி பங்குகள் | 7 | 30.4 | 4 | 22.00 | 2 | 14 |
| மொத்தம் | 138 | 647.38 | 61 | 322.45 | 135 | 1,075.49 |

அட்டவணை 4.3
ஆகஸ்ட் மாத இறுதியாகும்போது பல்வேறு மட்டங்களில் செயற்படுகின்ற கருத்திட்டங்கள் பற்றிய விபரம


| | வெளியிடப்பட்ட EP | | அங்கீகரிக்கப்பட்ட EP | | வெளியிடப்பட்ட PA | | ஆரம்ப கட்டம | | நிராகரிக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திறன் (மெ. வொட்) |
| Solar | 6 | 488 | 3 | 300 | 17 | 1,917 | 7 | 600 | 2 | 100 |
| Wind | 1 | 50 | | | 8 | 612 | 1 | 40 | 3 | 213 |
| Biomass | | | | | | | 1 | 50 | | |
| **Total** | **7** | **538.00** | **3** | **300.00** | **25** | **2,528.50** | **9** | **690.00** | **5** | **313.00** |

## 3.2. கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி கட்டமைப்புத் திட்டம்

### 3.2.1 சூரிய சக்திப் போர்(சங்கிராமம்)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு தடையற்ற செயல்முறையை உறுதி செய்வதற்கு இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இலங்கை மின்சாரம் (தனியார்) கம்பனி (LECO) போன்ற முக்கிய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு கூரை மீது பொருத்தப்படும் சூரிய ஒளிமின்னழுத்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனை மேற்பார்வையிடும் பொறுப்பை இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை கொண்டுள்ளது. மிகவும் முக்கியமான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் முயற்சியாக உள்ளது. "சூரிய சக்திப் போர்" கூரை மீது பொருத்தப்படும் சூரிய ஒளிமின்னழுத்த திட்டமானது இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையின் கீழ் நிலவுகின்ற முக்கியமான மற்றும் வேகமாக செயற்படுகின்ற முயற்சியாக இருக்கின்றது. 2025 ஆம் ஆண்டில், 550 மெகாவொட் சூரிய சக்தி கட்டமைப்புகள் நிறுவப்பட்டு அதனூடாக 12,700 புதிய வாடிக்கையாளர்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இது உரிய வருடாந்த இலக்கான 180 மெகாவொட்டைப் பார்க்கிலும் இரு மடங்கிலும் அதிகமாகும். கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தி பேனல்களின் ஒட்டுமொத்த திறன் 1,966 மெகாவொட் ஆகுமென்பதோடு, இது 124,017 வாடிக்கையாளர்களுக்கு நேரடியான அனுகூலங்களை வழங்குகின்றது.

வரைபு 4.2
கூரைகள் மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய வலுசக்தி அமைப்புக்களின் விருத்தி



**தர உறுதி மற்றும் ஒழுங்குபடுத்தலை உறுதிப்படுத்தல்** –இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபைசூரிய சக்தி சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவுபவர்களை பதிவு செய்து ஒழுங்குபடுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொதுவான பெயர்ப்பட்டியலைபேணிவருவதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் உயர்தர சேவைகளைப் பெறச் செய்வதனையும், இதன் மூலம் தகுதியற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து அவர்களைப் பாதுகாப்பதையும் இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை உறுதி செய்கின்றது. 2025 ஆம் ஆண்டில், 49 சூரிய சக்தி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்,இதனால் பதிவுசெய்யப்பட்ட மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 624 ஆக உயர்ந்தது.

சூரிய வலுசக்தி கம்பனிகள், தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை (NAITA), தொழிற்கல்வி அதிகாரசபை (VTA), இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பலப்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட NVQ 3 / 4 மட்டங்களில் அங்கீகாரம் பெற்ற இரண்டு நாள் குறைநிரப்புநிகழ்ச்சித் திட்டம் (Gap-Filling Programme)ஊடாக 500 தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு இணையாக, எதிர்கால செயற்படுத்தல்களின்போது தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தவாறுமின்கல வலுசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கான தரங்கள் மற்றும் நடைமுறைகள்கோவையை (Code of Practice) மேம்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன.

தொடர்ச்சியான திறன்அபிவிருத்தி மீது கவனம் செலுத்துவதன் மூலம், சூரிய வலுசக்தி கம்பனிகள் அவைகளின் கருத்திட்டங்கள் நன்கு கட்டமைக்கப்படுவதை மட்டுமல்லாமல், அவற்றின் முழு ஆயுட்காலம் முழுவதும் கருத்திட்ட நிலைபெறுதகு தன்மை மற்றும் வர்த்தக ரீதியிலான வெற்றி ஆகிய இரண்டிற்கும் அத்தியாவசியமான விதத்தில் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்குவதனை உறுதிப்படுத்துகின்றது. சூரிய வலுசக்திகைத்தொழில் துறை வளர்ச்சியடைந்தவுடன்சூரிய சக்தி பேனல்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை அதிகரித்து வருவதுடன், அதனூடாக புதிய தொழில் மற்றும் இது புதிய வர்த்தக வாய்ப்புக்கள் உருவாகின்றது.

இங்கு இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையின் பணியின் பிரதான பகுதி, பொது மக்களுக்கு வழிப்புணர்வூட்டல் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழிநடாத்துவதாகும். இந்த முயற்சிகளானது சூரிய வலுசக்தியின் அனுகூலங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணப்படும் பல்வேறு திட்டங்கள் பற்றி பொதுமக்களுக்கு வழிப்புணர்வூட்டி விரிவான பயன்பாடு மற்றும் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கூரைகள் மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி திறனை இணைத்தல் தொடர்பாக எடுத்துக்கொண்டால் இலங்கையானது உலகளாவிய ரீதியில் சீனாவுக்கு மாத்திரம் அடுத்ததாக இருக்கின்றது. 2025 இல் மொத்த NCRE (பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க வலுசக்தி) நிறுவல்களில் 67.26% மற்றும் நாட்டின் மொத்த வலுசக்தி யின் 29.61% இற்கு கூரைகளின் மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி பேனல்கள் பங்களிப்புச் செலுத்தியுள்ளன.

### 3.2.2 வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டங்கள்

#### (அ) 5000 மத ஸ்தலங்களுக்கு இந்திய கடன் வசதியின் கீழான சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டம்

**SBI வங்கியினால்** வழங்கப்பட்ட17 **மில்லியன் அமெரிக்க டொலர்** நிதியுதவி ஊடாக இந்திய அரசாங்கம், இலங்கையின் கூரைகள் மீது பொருத்தப்படும் சூரிய வலுசக்தி கட்டமைப்புக்களை அமைப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இந்தத்

திட்டத்திற்கு நாட்டின் **5000 மத ஸ்தலங்கள்** ஊடாக 5 கிலோவொட் திறனைக் கொண்ட கூரைகள் மீது பொருத்தப்படும் சூரிய வலுசக்தி கட்டமைப்புக்களை **திட்டமிடல், வழங்கல், அமைத்தல், பரீட்சித்தல்,நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்** உள்ளடங்குகின்றது.

- **கருத்திட்டக் காலப்பகுதி** :2024 செப்தெம்பர் - 2025 ஆகஸ்ட்
- **மொத்தத் திறன்** :25 மெகாவொட்
- **எதிர்பார்க்கப்படும் வருடாந்த உற்பத்தி** : 37 கிகாவொட் மணித்தியாலம்
- நிதியுதவி இந்திய அரசாங்கத்தின் கீழ் 17,000,000,00 அமெரிக்க டொலர்(SBI கடன் வசதி)

2025 ஆகஸ்ட் ஆகும்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளதுடன், கட்டமைப்புக்களிலிருந்து 100% பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், 5,000 கட்டமைப்புகள் (98%) நிறுவப்பட்டு 64% அதிகாரப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. நிகர மீட்டர் ஆவணங்கள் சமர்ப்பிப்புக்கள் 86% ஆகும். நிதி முன்னேற்றம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன்,மொத்த கருத்திட்ட செலவும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. நிறுவல்களுக்கு 30% மற்றும் ஐந்து ஆண்டு பராமரிப்பு காலத்திற்கு 10% செயல்திறன் வங்கிப் பிணைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், இது கருத்திட்டத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் நிலைபெறுதகு தன்மையை உறுதி செய்கிறது.

### (ஆ)அரசாங்கக் கட்டிடங்களுக்கு கூரை மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய வலுசக்தி வசதிகளை தாபித்தல் – DPR

2022 நவம்பர் முதல் 2024 டிசம்பர் வரையான காலப் பகுதியினுள் அரச கட்டிடங்களுக்காக 120 மெகாவாட் சூரிய சக்தி மின்னழுத்த நிறுவல்கள், மத ஸ்தலங்கள் மற்றும் RO மின் உற்பத்தி நிலையங்களுக்கான சூரிய சக்தி மின்னழுத்த அமைப்புகள் மற்றும் 5 மெகாவாட் மிதக்கும் சூரிய சக்தி மின்னழுத்த திட்டத்திற்கான கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்காக930,209 அமெரிக்க டொலர் மொத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரிவான கருத்திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன்,அது 100%பௌதிக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. நிதிசார் முன்னேற்றம் 95% ஆகுமென்பதோடு, DPR தயாரிப்பதற்கு தொடர்புடைய செலவுகளை மட்டுமே உள்ளடக்கியது. இருப்பினும், கடன் அனுமதிக்கப்படாததால் செயற்படுத்தல் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

### (இ) யாழ்ப்பாணத்தின் சிறிய கிராமங்களில் ஒரு கலப்பின புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டமைப்பொன்றை நிர்மாணித்தல்

யாழ்ப்பாணத்தின் அனலைதீவு,நெடுந்தீவு மற்றும் நைனாதீவு ஆகிய தீவுகளில்சூரிய சக்தி, காற்று சக்தி, டீசல் ஜெனரேட்டர்கள் மற்றும் லித்தியம்-அயன் சேமிப்பு மின் கலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கலப்பின மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்சாரம் தயாரிப்பதே இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். சிறப்பான உற்பத்திக் கலவைக்கு ஒத்திசைவானமின்கல களஞ்சியசாலையுடனான ஒளிமின்னழுத்த, காற்று மற்றும் டீசல் மூலங்களின் திறன்கள் பின்வருமாறு

**அட்டவணை 4.4**
**முன்மொழியப்பட்டுள்ள மின்சார உற்பத்தி சேர்க்கை**

| தீவு | டீசல் ஜெனரேட்டர் | PV உற்பத்தி | காற்று சக்தி உற்பத்தி | மின்கல களஞ்சியசாலை |
|---|---|---|---|---|
| நைனாதீவு | கிலோவொட்300 + கிலோவொட்500 | கிலோவொட் 700 | கிலோவொட்200 | கிலோவொட்மணி. 1000 கிலோவொட் 550) |
| அனலைதீவு | கிலோவொட்150 + கிலோவொட்300 | கிலோவொட் 300 | கிலோவொட்80 | கிலோவொட்மணி.550 (கிலோவொட் 275) |
| நெடுந்தீவு | கிலோவொட்300 + கிலோவொட்500 | கிலோவொட் 700 | கிலோவொட்250 | கிலோவொட்மணி. 800 (கிலோவொட் 650) |

கருத்திட்டமானது முறையாக முன்னோக்கிச் செல்வதுடன், **குழு வலுவூட்டல் 40% என்பதுடன்திட்டத்தின் 90% நிறைவடையும் கட்டத்தில் உள்ளது. பொருட்கள் வழங்கல் 23% இனை அண்மித்துள்ளதுடன், கட்டிடங்கள் மற்றும் வீதி நிர்மாணப் பணிகள் 75% நிறைவடைந்துள்ளது.**சூரிய கட்டமைப்பு சிறப்பான வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், **தற்போது 75% நிறைவடைந்துள்ளது.**


## 3.3 தேசிய மட்டத்திலான புதுப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்கள்

### 3.3.1. அடிப்படை இடங்களை இனங்காணல்

தள அடையாளம் மற்றும் தளத்திற்கு முந்தைய தயாரிப்பு பணிகளை ஆணையத்தின் வள வரைபடப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. 2030 ஆம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட மீள புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி திட்டம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அமைச்சரவை ஒப்புதலுக்காக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பிற புதிய தளங்கள் அடையாளம் காணப்பட்டன.

தேசிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டத்தை பலப்படுத்துவதற்கான வளங்கள் வரைபடமாக்கல்பிரிவுதரையின் மேல் நிர்மாணிக்கப்படும்சில சூரிய சக்தி மின் உற்பத்திக் கருத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவு - கொட்டுகச்சியாவில், 80 மெகாவொட் கருத்திட்டம் அதன் முன்-சாத்தியத்தகவுக் கட்டத்தை நிறைவு செய்துள்ளதுடன், இலங்கை நிலைபெறுதகுவலுசக்தி அதிகாரசபைக்குகாணியை விடுவிப்பதற்காக பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளார்.புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில், யானை வேலி நெடுகிலும் ஒரு சூரிய மின் சக்தி திட்டத்திற்கான எண்ணக்கரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், வன சீவராசிகள் திணைக்களம், LUPPD மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் இணைந்து முதற்கட்ட கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிடையில், கொன்வெவ (190 ஹெக்டேயர்), கம்பிலிவெவ (19 ஹெக்டேர்), கொன்வெவ வெள்ளச் சமவெளி (17 ஹெக்டேர்) மற்றும் வெஹெரவெவ வெள்ளச் சமவெளி (8 ஹெக்டேர்) உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகள் இல்லாத வெள்ளச் சமவெளிகள் மற்றும் குளப் பகுதிகளைப் பயன்படுத்தி 100 மெகாவொட் சூரிய மின்சக்தி அபிவிருத்திக்கு மகாவலி ”எல்” வலயம் அடையாளம் காணப்பட்டுள்ளது.






(கள விஜயம் மற்றும் இடங்கள் பற்றிய விபரம்)

நிறைவடைந்துள்ள அதே நேரத்தில், உப்புக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு காணிகளைப் கையகப்படுத்தக்கூடிய ஆனையிறவு உப்பு நிலத்தில் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி திட்டங்களில் முன்னேற்றம் காணும் பணிகள் நடைபெற்று வருகின்றன. காற்றாலை கோபுர நிறுவல்களின் துணையுடன் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி கூறுகள் இரண்டிற்கும் முதற்கட்ட வடிவமைப்புகள் நடந்து வருகின்றன. வேராவிலில், பூநகரி பிரதேச செயலாளரின் ஆரம்ப இணக்கப்பாடு மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து பொருத்தமான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், மின்சார சபை காற்றாலைக் கோபுரங்களை நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. அத்துடன் காணி கையகப்படுத்தல் பணிகள் நிறைவடைந்துள்ள கரைச்சி (கண்டவளை பிரதேச செயலாளரின் இணக்கப்பாடு) மற்றும் நொச்சியாகம பிரதேசங்களில் பொருத்தமான காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வேராவில், கரைச்சி, நொச்சியாகம மற்றும் மாந்தை மேற்கு ஆகிய இடங்களில் காற்றாலை கோபுரங்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.3.2 செயற்படுத்தப்படும் தேசிய கருத்திட்டங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்கள் அபிவிருத்தியின்போது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மொத்தம் 1258 மெகாவொட் பாரியளவிலான கருத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதன் கீழான தனிக் கருத்திட்டங்களின் திறன்கள் (இயலளவு) கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் நிலைமை அட்டவணை 4.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- RND/02-பூநகரி காற்றாலை மின் உற்பத்தி திட்டம் – 234 மெகாவொட்
- RND/04-மன்னார் கட்டம் - IIகாற்றாலை மின் உற்பத்தி திட்டம் – 250 மெகாவொட்
- RND/05-வேரவில் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் – 204 மெகாவொட்
- RND/06- கரைச்சி - கண்டாவளை காற்றாலை மின் உற்பத்தி திட்டம் – 120 மெகாவொட்
- RND/07 -மாந்தை மேற்கு காற்றாலை மின் உற்பத்தி திட்டம் – 300 மெகாவொட்
- RND/9-தெதுரு ஓயா மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டம் – 100 மெகாவொட்
- RND/10-ரிதியகம மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டம் – 50 மெகாவொட்

**அட்டவணை 4.5**
**தேசிய கருத்திட்டங்கள் பற்றிய விபரம்**

| செயற்பாடு | 234 மெகாவொட் – பூநகரி காற்றாலை மின் உற்பத்தி திட்டம் – | 250 மெகாவொட் –மன்னார் கட்டம் – ஐஐகாற்றாலை மின் உற்பத்தி திட்டம் | 204 மெகாவொட் –வேரவில்காற்றாலை மின் உற்பத்தி திட்டம் | 120 மெகாவொட் – கரைச்சி – கண்டாவளை காற்றாலை மின் உற்பத்தி திட்டம் | 300 மெகாவொட் – மாந்தை மேற்கு காற்றாலை மின் உற்பத்தி திட்டம் | 100 மெகாவொட் – தெதுரு ஓயா மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டம் | 50 மெகாவொட் – ரிதியகம மிதக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| **இடத்தை இனங்காணல்** | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| **முன் சாத்தியத்தகவாய்வு** | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| **இடத்தின் காற்றின் அளவை அளத்தல்** | நிறைவு செய்யப்பட்டுள்ளது | நிறைவு செய்யப்பட்டுள்ளது | ADBஉதவியுடன் CEBஇனால் காற்றை அளவிடுகின்ற கோபுரத்தை தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது | SLSEA இனால் காற்றை அளவிடுகின்ற கோபுரத்தை தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது | SLSEA இனால் காற்றை அளவிடுகின்ற கோபுரத்தை தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது | SLSEA இனால் காற்றை அளவிடுகின்ற கோபுரத்தை தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது | SLSEA இனால் காற்றை அளவிடுகின்ற கோபுரத்தை தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது |
| **ஆரம்ப சூழல்சார் மதிப்பீடு ஜேநுநுரு**<br><br>**சூழல்சார் தாக்கத்தின் மதிப்பீடு (EIA)** | நிறைவு செய்யப்பட்டுள்ளது | செயற்படுத்தப்பட்டு வருகின்றது | செயற்படுத்தப்பட்டு வருகின்றது | செயற்படுத்தப்பட்டு வருகின்றது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது |
| **காணிகளை கையகப்படுத்தல்** | செயற்படுத்தப்பட்டு வருகின்றது | செயற்படுத்தப்பட்டு வருகின்றது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது | ஆரம்பிக்கப்படவுள்ளது |
| **மின் தொகுப்பு இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு** | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது | வாரியபொல ஸ்விச்சின் ஸ்டேஷன் மற்றும் அதனை அண்டிய பரிமாற்றல் அபிவிருத்தி. வாரியபொல திட்டம் இதுவரை மேற்கொள்ளப்படவில்-லையாயினும் 2025-2044 LTGEP இல் இனங்காணப்பட்டுள்ளது. | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்ட அபிவிருத்தி திட்டத்தில் (2025 - 2030) உள்ளடக்கப்பட்டுள்ளது<br><br>ஹம்பாந்தோட்டை - மாத்தறைT/L 2028இல் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சாத்தியத்தகவாய்வு** | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/ SLSEA இனால் | டெவலப்பர்/SLSEAஇனால் |
| **முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)** | RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். | EIA நிறைவு செய்ததன் பின்னர்RFPஇற்காக அழைப்பை ஆரம்பிக்க முடியும். |

### 3.4 வலுசக்தி வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் கேள்வி சார்ந்த முகாமைத்துவம்

#### 3.4.1 வலுசக்தி வினைத்திறன் கட்டிடங்கள் குறியீடு (EEBC)

திருத்தப்பட்ட வலுசக்தி வினைத்திறன் கட்டிடக் குறியீடு நிறைவு செய்யப்பட்டு சட்ட ரீதியிலான மீளாய்வுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. USAID மற்றும் GIZ இன் உதவியுடன் இலங்கை நிலைபெறுதகுவலுசக்தி அதிகாரசபையினால் இயைந்திருத்தலை இலகுபடுத்துமுகமாக கட்டிட உருவகப்படுத்துதல் மென்பொருள் தொடர்பாக பொறியாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்களுக்கு பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

#### 3.4.2 கைத்தொழில் துறையின் வினைத்திறன்

- 1,000 க்கும் மேற்பட்ட தேசிய வலுசக்தி அளவீட்டு குறியீடுவலைவாசல் வசதிகளுடன் பதிவு செய்யப்பட்டது.
- தேயிலைத் துறைக்கு தரப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன், மருத்துவமனைகள் வரை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- வலுசக்தி முகாமையாளர திட்டம் வலுப்படுத்தப்பட்டது: 295 வலுசக்தி முகாமையாளர்கள், 25 அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர்கள் மற்றும் 33 ESC முகள் தற்போது செயலில் உள்ளனர்.

#### 3.4.3 இலங்கை தேசிய வலுசக்தி வினைத்திறன் விருது வழங்கல் வைபவம் 2025

- கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் : 40 கம்பனிகள், 9 சேவை வழங்குநர்கள்.
- தள மதிப்பீடு மற்றும் ஆவண மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

#### 3.4.4 போக்குவரத்துப் பிரிவு

வாகன எரிபொருள் சிக்கன லேபிளிங் (Vehicle Fuel Economy Labelling) : இற்காக வரைவு தரநிலை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, வாகன புகை உமிழ்வு சோதனை நிறுவனங்களுடன் இணைந்து அடிப்படை தரவு நிறுவப்படவுள்ளது.

#### 3.4.5 வதிவிடங்கள் பிரிவு

300,000 அடுப்புக்களை விநியோகிப்பதற்காக வலுசக்தி வினைத்திறன் அடுப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ேடைஉயசடிழெ ஊழழமளவழஎநள உடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. வீட்டில் உணவுகளை சமைக்கும்போது வலுசக்தி சேமிப்பு தொடர்பாக எடுத்தியம்புவதற்காக விழப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

#### 3.4.6 உபகரணங்கள் லேபளிங் நிகழ்ச்சித் திட்டம்

- வளி சீரமைப்பிகள், மின்சார மோட்டார்கள் மற்றும் LED மின் குமிழ்களுக்கான வரைவு தரநிலைகள் தயாரிக்கப்பட்டன.
- ரைஸ் குக்கர் மற்றும் ஸ்டேன்ட் மின் விசிறிகளுக்கான உபகரணங்கள் சோதனை ஆய்வுகூடங்களுக்கான பெறுகைகளை (கொள்வனவுகுளை) 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- ஜப்பான் மற்றும் தென் கொரியாவைச் சேர்ந்த தொழில்நுட்ப பணியாளர்களால் ஒரு சர்வதேச பயிற்சித் திட்டம் நிறைவு செய்யப்பட்டது.

#### 3.4.7 கணக்கெடுப்புக்கள் மற்றும் ஆராய்ச்சிகள்

- சீதாவாக்க (அவிசாவளை) முதலீட்டு சபை ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் (EPZ) மூன்று உற்பத்தி முறைமையை செயல்படுத்துவதற்கான விரைவான மதிப்பீட்டை (சாத்தியத்தகவாய்வுக்கு முந்திய) மேற்கொள்வதற்கானவிலைமனுக் கோரல்

செயல்முறை செயற்படுத்தப்படுவதுடன், இப்போது அது மதிப்பீட்டுக் கட்டத்தில் உள்ளது.

- உயிரி எரிபொருள் நுகர்வு கணக்கெடுப்புக்கான கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- மீன்பிடித் துறையில் வலுசக்தி வினைத்திறனை மேம்படுத்துதல் குறித்து ஆய்வுக்கான பெறுகை செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விலைமனுக் கோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமைச்சினால் ஒரு திணைக்கள ஆலோசனை பெறுகை குழுவை (CPCD) நியமிக்கப்பட்டுள்ளது. TEC கூட்டத்தை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- திவுலப்பிட்டிய பிரதேச சபையில் வலுசக்தி திறன் கொண்ட விளக்கு அமைப்பை நிறுவுவதற்கான செயல்திறன் கண்காணிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது மதிப்பாய்வு நிலையில் உள்ளது.
- மின்கலவலுசக்தி சேமிப்புக் கொள்கையை உருவாக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## 4. 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

2026 ஆம் ஆண்டிற்கான சில முக்கிய முன்னுரிமை நடவடிக்கைகளைஅதிகாரசபை அடையாளம் கண்டுள்ளது:

- தேசிய காற்று சக்தி மற்றும் சூரிய சக்திகருத்திட்டப் (பூநகரி, மன்னார் II, வேராவில், கரைச்சி, மாந்தை மேற்கு) பணிகளை நிறைவு செய்வதனை துரிதப்படுத்துதல்
- உபகரணங்களுக்கான வலுசக்தி செயல்திறன் ஆய்வுகூடங்களை ஆரம்பித்தல் மற்றும் உபகரணங்கள் லேபிளிங் திட்டங்களை வலுப்படுத்துதல்
- கட்டாய அடிப்படையில் வலுசக்தி வினைத்திறன் கட்டிடக் குறியீட்டை செயல்படுத்துதல்
- தேசிய காற்று சக்தி மற்றும் சூரிய சக்திகருத்திட்டப் (பூநகரி, மன்னார்ஐஐ, வேராவில், கரைச்சி, மாந்தை மேற்கு) பணிகளை நிறைவு செய்வதனை துரிதப்படுத்துதல்
- உபகரணங்களுக்கான வலுசக்தி செயல்திறன் ஆய்வுகூடங்களை ஆரம்பித்தல் மற்றும் உபகரணங்கள் லேபிளிங் திட்டங்களை வலுப்படுத்துதல்
- கட்டாய அடிப்படையில் வலுசக்தி வினைத்திறன் கட்டிடக் குறியீட்டை செயல்படுத்துதல்
- கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி நிறுவல்களை மேலதிக 170 மெகாவொட்டினால் விரிவுபடுத்துதல்
- மருத்துவமனைத் துறைக்கான வலுசக்தி அளவுகோல்களை நிறுவுதல் மற்றும் தன்னார்வ தரப்படுத்தல் திட்டங்களை விரிவுபடுத்துதல்
- மின்சாரம் மற்றும் கலப்பு வகை (ஹைப்ரிட்) வாகனங்களுக்கான எரிபொருள் சிக்கன லேபிளிங்கை அறிமுகப்படுத்துதல்
- இந்துரான பயிற்சி நிலையத்தில் பயிற்சி வசதிகளை மேம்படுத்துதல்
- சீதாவாக்க மற்றும் ஏனைய முதலீட்டு சபை ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் மூன்று உற்பத்தி பற்றிய மதிப்பீட்டை நடத்துதல்
- மீன்பிடித் துறையில் வலுசக்தி செயல்திறனை மேம்படுத்துவது குறித்த ஆய்வு நடாத்துதல்
- சீதாவாக்க மற்றும் ஏனைய முதலீட்டு சபை ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் மூன்று உற்பத்தி பற்றிய மதிப்பீட்டை நடத்துதல்
- மீன்பிடித் துறையில் வலுசக்தி செயல்திறனை மேம்படுத்துவது குறித்த ஆய்வு நடாத்துதல்
- மின்கலங்கள் தொடர்பான கொள்கையை மேம்படுத்தல்.

# இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

## 1. அறிமுகம்

### 1.1 இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினை தாபித்தல்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் (சட்டம்) 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ("பேரவை") தாபிக்கப்பட்டது. பேரவை தற்போது எரிசக்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பேரவைக்குப் பின்வரும் பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

(அ) பொதுமக்கள், கதிர்வீச்சுத் தொழிலாளர்கள், நோயாளிகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக உரிமங்களை வழங்குதல், களப்பரிசோதனைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் அயனாக்கல் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் மூலங்களை ஒழுங்குபடுத்துதல்

(ஆ) கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்தல்

(இ) சட்டத்திலுள்ள விதிகள் மற்றும் உரிமங்களிலுள்ள நிபந்தனைகளை மீறியோர்களிற்கு எதிராக அமுலாக்க நடவடிக்கைகளை எடுத்தல்

(ஈ) அணுப் பிரயோகங்கள் தொடர்பிலான பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு மீது இலங்கையால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகளின் கீழுள்ள இலங்கையின் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

### 1.2 பேரவையின் பிரதான பணிகள்

(அ) அயனாக்கல் கதிர்வீச்சினை பயன்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட தொழிற்துறைகளிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் அதனை புதுப்பித்தல், திருத்துதல், இடைநிறுத்துதல் அல்லது மீளப்பெறுதல்.

(ஆ) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடனும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களிலுள்ள நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுதல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக களப்பரிசோதனைகளை நடாத்துதல்.

(இ) சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்து கொள்வதற்கும் இணக்கமின்மைகள் உரிய முறையில் அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஈ) இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து கதிர்வீச்சு மூலங்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய பதிவேடொன்றை பேணிவருதல்.

(உ) அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பிலும், மூலங்கள், அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பிலும், கதிரியக்க கழிவு முகாமைத்துவம் தொடர்பிலும் தேசிய கொள்கைகள் மற்றும் உபாய வழிமுறைகளை உருவாக்குதல்.

(ஊ) சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் மற்றும் ஏனைய அதனையொத்த சர்வதேச அமைப்புக்களினால் வெளியிடப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்தும் வகையில் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சு பிரயோகத்துடன் சம்பந்தப்பட்ட பிரமாணங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல்.

(எ) மூலங்களின் பாதுகாப்பு மற்றும்

பராமரிப்பு தொடர்பில் இலங்கை ஒரு தரப்பாக கைச்சாத்திட்டுள்ள சர்வதேச சாசனங்கள், பிரகடனங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் கீழான இலங்கையின் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஏ) அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக பொது விழிப்புணர்வு திட்டங்களை நடத்துதல் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அம்சங்கள் குறித்து கதிர்வீச்சு தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

(ஐ) கதிரியக்க கழிவு மேலாண்மை மற்றும் கதிரியக்க பொருட்களின் போக்குவரத்தை மேற்பார்வை செய்தல்.

(ஒ) கதிர்வீச்சு வசதிகளை நிர்மாணிப்பதற்கான கட்டிடங்களின் திட்டங்களுக்கு ஒப்புதல்களை வழங்குதல்.

(ஓ) கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு கருவிகளின் இறக்குமதி/ ஏற்றுமதிக்கான ஒப்புதல்களை வழங்குதல்.

(ஔ) அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலளிப்புக்கான ஏற்பாடுகளுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

## 2. மீளாய்வுக் காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் அத்தகைய சவால்களை எதிர்கொள்ள பின்பற்றப்பட்ட உத்திகள்

1. திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதற்கும், நியாயமான காலக்கெடுவிற்குள் கோரப்பட்ட சில பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் போதுமான எண்ணிக்கையிலான விஞ்ஞான உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் இல்லாதிருந்தமை பேரவைக்கு சவாலாக இருந்தது. பல ஊழியர்களின் இராஜினாமா மற்றும் ஓய்வு பெற்றிருந்தமை, ஆட்சேர்ப்பு மீதான அரசாங்க கட்டுப்பாடுகள் ஆகியவை இந்த ஊழியர் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்திருந்தது. அங்கீகரிக்கப்பட்ட 45 பதவிகள் காணப்பட்ட போதிலும், தற்போது 31 ஊழியர்கள் மட்டுமே பேரவையில் உள்ளனர்.

   எவ்வாறாயினும், மேற்கூறிய தடைகளுக்கு மத்தியிலும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு, கடமையுணர்வு மற்றும் தளராத ஒத்துழைப்பின் காரணமாக, பேரவையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகப் பணிகள் மற்றும் நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளை சர்வதேச தரத்திற்கு இணங்க மேம்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் பேரவை தனது அதிகபட்ச முயற்சியை மேற்கொண்டுள்ளது.

2. 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின்படி 12 விதிகள், கொள்கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டுமென பேரவை அடையாளம் கண்டுள்ளது. அத்தகைய ஆவணத்தைத் தயாரிப்பதற்காக பேரவையில் தனிப்பட்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுன் அத்தகைய ஆவணத்தை மேற்பார்வை செய்வதற்காக முகாமைத்துவச் சபையின் உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த செயல்முறை 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில், மேற்கண்ட விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றை உருவாக்கும் பணிகளில் சுமார் 60 சதவீதத்தை ஒழுங்குபடுத்தல் பேரவை முடித்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தப் பணிகளை முடிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவை எதிர்பார்க்கிறது. மேலும் தற்போதுள்ள ஊழியர் பற்றாக்குறை இந்தப் பணிகளை உடனடியாக முடிப்பதில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

## 3) அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்

**அட்டவணை 5.1**
**ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்**

| இல. | செயற்பாடு | 2025 இற்கான இலக்கு | ஆகஸ்ட் 31 வரையான இலக்கு | ஆகஸ்ட் 31 வரையான முன்னேற்றம் | முன்னேற்ற சதவீதம் | கடப்பாடுகள்ஃ குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | புதிய மற்றும் புதுப்பித்தல் உரிமங்களை வழங்குதல் (விண்ணப்பங்களின் செயன் முறைப்படுத்தல், நவீனப்படுத்தல்கள் மற்றும் தற்போதுள்ள உரிமங்களின் காலநீடிப்பு உட்பட) | 560 | 55 | 111 | 201.8% | இலக்கு அடையப்பட்டது. |
| 02. | கதிரியக்க தொற்றுக்காகப் சோதிக்கப்பட்ட உணவு மாதிரிகளுக்கு ஒழுங்குபடுத்தல் சான்றிதழ்களை வழங்குதல் | 4000 | 2700 | 3234 | 119.7% | இலக்கு அடையப்பட்டது. மேற்கொண்ட கோரிக்கைகளின் அடிப்படையில். |
| 03. | கதிரியக்க வசதிகளின் ஒழுங்குபடுத்தல் களப் பரிசோதனை | 500 | 330 | 194 | 58.8% | ஊழியர் பற்றாக்குறை காரணமாக இலக்கை அடைய முடியவில்லை. |
| 04. | கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு கருவிகளுக்கான இறக்குமதி ∴ ஏற்றுமதி ஒப்புதல்கள் | 480 | 320 | 379 | 118.4% | இலக்கு அடையப்பட்டது. மேற்கொண்ட கோரிக்கைகளின் அடிப்படையில். |
| 05. | கதிர்வீச்சு வசதிகளின் திட்டங்களுக்கான ஒப்புதல்கள் | 80 | 55 | 81 | 147.3% | இலக்கு அடையப்பட்டது. மேற்கொண்ட கோரிக்கைகளின் அடிப்படையில். |
| 06 | உயர் வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்களின் மேற்பார்வை மற்றும் களப்பரிசோதனை | 01 | 01 | 01 | 100 % | இலக்கு அடையப்பட்டது. |
| 07 | போக்குவரத்து மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளுக்கான கோரிக்கையின் பேரில் களப் பரிசோதனை | 06 | 04 | 12 | 300 % | இலக்கு அடையப்பட்டது. மேற்கொண்ட கோரிக்கைகளின் அடிப்படையில். |

**அட்டவணை 5.2**
**தேசிய பயிற்சிப் பாடநெறிகள்**

| நிகழ்ச்சித்திட்டம் | பௌதீகம் | |
|---|---|---|
| | 2024.12.31 இல் உள்ளபடி இலக்கு | ஆடைவ |
| கைத்தொழில்கள் மற்றும் மருத்துவ வசதிகளில் பணிபுரியும் - கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயற்படுத்துனர்களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு - குறித்த தேசிய பயிற்சி பாடநெறி - நோயறிதல் எக்ஸ்-கதிர் வசதிகள் (வகை 1 மற்றும் 2 செயற்படுத்துனர்களுக்கான பாடநெறி 1) | பங்குபற்றிய 30 நபர்களுக்கான பயிற்சி | ஆகஸ்ட் 12 - 15 வரை 17 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| கைத்தொழில்கள் மற்றும் மருத்துவ வசதிகளில் பணிபுரியும் "கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயற்படுத்துனர்களுக்கான கதிர்வீச்சு பாதுகாப்பு" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி - நோயறிதல் எக்ஸ்-கதிர் வசதிகள் (நோய்கண்டறியும் எக்ஸ்-கதிர் சீமுக்கள் மற்றும் செயற்படுத்துனர்களுக்கான பாடநெறி 2) | பங்குபற்றிய 30 நபர்களுக்கான பயிற்சி | ஆகஸ்ட் 26 - 28 வரை 73 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| SLAERC மற்றும் பிற பங்குதாரர்களுக்காக US DOE உடன் இணைந்து தேசிய டேபிள் டாப் பயிற்சி (கொழும்பு நகர தண்டர் டேபிள் டாப் பயிற்சி) | பங்குபற்றிய 100 நபர்களுக்கான பயிற்சி | பேப்ரவரி 19 - 20 வரை 104 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |
| IAEA TC திட்டத்தின் கீழ் "அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளை எதிர்கொள்ளல் மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு தேசிய திறன்கள்" குறித்த "அவசரகால தயார்நிலை மற்றும் எதிர்கொள்ளல்" குறித்த தேசிய பயிற்சி பாடநெறி | பங்குபற்றிய 25 நபர்களுக்கான பயிற்சி | யூலை 7 - 9 வரை 25 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது |

**அட்டவணை 5.3**
**பிரமாணங்கள், விதிகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல்**

| | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீகம் | |
|---|---|---|---|
| | | 2025.08.31 இல் உள்ளபடி இலக்கு | அடைவு சதவீதம் |
| 1 | கதிர்வீச்சு மூலங்களின் அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த வரைவு விதிமுறைகளை இறுதி செய்தல். | விதிமுறைகளை வர்த்தமானியில் வெளியிடுதல் | 90% |
| 2 | கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய கொள்கையைத் தயாரித்தல் | ஆமைச்சரவை அலுவலகத்துக்கு மீளச் சமர்ப்பித்தல் | 80% |
| 3 | அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரகால முகாமைத்துவத் திட்டத்தை செயல்படுத்துதல் | SLAERC அவசரகால பதிலளிப்பு குழுக்களுக்கான பயிற்சி | 95% |
| 4 | அணுசக்தி மின் உற்பத்தி நிலையத்தின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அணுசக்திச் சட்டத்தைத் தயாரித்தல் | முதற்கட்ட வரைவு பூரணப்படுத்தப்பட்டது | முதற்கட்ட வரைவு பூரணப்படுத்தப்பட்டது |
| 5 | தேசிய பொறி செய்யப்பட்ட மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | தரவை உள்ளிடுதல் மற்றும் பதிவேட்டைப் புதுப்பித்தல் | 100% |
| 6 | ஒழுங்குபடுத்தல் பேரவையின் தகவல் முறைமையில் (RAIS) மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | RAIS இல் அதிகாரத் தகவலைப் புதுப்பித்துப் பராமரித்தல் | 100% |
| 7 | நிகழ்நிலை உரிமம் மற்றும் ஒப்புதல் முறையை அறிமுகப்படுத்துதல் | செயல்படுத்துதல் | 90% |
| 8 | IAEA வுஊ திட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் பயிற்சிப் பகுதிகள் மூலம் விஞ்ஞான மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் | வேலைப் பயிற்சி | 100% |
| 9 | ஆர்வமுள்ள தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தகவலுக்காக அதிகாரப்பூர்வ வலைதளத்தில் உரிமத் தகவல் மற்றும் சேவைகளை வெளியிடுதல் | அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் உரிமத் தகவல் மற்றும் சேவைகளைப் புதுப்பித்துப் பேணுதல் | 100% |

## 4. நடைபெற்றுவருகின்ற இருதரப்பு நிகழ்ச்சித்திட்டம்

(அ) நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற உயர் வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காக, அமெரிக்க எரிசக்தித் திணைக்களத்தின் (USDOE) உலகளாவிய பொருள் பாதுகாப்பு (GMS) நிபகழ்ச்சித்திட்டத்தில் பேரவை ஈடுபட்டுள்ளது. மேலும், GMS திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன், இந்த மூலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதிக கதிரியக்க மூலங்களைப் பயன்படுத்தும் வசதிகளில் இயற்பியல் பாதுகாப்பு அமைப்புகளை நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் பேரவை ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இணைந்து செயல்படுகிறது. அதிக வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்கள் பயன்படுத்தப்படும் 12 வசதிகளில் இயற்பியல் பாதுகாப்பு அமைப்புகளைப் பராமரிப்பதற்கும், 12 உயர் செயல்பாட்டு கதிரியக்க மூல தளங்களில் உள்ள அனைத்து பாதுகாப்பு அமைப்புகளையும் கட்டுகுருந்தை இல் உள்ள STF பயிற்சி கல்லூரியில் அமைந்துள்ள மத்திய கண்காணிப்பு நிலையத்துடன் இணைப்பதற்கும் ருளுனுழுநு ஒரு பராமரிப்பு ஒப்பந்தத்தை அங்கீகரித்தது.

(ஆ)"அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலை வலுப்படுத்துதல்" எனும் சர்வதேச அணுசக்தி முகமைத்துவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தில் பேரவை பங்கேற்கிறது.

(இ) விஞ்ஞான ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அவசரகால பதிலளிப்பதற்கும் எதிர்கொள்வதற்குத் தேவையான கருவிகளைப் பெறுவதற்கும், அதற்குத் தேவையான அவசரகால தயார்நிலை மற்றும் பதிலளித்தல் ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நிபுணர் பணிகளை மேற்கொள்வதற்கும் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

## 5. 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

**அட்டவணை 5.4**
**ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்**

| நிகழ்ச்சித்திட்டங்கள் | | 2026 இல் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் |
|---|---|---|
| 1. பிரமாணங்கள், ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரித்தல் | 1.1. | கதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிகளுக்கான அளவுகோல்கள் குறித்த விதிக்கான ஒப்புதல்களை சட்ட வரைவாளர் திணைக்களத்திடமிருந்து பெறுதல் மற்றும் சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்த்து அரச வர்த்தமானியில் வெளியிடுதல். |
| | 1.2. | கதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிகளுக்கான அளவுகோல்கள் குறித்த விதிகளுக்கான அங்கீகாரங்களை சட்ட வரைவாளர் திணைக்களத்திடமிருந்து பெற்று, சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்த்தல். |
| | 1.3. | அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்களால் ஆய்வு நடைமுறையை செயல்படுத்துதல் |
| | 1.4. | அமைச்சரவை ஒப்புதல் பெற்ற பிறகு கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் குறித்த தேசியக் கொள்கையின் தேவையை செயல்படுத்துதல். |
| | 1.5. | 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் எண் இலங்கை அணுசக்திச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவைகளின்படி சர்வதேச வழிகாட்டுதல்களின்படி கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள், அவசரகால விதி மற்றும் அமலாக்க நடைமுறை குறித்த விதியைத் தயாரித்தல் |

| நிகழ்ச்சித்திட்டங்கள் | 2026 இல் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் |
|---|---|
| 2. கதிர்வீச்சு மூலங்கள் மற்றும் கதிர்வீச்சு வசதிகளுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல் | 2.1. வழங்க திட்டமிட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை (புதிய மற்றும் புதுப்பித்தல்) - 560<br>2.2. நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஆய்வுகளின் எண்ணிக்கை - 500 |
| 3. கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த தேசிய பயிற்சி பாடநெறி | 3.1.மருத்துவ மற்றும் தொழில்துறை துறைகளில் உரிமம் பெற்ற வசதிகளின் ஆபரேட்டர்கள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகளுக்கான தேசிய பயிற்சி படிப்புகளை நடத்துதல் (கதிர்வீச்சு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இயந்திரங்களின் ஆபரேட்டர்கள்)<br>3.2.தேசிய அணுசக்தி அல்லது கதிரியக்க அவசர முகாமைத்துவ திட்டத்தின் தேவைகளின்படி நியமிக்கப்பட்ட எதிர்கொள்ளல் குழுக்கள் மற்றும் குழுக்களுக்கான பயிற்சிகளை நடத்துதல் |
| 4. ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் | 4.1 கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு கருவிகளின் இறக்குமதி.்.ஏற்றுமதிக்கான ஒப்புதல்களை வழங்குதல்.<br>வழங்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல்களின் எண்ணிக்கை - 480<br>4.2 உணவு பரிசோதனைக்கான சான்றிதழ்களை வழங்குதல்<br>பரிசோதிக்கப்பட உள்ள மாதிரிகளின் எண்ணிக்கை - 4000<br>4.3 கதிர்வீச்சு வசதி திட்டங்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல்.<br>வழங்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல்களின் எண்ணிக்கை - 80 |
| 5. ஆன்லைன் உரிமம் வழங்குதல் மற்றும் ஒப்புதல் அமைப்பு | தேர்ந்தெடுக்கப்பட்ட வசதிகள் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒப்புதல்களுக்கான உரிமத்திற்காக ஆன்லைன் உரிமம் மற்றும் ஒப்புதல் அமைப்பை நிறுவுதல் மற்றும் அதைப் பயன்படுத்துதல். |
| 6. தரவுத்தளம் மற்றும் மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் | 6.1. உரிமதாரர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல், ஆய்வுகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள்.<br>6.2. தேசிய கதிர்வீச்சு மூலப் பதிவேட்டைப் பராமரித்தல் |
| 7. உரிமம் பெற்ற வசதிகளின் தகவல்களை இணையத்தில் வெளியிடுதல் | சேவைகளைப் பெறுவதற்குப் பொருத்தமான இடங்களை அடையாளம் காண, பொதுத் தகவலுக்காக பேரவையின் வலைதளத்தில் உள்ள அனைத்து உரிமம் பெற்ற வசதிகள் பற்றிய புதுப்பித்த தகவல்கள். |
| 8. அதிக செயல்பாட்டு கதிரியக்கப் பொருட்களின் போக்குவரத்தை அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் | கோரிக்கையின் பேரில் அதிக செயல்பாட்டு கதிரியக்கப் பொருட்களை கொண்டு செல்வதற்கான ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்தை மேற்பார்வை செய்தல். |

- **IAEA இன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு (TC) செயற்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துதல்**

IAEA இன் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம் SRL9013 "அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலளிப்பை வலுப்படுத்துதல்" இன் கீழ் 2022-2023 திட்ட சுழற்சிக்காக நடத்தப்பட்டது. திட்ட சுழற்சியின் போது சில செயல்பாடுகளை முடிக்க முடியாததால், 2026 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் மூலம் பின்வரும் விளைவுகள் நீட்டிக்கப்படும்.

அ.பேரவையிலிருந்து பல அதிகாரிகள், முதலில் பதிலளிக்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு, விஞ்ஞான வருகைகள் மூலம் பயிற்சி அளித்தல்

ஆ. அவசரகால பயிற்சிகளை நடத்துவதற்கும் உண்மையான அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கும் தேவையான உபகரணங்களைப் பெறுதல். அளவிடும் உபகரணங்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் மாசு நீக்கும் உபகரணங்கள் இந்த திட்டத்தின் மூலம் பெறப்படும்.

இ.புதிய ஆரம்ப எச்சரிக்கை கண்டறிதல் அமைப்பை நிறுவுதல். இந்த அமைப்பு சர்வதேச கதிர்வீச்சு கண்காணிப்பு தகவல் அமைப்பு (IRMIS) தரவு பகிர்வு தளத்துடன் இணக்கமாக இருப்பதுடன் அணுசக்தி பேரழிவின் போது முன்கூட்டியே எச்சரிக்கையைப் பெற உதவும்.

# அத்தியாயம் 06

# இலங்கை அணு சக்தி அதிகார சபை

## 1. அறிமுகம்

இலங்கை அணுசக்தி சபை (SLAEB) மின்வலு சக்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற அரசாங்கத்தின் முதன்மையான அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைப்பாகும். SLAEB இன் தொழிற்பாடு, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க அணுசக்திச் சட்டத்தால் உரித்தளிக்கப்பட்ட அதிகார ஆணைகளிலிருந்து தோன்றுகின்றது - தேசிய அபிவிருத்தி நோக்கங்களின் நிமித்தம் அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் இதன் முக்கிய பணியாகும். SLAEB உரிய சேவைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R & D) பணிகள் என்பவற்றின் மூலம் அணு தொழில்நுட்பத்தின் அமைதியான பயன்பாடுகளை ஊக்குவிப்பதோடு அதனை மேம்படுத்தியும் வருகின்றது. மேலும் பாதுகாப்பு, பக்குவம் மற்றும் தரம் என்பவற்றை உறுதிசெய்யும் அதே வேளையில் ஒழுங்குறுத்துகை சார்ந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளையும் வழங்குகின்றது. இலங்கையில் மருத்துவம், விவசாயம், கைத்தொழில், மின்வலு சக்தி மற்றும் சுற்றாடல் போன்ற துறைகளின் அபிவிருத்திற்குக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்யக்கூடிய பல துறைகளில் அணு தொழில்நுட்பம் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களின் நிமித்தம் அரசாங்கத்திடமிருந்து திரட்டு நிதியத்தின் மூலமாக IAEA இற்கு நிதி கிடைக்கின்றது. மேலும், அதன் தொழில்நுட்ப கூட்டுறவு (TC) கருத்திட்டங்கள், பிராந்திய கூட்டுறவு ஒப்பந்த (RCA) கருத்திட்டங்கள், ஒருங்கிணைப்பு ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் (CRPs) என்பவற்றின் மூலம் திறன்களையும் ஆற்றலையும் வளர்ப்பதற்கான தொழில்நுட்ப உதவி முக்கியமாக சர்வதேச அணுசக்தி முகவர்நிலையத்திடமிருந்து (IAEA) கிடைக்கின்றது. மேலும் நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திற்காக அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் நன்மைகளை பெறுவதற்கு நாட்டில் உள்ள பொருத்தமான அக்கறையுடைய தரப்பு அமைப்புகளுக்கு / நிறுவனங்களுக்கு SLAEB உதவி செய்துள்ளது.

## 2. அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

### 2.1. உயிரியல் விஞ்ஞான பிரிவின் அணு பகுப்பாய்வு சோதனை (NAT) சேவை

உயிரியல் விஞ்ஞான பிரிவின் அணு பகுப்பாய்வு சோதனை (NAT) சேவை, பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதிலும், அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூட சோதனைகளின் மூலம் கைத்தொழிலுக்கு உதவுவதிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது. 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை, காமா ஸ்பெக்ட்ரோஸ்கோபி ஆய்வுகூடம், இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகை சபையினது (SLAERC) ஒழுங்குவிதிகள் அனுசரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, இறக்குமதி செய்யப்பட்ட பால் பால்மாவு 3,266 மாதிரிகள், ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை மற்றும் பிற பொருட்களின் 84 மாதிரிகள் மற்றும் 160 மாதிரிகள் என்பவற்றின் விரிவான கதிரியக்க அளவீடுகளை பகுப்பாய்வு செய்துள்ளது. மேலும் XRF மூலம் தனிம கலவைக்கான 8 மாதிரிகளும், மொத்த அல்பா/ பீட்டா தொழிற்பாட்டிற்கான 18 கழிவு நீர் மாதிரிகளும், IRMS, ATR-FTIR பகுப்பாய்வைப் பயன்படுத்தி நிலையான ஐசோடோப்புகளுக்கான 5 சேவை மாதிரிகளும் மற்றும் இரசாயன பண்புக்கான IRMS மற்றும் ATR-FTIR மூலமான 30 R-D மாதிரிகளும் மேற்கொள்ளப்பட்ட அந்தப்

பகுப்பாய்வு சேவைகளில் அடங்குகின்றன.

சர்வதேச தரநியமங்களை நிலைப்படுத்துவதன் மூலம் NAT தொழில்நுட்பத்தின் துல்லியமும் மற்றும் முடிவுகளின் நம்பகத்தன்மையும் உறுதியாகுகின்றன. மேலும் ஒழுங்குறுத்துகை மற்றும் வணிகசார் சோதனை சேவைகள் என்பவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க வருமானமும் ஈட்டப்படுகின்றது.

**அட்டவணை 6.1**
**ஆகஸ்ட் 2025 வரையான மொத்த வருமானம் – ரூ. 52.9 மில்லியன்**

| சேவை | வருமானம் (ரூபா) |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவு, அதனுடன் இணைந்த பொருட்கள் மற்றும் தேயிலை சோதனை - (NaI[Tl]) பகுப்பாய்வு | 49,535,600.00 |
| விரிவான கதிரியக்க அளவீடுகள் - HPGe பகுப்பாய்வு | 2,856,000.00 |
| EDXRF மற்றும் PXRF (எடுத்துச்செல்லக்கூடிய XRF) மூல எக்ஸ்-கதிர் ஒளிர்வு (XRF) பகுப்பாய்வு | 330,000.00 |
| தொழிற்சாலை கழிவு நீர், நீர் மற்றும் பிற திண்ம மாதிரிகளில் மொத்த அல்பா/-பீட்டா அளவீடுகள் | 119,000.00 |
| போரியர்-டிரான்ஸ்/பார்ம் அகச்சிவப்பு நிறமாலை (FTIR) பகுப்பாய்வு | 60,000.00 |
| திருத்தங்கள் | 1,635.00 |
| மொத்த வருமானம் | 52,902,235.00 |

## 2.2 இலங்கை காமா நிலையத்தின் (SLGC) கதிர்வீச்சு சேவைகள்

பியகம ஏற்றுமதிகள் பதனிடும் வலயத்தில் உள்ள இலங்கை காமா நிலையம் (SLGC), நாட்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரேயொரு கதிர்வீச்சு வசதியாக விளங்குகின்றது. 2014 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இந்த இகாநி, பல்வேறு தேசிய கைத்தொழில்களுக்கு உதவும் பல்நோக்கு காமா கதிர்வீச்சு சேவைகளை வழங்குகின்றது. இலங்கை முழுவதிலும் காணப்படும் அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் பயன்படுத்தப்படும் அறுவை சிகிச்சை கையுறைகளை தொற்றுநீக்குவதே அதன் முதன்மை செயற்பாடாகும். மேலும், இகாநி பிற மருத்துவ சாதனங்கள், உணவுப் பொருட்கள் (மசாலா, மூலிகைப் பொருட்கள் அடங்கலாக), பொதியிடும் பொருட்கள், செயலூக்கப்படுத்திய கார்பன் மற்றும் பல்வேறு கைத்தொழில் மூலப்பொருட்கள் என்பவற்றின் நிமித்தம் கதிர்வீச்சுசார்ந்த சேவைகளை வழங்குகின்றது. எனினும் அறுவை சிகிச்சை கையுறைகளுடன் ஒப்பிடும் போது அது சிறிய அளவில் அத்தகைய சேவையை வழங்குகின்றது.

2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் இறுதி வரை, கதிரியக்க சேவைகள் மூலம் SLGC மொத்தம் ரூ.40.31 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது.

**அட்டவணை 6.2**
**2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் இறுதி வரை, கதிரியக்க சேவைகள் மூலம் (SLGC) பெற்ற வருமானம்**

| வருமான மூலம் | ஈட்டிய வருமானம் |
|---|---|
| லாலன் இறப்பரின் மூலம் ஈட்டிய வருமானம் (அறுவை சிகிச்சை கையுறை கதிர்வீச்சு) | Rs. 31,377,379.95 |
| பிற மருத்துவப் பொருட்கள் கதிர்வீச்சு (காஸ் ஸ்வாப்ஸ், பருத்தி பந்துகள், கண் பட்டைகள், பாரஃபின் காஸ், அறுவை சிகிச்சை உடைகள்) | Rs. 1,472,517.82 |
| வணிக கன்வேயர் (செயலூக்கம்பெற்ற கார்பன்) மூலம் பிற தயாரிப்புகளின் கதிர்வீச்சு | Rs. 5,245,769.92 |
| உணவு கதிர்வீச்சு மூலம் ஈட்டிய வருமானம் (இயற்கை மூலிகைகள்) | Rs. 1,183,252.40 |
| மாதிரி கன்வேயர் மூலம் ஈட்டிய வருமானம் | Rs. 373,746.25 |
| நிலையான கதிர்வீச்சு மூலம் ஈட்டிய வருமானம் | Rs. 466,687.24 |
| நுண்ணுயிரியல் சோதனை மூலம் ஈட்டிய வருமானம் | Rs. 187,782.05 |
| **2025 ஆம் ஆண்டிற்கு ஈட்டிய மொத்த வருமானம் (2025.08.31 ஆம் திகதிற்கு)** | **Rs. 40,307,135.63** |

**அறிக்கையிடும் காலப்பகுதியில் அடைந்து முக்கிய சாதனைகள்:**

- SRL 1011 கருத்திட்டத்தின் கீழ் மூன்று IAEA நிபுணர்களின் பங்கேற்புடன் வாடிக்கையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் சர்வதேச கூட்டுறவையும் மற்றும் தொழில்நுட்ப அறிவு பரிமாற்றத்தையும் மேம்படுத்துவதாக அமைந்தமை
- தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு SLGC இன் முக்கியத்துவத்தை நிரூபிக்கும் வகையில், உறைந்த கோழிக்கால் கதிர்வீச்சு கருத் திட்டம் தொடர்பான மூலோபாய இற்றைப்படுத்தல்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டமை. மேற்குறித்த மூலோபாய இற்றைப்படுத்தல்களையடுத்து, உணவுப் பாதுகாப்பு விடய அம்சங்களை மேம்படுத்தும் முகமாக உறைந்த கோழி கால்களை கதிர்வீச்சு செய்து ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியங்கள் பற்றி கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மேலும் ஏற்றுமதி சந்தைக்கு தயாரிப்புகளின் தடையற்ற விநியோகம் ஒரு சாத்தியமான வாடிக்கையாளரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
- நான்கு பக்க கதிர்வீச்சு முறையின் மூலம் சீரான மருந்தளவு விநியோக இலக்கை அடைவதில் கவனம் செலுத்தி, உறைந்த தயாரிப்பு கதிர்வீச்சு குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டமை
- செயற்பாட்டு பாதுகாப்பை மேம்படுத்தவும் வசதி செயல்திறனை மேம்படுத்தவும் மூல ரேக்கிற்கு அருகில் ஒரு டோஸ் விகித விநியோக ஆய்வு நிறைவுசெய்யப்பட்டமை
- உலர் மீன் ஏற்றுமதியாளர்கள், மருத்துவ சாதன உற்பத்தியாளர்கள், மூலிகை மற்றும் மசாலா உற்பத்தியாளர்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் ஆகிய தரப்புகளுடன் காத்திரமாக ஈடுபட்டு, வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல் வழங்கப்பட்டமை

மதிப்பாய்வு ஆண்டு காலப்பகுதியில் இகாநி இன் செயற்பாட்டு மற்றும் மூலோபாய அம்சங்களில் நிலையான முன்னேற்றம் பிரதிபலிக்கப்பட்டது. இந்த காமா நிலையம் அறுவை சிகிச்சை கையுறைகளின் தொற்றுநீக்கல் மூலமான வருமானத்திற்கு முக்கிய ஆதாரமாகத் தொடர்ந்து இருந்தாலும், செயலூக்கம்பெற்ற கார்பன், உணவு, மசாலாப் பொருட்கள், மூலிகை தயாரிப்பு ஏற்றுமதியாளர்களுடன் ஈடுபடுவதன் மூலம் அதன் சேவை இலாகாவை பல்வகைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை நிரூபித்துள்ளது. கதிர்வீச்சு உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்கின்றது. தோல் ஆயுளை அதிகரித்து ஏற்றுமதி போட்டித்தன்மையை ஆதரிக்கின்றது என்ற உலகளாவிய போக்குகளுடன் இது நன்கு ஒத்துப்போகின்றது.

மேலும் முன்சென்று, இகாநி பின்வருவனவற்றை பரிந்துரைக்கின்றது:
[1]

- ஏற்றுமதி தேவை அதிகரித்து வரும் உணவு மற்றும் மூலிகைத் துறைகளில், குறிப்பாக அவற்றின் வாடிக்கையாளர் தளத்தை பன்முகப்படுத்தும் முயற்சிகளை வலுப்படுத்தல்.
- உறைந்த உணவு கதிர்வீச்சுக்கான டோஸின் சீரான தன்மையை மேம்படுத்துவதற்காக கதிர்வீச்சு வசதியை மாற்றுவதற்கான சாத்தியம் பற்றி ஆய்வு செய்ய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் தொடர்ந்து முதலீடு செய்து, இல்லையெனில் மாற்றாக, தொழில்துறை தேவைக்கேற்ப மேலதிக வசதிக்கான ஒரு திட்டத்தை தயாரித்து அரசாங்கத்திடம் சமர்ப்பித்தல்.
- முக்கியமான மருத்துவப் பொருட்களுக்கான தேசிய தொற்றுநீக்கும் வசதியாக அதன் பங்கைப் பேணுகையில், வருவான வழிகளை விரிவுபடுத்த புதிய வணிக மாதிரிகள் மற்றும் கூட்டாண்மைகள் என்பன பற்றி ஆராய்தல்.

- இலங்கையில் காமா கதிர்வீச்சு சேவைகளின் சீரான செயற்பாட்டை உறுதிப்படுத்த நெருக்கமான நிறுவன உறவுகளை கட்டியெழுப்பும் முகமாக சுகாதார அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு திட்டமிடுதல். சுகாதாரத் துறைக்கான சேவைகளை விரிவுபடுத்துவதும், குறிப்பாக அறுவை சிகிச்சை துணிகள், அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் பிற மருத்துவப் பொருட்கள் என்பவற்றை தொற்றுநீக்குவதும், ஏற்றுமதி செய்யும் நோக்கில் கைத்தொழில் தயாரிப்புகளுக்கு தேவையான சேவைகளை விரிவுபடுத்துவதும் இந்தக் கலந்துரையாடல்களின் நோக்கமாகும்.

### 2.3 அழிவற்ற பரிசோதனைக்கான தேசிய நிலையம் (NCNDT)

நாட்டில் கைத்தொழில் துறைக்கு NCNDT பல்வேறு வகையான அழிவற்ற பரிசோதனை (NDT) சேவைகளை வழங்குகின்றது. உலோகத்தாலும், உலோகம் அல்லாதவற்றாலும் செய்யப்பட்ட பொருட்களினதும் மற்றும் நிர்மாணங்களினதும் குறைந்தபட்ச சேதத்தை பேணுவதும், அதன் மூலம் னேுவு மற்றும் பிற தொடர்புடைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாட்டில் அத்தகைய பொருட்களினதும் மற்றும் கட்டுமானங்களினதும் தர நியமத்தை மேம்படுத்துவதும் NCNDT இன் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ், நாட்டின் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய உலோகக் கூறுகள், பொருத்துக்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் சிவில் நிர்மாணம் என்பவற்றின் தரத்தை உறுதி செய்வதற்குத் தேவையான சேவைகள் அந்தத் துறைகளுக்கு வழங்கப்படுகின்றன.

களனியில் அமைந்துள்ள தேசிய அழிவற்ற பரிசோதனைக்கான நிலையம் (NCNDT), இலங்கையில் அழிவற்ற பரிசோதனை (NDT) துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக செயற்படுகின்றது. உயர்தர னேுவு ஆய்வு சேவைகளை வழங்குதல், சிறந்த NDT பயிற்சியை வழங்குதல், NDT ஒணியாளர் சான்றிதழை வழங்குதல் மற்றும் வெல்டர் செயல்திறன் தகுதி (WPQ) பரீட்சைகளை நடத்துதல் முதலிய அம்சங்கள் இதன் முதன்மை நோக்கங்களில் அடங்குகின்றன. இவை அனைத்தும் சர்வதேச தரநியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப் படுகின்றன.

**(i) NCNDT இன் பரிசோதனை குழு, பின்வரும் அழிவற்ற பரிசோதனை (NDT) முறைகளுக்கு ISO/IEC 17020,** ணங்க அங்கீகாரம் பெற்றுள்ளது:

- காந்தத் துகள் பரிசோதனை (MT)
- திரவ ஊடுருவல் பரிசோதனை (PT)
- மீயொலி பரிசோதனை (UT)
- கான்கிரீட்டு நிர்மாண பரிசோதனை (CST)
- கதிரியக்க பரிசோதனை - படச்சுருள் (RT-F)
- கட்புல பரிசோதனை (VT)

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில், NCNDT நாடு முழுவதும் பல்வேறு தளங்களில் 127 NDT ஆய்வுகளை வெற்றிகரமாக நடத்தி, ஆய்வு சேவைகளிலிருந்து மொத்தம் 29.3 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

**(ii) இலங்கையின் அழிவற்ற பரிசோதனைக்கான தேசிய சான்றிதழ் FO (NCBNDT)**

அதன் பரிசோதனை மற்றும் பயிற்சி சேவைகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக, NCNDT, லங்கையின் அழிவற்ற பரிசோதனைக்கான தேசிய சான்றிதழ் குழுவின் (NCBNDT) ņதாழிற்பாட்டையும் எளிதாக்குகின்றது. NCBNDT, NDT பணியாளர்களுக்கு நம்பகமான தகுதி மற்றும் சான்றிதழ் சேவைகளை வழங்குகின்றது. ISO/IEC 17024 மற்றும் ISO 9712 தரநியமங்களின் அண்மைகால பதிப்புகளை கண்டிப்பாக பின்பற்றி வாடிக்கையாளர் திருப்தியை

உறுதிசெய்கின்றது. இந்த உறுதிப்பாடு இலங்கையில் NDT துறையில் மிக உயர்ந்த அளவிலான திறனையும் மற்றும் தொழில்முறையையும் பேணுவதில் NCNDT இன் பங்களிப்பை சுட்டிக்காட்டுகின்றது.

2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில், காந்த துகள் பரிசோதனை (MT) மற்றும் மீயொலி பரிசோதனை (UT) ஆகிய துறைகளின் கீழ் மொத்தம் ஐந்து (05) ஆரம்ப சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், கதிரியக்க பரிசோதனை (RT), காந்த துகள் பரிசோதனை (MT) மற்றும் மீயொலி பரிசோதனை (UT) ஆகிய துறைகளில் மூன்று (03) மறுசான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதன்படி, இந்த காலப்பகுதியில் NDT பணியாளர் சான்றிதழிலிருந்து மொத்தம் வருவாய் ரூ. 0.1 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில், NCBNDT இன் அங்கீகரிக்கப்பட்ட தகுதி அமைப்பின் (AQB) கீழ், ISO 9712:2021 இன்படி, பின்வரும் முறையியல்களில் மொத்தம் மூன்று (03) அசல் தகுதி பரீட்சைகள் நடத்தப்பட்டன:

| NDT முறையியல் மற்றும் மட்டம் | பரீட்சாத்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| மீயொலி பரிசோதனை-மட்டம் 1 | 19 |
| திரவ ஊடுருவல் பரிசோதனை-மட்டம் 2 | 11 |
| காந்தத் துகள் பரிசோதனை-மட்டம் 2 | 12 |
| மாதிரி கன்வேயர் மூலம் உருவாக்கப்பட்ட வருமானம் ரூ. 373,746.25 | |

மேலும், பின்வரும் பிரிவுகளில் மூன்று (03) **முதல்–மீள்பரீட்சைகள்** நடத்தப்பட்டன:
காந்தத் துகள் பரிசோதனை - மட்டம் 2
மீயொலி பரிசோதனை - மடம் 1
காந்தத் துகள் பரிசோதனை - மட்டம் 3
மேலும், காந்தத் துகள் பரிசோதனை - **நிலை 2 இற்கு ஒரு (01)** இரண்டாவது மீள்-பரீட்சை நடத்தப்பட்டது.
மீள்-பரீட்சைகளிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் **ரூ. 0.1 மில்லியன்.**

(iii) வெல்டர் தகுதி வசதி (WQF):

இலங்கையில் வெல்டிங் தொழிலாளர்களை வலுப்படுத்தவும் தொழில்முறை தரங்களை மேம்படுத்தவும் வெல்டிங் தொழில்நுட்ப வல்லுநர்கள், வெல்டிங் மேற்பார்வையாளர்கள் மற்றும் வெல்டிங் ஆய்வாளர்கள் அடங்கலாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட வெல்டிங் நிபுணர்களை உருவாக்கும் நோக்கில் வெல்டர் தகுதி வசதி (WQF) தாபிக்கப் பட்டது. இலங்கை வெல்டிங் தொழிலாளர்களுக்கு வெல்டர் செயல்திறன் தகுதி (WPQ) சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்தி, WQF இன் வணிக நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அதன் தொடக்கத்திலிருந்து, இஅசச இன் கீழ் இயங்கு NCNDT இல் உள்ள WQF, சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப WPQ இற்கான முன்னணி அரச துறை இடைவெளி நிரப்பும் மற்றும் பரீட்சை நடத்தும் ஒரு நிலையமாக தொழிற்பட்டு வருகின்றது.

**2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை:**

1. அமெரிக்கன் சொசைட்டி ஆ/ப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் (ASME) பாய்லர் மற்றும் பிரஷர் வெசல் குறியீடு, பிரிவு IX தகைமைகள்
   - தகுதி பெற்ற மொத்த வெல்டர்கள்: 92
   - பிளேட் 3G /ப்ளக்ஸ் கோர்டு ஆர்க் வெல்டிங் (மட்பாண்ட ஆதரவுடன் ஸ்ப்ரே டிரான/பர்): 87 வெல்டர்கள்
   - குழாய் 6G vரிவாயு டங்ஸ்டன் ஆர்க் வெல்டிங் (GTAW): 4 வெல்டர்கள்
   - பைப் 6G \ ஷீல்டட் மெட்டல் ஆர்க் வெல்டிங் (SMAW): 1 வெல்டர்

2. தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகள் (NVQ)
   - NVQ மட்டம் 4 சான்றிதழ் பெற்ற வெல்டர்கள்: 23
   - தேசிய திறன் தரநியம (NCS) இன் கீழ் சான்றுபெற்ற: D28S002 - வெல்டர்
   - மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஒத்துழைப்பில் (TVEC)

வெல்டர் தகுதி வசதி (WQF) மூலம் மொத்த வருமானம்: ரூ. 5.6 மில்லியன்

எதிர்காலத்தை நோக்கி, WQF அதன் சான்றிதழ் சேவைகளை ISO சான்றிதழ் திட்டத்துடன் இணைத்து விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் இலங்கை வெல்டர்களின் உலகளாவிய அங்கீகாரத்தை மேலும் மேம்படுத்துகின்றது.

**(iv) NCNDT இன் பயிற்சி அலகு:**

2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை, NCNDT இன் பயிற்சி அலகு மொத்தம் 42 பங்கேற்பாளர்களுடன் மூன்று NDT பயிற்சி பாடநெறிகளை வெற்றிகரமாக நடத்தியது. மேலும் 18 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்ட ஒரு NDT வேலையரங்கையும் ஏற்பாடு செய்திருந்தது.

| பயிற்சிப் பாடநெறி / வேலையரங்கு | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| மீயொலி பரிசோதனை-மட்டட் 1 | 19 |
| ஆசிய விமானப் போக்குவரத்து நிலைய மாணவர்களுக்கான னேுவு வேலையரங்கு | 19 |
| திரவ ஊடுருவல் பரிசோதனை-மட்டம் 2 | 18 |
| காந்தத் துகள் சோதனை-மட்டம் 2 | 11 |
| காந்தத் துகள் சோதனை-மட்டம் 2 | 12 |

NCNDT பயிற்சி அலகின் மொத்த வருமானம் ரூ. 3.3 மில்லியன்.

மேற்குறித்த NDT சேவைகளுக்கு மேலதிகமாக, இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகை பேரவையின (SLAERC) வாடகையிலிருந்து ரூ. 3.0 மில்லியன் வருவாய் கிடைத்தது.

**அதன்படி, NCNDT இன் அனைத்து செயற்பாடுகளிலிருந்தும் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ. 41.4 மில்லியனாக இருந்தது.**

## 2.4 கதிர்வீச்சு பாதுகாப்பு, பக்குவம் மற்றும் அணுசக்தி பாதுகாப்பு சேவைகள்

இந்த சேவை, பொதுமக்களையும், கதிர்வீச்சில் ஈடுபடும் தொழிலாளர்களையும் மற்றும் சுற்றாடலையும் அயனியாக்கல் கதிர்வீச்சுக்கு தேவையற்றவாற ஆளாகி பாதிக்கப்படும் நிலையிலிருந்து பாதுகாப்பதற்கான ஒழுங்குறுத்துகைசார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய நாட்டிற்கு கதிர்வீச்சு பாதுகாப்பையும் மற்றும் அணுசக்தி பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான உதவியையும் வழங்குகின்றது. சுகாதாரம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளில் கதிர்வீச்சு தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான தனிப்பட்ட கண்காணிப்பு சேவைகள் மற்றும் இரண்டாம் நிலை தரநியம டோசிமெட்ரி ஆய்வகத்தில் கதிர்வீச்சு அளவிடும் கருவிகளுக்கான அளவுத்திருத்த சேவைகள் ஆகியவை நாட்டிற்கு கட்டாய சேவைகளாக காணப்படுகின்றன. நாட்டில் கதிரியக்க மூலங்களின் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் பக்குவம் ஆகியவற்றை பொறுத்தவரை, கதிர்வீச்சு தொழிலாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் (முப்படைகள் மற்றும் பொலிஸ்) போன்றவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. அதோடு மேலும், பயன்படுத்தப்படாத கதிரியக்க மூலங்களுக்கான நாட்டின் ஒரே அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியமான மத்திய பயன்படுத்தப்படாத கதிரியக்க மூல சேமிப்பகத்தையும் (CDRSS) பராமரித்து வருகின்றது.

**2025 ஆகஸ்ட் வரையான மொத்த வருமானம் – ரூ.18.87 மில்லியன்**

| வருமான மூலம் | ஆகஸ்ட் வரையான மொத்தம் |
|---|---|
| TLD சேவைகள் | 11,782,302 |
| அளவுத்திருத்த சேவைகள் | 2,870,134 |
| கதிர்வீச்சு கண்காணிப்பு சேவைகள் | 699,176 |
| பணிநிலைய கண்காணிப்பு | 40,978 |

| | |
|---|---|
| கதிர்வீச்சு பாதுகாப்பு வுஊ | 583,787 |
| கருவிகள் பழுதுபார்ப்பு | 231,000 |
| அணுசக்தி பாதுகாப்பு - வுஊ | 2,230,422 |
| பயன்படுத்தப்படாத கதிரியக்க மூல முகாமை | 300,000 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 137,797 |
| மொத்தம் | **18,875,595** |

### 2.5 சர்வதேச கூட்டுறவு பிரிவு – சர்வதேச அணுசக்தி முகவர்நிலையம் மற்றும் ஏனைய பிற தொடர்புடைய சர்வதேச அமைப்புகள் மற்றும் அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப ஒத்துழைப்பு

சர்வதேச அணுசக்தி முகவர்நிலையத்தின் (IAEA) தேசிய தொடர்பாடல் அலுவலகமாக செயற்படும் இலங்கை அணுசக்தி சபையின் (SLAEB) சர்வதேச கூட்டுறவுப் பிரிவு (ICD), நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்குகின்ற அணு விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கான அதன் தொழில்நுட்ப கூட்டுறவுக்கான (TC) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்காக ஐயுநுயு உடனான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு முக்கிய பொறுப்பை வகிக்கின்றது. மேலும், இது இருதரப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் IAEA உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுகின்றது.

சர்வதேச அணுசக்தி முகவர்நிலையத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும், அதன் விதிமுறைகளுக்கு இணங்குவதற்கும், நாட்டில் அணுசக்தி தொழில்நுட்பம் தொடர்பான பயன்பாடுகளை மேம்படுத்துவதில் IAEA இலிருந்து கிடைக்கும் கணிசமான உதவியைப் பெறுவதற்கும், இலங்கையின் சார்பாக சர்வதேச அணுசக்தி முகவர்நிலையத்திற்கு தேசிய கேந்திர அமைப்பு என்ற ரீதியில் இஅசச இன் பங்கை இந்தப் பிரிவு திறம்பட நிறைவேற்றி வருகின்றது.

அணு தொழில்நுட்பத் துறையில் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்காக இந்தப் பிரிவு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பிற சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைகின்றது.

- கொரிய ஆசிய-பசிபிக் பிராந்திய கூட்டுறவு ஒப்பந்த பிராந்திய அலுவலகம் (RCARO)
- ஜப்பான் உதவி கிடைக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் - கல்வி அமைச்சு, விளையாட்டு, கலாச்சாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (MEXT), ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (JAICA) - /புகுய் சர்வதேச மனித வளங்கள் அபிவிருத்தி நிலையம் (FuIHRD)
- கொரிய சர்வதேச கூட்டுறவு நிறுவனம் (KOICA), கொரிய அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனம் (KAERI), கொரிய அபிவிருத்தி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (KAIST) மற்றும் கொரிய அணுசக்தி பாதுகாப்பு நிறுவனம் (KINS) போன்ற கொரிய அரசாங்க உதவி நிகழ்ச்சித்திட்டங்கள்
- அப்துஸ் சலாம் சர்வதேச கோட்பாட்டு இயற்பியல் நிலையம் (ICTP), ட்ரிஸ்டே, இத்தாலி
- ரஷ்ய அரசுக்குச் சொந்தமான அணுசக்தி கூட்டுறவு (ROSATOM)

IAEA அதன் உறுப்பு நாடுகளுக்கு தொழில்நுட்ப கூட்டுறவு (TC) நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், அணுசக்தித் துறையில் மனித வளங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூட்டுறவுகள், விஞ்ஞான ரீதியிலான விஜயங்கள், பயிற்சி, நிபுணர் பணிகள் போன்ற வடிவங்களில் தொழில்நுட்ப உதவியை வழங்குகின்றது. நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் IAEA TC மூலம் நாட்டிற்கு அதிகபட்ச நன்மைகள் ஆகியவற்றை பெறுவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் திட்டமிடல், வடிவமைப்பு, செயற்படுத்தல் மற்றும்

மதிப்பீடு என்பன போன்ற பணிகள் சர்வதேச கூட்டுறவு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த RCA கருத்திட்டங்களின் மூலம் இலங்கை விஞ்ஞானிகள்.்். பொறியாளர்கள்/ தொழில்நுட்ப பணியாளர்கள் ஆகியோருக்கு IAEA ஏற்பாடு செய்திருந்த பல்வேறு வகையான கூட்டங்கள், பயிற்சி, வேலையரங்கு போன்றவற்றில் இணையத்தின் மூலம் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தன.

மேலும், இரண்டு (02) பெல்லோஷிப்கள், இரண்டு (02) விஞ்ஞான ரீதியான வருகைகள், நாற்பத்தைந்து (45) பயிற்சி வகுப்புகள், இருபத்தெட்டு (28) பட்டறைகள், இருபத்தி மூன்று (23) ஒருங்கிணைப்பு.்். தொழில்நுட்பக் கூட்டங்கள், நான்கு (04) மாநாடுகள், இரண்டு (02) நிபுணர் (வள நபர்கள்), இரண்டு (02) ஆய்வுகள், ஒரு (01) ஆயம் என்பன தொடர்புடைய தேசிய நிறுவனங்களின் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் வெளிநாடுகளில் பங்கேற்க வரவேற்கப்பட்டனர். மேலும் ஐயுநுயு இன் பிராந்திய மற்றும் பிராந்திய தொழில்நுட்ப கூட்டுறவு கருத் திட்டங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய நிகழ்வுகளில் பங்கேற்க எமது விஞ்ஞானிகளுக்கும் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. மேலும், 2025 ஆம் ஆண்டில் ஐயுநுயு இன் உதவியுடன் பத்து (10) நிபுணர் பணிகள் மற்றும் 04 மறுஆய்வு பணிகள் (பின்தொடர் நடவடிக்கை தாக்கம், ORPAS பின்தொடர் நடவடிக்கை, INIR பின்தொடர் நடவடிக்கை SEED பின்தொடர் நடவடிக்கை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவை தவிர, IAEA தொழில்நுட்ப கூட்டுறவின் கீழ் பேராதனை பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞான துறையில் 03 பெல்லோஷிப்களை நாம் ஏற்பாடு செய்திருந்தோம்.

இதுதவிர, சர்வதேச கூட்டுறவு பிரிவு (ICD), IAEA உடன் ஒருங்கிணைந்து, இலங்கையில் **04 பின்தொடர் நடவடிக்கை மீளாய்வு செயற்பணிகளை** நடத்த உதவியது. இலங்கை சூழலில் அணு விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் அமைதியான பயன்பாடுகளை மேம்படுத்த, அந்த மீளாய்வு செயற்பணிகளில் கலந்து கொண்ட சகல ஐயுநுயு.்.வெளி நிபுணர்களுக்கும் சேவை ஏற்பாடுகள் மற்றும் இலவச விசா (தரையிறங்கும் உடன்பாட்டு கடிதங்களாக) ஆகியவற்றை ICD ஒருங்கிணைத்தது. **இலங்கையில் நிகழ்ந்த 04 பின்தொடர் நடவடிக்கை மீளாய்வு செயற்பணிகள் பின்வருமாறு:**

- IMPACT 3 மீளாய்வு செயற்பணி- சுகாதார பிரிவு, IAEA, உலக சுகாதார நிறுவகம் (WHO) மற்றும் சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவகம் (IARC) ஆகியன இணைந்து, அமெரிக்காவில் அமைந்துள்ள புனித ஜூட் சிறுவர் ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் ஆனு அண்டர்சன் புற்றுநோய் நிலையம் ஆகியவற்றின் தொழில்நுட்ப ஈடுபாட்டுடன், 2025 மார்ச் 23 - 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான மீளாய்வு செயற்பணி (சுகாதார துறை) மேற்கொள்ளப்பட்டது.

- **IAEA தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ழுசுீயுளு) செயற்பணி**

  இலங்கைக்கான (கதிர்வீச்சு பாதுகாப்பு பகுதி) 2019 ஆம் ஆண்டில் அதன் கதிர்வீச்சு பாதுகாப்பு முறைமைகளை மீளாய்வு செய்வதற்காக ஐயுநுயு தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ORPAS) பணியில் பங்கேற்றது. மேலும் 2025 ஜனவரி 27-30 திகதிகளில் நடந்த ஆயத்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டில் ஒரு பின்தொடர் நடவடிக்கை செயற்பணியை முறையாகக் கோரியுள்ளது.

- **பின்தொடர் மற்றும் வெளிப்புற நிகழ்வு வடிவமைப்பு (SEED FU) மீளாய்வு சேவை செயற்பணி– யூன் 29 – யூலை 04 (அணுசக்திப் பிரிவு)**

  IAEA அறிக்கையின்படி, இலங்கை கடந்த ஆண்டில் மேலும் பிராந்திய

மற்றும் ஸ்தலம் சார்ந்த தரவுகளைச் சேகரிப்பதில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆரம்ப இருபத்தேழு (27) சாத்தியமான ஸ்தலங்கள் நான்கு (04) பிராந்தியங்களில் ஐந்து (05) வேட்பாளர் ஸ்தலங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. எதிர்கால அணுசக்தி நிறுவலுக்கு விருப்பமான ஸ்தலத்தை அடைய ஐந்து ஸ்தலங்களின் ஒப்பீடு மற்றும் தரவரிசையை நிறைவு செய்வதற்கு முன்னர், மேலும் ஸ்தலம் சார்ந்த தரவுகள் (உ௫ம்: புவியியல் மற்றும் நீர்வளவியல் தரவு, வரலாற்று பூகம்பங்கள் என்பன பற்றிய தகவல்கள், ஸ்தலம் சார்ந்த புவி பௌதீகவியல் தரவு, வானிலை தரவு, சனத்தொகை மற்றும் நில பயன்பாட்டுத் தரவு, மனிதன் துண்டாடிய நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் மிக முக்கியமாக, கடலோர வெள்ளத் தரவு) சேகரிக்கப்படவுள்ளன.

- (IAEA), கட்டம்-ஐ, இலங்கையில் (அணு சக்தித் துறை) நடைபெற்று வரும் அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த அணுசக்தி உட்கட்டமைப்பு மீளாய்வு (INIR - FU) செயற்பணியின் பின்தொடர் நடவடிக்கை

  பின்தொடர் நடவடிக்கை கட்டம் 1-INIR செயற்பணி 2025 ஜூலை 14 முதல் 18 ஆம் திகதி வரை இலங்கையின் கொழும்பு நகரத்தில் நடத்தப்பட்டது. இந்த INIR குழுவிற்கு IAEA அணுசக்தி உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவின் (NIDS) திரு ஜான் ஹடாட் தலைமை தாங்கினார். IAEA அணுசக்தித் துறையை சேர்ந்த திருமதி /பேன்னி டோனோஸ் மற்றும் IAEA ஆல் பணியமர்த்தப்பட்ட துருக்கியையும் மற்றும் பல்கேரியாவையும் சேர்ந்த (02) சர்வதேச நிபுணர்கள் இந்த குழுவில் அடங்குகின்றனர். இலங்கையின் சூழலில் அணுசக்தி சார்ந்த கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள 15 அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 57 பங்கேற்பாளர்களுடன் கூட்டுறவு மற்றும் திறந்த சூழ்நிலையில நான்கு (04) நாட்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டன.

## 2.6 ஊக்குவிப்புப் பிரிவு

விருந்தினர் சொற்பொழிவுகள், கள விஜயங்கள், வேலையரங்குகள், கூட்டங்கள் மற்றும் தொலைக்காட்சி கலந்துரையாடல்கள் அடங்கலாக மொத்தம் 16 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இந்த முயற்சிகள் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரி மாணவர்கள், கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் வணிக சமூக உறுப்பினர்கள் அடங்கலாக 6,630 அக்கறையுடைய தரப்புகளை சென்றடைந்தன. இவை உரிய பிரிவுகளில் விழிப்புணர்வை திறம்பட ஏற்படுத்தின.

**அட்டவணை 6.3**
**முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**

| இல. | திகதி | நிகழ்ச்சி ஃ செயற்பாடு | இடம் | பங்குபற்றிய நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 30/01/2025 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | SLGC | 50 |
| 2 | 19/02/2025 | ஆேசயு, இஅசச, இஅஒச, மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் எக்ஸெஸ் மெடிகெல் ட்ராஷெர்ஸ் ஆகியவற்றுக்கான சைக்ளோட்ரான் பற்றிய வேலையரங்கு | இலங்கை மன்ற நிறுவகம் | 25 |
| 3 | 25/02/2025 | உயர்தர பௌதீகவியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு | சங்கமித்த மகளிர் வித்தியாலயம் - காலி | 1850 |
| 4 | 12/03/2025 | கொத்மலை காமினி திசாநாயக்க மகா வித்தியாலயத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | இஅசச | 38 |
| 5 | 22-25/05/2025 | செனெக்ஸ் 25 கல்வி கண்காட்சி | டி.எஸ். சேனநாயக்க கல்லூரி - மீரிகம | 3500 |
| 6 | 27/05/2025 | உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | ஸ்ரீ தர்மலோகா கல்லூரி - களனி | 323 |
| 7 | 09/06/2025 | உயர்தர பௌதீகவியல் மாணவர்களுக்கான செயன்முறை வேலையரங்கு | பிஸிக்ஸ் வன் இன்ஸ்ட்டியுட்- மாத்தறை | 320 |
| 8 | 20/06/2025 | இலங்கை வயம்ப பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட உணவு கதிர்வீச்சு பற்றிய கல்வி கள விஜயம் | SLGC | 56 |
| 9 | 24/06/2025 | உயர்தர பௌதீகவியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு | அனுலா வித்யாலயம் - நுகேகொட | 650 |
| 10 | 25/06/2025 | உயர்தர பௌதீகவியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு | நாளந்தா கல்லூரி - கொழும்பு | 280 |
| 11 | 02/07/2025 | உயர்தர பௌதீகவியல் மாணவர்களுக்கான கருத்தரங்கு | ஹோலிக்ரொஸ் கல்லூரி - கம்பஹா | 1530 |
| 12 | 03/07/2025 | அணு ஒலிம்பியாட் மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடு | SLAEB | 4 |
| 13 | 22/07/2025 | விஞ.ஞான தின சிறப்புரை | ராகுல கல்லூரி - மாத்தறை | 1150 |
| 14 | 27/07/2025 | உலர்ந்த பழங்கள் மற்றும் காய்கறிகள் துறையில் காமா கதிர்வீச்சு பற்றிய விழிப்புணர்வு | ஜூம் வழியாக மெய்நிகர் நிகழ்ச்சி | 100 |
| 15 | 29/07/2025 | இலங்கை கடற்படைக்கான விஜயம் | SLAEB | 30 |
| 16 | 19/08/2025 | செயன்முறை கருத்தரங்குடன்கூடிய பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | தம்மிஸ்ஸர தேசிய கல்லூரி - நாத்தாண்டிய | 160 |
| 17 | 21/08/2025 | இலங்கை கடற்படைக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | SLAEB | 26 |
| 18 | 27-28/08/2025 | எதிர்கால கல்விக்கான புத்தாக்க கண்காட்சி | பது/ வெலிமடை மத்திய கல்லூ ரி - வெலிமடை | 2500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | 31/08/2025 | IAEA நிபுணர் உதவியுடன் கதிரியக்க மருந்து உற்பத்தி மற்றும் GMP பற்றிய NMRA உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | தேசிய மருந்து ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு | 38 |
| **விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட மொத்த அக்கறையுடைய தரப்புகளின் எண்ணிக்கை** | | | | 12630 |

இலங்கை அணுசக்தி சபை (SLAEB) இரண்டு முக்கிய கண்காட்சிகளிலும் பங்கேற்றது: வெலிமடை மத்திய கல்லூரியில் நடைபெற்ற எதிர்கால கல்விக்கான புத்தாக்க கண்காட்சி மற்றும் மீரிகம டி.எஸ். சேனநாயக்க கல்லூரியில் நடைபெற்ற செனெக்ஸ்'25 கல்வி கண்காட்சி. இந்த நிகழ்வுகளின் போது சுமார் 6,000 பாடசாலை மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் SLAEB இன் கண்காட்சி கொட்டகைகளை பார்வையிட்டனர்.

மேலும், இரண்டு மின்-சஞ்சிகைகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள், கண்காட்சிகள் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகள் அடங்கலாக 14 விளம்பரப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இவை அனைத்தும் மக்களை சென்றடையும் முயற்சிகளை மேலும் ஆதரிக்கும் வகையில் அமைந்தன. மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மொத்தம் ரூ.166,664 வருமானம் கிடைத்தது. அது இந்த முயற்சிகளின் நிலைத்தன்மைக்கு பங்களித்தன.

### 2.7 இலங்கையில் சைக்ளோட்ரான் அடிப்படையிலான ரேடியோமருந்து உற்பத்தி வசதியை தாபித்தல்

சைக்ளோட்ரான் அடிப்படையிலான PET ரேடியோ/பார்மாசூட்டிகல் உற்பத்தி வசதியை நிர்வகிக்க இலங்கை கம்பனி சட்டத்தின் கீழ், அக்சஸ் மெடிக்கல் டிரேசர்ஸ் (ப்ரைவட்) லிமிடெட் என்ற ஒரு கூட்டு முயற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டது. முதன்மை பங்குதாரர் எக்சஸ் இன்டர்நேஷனல் நிறுவனமாகும். இது 80% பங்குகளை கொண்டுள்ளது. அதே நேரத்தில் இலங்கை அணுசக்தி சபை (இஅசச) மற்றும் சுகாதார அமைச்சு (MOH) ஆகியன தலா 10% பங்குகளை கொண்டுள்ளன. மூன்று தரப்பினராலும் செய்துகொள்ளப்பட்ட அக்கறையுடைய தரப்பு ஒப்பந்தத்தின்படி நிறுவனம் தொடர்பான விதிகள் முறையாக கூட்டிணைக்கப்பட்டன.

நிர்மாண பணிகள் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிற்கு, சிவில் நிர்மாண பணிகளில் அண்ணளவாக 65% பணிகள் நிறைவடைந்துள்ளது. அதே நேரத்தில் இயந்திர, மின்சார மற்றும் பிளம்பிங் (MEP) பணிகளில் 40% நிறைவடைந்துள்ளது. சைக்ளோட்ரான் இயந்திரம் மற்றும் பிற அத்தியாவசிய உபகரணங்களின் நிமித்தம் பொருள் கட்டளைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தேவையான பணமும் செலுத்தப்பட்டுள்ளது. சைக்ளோட்ரான் முறைமையின் நிறுவுகை சார்ந்த பணிகள் 2025 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்பாட்டுத் தயார்நிலையை உறுதிசெய்வதற்காக ஊழியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. .

## 3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த சாதனைகள்

சட்டத்தின் பிரகாரம், SLAEB, அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளது. மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், இயற்கை வளங்களை நிர்வகித்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, கதிர்வீச்சு செயலாக்கம், நாட்டின் கதிர்வீச்சு பாதுகாப்பு போன்றவற்றை தேசிய அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக

இது செயற்படுகிறது. IAEA தொழில்நுட்ப கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்குறித்த சேவைகளுக்கும் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கும் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இஅசச தனித்துவமான மற்றும் விஷேட ஆய்வக வசதிகளையும் திறமையான, தகுதிவாய்ந்த, அர்ப்பணிப்புடைய அணு விஞ்ஞானிகளையும் கொண்டுள்ளது.

### 3.1 ஆ–அ கருத்திட்டங்கள் – உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

- ஒருங்கிணைந்த ஐசோடோபிக் அணுகுமுறைகளைப் (RCA) பயன்படுத்தி நீரேந்து பகுதிகளில் நீரின் தரத்தையும் மற்றும் மண் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்கு விவசாயத்திலிருந்து வரும் கழிவுகளை மதிப்பிடுதல், தணித்தல் (RAS 5091).
- K41023-IAEA ஆராய்ச்சி ஒப்பந்த இலக்கம் 26537- சுற்றாடல் கதிரியக்கம் பற்றிய மதிப்பீட்டிற்கான பரிந்துரைகள்
- குடிநீர் போத்தல்களில் உள்ள மைக்ரோபிளாஸ்டிக் பற்றிய ஆராய்ச்சி - இலங்கையில் குடிநீர் போத்தல்களில் உள்ள மைக்ரோபிளாஸ்டிக்ஸை அடையாளம் காணுதல். இந்த கருத்திட்டம் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இதன் 25% பணிகள் நிறைவடைந்துள்ளன.
- IAEA NUTEC பிளாஸ்டிக் முன்முயற்சி (INT7021) ஆய்வின் கீழ் கடல் பிளாஸ்டிக் மாசை பூகோள ரீதியில் கண்காணிப்பதில் பங்களிப்பு செய்தல், நுண் பிளாஸ்டிக்கால் ஏற்படும் உடல்நல பாதிப்பு மற்றும் திறன் மேம்பாடு - இந்த கருத்திட்டம் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இதன் 25% பணிகள் நிறைவடைந்துள்ளன.
- கதிரியக்கவியல் ஆய்வுகளுக்கான ஆராய்ச்சியை நடத்துதல் - அல்பா/ மற்றும் பீட்டா உமிழ்ப்பான்களை பிரித்தெடுப்பதற்கும் மற்றும் அதனை அளவிடுவதற்கும் கதிரியக்க இரசாயனவியல் முறையை நிறுவுதல். மேலும் Sr-90 பகுப்பாய்விற்கான பகுப்பாய்வு சேவையை நிறுவுவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராயுதல்.
- 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் எமது விஞ்ஞானிகளின் மேற்பார்வையின் கீழ், 08 மாணவர்கள் (பட்டதாரி மாணவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முதுகலை பட்டதாரிகள்) உயிரியல் விஞ்ஞான பிரிவில் தமது தொழில்துறை பயிற்சியை அல்லது பட்டதாரி ஆராய்ச்சி கருத்திட்டங்களை நிறைவுசெய்தனர்.

### 3.2 கைத்தொழில் பயன்பாடுகள் பிரிவின் கீழ் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள்

**அ. ஐசோடோப்பு நீரியல் பிரிவு**

மானிட சுகாதாரம், விவசாயம் மற்றும் சுற்றாடல் முறைமை என்பவற்றுக்கு நீர் ஒரு முக்கிய வளமாகும். எனினும் அது காலநிலை மாற்றம், அதிகப்படியான பயன்பாடு மற்றும் மாசடைவதினால் அதிகரித்து வருகின்ற அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது. ஐசோடோப்பு மற்றும் இரசாயன பகுப்பாய்வுகள் போன்ற மேம்பட்ட கருவிகள், நீர் மூலங்கள், இயக்கம் மற்றும் தரம் பற்றிய விரிவான நுண்ணறிவுகள் என்பவற்றை வழங்குகின்றன. நிலகீழ் நீர் மற்றும் மேற்பரப்பு நீர் முறைமைகள் பற்றிய அறிவியல் புரிதலை அனுமதிக்கின்றன. பயனுள்ள நீர்சார் முகாமை, நிலையான பயன்பாட்டை செயற்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய மக்களின் பாதுகாப்பு மற்றும் நீண்டகால நீர் பாதுகாப்பிற்கான தகவலறிந்த முடிவெடுத்தல் முதலியவற்றுக்கு இத்தகைய தகவல்கள் அவசியம். தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் சேவைகளின் ஒரு பகுதியாக இஅசச இன் ஐசோடோப்பு நீரியல் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- அம்பாந்தோட்டை, மலல ஓயா ஆற்றுப்படுகையின் நிலகீழ் நீர் மீள்நிரப்புதல் மற்றும் தர மதிப்பீடு:

- அகிரியன்கும்புர மற்றும் ராஜாங்கனை நிலகீழ் நீரை செயற்கையாக மீட்டெடுப்பது பற்றிய ஆய்வு:
- நீர்ப்பாசன அமைச்சின் நக்கிள்ஸ் கருத்திட்டத்தின் கீழ் நீர்வள மதிப்பீடு:
- போத்தலில் அடைக்கப்பட்ட நீர் கருத்திட்டத்தின் விரிவாக்கம்
- நிலகீழ் நீர் ஆய்வு - கட்டுநாயக்க ஊழுஜ வலயம்
- அநுராதபுர மாவட்டத்தில் உள்ள இயற்கை நீரூற்றுகளின் மீள்நிரப்பு பொறிமுறை பற்றி ஆராய்தல்
- குளோபல் ஐசோடோப் நெட்வொர்க்குகள் - GNIP மற்றும் GNIR
- வாடிக்கையாளர்களுக்கான பகுப்பாய்வு சேவைகள்
- விழிப்புணர்வும் பயிற்சியும்

**ஆ. கதிர்வீச்சு செயலாக்கல் பிரிவு**

கதிர்வீச்சு செயலாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன:

- நாட்டில் பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைப்பதற்காக கைத்தொழில்துறை பொருட்களின் உற்பத்திக்காக பொலிமெரிக் கழிவுகளை மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மீள்சுழற்சி செய்தல்.
- மருத்துவம், விவசாயம், கைத்தொழில் நோக்கங்களின் நிமித்தம் ஹைட்ரோஜெல் தயாரிப்புகளை உற்பத்தி செய்தல்
- கடல் பிளாஸ்டிக் மாசு எச்சம் மற்றும் தாக்கம் பற்றிய மேம்பட்ட புரிதலுக்காக கடல் சூழலைக் கண்காணித்தல்

**இ. ஐசோடோப்பு சூழலியல்/விவசாய நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

- பாதுகாப்பான கூடாரத்தினுள் வெவ்வேறு மண் ஈரப்பத நிலைகளில் வளர்க்கப்படும் கலப்பின மிளகாய் வகையின் மண்-தாவர-வளிமண்டல தொடர்ச்சியில் ஐசோடோப்பு வித்தியாசம் பற்றிய மதிப்பீடு” என்ற தலைப்பில் ஆராய்ச்சி, நிறைவு செய்த மாதிரி அமர்வுகளுடன் மேற்கொள்ளப்பட்டது.
- இஅசச-இல் வளி ஈரப்பதத்தை சேகரிப்பதற்கான ஒரு முறைமை உருவாக்கப்பட்டது. மேலும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஏற்றுமதி விவசாயப் பிரிவை சேர்ந்த பட்டதாரி மாணவர் ஒருவரின் உதவியுடன் பல மண் ஈரப்பத அளவீடுகள் தயாரிக்கப்பட்டன. அவர் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

கைத்தொழில் பயன்பாட்டுப் பிரிவு 2025 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை எட்டு

**ஈ. அணு விஞ்ஞான தொழில்நுட்ப (NST) கல்வி நிகழ்ச்சித்திட்டம்:**

தேசிய அளவில் நடைபெற்று வருகின்ற இடைநிலைப் பாடவிதான சீர்திருத்தத்திற்கு இணையாக, மேலும் விருப்பத்திற்குரிய பாடத்தை உள்ளடக்கி, விஞ்ஞான பாடத்தில் இணைக்க வேண்டிய உள்ளடக்க அறிக்கையை இஅசச தயாரித்தது. இந்த உத்தேச உள்ளடக்க அறிக்கை அந்தந்த அமைச்சுக்களின் மூலம் தேசிய கல்வி நிறுவகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

IAEA மற்றும் பௌதீக நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, இரண்டாவது சர்வதேச அணு விஞ்ஞான ஒலிம்பியாட் (2025) போட்டியில் இலங்கை பங்கேற்பதை இஅசச ஒருங்கிணைத்து அதற்கு உதவியது (படம் 1.). 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மலேசியாவில் நடைபெற்ற ஒலிம்பியாட்டில் நான்கு மாணவர்கள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். அங்கு அவர்கள் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் வென்றதன் மூலம் சிறந்த வெற்றியை தக்க வைத்துக்கொண்டார்கள். குறித்த போட்டியாளர்களுக்கு ஆய்வகங்களில் இஅசச விஞ்ஞானிகள் பயிற்சி அளித்தனர். இலங்கை அணியில் நான்கு மாணவர்களும் இரண்டு குழுத் தலைவர்களும் இருந்தனர்.

மூன்று மாணவர்களுக்கும் இரண்டு குழுத் தலைவர்களுக்குமான வசதிகள், விமானக் கட்டணம் மற்றும் பதிவு ஆகிய அடங்கலாக பங்கேற்புச் செலவுகளை இஅசச இன் ஆதரவுடன் ஐயுநுயு ஏற்றுக்கொண்டது.






படம் 1. 2025 ஆம் ஆண்டு மலேசியாவின் இரண்டாவது சர்வதேச அணு விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை மாணவர்கள் தமது குறிப்பிடத்தக்க செயல்திறன் மூலம் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் வென்று பிரகாசித்தனர்

## 4. 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

இலங்கை காமா மையம் (SLGC) - இகாநி 2026 ஆம் ஆண்டிற்கான பின்வரும் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் மூலோபாய இலக்குகளையும் இனங்கண்டுள்ளது. இது நீண்டகால நிலைத்தன்மையையும் மற்றும் போட்டித்தன்மையையும் உறுதிசெய்யும் அதே வேளையில், ஒரு தேசிய தொற்றுநீக்கல் மற்றும் கதிர்வீச்சு சேவை வழங்கும் தரப்பு என்ற ரீதியில் அதன் பங்கை வலுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

I. சீரிக்-சீரஸ் டோசிமெட்ரி பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்பு
II. Co-60 மூலகத்தை மேம்படுத்துதல்
III. வாடிக்கையாளர் தள வியாபிப்பு
IV. நுண்ணுயிர் ஆய்வுகூட ஆற்றல்களை வலுப்படுத்துதல்
V. விலைநிர்ணயக் கட்டமைப்பு மீளாய்வு

- அணுசக்தி திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பை (NEPIO) மீண்டும் நிறுவுதல்
- IAEA உதவியுடன் ஒருங்கிணைந்த அணுசக்தி உட்கட்டமைப்பு மதிப்பாய்வு (FU-INIR) திட்டத்தின் சிபார்சுகள் மற்றும் பரிந்துரைகளை மேம்படுத்துதல்.

LANKACOAL COMPANY(PVT)LTD

# வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம்

## 1. அறிமுகம்

இலங்கை நிலக்கரி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் (இ.நி.க.), ஒரு முழு அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக நிறுவனமாகும். இலங்கை மின்சார சபையின் (CEB) கீழ் இயங்கும் நொரோச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்கு (LVPP) நிலக்கரியை இறக்குமதி செய்து வழங்குவதற்காக மட்டுமே இந்நிறுவனம் இணைக்கப்பட்டது. எங்கள் பங்குதாரர்கள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளனர்.

- இலங்கை மின்சாரம் - 60%
- திறைசேரி திணைக்களம் - 20%
- இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் - 10%
- இலங்கை துறைமுக அதிகார சபை - 10%

இலங்கை மின்சார சபையின் வருடாந்திர தேவையின்படி, இலங்கை நிலக்கரி நிறுவனம், நொரோச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு ஒரு பருவத்திற்கு 2.25 மில்லியன் டன் நிலக்கரியை கொள்முதல் செய்கிறது. மேற்குக் கடற்கரைப் பகுதியில் தென்மேற்குப் பருவமழைக் காலம் என்பதால், செப்டம்பர் முதல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான ஏழு மாதங்களுக்கு மட்டுமே நிலக்கரி விநியோகம் செய்யப்படுகிறது. இருப்பினும், தேசிய மின்கட்டமைப்புக்கு தொடர்ந்து நிலக்கரியை வழங்குவதற்காக மின் உற்பத்தி நிலையம் ஆண்டு முழுவதும் இயங்குகிறது. எனவே, பருவகாலம் இல்லாத காலங்களில் பயன்படுத்த நிலக்கரி சேமிப்பு அவசியம்.

கொள்முதல் மற்றும் செயல்பாட்டின் தன்மை காரணமாக நிலக்கரி விநியோகம் எப்போதும் இரண்டு நாட்காட்டி ஆண்டுகளில் பரவியுள்ளது. அதன்படி, நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கொள்முதல் மற்றும் செயல் திட்டம் உருவாக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டு அட்டவணைகளும் வருடாந்திர நிலக்கரி தேவையைப் பொறுத்தது, இது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மின் உற்பத்தி நிலைய மேலாளரால் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை நிலக்கரி கம்பனி நிலக்கரி இறக்குதல் / படகு செயல்பாடு மற்றும் நிலக்கரி காப்பீட்டுக்கும் பொறுப்பாகும். அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில், 2025-2026 பருவங்களுக்கான நிலக்கரி இறக்குதல் / படகுச் செயல்பாடு ஊளுஊ ஆல் கையாளப்படுகிறது.

மேலும், நிலக்கரி ஆய்வுக்காக, இலங்கை நிலக்கரி கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் சேவை வழங்குநர் இடையே ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் உள்ளது. சேவை வழங்குநர் சர்வதேச போட்டி ஏல செயல்முறையால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இலங்கை நிலக்கரி கம்பனி நிலக்கரி இறக்குதல் / படகு செயல்பாடு மற்றும் நிலக்கரி காப்பீட்டுக்கும் பொறுப்பாகும். அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில், 2025-2026 பருவங்களுக்கான நிலக்கரி இறக்குதல் / படகுச் செயல்பாடு CSC ஆல் கையாளப்படுகிறது.

மேலும், நிலக்கரி ஆய்வுக்காக, இலங்கை நிலக்கரி கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் சேவை வழங்குநர் இடையே ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் உள்ளது. சேவை வழங்குநர் சர்வதேச போட்டி ஏல செயல்முறையால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## 2. இலங்கை நிலக்கரி கம்பனியின் செயற்பாடுகள் (2024–2025)

நாட்டின் தற்போதைய நிதி மற்றும் பொருளாதார சவால்கள் காரணமாக விநியோகங்களை நிர்வகிப்பதில் கடினமான முயற்சி இருந்தபோதிலும், 2025 செப்டம்பர்

மாதம் 10, ஆம் திகதி அன்று அடுத்த நிலக்கரி பருவம் தொடங்கும் வரை LVPP இன் நிலக்கரித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

### 2025–2026 பருவத்திற்கான திட்டங்கள்

#### அ. நிலக்கரி வழங்கல் 2025–2026

2025-2026 பருவத்திற்கான இலங்கை மின்சார சபையின் 2,320,000.00 மெட்ரிக் டன் ±10% நிலக்கரித் தேவை 40 கப்பல்கள் மூலம் வழங்கப்படும். இலங்கை நிலக்கரி கம்பனி/23/PROP/1 மற்றும் மீதமுள்ள 25 சரக்குகள் என 15 சரக்குகளை வாங்குவதற்கு ஒரு புதிய டெர்ம் டெண்டர் இலங்கை நிலக்கரி கம்பனி/25/TT/1 செயல்படுத்தப்பட்டது. 11 ஏலதாரர்கள் ஏலங்களைச் சமர்ப்பித்தனர். பின்னர் வரி அமைச்சகம் அமைச்சரவையில் சமர்ப்பித்தது, அதன் ஒப்புதலின் பேரில் 1,500,000.00 மெட்ரிக் டன் ± 10% டெர்ம் டெண்டருக்கு வழங்கப்படும்.

**2024–2025 பருவத்திற்கான நிலக்கரி விநியோக அட்டவணை**

| விநியோக முறை | அளவு MT – 10% | சரக்குகளின் எண்ணிக்கை (ஷிப்மெண்ட்) |
|---|---|---|
| இலங்கை நிலக்கரி கம்பனியின் முன்மொழிவு/23/PROP/1 | 540,000 | 15 |
| இலங்கை நிலக்கரி கம்பனியின் கால ஒப்பந்தம்/25/TT/1 | 1,500,000 | 25 |
| 2025-26 ஆம் ஆண்டிற்கான லக்விஜயா மின் உற்பத்தி நிலையம் கோரப்பட்ட அளவு | 2,320,000 | 40 |

#### ஆ. LVPP ஜெட்டி வரை நிலக்கரி போக்குவரத்து (சரக்கு + பொருட்களை கப்பலிலிருந்து இறக்குவது + காப்புறுதி)

**I. ஏற்றுதல் துறைமுகத்திலிருந்து புத்தளம் நங்கூரமிடும் இடத்திற்கு சரக்கு**

இலங்கை நிலக்கரி கம்பனி CFR அடிப்படையில் மூன்று ஒப்பந்தங்களையும் வழங்கியுள்ளது, அதில் நிலக்கரி மற்றும் சரக்கு போக்குவரத்து மட்டும் அடங்கும் மற்றும் 2025-2026 பருவத்திற்கான காப்புறுதி இலங்கை நிலக்கரி கம்பனியால் மேற்கொள்ளப்படும். தவனை டெண்டர் லங்கா நிலக்கரி நிறுவனம்/25/TT/1 விருதுக்காக நிலுவையில் உள்ளது.

**II. தாய்க் கப்பலில் இருந்து படகுகளுக்கும், ஜெட்டி இலங்கை மின்சார வாரியத்திற்கும் படகு நடவடிக்கை/பொருட்களை கப்பலிலிருந்து இறக்குவது**

சிலோன் ஷிப்பிங் ஒத்துழைப்புக்கு 2021/22 மற்றும் 2022/23 ஆகிய இரண்டு பருவங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களை கப்பலிலிருந்து இறக்குவது மற்றும் படகு நடவடிக்கை ஒப்பந்தம் 2024-2025 மற்றும் 2025-2026 பருவத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், CSC அதற்கான அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றுள்ளது.

**III. நிலக்கரி போக்குவரத்துக்கான கடல் காப்புறுதி**

இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் (IRCSL) கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து டெண்டர் அழைப்பதன் மூலம் சரக்குகளுக்கான காப்புறுதி உள்நாட்டில் மேற்கொள்ளப்படும். /பேர்/பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, 40 ஷிப்மென்ட்கள் மூலம் 2025/2026 பருவத்திற்கு ஒரு சேவையை வழங்குவதற்கான காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

**IV. வெளியேற்ற துறைமுகத்தில் நிலக்கரி விநியோகத்திற்கான சுயாதீன சோதனை நிறுவனம்.**

2025 ஜனவரி மாதம் முதல் 2026 மே மாதம் மற்றும் 2026/2027 வரையிலான சுயாதீன ஆய்வு சேவை வழங்குநரைத் தெரிவு செய்ய இலங்கை மின்சார சபையினால் புதிய டெண்டர் கோரப்பட்டுள்ளது.

வெளியேற்றும் துறைமுகத்தில்

நிலக்கரியின் வரைவு கணக்கெடுப்பு, மாதிரி எடுத்தல் மற்றும் பகுப்பாய்வு ஆகியவை முழு அங்கீகாரம் பெற்ற ஒரு சுயாதீன நிலக்கரி ஆய்வு நிறுவனத்தால் செய்யப்படும். இது இலங்கை நிலக்கரி கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலக்கரி ஆய்வாளர் இடையேயான ஒரு முயற்சி ஒப்பந்தமாகும். கோடெக்னா ஆய்வின் ஒப்பந்த காலம் 2025-2026 மற்றும் 2026-2027 பருவத்திற்காக வழங்கப்பட்டது.

**இ. 2025–2026 பருவத்திற்கான நிலக்கரி கட்டண வழிமுறை**

2025 - 2026 பருவத்திற்கான குறிப்பிட்ட பணம் செலுத்தும் முறை இன்னும் முடிவு செய்யப்படவில்லை. நிதித் தேவையின் சுருக்கம் பின்வருமாறு

**2025–2026 பருவத்திற்கான நிதித் தேவையின் சுருக்கம்**

| விநியோக முறை | சரக்குகளின் எண்ணிக்கை (ஷிப்மென்ட்) | நிதி தேவை | |
|---|---|---|---|
| | | USD மில்லியன் | LKR மில்லியன் |
| லங்கா நிலக்கரி நிறுவனத்தின் முன்மொழிவு/23/ PROP/1 | **15** | **93** | **28** |
| லங்கா நிலக்கரி நிறுவனம்/25/ TT/1 | **25** | **157** | **48** |
| **மொத்தம்** | **40** | **250** | **76** |

**2025–2026 பருவத்திற்கான கட்டண முறையின் சுருக்கம்**

| விநியோக முறை | கட்டண விதிமுறைகள் |
|---|---|
| 38 கப்பல் போக்குவரத்துக்கான லங்கா நிலக்கரி நிறுவனத்தின் முன்மொழிவு/23/ PROP/1/ | ஒரு ஆவுக்கு தந்தி பரிமாற்ற (TT) விதிமுறைகள். CFR ஆல் ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் 0.926 பெருக்கல் காரணி (MF) வரையிலான கூட்டு குறியீட்டு விலை இறுதி விலையாக இருக்கும். |
| லங்கா நிலக்கரி நிறுவனத்தின் கால டெண்டர்/25/TT/1 25 ஏற்றுமதிகளுக்கான | கடன் கடிதம், சுமை துறைமுக சான்றிதழின் அடிப்படையில் 80% கட்டணம் மற்றும் வெளியேற்ற துறைமுக சான்றிதழின் அடிப்படையில் இருப்பு கட்டணம். |

# அத்தியாயம் 08

# ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்

## 1. அறிமுகம்

ஸ்ரீலங்காஎனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் என்பது 100% இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான நிறுவனமாகும், இது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது, இது அமைச்சரவை முடிவில் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பாணை எண். “மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் மூலம் மின்சார உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கும் வசதிகளை வழங்குவதற்கும் “ஸ்ரீலங்கா எனர்ஜி பிரைவேட் லிமிடெட் “என்ற தலைப்பின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 10/2906/516/001, 07.12.2012 தேதியிட்டது. இந்தநிறுவனம் CEB இன் துணை உற்பத்தி பிரிவாக முக்கிய பங்குவகிக்கிறது, இது இலங்கைஅரசாங்கத்தின் (GOSL) எரிசக்த ிதுறையில் நலன்களை திறம்பட பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதன் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி இலாகாவின் கீழ், ஸ்ரீலங்காஎனர்ஜி பிரைவேட் லிமிடெட் தற்போது கும்பல்கமுவமினிஹைட்ரோபவர் பிளாண்ட், தெதுரு ஓயாமினிஹைட்ரோபவர் பிளாண்ட் மற்றும் பயோமெட் மினிஹைட்ரோபவர் பிளாண்ட் ஆகிய மூன்றுமினிஹைட்ரோபவர் பிளாண்ட்களை இயக்குகிறது. மேலும்,, நிறுவனம் ஒரு மீட்டர் உறை உற்பத்தி ஆலையை இயக்குகிறது. இந்த நிறுவனம் SLE HR எனப்படும் ஒரு துணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது, இது CEBக்கு தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றது. CEBயின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க தேவையான பணியாளர்கள் கிடைப்பதை உறுதிசெய்வதில் இந்த துணைநிறுவனம் முக்கிய பங்குவகிக்கிறது.

## 2. அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

மீள புதுப்பிக்கத்தக்கசக்தி நிறுவனமாக,எங்கள் முக்கியசாதனைகள் மற்றும் மைல்கற்கள் பின்வருமாறு.

### I. மினி ஹைட்ரோ பவர் பிளாண்ட ஓபரேசன்

- **கும்பல்கமுவமினிநீர் மின் நிலையம் (KMHPP)**

2016 முதல் பொருளாதாரத்தை மேம்படுத்தி வரும் இந்த திட்டம், சமனலவேவா நீர்த்தேக்கத்திலிருந்து கசியும் நீரைப் பயன்படுத்துகிறது. 1.2 மெகாவாட் திறன் கொண்ட கும்பல்கமுவ மினிநீர் மின் நிலையம், தேசிய மின் கட்டமைப்புக்கு மீள புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குவதில் செயல்பாட்டில் உள்ளது. ஜூன் 30, 2025 நிலவரப்படி, இந்த ஆலை 684.16 மெகாவாட் மின்சாரத்தை வழங்கியுள்ளது, இது நாட்டின் வளர்ந்துவரும் சுத்தமான மற்றும் நிலையான மின்சாரத் தேவையை ஆதரிக்கிறது.

- **தாதுருஓயாமினிநீர் மின் நிலையம் (DMHPP)**

1.3 மெகாவாட் நிறுவப்பட்டதிறன் கொண்டதாதுருஓயாமினிநீர் மின் நிலையம், ஜனவரி 26, 2025 அன்று அதிகாரப்பூர்வமாக இயக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில், இந்தஆலைதேசியமின் கட்டமைப்புக்குசுமார் 594.38 மெகாவாட் மீள புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்கியுள்ளது, இது இலங்கையின் வளர்ந்து வரும் மின்சாரத் தேவையை ஆதரித்து, சுத்தமான மற்றும் நிலையான மின் உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

• **பயோமெட் மினிநீர் மின் நிலையம்**

0.9 மெகாவாட் திறன் கொண்டபயோமெட் ஓயாமினிநீர் மின் நிலையம், 2025 ஆம் ஆண்டில் தேசியமின் கட்டமைப்புக்கு 60.5 மெகாவாட் மின்சாரத்தை வழங்கியது. இந்த ஆலைடிசம்பர் 1, 2025 அன்று ஸ்ரீலங்காஎனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் அதிகாரப்பூர்வமாக கையகப்படுத்தப்பட்டது, இது நிறுவனத்தின் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி இலாகாவையும் நிலையானமின் உற்பத்திக்கான பங்களிப்பையும் மேலும் வலுப்படுத்தியது.

### II. மீட்டர் உறைஉற்பத்தி ஆலை

ஸ்ரீலங்காஎனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் (SLE), பாலிகார்பனேட் மீட்டர் உறைகளை தயாரிப்பதற்கான ஒரு சிறப்பு வசதியாக மீட்டர் உறை உற்பத்திஆலையை (MEMP) நிறுவியது. கலிகமுவ மீட்டர் உறை உற்பத்தி ஆலை,உயர்தர பாலிகார்பனேட் பொருளைப் பயன்படுத்தி உள்நாட்டுஆற்றல் மீட்டர் உறைகளை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது. ஜூன் 2025 நிலவரப்படி, இந்த ஆலை மொத்தம் 98,600 யூனிட்களை வெற்றிகரமாக உற்பத்திசெய்துள்ளது, இது எரிசக்திதுறைக்கு நீடித்த உறைகளின் நம்பகமான விநியோகத்திற்கு பங்களிக்கிறது.

### III. மனிதசக்திசேவைகள் பிரிவு

SLE ஆல் இந்தப் பிரிவைஅமைப்பதன் முக்கியநோக்கம்,பெற்றோர் நிறுவனம் (CEB) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ற பணியாளர்களை வழங்குவதாகும். இந்த செயல்முறையில் ஆழமாகச் சென்று, இந்தசேவை 2015 இல் தொடங்கப்பட்டது மற்றும் தற்போதைய சூழலிலும் கணிசமான அளவில் அதன் பங்களிப்பை வழங்குகிறது. இலங்கை மின்சார சபையின் (CEB) மனித சக்தி சேவை வழங்குநரான ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட், சமீபத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

### IV. கூரையின் மேல் சூரியசக்தி தகடுகளை பொருத்தும் சேவைகள்

எங்கள் முதல் வணிக சூரிய சக்தி திட்டம் தற்போது கடுவா நகராட்சி மன்றத்தில் நடந்து வருகிறது, அங்கு நாங்கள் கூரை மீது சூரிய சக்தி நிறுவலை செயல்படுத்தி வருகிறோம்.

## 3. 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால திட்டங்கள்

### I. சீதாவாக்கை சிறிய நீர் மின் கருத்திட்டங்கள்

2025 ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ள முக்கியமான அளவுகோல்களுடன், சீதாவாக்கா சிறியநீர் மின் திட்டத்தில் இலங்கை எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் பெரும் முன்னேற்றங்களைச் செய்துவருகிறது. சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் தரநிலைகளை முழுமையாகப் பின்பற்றுவதை உறுதிசெய்வதற்காக, மத்தியசுற்றுச்சூழல் ஆணையத்திடம் (CEA) அனுமதி பெறுவதே முக்கிய இலக்காகும். பின்னர், பொருத்தமான அதிகாரிகளுடன் நிலையானமின் கொள்முதல் ஒப்பந்தத்தை (SPPA) முடித்து, திட்டத்தைத் தொடர தேவையான எரிசக்தி அனுமதியைப் பெறவணிகம் விரும்புகிறது. இந்த முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் அனுமதிகள் பெறப்பட்டவுடன் கட்டுமானம் தொடங்கும், இது இந்த நிலையான எரிசக்தி திட்டத்தை நனவாக்குவதில் ஒரு முக்கியமான படியாக இருக்கும்.

### II. ஸ்கிராப் அலுமினியமறுசுழற்சிதிட்டம் (SCALP)

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நிலையான நடைமுறைகளுக்கான அதன் உறுதிப்பாட்டின் ஒருபகுதியாக, இலங்கை எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்,தற்போதுஅதன் அலுமினிய மறுசுழற்சி திட்டத்தை முன்னெடுத்துவருகிறது. தேவையான இயந்திரங்களை வாங்குவது வெற்றிகரமாக முடிக்கப்பட்ட நிலையில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது.

திட்டகாலக் கெடுவில் ஒருமுக்கியமான கட்டத்தைக் குறிக்கும் வகையில் கட்டுமானப் பணிகள் இப்போதுநடந்துவருகின்றன. இறுதிகட்டமாக திட்டத்தை செயல்படுத்துவது இருக்கும், இது நிறுவனம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் வளபாதுகாப்புக்கு மேலும் பங்களிக்க நிலைநிறுத்தும்.



ஸ்கிராப் அலுமினியமறுசுழற்சிஆலை



ஆலைக்கான இறக்குமதிசெய்யப்பட்ட இயந்திரங்கள்_1

# அத்தியாயம் 09
# எல்.ரி.எல் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் (LTLH)

## 1. அறிமுகம்

முன்னர் "லங்கா டிரான்ஸ்.ஃ.பார்மர்ஸ் லிமிடெட்" என்று அழைக்கப்பட்டு வந்த இந்த LTL ஹோல்டிங்ஸ் லிமிடெட் (LTLH) நிறுவனம், இலங்கை மின்சார சபையினதும் (CEB) LTL குழுமத்தினதும் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (PVT) லிமிடெட் (WCPL) நிறுவனத்தினதும் ஊழியர்களை உள்ளடக்கிய மூன்று நிறுவனங்களுக்கு இடையிலான ஒரு பொது தனியார் கூட்டாண்மையாகும். தற்போதைய பங்குதாரர் கட்டமைப்பின் அடிப்படையில், இது CEB இற்கு 35% வீத பங்கையும், WCPL இற்கு 28% வீத பங்கையும் பிரதிப்படுத்துகின்றது. எஞ்சிய 37% வீத பங்கு LTL குழுமத்தின் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு (02) நிறுவனங்களுக்கு உரியதாகும். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் இலக்கம் 77 பார்க் வீதி, கொழும்பு 02 என்ற இடத்தில் அமைந்துள்ளது. நிறுவனம் கடந்த நான்கரை தசாப்தங்களாக அதன் பயணத்தில் வலுவான, ஆரோக்கியமான, நிலையான அபிவிருத்தியை அடைந்துள்ளது. இதனால் இலங்கையில் இது ஒரு முன்னணி மின்சக்தித் துறை பொறியியல் நிறுவனமாக மாறியுள்ளது.

1980 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நிறுவனம் அதன் வணிக செயற்பாட்டை முதலில் மின்சார விநியோக மின்மாற்றிகளை தயாரிப்பதன் மூலம் ஆரம்பித்தது. பின்னர், அதன் வணிகத்தை ஹாட் டிப் கல்வனைசிங், மின் உற்பத்தி, மின்சார உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சுவிட்ச் கியர், ஃபீடர் பில்லர்கள் உற்பத்தி முதலிய பல பிரிவுகளில் பன்முகப்படுத்தியது. இதன் மூலம் இலங்கையில் மின்சக்தி துறை பொறியியல் பணிகளின் முழு பெறுமான சங்கிலி முறைமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கரை தசாப்தங்களாக உள்நாட்டு சந்தைகளிலும் மற்றும் சர்வதேச சந்தைகளிலும் அதன் வணிகசார் நடவடிக்கை பிரிவுகளில் நிறுவனம் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை அடைந்துள்ளது. இது தொழில்முறை ரீதியில் தகுதி வாய்ந்த மற்றும் நன்கு பின்னிப்பிணைந்த இளம் பொறியியலாளர்களின் முழுத் திறனையும் பயன்படுத்தி, சர்வதேச வெளிப்பாட்டுடன் மின்சக்தித் துறைப் பொறியியல் பணிகளில் புத்தாக்க நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கிடைத்த பரந்த அனுபவத்துடன் இணைந்திருப்பதை காணலாம்.

இந்த நிறுவனம் இலங்கை, பங்களாதேஷம், தன்சானியா, உகண்டா, கென்யா, எதியோப்பியா, கானா, ஓமான், இந்தியா, நேபாளம், ஜோர்தான், மியான்மார், மாலைதீவு, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாட்டு மின் உற்பத்தி நிலையங்களில் முதலீடு செய்வதிலும், பொறியியல், கொள்வனவு மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்தங்கள், சிவில் பொறியியல் உட்கட்டமைப்பு செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்வதிலும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.

LTL ஹோல்டிங்ஸ், இலங்கையின் மிகப்பெரிய சுயாதீன மின் உற்பத்தி (IPP) நிறுவனமாகும். அதன் துணை நிறுவனங்களினதும் இணை நிறுவனங்களினதும் ஊடாக தேசிய மின்சார முறைமைக்கு 660 MW மின்சாரத்தை வழங்குகின்றது. LTL ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் துணை நிறுவனமும் மின் உற்பத்தி நிலைய செயற்பாட்டுப் பிரிவும் (PPOW) ஆன லக்தனவி லிமிடெட் நிறுவனம் ஆகியன இணைந்து 2021 ஆம் ஆண்டில் மின்வலு சக்தி அமைச்சும் மற்றும் CEB யும் வழங்கிய ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது.

சோபாதனவி லிமிடெட் மூலம் அதன் சிறப்பு நோக்க வாகனத்திற்கு (SPV) நிறுவனம் முதலில் 350MW LNG இல் இயக்கக்கூடிய ஒன்றிணைந்த ஒரு சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தை BOOT அடிப்படையில் உருவாக்குவதற் குதாபிக்கப்பட்டது. இந்த பொறித்தொகுதியின் ஒன்றிணைந்த சுழற்சி செயற்பாடுகளின் வணிக நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. இது CEB இன் தேசிய மின்சார முறைமைக்கு மொத்தம் 350MW மின்சாரத்தை உள்ளீர்க்க உதவியது.

மின்வலு சக்தி அமைச்சு மற்றும் CEB ஆகியன இணைந்து, LTL ஹோல்டிங்ஸ் லிமிடெட்டின் துணை நிறுவனமான PPOW என்ற லக்தனவி லிமிடெட் நிறுவனத்திற்கு மற்றொரு கேள்வி ஒப்பந்தத்தை வழங்கியுள்ளன. மேலும் கெரவலப்பிட்டியில் இரண்டாவது 350MW RLNG/Brý இயக்கக்கூடிய ஒன்றிணைந்த ஒரு சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தை BOOT அடிப்படையில் மேம்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12 ஆம் திகதி விருப்பக் கடிதம் (LOI) அனுப்பப்பட்டது. கருத்திட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கும் சூழல், பொறியியல், நிதி மற்றும் பிற ஆரம்ப கருத்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் சஹஸ்தனவி லிமிடெட் ஒரு சிறப்பு நோக்க வாகனத்தை (SPV) தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது. CEB உடனான மின்சக்திக் கொள்வனவு ஒப்பந்தம் (PPA) மற்றும் காணிக் குத்தகை ஒப்பந்தம் (LLA) ஆகிய ஒப்பந்தங்கள் ஏற்கனவே 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 03ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டுள்ளன. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடனான (CPC) எரிபொருள் விநியோக ஒப்பந்தம் (FSA), இலங்கை அரசாங்கத்துடனான செயற்படுத்துகை ஒப்பந்தம் (IA) மற்றும் BOI உடனான முதலீட்டு சபை (BOI) ஒப்பந்தம் போன்ற பிற கருதிட்டம் தொடர்பான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படவுள்ளன.

ஆசிய பிராந்தியத்தில் சிறந்த சுயாதீன மின் உற்பத்தியாளருக்கான (IPP) மதிப்புமிக்க தங்கப் பதக்க விருது வென்றமை அடங்கலாக, அதன் அசாதாரண செயல்திறனுக்காக நிறுவனம் பல ஆண்டுகளாக அதன் பொறியியல் சிறப்பைத் தொடர்ந்து பேணி வருகின்றது. இதில் பிறவும் அடங்குகின்றன:

- ஆசிய பவர் விருதுகள் 2016 ஆண்டின் சிறந்த மின்சாரப் பயன்பாடு - ,லங்கை
- தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் வெள்ளிப் பதக்கம் வென்றமை
- ஆசிய பவர் விருதுகள் 2017 ஆண்டின் புத்தாக்க சக்தி தொழில்நுட்பம் - ,லங்கை
- ஆசிய பவர் விருதுகள் மெரிட் 2017 ஆம் ஆண்டின் சிறந்த மின்சாரப் பயன்பாடு - ,லங்கை
- சர்வதேச பாதுகாப்பு தகுதி விருது 2017 வென்றமை (பிரிட்டிஷ் பாதுகாப்பு கழகத்தினால் வழங்கப்பட்டது)
- சர்வதேச பாதுகாப்பு விருது 2018 வென்றமை (பிரிட்டிஷ் பாதுகாப்பு கழகத்தினால் வழங்கப்பட்டது)
- ஆசிய பவர் விருதுகள் 2018 - ஆண்டின் புத்தாக்க சக்தித் தொழில்நுட்பம்
- ஆசிய பவர் விருதுகள் 2018 - ஆண்டின் சிறந்த மின்சாரப் பயன்பாடு
- சர்வதேச பாதுகாப்பு தகுதி விருது மெரிட் 2019 (பிரிட்டிஷ் பாதுகாப்பு கழகம் வழங்கிய)
- சர்வதேச பாதுகாப்பு விருதுகள் - 2021 நாட்டின் மிகச்சிறந்த விருது (பிரிட்டிஷ் பாதுகாப்பு கழகம் வழங்கிய)

**2. எதிர்கொள்ளப்பட்ட சவால்களும் அவற்றை எதிர்கொள்ள/ சமாளிக்க பின்பற்றிய உத்திகளும்:**

**இரண்டாவது 350MW சஹஸ்தனவி RLNG ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணம்**

அ. இலங்கை மின்சார சபையினால் (CEB) வெளியிடப்பட்டு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) அங்கீகரித்த நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கல் திட்டம் (LTGEP) தேசிய மின்சார முறைமையின் நிலைத்திருக்கும்


























தன்மையையும் மற்றும் தொழில்நுட்ப பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு இந்த மின் உற்பத்தி நிலையம் அவசியம் என தொடர்ந்து இனங்காணப்பட்டு வந்துள்ளது. ஆகையினால் “சஹஸ்தனவி” மின் உற்பத்தி நிலையம் ஒரு முக்கியமான தேசிய சொத்தாகக் கருதப்படுகின்றது. இது மின்சாரத்திற்கான உச்சநேரக் கேள்வியைப் பூர்த்தி செய்யவும் மற்றும் அவசரநிலைகளின் போது நம்பகமான அனுப்பக்கூடிய, செலவு குறைந்த மின்சாரத்தை வழங்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. விரைவான பதிலீடு, மூலோபாய ரீதியில் முக்கியமாக நாட்டின் மின் வலையமைப்பை நிலைப்படுத்தும் வளமாகவும் விளங்குகின்றது.

ஆ. இலங்கை மின்சார சபை, வலுசக்தி அமைச்சுடனும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) உடனும் மற்றும் சட்டமா அதிபருடனும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியதன் பின்னர், சமப்படுத்தப்பட்ட கட்டணத்திற்கு தேவையான அங்கீகாரம் பெறப்பட்டது. மேலும், CEB உடன் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் திகதி மின்சக்திக் கொள்வனவு ஒப்பந்தம் (PPA) மற்றும் காணிக் குத்தகை ஒப்பந்தம் (LLA) செய்துகொள்ளப்பட்டன. இலங்கை அரசாங்கத்துடனான செயற்படுத்தல் ஒப்பந்தம், இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துடனான எரிபொருள் விநியோக ஒப்பந்தம் மற்றும் முதலீட்டு சபையுடனான முதலீட்டு சபை ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் தற்போது

பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இ. இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் கடன் மதிப்பீடு ஆகியவற்றின் காரணமாக, வெளிநாட்டு நிதி மற்றும் கடன் நிறுவனங்கள் இலங்கைக்கு கருத்திட்ட நிதியை வழங்க மறுத்துவிட்டன. எனவே, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பங்குதாரர்களிடமிருந்து கருத்திட்டசார் நிதி ஏற்பாடுகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை நிறுவனம் ஆராய்ந்து வருகின்றது. மேலும் பேச்சுவார்த்தைகளும் தற்போது இடம்பெற்றுவருகின்றன. சஹஸ்தனவி 350MW RLNG ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையம் 2028 மே / ஜூன் மாதத்தில் வணிக ரீதியான செயற்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

### மின்னுற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகளும் பராமரிப்பும்

### 3.1 கெரவலப்பிட்டிய 300 MW யுகதனவி ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையம்

| | |
|---|---|
| நிறுவுகை | யுகதனவி மின் உற்பத்தி நிலையம், கெரவலப்பிட்டிய, இலங்கை |
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு |
| என்ஜின் மாதிரி | GT - சட்டகம் 9E, ST SC5 |
| மின்மாற்றி வகை | GE 9A5 |
| கட்டமைப்பு | 2:2:1 |
| இயந்திரத்தின் வெளியீட்டு அளவு | ஒவ்வொன்றும் 100 MW |
| இயந்திரங்களின் எண்ணிக்கை | 2 GTs மற்றும் 1 ST |
| PPA காலம் | ஆரம்பம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகள் |

யுகதனவி 300 MW ஒன்றிணைந்த சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் 15வது ஒப்பந்த ஆண்டு 2025 மே மாதம் 9 ஆம் திகதி நிறைவடைந்தது. மேலும் அடைந்த கிடைப்புத்தன்மை 74.23% ஆகும். 15வது ஒப்பந்த ஆண்டிற்கான 70% கிடைக்கும் தன்மை 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அடையப்பட்டது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மின்சார விற்பனை 423.68 GWh பதிவாகியிருந்தது. மீளாய்வு ஆண்டு காலத்தில் 243 நாட்கள் இந்த மின்னுற்பத்தி நிலையம் இயக்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 72% வீத அடிப்படையைக் கொண்டிருந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிற்கு, மின் உற்பத்தி நிலையம் 423.68 GWh மின்சாரத்தை தேசிய மின்சார முறைமைக்கு விநியோகித்தது. இது முன்னைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 8.88% குறைவை பிரதிபலிக்கின்றது. மீள புதுப்பிக்கத்தக்க சக்தி ஊடுருவல் அதிகரித்ததே இந்த குறைவுக்கு அடிப்படைக் காரணமாகும். இதன் விளைவாக மின் உற்பத்திப் பொறித்தொகுதிற்கு குறைந்தளவில் மின்சாரத்தை அனுப்புவதற்கான தேவைகள் ஏற்பட்டன.

GT01 ஹாட் கேஸ் மார்க்க சோதனைக்கு திட்டமிடப்பட்ட செயலிழப்பு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. GT01, HRSG01 ஆகியவற்றில் மோட்டார்களினதும் அதேபோல் கருவிசாதனங்களினதும் திட்டமிடப்பட்ட சோதனைகள், அளவுத்திருத்தங்கள், பல்வேறு பராமரிப்பு செயற்பாடுகளுடன் செயலிழப்புக்கு இணையாக மேற்கொள்ளப்பட்டன.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் O&M செயற்பாட்டிற்கான ISO 9001, ISO 14001 மற்றும் ISO 45001 சான்றிதழ் 2025/2026 ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.



Original Site – 2017 December



Present Site – 2025 July

### 3.2 கெரவலப்பிட்டியவில் சோபாதனவி 350MW RLNG இணைந்த சுழற்சி மின்உற்பத்தி நிலையம்

சோபாதனவி 350MW ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையம் வெற்றிகரமாக முழுமையாக செயற்பாட்டுக்கு வந்துள்ளது. தற்போது அதன் மதிப்பிடப்பட்டிருக்கின்ற சக்திக் கொள்ளளவை இலங்கையின் தேசிய மின்சார முறைமைக்கு வழங்கி வருகின்றது. நாட்டின் அதிரித்து வரும் மின்சாரத்திற்கான கேள்விக்கு சரியான நேரத்தில் பங்களிப்பை உறுதிசெய்யும் இந்தக் கருத்திட்டம் இரண்டு முக்கிய கட்டங்களில் செயற்படுத்தப்பட்டது. திறந்த சுழற்சி வணிக செயற்பாடுகளை உள்ளடக்கிய முதல் கட்டம் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது இந்த மின் உற்பத்தி நிலையம் இலங்கையின் தேசிய மின்சார முறைமைக்கு 212MW அளவான மின்சாரத்தை வழங்கியது.

கருத்திட்டப்பணிகள் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளன. அதைனைத் தொடர்ந்து, ஒன்றிணைந்த சுழற்சி வணிக செயற்பாடுகள் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம்23 ஆம் திகதி முதல் முறையாக பிரகடனப்படுத்தப்பட்டன. இதனால் மின் உற்பத்தி நிலையம் அதன் தேறிய நம்பகமான சக்திக் கொள்ளளவான 312MW அளவை அடைய முடிந்தது. ஒன்றிணைந்த சுழற்சி செயற்பாடுகளும் நிறைவடைந்தன. கருத்திட்டத்தின் ஒன்றிணைந்த சுழற்சிக்கட்டம் நிறைவடைந்ததையடுத்து, சோபாதனவி இப்போது தேசிய மின்சார முறைமைக்கு முக்கியமாக மேலதிக சக்திக்கொள்ளளவை வழங்குகின்றது.

| நிறுவுகை | இலங்கை கெரவலப்பிட்டிய சோபாதனவி 350MW CCPP |
|---|---|
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 350 MW ஒன்றிணைந்த சுழற்சி RLNG மின் உற்பத்தி நிலையம் |
| என்ஜின் மாதிரி | GT - SGT5-4000F, ST- SST5-3000 |
| மின்மாற்றி வகை | GT - SGEN5-1200A, ST-SGEN5-1000A |
| கட்டமைப்பு | 1:1:1 |
| இயந்திரத்தின் வெளியீட்டு அளவு | GT - 223.90 MW ST - 114.81 MW |
| இயந்திரங்களின் எண்ணிக்கை | 1 GT - 1 ST |
| PPA காலம் | 20 ஆண்டுகள் |

சோபாதனவி 350 MW ஒன்றிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையம் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி வரை திறந்த சுழற்சி முறையில் வணிகளவில் இயங்கி வருகின்றது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரி மாதம் 17ஆம் திகதிவரை, மின் உற்பத்திப் பொறித்தொகுதியின் கிடைப்புத்தன்மை 91.42% என்ற அளவில் பேணப்பட்டது.

ஒன்றிணைந்த சுழற்சி வணிக செயற்பாடு (COD) 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அந்த நாளிலிருந்து

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியின் ஒட்டுமொத்த கிடைப்புத் தன்மை 99.17% வீதம் என பதிவாகியிருந்தது. இந்த காலகட்டத்தில் சக்தி ஏற்றுமதி 1.18 GWh எனவும் பதிவாகியிருந்தது.

### 3.3. பங்களாதேஷத்தின் நட்டோரில் உள்ள ராஜ் லங்கா மின் உற்பத்தி நிலையம் (RLPP)



| நிறுவுகை | ராஜ் லங்கா மின் உற்பத்தி நிலையம், நட்டோரி, பங்களாதேஷம் |
|---|---|
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 52.2 MW |
| என்ஜின் மாதிரி | W20V32 |
| PPA காலம் | 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 15ஆண்டுகள் |

2025 ஆம் ஆண்டிற்கான (2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை) RLPP இன் எரிசக்தி விற்பனை 15.81 GWh ஆகவும், இந்தக் காலகட்டத்திற்கான சராசரி மின் உற்பத்தி காரணி 5.19% ஆகவும், அடையப்பட்ட கிடைப்புத் தன்மை 97.49% ஆகவும் உள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைக்கும் தன்மை இலக்கு 90% வீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இது இலங்கைக்கு வெளியே இலங்கைக்கு சொந்தமான முதலாவது அனல் மின் நிலையமாகும்.

### 3.4 லக்தனவி பங்களா பவர் பிளான்ட், கொமிலா, பங்களாதேஷம் (LBPP)



| நிறுவுகை | லக்தனவி பங்களா பவர் பிளான்ட், கொமிலா, பங்களாதேஷம் (LBPP) |
|---|---|
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 52.2 MW |
| என்ஜின் மாதிரி | W20V32 |
| PPA காலம் | 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல் 15 ஆண்டுகள் |

2025 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான 2025 ஆம் ஆண்டிற்கான லக்தனவி பங்களா மின் உற்பத்தி நிலையத்தின் சக்தி விற்பனை 91.791 GWh ஆகவும், இந்தக் காலகட்டத்திற்கான சராசரி மின் உற்பத்தி காரணி 30.80% ஆகவும், அடையப்பட்ட கிடைப்புத் தன்மை 95.84% ஆகவும் என பதிவாகியுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத் தன்மை இலக்கு 90.00% வீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

### 3.5 பெனி லங்கா மின் உற்பத்தி நிலையம், பெனி, பங்களாதேஷம்



| | |
|---|---|
| நிறுவுகை | பெனி லங்கா மின் உற்பத்தி நிலையம், பெனி, பங்களாதேஷம் |
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 114 MW |
| என்ஜின் மாதிரி | MW 18V50 மற்றும் ஒரு W20V32 |
| PPA காலம் | 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 15 ஆண்டுகள் |

2025 ஜனவரி மாதம் முதல் 2025 ஆகஸ்ட் மாதம்வரையிலான /பெனி லங்கா மின் உற்பத்தி நிலையத்தின் எரிசக்தி விற்பனை 290.015 GWh ஆகவும், சராசரி மின் உற்பத்தி காரணி 43.62% ஆகவும், கிடைப்புத்தன்மை 91.83% ஆகவும் எனப் பதிவாகியுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 90% வீதத்திற்கும் அதிகமாக அடிப்படையைக் கொண்டு இருந்துள்ளது.

### 3.6 பவன்தனவி காற்றாலை மின் உற்பத்தி நிலையம், நுரைச்சோலை



| | |
|---|---|
| **நிறுவுகை** | **பவன்தனவி காற்றாலை மின் உற்பத்தி நிலையம், நுரைச்சோலை** |
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 9.8 MW |
| என்ஜின் மாதிரி | G58 |
| PPA காலம் | 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 20 ஆண்டுகள் |

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்31 ஆம் திகதி வரை பவன்தனவியின் எரிசக்தி விற்பனை 14.02 GWh ஆகவும், அடையப்பட்ட பொறித்தொகுதிக் காரணி 25% ஆகவும் பதிவாகியுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 95% வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் மின் உற்பத்திப் பொறித்தொகுதி அவ்வப்போது பராமரிப்பு சேவைக்கு உட்படுத்தப்பட்டது.

### 3.7 பெலிஹுல் ஓயாவில் உள்ள நிவிது சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம்



| நிறுவுகை | பெலிஹுல் ஓயாவில் உள்ள நிவிது சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் |
|---|---|
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 2.2 MW |
| டேர்பைன் மாதிரி | ஹொரைசென்டல் டேர்போ இம்பல்ஸ் |
| PPA காலம் | 2023 ஆம் ஆண்டு மே மாதம் முதல்15ஆண்டுகள்<br><br>வழங்கப்பட்ட 1-வது நீட்டிப்பு2022.05.19 ஆம் திகதி காலாவதியானது.<br><br>வழங்கப்பட்ட2-வது நீட்டிப்பு 2038.12.31 ஆம் திகதி வரை செயல்லுபடியாகும். |

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்31 ஆம் திகதி வரை பவன்தனவியின் எரிசக்தி விற்பனை 14.02 GWh ஆகவும், அடையப்பட்ட பொறித்தொகுதிக் காரணி 25% ஆகவும் பதிவாகியுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத்தன்மை இலக்கு 95% வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் மின் உற்பத்திப் பொறித்தொகுதி அவ்வப்போது பராமரிப்பு சேவைக்கு உட்படுத்தப்பட்டது.

### 3.8 அசுபினி எல்ல சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம்



| நிறுவுகை | அசுபினி எல்ல சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம், அறநாயக்க |
|---|---|
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 4 ஆறு |
| டேர்பைன் மாதிரி | ஹொரைசென்டல் பெல்டென் |
| **PPA** காலம் | 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 15ஆண்டுகள் வழங்கப்பட்ட 1-வது நீட்டிப்பு 2025.10.30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை அசுபினியெல்லா மின் உற்பத்தி நிலையத்தின் விற்பனை ஆற்றல் 7.76 GWh ஆகவும், அடையப்பட்ட பொறித்தொகுதிக் காரணி 33% ஆகவும் பதிவாகியுள்ளன.2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கிடைப்புத் தன்மை இலக்கு 95% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. PPA 2025 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 3.9 10MW நேபாள மக்கரிகாட் ஹைட்ரோ பவர் (ப்ரைவட்) லிமிட்டெட் நிறுவனம்

| | |
|---|---|
| அமைவிடம் | நீர்மூலம், பா.ஃர் மேற்கு நேபாளத்தில் உள்ள தார்ச்சுலா மாவட்டத்தின் காண்டேஸ்வரி மற்றும் குஜார் கிராமத்தில் அமைந்துள்ள கெமெலியா நதியின் ஒரு கிளை நதி |
| மொத்தப் பொறித்தொகுதிக் கொள்ளளவு | 10 MW |
| டேர்பைன் மாதிரி | ஹொரைசென்டெல்2 1 ஜெட் பெல்டென் |
| PPA காலம் | மழையும் பனியும் நிறைந்த வற்றாத அருவி |

இந்த மின் உற்பத்தி நிலையத்தின் வணிகச் செயற்பாடு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 வரையிலான மின்சார விற்பனை 39.96 GWh ஆகவும், COD இலிருந்து அடைந்த பொறித்தொகுதி காரணி 69% ஆகவும் பதிவாகியுள்ளன.

### 3.10 சியம்பலாண்டுவ 100MW சூரிய சக்தி மின் உற்பத்திப் பேட்டை வசதி

சியம்பலாண்டுவ 100 மெ.வொ. சூரிய சக்தி ஒளிமின்னழுத்த மின்சக்தி உற்பத்திப் பேட்டை வசதியை அபிவிருத்திற்கான விஷேட நோக்க வாகன (SPV) ரிவிதனவி (தனியார்) லிமிடெட் நிறுவனம் தாபிக்கப்பட்டது. மேலும் சுமார் 27 கி.மீ. பரப்பளவில் 132kV பரிமாற்ற வசதி கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ,ந்த சூரிய மின்சக்தி உற்பத்திப் பேட்டை வசதி சியம்பலாண்டுவ மற்றும் அதைச் சுற்றியுள்ள 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் தாபிக்கப்படும்.

சூரிய மின் உற்பத்தி நிலையம் மற்றும் மின் பரிமாற்ற வசதி ஆகிய இரண்டிற்கும் பூர்வாங்கப் பணிகள் நிகழ்ந்து வருகின்றன. மேலும் சூரிய சக்தி உற்பத்திப் பேட்டை மற்றும் மின் பரிமாற்ற வசதி ஆகிய இரண்டிற்கும் நிர்மாணப் பணிகள் தீவிரமாக நிகழ்ந்து வருகின்றன. இந்தக் கருத்திட்டத்திற்கு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிற்கு ரூ. 1,100 மில்லியன் செலவாகியுள்ளது. ரிவிதனவி லிமிட்டெட் நிறுவனப் பங்குதாரர்களான லக்தனவி லிமிடெட் மற்றும் விண்ட்ஃ. போர்ஸ் லிமிடெட் ஆகியவை சம அளவில் நிதியளித்தன.

இந்த மின் உற்பத்தி நிலையத்தை





நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி கௌரவ அனுர குமார திசாநாயக்க அவர்களின் தலைமையில் கௌரவ மின்வலு அமைச்சர் பொறியாளர் குமார ஜெயக்கொடி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

- ரிவிதானவி (தனியார்) லிமிடெட் நிறுவனம், சியம்பலாந்துவ பகுதியில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்காக நான்கு சமூக பொறுப்புணர்வு திட்டங்களைத் ஆரம்பித்துள்ளது.

1. திட்ட இடத்திற்கு மிக அருகில் உள்ள மூன்று கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நீர் வழங்கல் திட்டம்.
2. கட்டமைப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நீர் சேமிப்பை விரிவுபடுத்துவதற்கும் திட்ட நிலத்திற்கு அருகில் அமைந்துள்ள தற்போதைய குளக்கட்டை புனரமைத்தல்.
3. NVQ நிலை 3 முதல் NVQ நிலை 4 வரை பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல், குறிப்பாக மின்சாரம், இயந்திரம் மற்றும் சூரிய PV தொழில்நுட்பம் போன்ற பகுதிகளில்.
4. கோடியகல பள்ளிகளுக்கான உதவித்தொகை திட்டம் (A/L வணிகம் மற்றும் விஞ்ஞா னம்)

### 3.11 மின்மாற்றிகளின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்




குறித்த வசதியில் உள்ள மின்மாற்றி உற்பத்திக் கட்டங்கள்

**அ.2025/01/01ஆம் திகதி முதல் 2025/08/31ஆம் திகதிவரையான காலப்பகுதிற்கு பதிவாகிய உற்பத்தி பற்றிய விபரம் பின்வருமாறு:**

| | | 2025 (ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை) எண்ணிக்கை | 2024 (ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட்மாதம் வரை) எண்ணிக்கை | வித்தியாசம் (+)/(-) |
|---|---|---|---|---|
| அ) | CEB/LECO இற்கு விநியோகித்த மின்மாற்றிகள் | 1,641 | 1,550 | (+)91 |
| ஆ) | ஏனைய உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்த மின்மாற்றிகள் | 64 | 56 | (+)08 |
| இ) | ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மின்மாற்றிகள் | 398 | 207 | (+)191 |
| மொத்தம் | | **2,103** | **1,813** | **(+)290** |

**ஆ).2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிற்குரிய விற்பனை வருமானம் பற்றிய விபரங்கள்**

| கொள்வனவாளர் / வாடிக்கையாளர்கள் | மின்மாற்றிகளின் எண்ணிக்கை | மொத்த விற்பனை வருமானம் மில்லியன் ரூபா |
|---|---|---|
| CEB/LECO | 1,564 | 3,717 |
| தனியார் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் | 60 | 650 |
| ஏற்றுமதி வருமானம் | **437** | **588** |
| மொத்தம் | **2,061** | **4,955** |

**இ) 2025 (ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை) ஆம் ஆண்டிற்கான மின்மாற்றிப் பொறித்தொகுதி உற்பத்தியும் விற்பனையும்**

வீட்டுக் கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி பகிர்ந்தளிப்பு விரிவடைந்து வருகின்றது. அதேநேரம்மின்சாரத்திற்கான தேவையும் அதிகரித்து வருகின்றது. CEB இற்குமின்சார மின்மாற்றிகளின் பகிர்ந்தளிப்பு 91வீதமாக அதிகரித்துள்ளது. இது மீளாய்வு ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 5.55% வீதமான ஒருவளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. மேலும், உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு மின்சார பகிர்ந்தளிப்பு மின்மாற்றிகள்விநியோகம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 08ஆல் அதிகரித்துள்ளது. மேலும், சர்வதேச போட்டி கேள்வி விலை மனுக்கள் நடைமுறையின் ஊடாககேள்வி ஒப்பந்தம் கிடைத்ததையடுத்து 398 மின்மாற்றிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**2026 ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள்**

**ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (R&D)**

- **பற்றரி/ வலு சேமிப்பு முறைமைகளுக்கான ஸ்மார்ட் டிரான்ஸ்/ பார்மர் உப மின்நிலையத்தை (STS) தாபித்தல்**
  தற்போது STS உறை வெற்றிகரமாக கட்டமைக்கப்பட்டுள்ளது.அடுத்த கட்டமாக டீநுளுளு ஒருங்கிணைப்புக்கான STS தீர்வுகாணப்படவுள்ளது. இந்த வடிவமைப்பில் RMU, மின்மாற்றிகள், மாற்றி தொகுப்பு மற்றும் கிரிட் நெகிழ்வுத்தன்மை மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க ஊடுருவல் என்பவற்றை ஆதரிக்கும் தகவல் தொடர்பு முறைமை என்பன இதில் அடங்கும்.

- **அமெரிக்க சந்தைப் பிரிவுக்கான PAD மவுண்டெட் மின்மாற்றிகளை தயாரித்தல்**
  அதிகரித்து வருகின்ற கேள்வி விலை மனு வாய்ப்புகளுடன், PAD-மவுண்டெட் மின்மாற்றிகளை தயாரிக்கவும், மேம்படுத்தவும் ஒரு பிரத்யேக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும். PAD மவுண்டெட் மின்மாற்றிகள் பற்றிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்பான அனுபவத்தைப் பெறுவது, IEEE/ANSI நியமங்களை பூர்த்தி செய்வது மற்றும் அமெரிக்க சந்தையில் ஒரு போட்டி நிலையை தக்கவைத்துக்கொள்வது என்பன இதன் நோக்கங்களாகும்.

- **உருவமற்ற 5 மூட்டு மையத்துடன்கூடிய மாதிரி மின்மாற்றிகளை தயாரித்தல்**
  குறைந்த சத்தம், மேம்பட்ட செயல்திறன், எளிதாக பொருந்தக்கூடிய தன்மை என்பவற்றின் காரணமாக, பல உலகளாவிய உற்பத்தியாளர்கள் எண்ணெயில் மூழ்கிய மின்மாற்றிகளுக்குப் பதிலாக 5-மூட்டு உருவமற்ற கோர்களை (Core) ஏற்றரங்கீகரிக்கின்றனர். இந்த

நன்மைகளை ஆய்வு செய்வதற்கு ஒரு முன்மாதிரி அபிவிருத்திக் கருத்திட்டம் மேற்கொள்ளப்படும்.இதனால் நிறுவனம் சர்வதேச கேள்வி விலை மனு நடைமுறையில் மிகவும் திறமையாக பங்கேற்க முடியும்.

- **லோட் டேப் சேஞ்சர் (OLTC) வசதியுடைய மின்சாரப் பகிர்ந்தளிப்பு மின்மாற்றிகளை தயாரித்தல்**
  இலங்கையில் அதிகரித்து வருகின்ற சூரிய சக்தி மின் நிறுவல்கள் வலையமைப்பு மின்னழுத்த ஏற்ற இறக்கங்களுக்கு வழிவகுக்கும் நிலையில், ஒரு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ்,ழுடுவுஊ பொருத்தப்பட்டுள்ள மின்சார பகிர்ந்தளிப்பு மின்மாற்றிகள் தயாரிக்கப்படும். இந்த அலகுகள் எதிர்கால கட்டத் தேவைகளுக்கு ஏற்ப மின்னழுத்த நிலைத்தன்மை மற்றும் மேம்பட்ட நெட்வொர்க் நம்பகத்தன்மை ஆகியவற்றை வழங்கும்.

**செயல்முறை மேம்பாடுகள்**

- SAP ERP உடன் ஒருங்கிணைந்த AFISOL, முறைமையின் செயற்படுத்துகை, உற்பத்தி ஒழுக்கு செயற்பாடுகளின் முழுமையான டிஜிட்டல்மயமாக்கல் அதேபோல் நிகழ்நேர காட்சிப்படுத்தல் ஆகியவற்றை செயற்படுத்துகின்றது. ஒருங்கிணைந்த தளம் உற்பத்தி முன்னேற்றம், இயந்திர செயல்திறன், இயக்க செயல்திறன், பாக இயக்கங்கள் மற்றும் தர இணக்கத்திற்கான நேரடி டாஷ்போர்டுகள் என்பவற்றை வழங்குகின்றது.
- லீன் அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், எமது அடுத்த திட்டம் டிரான்ஸ்ஃ. பார்மர் உற்பத்தியில் கான்பன் அடிப்படையிலான பொருள் மற்றும் பணிப்பாய்வு உகப்பாக்கம் என்பனவாகும்.
- பாதுகாப்பான பணி நடைமுறைகளை உறுதிசெய்வதற்கும், 2026 ஆம் ஆண்டுக்கான பூஜ்ஜிய இழப்பு நேர அபாயங்கள் மற்றும் இணக்கல் மீறுகை இலக்கை அடைவதற்கும் ஒருங்கிணைந்த துளுயு மற்றும் ஒருங்கிணைந்த HIRA செயல்முறையை தாபித்தல்.
- NIOSH பாதுகாப்பு விருது அல்லது பிரிட்டிஷ் பாதுகாப்பு சபையின் விருதைப் பெறல்.

**மக்கள் மைய மேம்பாடுகள்**

- LTL டிரான்ஸ்ஃபார்மர்ஸ் நிறுவனம், தொழில்நுட்ப பயிற்சி, விரிவடைந்த பயிற்சியாளர் ஆட்சேர்ப்பு, தக்கவைப்பு முயற்சிகள், பணியாளர் பன்முகத்தன்மை ஆகியவற்றின் மூலம் அதன் திறமையான குழாய்வழியை வலுப்படுத்தும். 2024-2025 ஆம் ஆண்டுக்கான அதன் சிறந்த பணியிடச் சான்றிதழைக் கட்டமைக்கும்.
- வாரிசுரிமை சார்ந்த திட்டமிடல், தலைமைத்துவ மேம்பாடு மற்றும் மேம்பட்ட திறன் அபிவிருத்தி ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படும். இது பணியாளர்களை பிராந்திய ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் எதிர்காலத்திற்குத் தயாராகவும் இருப்பதை நிலைநிறுத்துகின்றது.

**CSR மற்றும் சமூகத் தாக்கம் – LTL மின்மாற்றிகள்**

- **"1000 அறிவு நுல்கள்" - அனைவருக்கும் கல்வி (SDG 4)**

  2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அம்பாந்தோட்டை மகாநாகபுர பாடசாலையில், ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 1,000 புத்தகங்கள், புதுப்பிக்கப்பட்ட கணினிகள் மற்றும் புத்தக அலுமாரிகள் என்பவற்றை நன்கொடையாக வழங்குவதன் மூலம் இது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சி கல்வி இடைவெளிகளைக் குறைத்ததுடன், டிஜிட்டல் கற்றலை ஊக்குவித்தது அறிவுப் பகிர்வையும் வளர்த்தது.அதே நேரம் ஊழியர்களை அர்த்தமுள்ள CSR பங்கேற்பிலும் ஈடுபடச்செய்தது.

**2025–26 ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்டங்கள்**

**“கடல் சுத்தம்” – கடற்கரையை சுத்தம் செய்தல் (SDG 14)**

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி பிளாஸ்டிக் சேகரிப்பு வசதிகளை நிறுவுவதற்காக ஊழியர் தன்னார்வலர்களுடன் இணைந்து கடலோர சுத்தம் செய்யும் பணியாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. இந்த திட்டம் கடல் பாதுகாப்பு, சமூக விழிப்புணர்வை ஊக்குவித்து, நிலைத்தன்மைக்கான டுவுடு மின்மாற்றிகளின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும்.

**நிர்மாண கருத்திட்டங்கள்**

**அ) தீ ஹைட்ரண்ட் மேம்பாடு**

தீ நீர் குழாய் வலையமைப்பு தேவையான பாதுகாப்பு நியமங்களை பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தப்படும். தீ விபத்து ஏற்பட்டால் விரைவான அவசரகால பதிலை உறுதிசெய்வதற்காக குழாய் விட்டத்தை அதிகரிப்பது மற்றும் ஓட்ட விகிதங்களை மேம்படுத்துவது இதில் அடங்கும். இந்த கருத்திட்டம் தீ அபாயங்களைக் குறைக்கும். பணியிடத்தின் பாதுகாப்பு இணக்கத்தை உறுதிசெய்யும். மேலும் முக்கியமான உற்பத்தி சொத்துக்களையும் பாதுகாக்கும்.

**அ) கொள்திறனை அதிகரிக்க எண்ணெய் சேமிப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

தற்போதுள்ள எண்ணெய் சேமிப்பு வசதிகளின் சேமிப்பு கொள்திறன் அதிகரிக்கப்பட்டு, பாதுகாப்பு மேம்படுத்தப்படும் பொருட்டுசுற்றாடல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இந்த வசதி நவீனமயமாக்கப்படும். இதில் குழாய்களில் மாற்றங்கள், அரிப்பு பாதுகாப்புக்கான வண்ணம் தீட்டுதல், கட்டமைப்பு மேம்பாடுகள் என்பன அடங்கும். மேம்படுத்தப்பட்ட வசதி செயற்பாடுகளின் நம்பகத்தன்மை இதனால் மேம்படுவதோடு எண்ணெய்களை கையாளுதல் மற்றும் சேமிப்பு தொடர்பலி சாத்தியமான ஆபத்துகளும் குறையும்.

**3.12 சபுகஸ்கந்தையில் கால்வனைசிங் மற்றும் / பேப்ரிகேஷன் பொறிகள்**

1999 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட LTL கால்வனைசர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், LTL ஹோல்டிங்ஸின் துணை நிறுவனமாகவும், இலங்கையின் முன்னணி எ/கு பாதுகாப்பு தீர்வுகளை வழங்கும் நிறுவனமாகவும் உள்ளது. இந்த நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றவாறு ஹாட்-டிப் கால்வனைசிங், தெர்மல் ஸ்ப்ரே மெட்டலைசிங், டுப்ளக்ஸ் பூச்சு மற்றும் எ.்.கு உற்பத்தி சேவைகளில் நிபுணத்துவம் பெற்றது. நவீன CNC உற்பத்தி வசதிகள் மற்றும் மேம்பட்ட கால்வனைசிங் தொழில்நுட்பத்துடன், LTL கால்வனைசர்ஸ் முக்கியமான உட்கட்டமைப்பு, மின் பரிமாற்றம்,மீள புதுப்பிக்கத்தக்க சக்தி, கடல்சார் மற்றும் போக்குவரத்துத் துறை திட்டங்களுக்கு நீண்டகால அரிப்பு பாதுகாப்பை உறுதி செய்கிறது.

**ஜனவரி–ஆகஸ்ட் 2025 காலகட்டத்தில், நிறுவனம் அதன் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்ததுள்ளதுடன், முக்கிய முயற்சிகளில் பின்வருவன அடங்கும்:**

- மன்னாரில் 100 மீட்டர் மெட் மாஸ்ட் கோபுரத்தை நிறைவு செய்தல் - இலங்கையின் மிக உயரமான மெட் மாஸ்ட், கடுமையான கடலோர நிலைமைகளில் நீண்டகால செயற்திறனுக்காக வடிவமைக்கப்பட்டு, நாட்டின் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி மேம்பாட்டு முயற்சிகளை வலுப்படுத்துதல்.
- உள்நாட்டு திட்ட இலாகாவை வலுப்படுத்துதல், சாலை மேம்பாடு, மின்சாரம் மற்றும் தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கான கால்வனைசிங் மற்றும் உற்பத்தி பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்துதல் மற்றும் நகரஅபிவிருத்தி அதிகார சபை (UDA) மற்றும் CIDA உடன் பதிவுசெய்யப்பட்ட வழங்குனராக மாறுதல்.

- CEB,RDA,SLPA மற்றும் தனியார் துறை பொறியாளர்கள் போன்ற முக்கிய பங்குதாரர்களுடன் விழிப்புணர்வு அமர்வுகள் மூலம் தொழில்நுட்ப அறிவு பகிர்வை விரிவுபடுத்துதல் மற்றும் IESL இல் CPD பயிற்சி திட்டத்தை நடத்துதல்.



*Galvanizing Plant at Sapugaskande*

**உற்பத்தி விபரங்கள்:**

2025.01.01 ஆம் திகதி முதல் 2025.08.31 ஆம் திகதி வரையான காலத்தில் பதிவுசெய்யப்பட்ட உற்பத்திகள் பின்வருமாறு:

| உற்பத்தி வெளியீடு கல்வனைசிங் ஆலை (மெ.தொ) | | |
|---|---|---|
| **வாடிக்கையாளர்** | **2025 ஜனவரி– ஆகஸ்ட்** | **2024 ஜனவரி– ஆகஸ்ட** |
| இலங்கை மின்சார சபை | 774 | 1241 |
| ஏற்றுமதி | 0 | 0 |
| உள்நாடு | 2830 | 3929 |
| மொத்தம் | **3604** | **5170** |

| உற்பத்தி வெளியீட்டு உற்பத்திஆலை | | |
|---|---|---|
| **வாடிக்கையாளர்** | **2025 ஜனவரி– ஆகஸ்ட்** | **2024 ஜனவரி– ஆகஸ்ட** |
| இலங்கை மின்சார சபை | 150 | 243 |
| ஏற்றுமதி | - | 71 |
| உள்நாடு | 266 | 423 |
| மொத்தம் | 416 | 682 |

**LTL கால்வனைசர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டின் சராம்சம்**

- உகந்த செயற்திறனை உறுதி செய்வதற்கும், செயலிழப்பு நேரத்தைக் குறைப்பதற்கும், உற்பத்தியில் உயர்தர தரங்களை நிலைநிறுத்துவதற்கும் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவ்வப்போது கெட்டில் மாற்றங்கள் மற்றும் எரிப்பு அமைப்பு மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- வணிகத்தில் ஏற்பட்ட சரிவைத் தணிக்க, நிறுவனம் ஆயத்த தயாரிப்பு கேள்விமனு திட்டங்களைத் தொடர முடிவு செய்தது. ஆகஸ்ட் மாதத்திற்குள், நிறுவனம் பல்வேறு துறைகளில் இருபத்தைந்து இதுபோன்ற கேள்விமனுக்களில் தீவிரமாக பங்கேற்று, எட்டு பிரிவுகளில் மிகக் குறைந்த கேள்விமனுவை வெற்றிகரமாகப் பெற்றது.

**CSR & ESG செயற்பாடுகள்:**

- தாது 2.0 (தென் மாகாணம், ஆகஸ்ட் 2025): நிதி கல்வியறிவு கொண்ட 25 பெண் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளித்தல்
- சுத்தமான நீர் திட்டம் (பொலன்னறுவை, மே 2025): போகஸ்வெவ மகா வித்யாலயாவிற்கு நீர் வடிகட்டி நன்கொடை
- நம்பிக்கையின் விதைகள் - සෞභාග්‍ය සුවඳ, ஆகஸ்ட் 2025): 96 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உலர் ரேஷன் பொதிகள்
- IESL புத்தாண்டு, விஹாரமஹாதேவி முன்னாள் ஆசிரியர்கள் சங்கம், CEB நலன்புரி சங்கம் மற்றும் பொசன் கலாச்சார நிகழ்வுகளுக்கான நிதியுதவிகள்.

**2025–2026 ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட திட்டங்கள்**

**தொழில்நுட்பம் மற்றும் திறன் அபிவிருத்தி**

- சபுகஸ்கந்தையில் உள்ள உற்பத்தி ஆலை வளாகம். - 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இருந்து, 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் படிப்படியாக பூர்த்திசெய்யப்படும்.
- உற்பத்தி திறனை அதிகரிக்கவும், செயற்திறனை மேம்படுத்தவும், சர்வதேச தர இணக்கத்தை உறுதிப்படுத்தவும்

மேம்பட்ட CNC உற்பத்தி இயந்திரங்கள், கால்வனைசிங் ஆலை மேம்படுத்தல்கள் மற்றும் பூச்சு தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்

**Turnkey சேவை விரிவாக்கம்**

- 2025-26 முழுவதும் தொடர்ச்சியான- நாடு தழுவிய உட்கட்டமைப்பு மற்றும் எரிசக்தி துறை திட்டங்கள்
- வடிவமைப்பு, உற்பத்தி, கால்வனைசிங், தளவாடங்கள் மற்றும் நிறுவல் சேவைகளை ஒரே திட்ட முகாமைத்துவ கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைப்பதன் மூலம் "ஒரே இடத்தில் தீர்வு" மாதிரியை வலுப்படுத்துதல்.

**3.13 ஏசியாடிக் எலக்ட்ரிகல் என்ட்ஸ்விட்ச்கியர் ப்ரைவட் லிமிடெட், புது தில்லி, இந்தியா**

**ஆசியாடிக் எலக்ட்ரிக்கல் என்ட்ஸ்விட்ச்கியர் ப்ரைவட் லிமிடெட்: செயல்திறன் சிறப்பம்சங்கள் மற்றும் மூலோபாயத் திட்டங்கள்**

LTL ஹோல்டிங்ஸ் (PVT) லிமிடெட்டின் முழு உரிமையாளரான **ஏசியாடிக் எலக்ட்ரிக்கல் அன் ஸ்விட்ச்கியர் (PTE) லிமிடெட்,** அறிக்கையிடல் காலத்தில் நிலையான வளர்ச்சியை கண்டுள்ளது. உறுதியான நிதி நிலையுடன், ஏசியாட்டிக் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2025 ஆகஸ்ட் மாதம் வரை INR 1134.17 மில்லியன் பாராட்டத்தக்க விற்பனை வருவாயைப் பெற்றது (ஏற்றுமதி: INR 455.13 மில்லியன் உள்நாட்டு: INR 679.04 மில்லியன்). நிறுவனம் நிலையான செயல்திறனைக் காட்டி, வரிக்கு முந்தைய நிகர இலாபத்தையும் (NPBT) பேணியது.

குறிப்பிடத்தக்க வகையில், 2023/24 நிதியாண்டில், ஏசியாடிக் அதன் அதிகபட்ச வருவாயான INR1.49 பில்லியனைப் பதிவு செய்தது.இது அதன் பயணத்தில் ஒரு வரலாற்று மைல்கல்லைக் பிரதிபலிக்கின்றது.

- மத்திய கிழக்கு:DEWA (டுபாய்), AADC/ ADEWA (அபுதாபி), MEW (ஓமன் மற்றும்குவைத்), EWA (பஹ்ரைன்), கஹ்ராமா (கத்தார்), PEC யெமன்.
- ஆப்பிரிக்கா: எஸ்காம் (தென்னாப்பிரிக்கா), KPLC (கென்யா), REA- உகாண்டா, EEU (எத்தியோப்பியா).
- ஆசியா மற்றும்ஐரோப்பா: EAC (சைப்ரஸ்), இமிச (இலங்கை)

அங்கீகாரங்களுக்கு அப்பால், ஏசியாடிக் அதன் தயாரிப்புகளை UK, உகாண்டா, கானா, நேபாளம், பங்களாதேஷம் மற்றும் பல சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

இந்தியாவில், JVVNL (ஜெய்ப்பூர்), AVVNL (அஜ்மீர்), JdVVNL (ஜோத்பூர்), BEST (மும்பை), BSES (டெல்லி), TPDDL (டெல்லி), MPPVVC (மத்தியப் பிரதேசம்), BESCOM (பெங்களூர்), KSEB (கேரளா), PUVVNL உத்தரப் பிரதேசம் அடங்கலாக அனைத்து முக்கிய மின்சார விநியோக நிறுவனங்களுக்கும் ஏசியாட்டிக் அதன்சேவையை வழங்குகின்றது.

மேலும், நிறுவனம் அரச மற்றும் தனியார் துறைக் கருத் திட்டங்களுக்கும் அதன் சேவையை வழங்குகின்றது. உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் மற்றும் நேரடி வாடிக்கையாளர்கள் மூலம் நடுத்தர மின்னழுத்த (MV) பெனல்களையும் வழங்குகின்றது.

**சிறந்த சாதனைகள்**

- **லீன் தொழில்நுட்ப செயல்படுத்தல்:** பொருட்களைக் குறைத்தல், வீணாவதைக் குறைத்தல் மற்றும் உற்பத்தி வேகத்தை துரிதப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் லீன் உற்பத்தி நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த முயற்சிகளுடன், ஏசியாடிக் இப்போது நிலையான MV பெனல்களுக்கு 7 நாட்கள் மற்றும் தரமற்ற பெனல்களுக்கு 21 நாட்கள் விநியோக காலக்கெடுவை இலக்காகக் கொண்டுள்ளது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கையேடு கன்வேயர் ஏற்கனவே மனித-நேரங்களை 35% வீத அளவுக்குகுறைத்துள்ளது.இந்த கண்டுபிடிப்பை LV வரிகளுக்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. காலப்போக்கில், உற்பத்தி செயல்திறனை மேலும் மேம்படுத்துவதற்காக நிறுவனம்

அரை தானியங்கி முறைமைகளுக்கு மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **வாடிக்கையாளர் ஈடுபாட்டு சிறப்பு:** முதன்முறையாக, ஏசியாடிக் நிறுவனம் இலங்கையில் 2025 ஆம் ஆண்டு வாடிக்கையாளர் சந்திப்பொன்றை நடத்தியது.இது வாடிக்கையாளர்களுக்கு அழகிய இடங்களுக்கு ஒரு சுற்றுலாவையும் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் அதிநவீன வசதிகளைப் பார்வையிடுவதையும் இணைக்கக்கூடிய ஒரு தனித்துவமான அனுபவத்தை வழங்கியது. இந்த நிகழ்வு ஏசியாடிக் நிறுவனத்தின் வலுவான தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவில் வாடிக்கையாளர் நம்பிக்கையை வலுப்படுத்தியது. தலைமை நிர்வாக அதிகாரி தலைமையில் நடைபெற்ற ஒரு விஷேட விருது வழங்கும் விழா, பல பிரிவுகளிலும் உள்ள வாடிக்கையாளர்களை மதிக்கும் முகமாக நடத்தப்பட்டது - விசுவாசத்தை வளர்ப்பது மற்றும் நீண்டகால கூட்டாண்மைகளை வலுப்படுத்துவது இதன் குறிக்கோளாக இருந்தது.

- **மீள புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நுழைதல்:**
ராஜஸ்தானில் ஏசியாடிக் நிறுவனத்தின் இரண்டு சூரிய மின் உற்பத்திக் கருத் திட்டங்கள் (8 மெ.வொ. ஒன்றிணைந்த சக்தி) நிறைவடையும் தருவாயில் உள்ளன. மேலும் அவை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதஇறுதிக்குள் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முக்கிய மைல்கல் முயற்சி, ஏசியாடிக் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் நுழைவதைக் குறிக்கின்றது.இது ESG உறுதிமொழிகளை ஆதரிக்கின்றது. மேலும் கார்பன் தடயங்களையும் குறைக்கின்றது. வெளிநாட்டு உரிமையின் காரணமாக ஆரம்ப நிதி சவால்கள் இருந்தபோதிலும், BIP-சிங்கப்பூர், LTL டிரான்ஸ்ஃபார்மர்கள், LTL கல்வனைசர்கள் மற்றும் டுவுடு ஹோல்டிங்ஸ் ஆகியவற்றின் பங்கு உட்செலுத்துதல் மூலம் கருத் திட்டங்களுக்கு வெற்றிகரமாக நிதி வழங்கப்பட்டது. இந்த முதல் கருத் திட்டத்தின் மூலமாக, ஏசியாடிக் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒரு முக்கிய பங்காளியாக மாற நன்கு உறுதிபூண்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் அதன் நிலையான சக்தி படிப்படியாக விரிவுபடுத்தும் திட்டங்களைக் கொண்டு காணப்படும்.

- இந்தக் காலகட்டத்தில், பிவாடியில் உள்ள E-92 இல் புதிதாக குத்தகைக்கு விடப்பட்ட பொறித்தொகுதியில் ஏசியாடடிக்கின் செயற்பாடுகள் தொடங்கின. இந்த நவீன வசதி, புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட லேசர் இயந்திரம், ஏற்கனவே உள்ள CNC முரோட்டோ -அமடா இயந்திரங்கள் அடங்கலாக அதிநவீன உற்பத்தி இயந்திரங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது. பஸ்பார் இணைப்புகளை துல்லியமாக வெட்டுவதற்கும் துளைப்பதற்கும் CNC செப்பு உற்பத்தி இயந்திரங்களும் இதில் உள்ளன. ஒரு புதிய முன்சிகிச்சை மற்றும் பவுடர் பூச்சு பொறித்தொகுதி ஆகியன நிறுவுகைக் கட்டத்தில் உள்ளன. அது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏனைய திட்டங்கள்

உலக சுற்றாடல் தினமான 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி, சுற்றாடல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக ஆசியக் குழு மரம் நடும் இயக்கத்தில் பங்கேற்றது. இந்த முயற்சி சுற்றாடல் சமநிலையைப் பாதுகாப்பதில் மரம் நடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. மேலும் சுற்றாடலுக்கு உதவுவதில் ஆசியக் குழுவின் உறுதிப்பாட்டை பிரதிபலித்துக் காட்டியது.

### 2025–26ஆம் ஆண்டுகளுக்கான உத்தேச திட்டங்கள்

விரிவாக்கம், புதுமை மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டைச் சூழக் கட்டமைந்த ஒரு கவனத்தைச் செலுத்துகின்ற உத்தியின் மூலம் ஏசியாடிக் அடுத்த கட்ட அபிவிருத்திற்கு தயாராகி வருகின்றது. முக்கிய முயற்சிகளில் பின்வருவன

**அடங்குகின்றன:**

அ) தயாரிப்பு இலாக்கா விரிவாக்கம்
ஆ) உள்நாட்டு சந்தையில் ஊடுருவுதல்
இ) பெருநிறுவன பிராண்டிங்
ஈ) சக்திக்கொள்திறன் விரிவாக்கல்
உ) பூகோள சந்தை விரிவாக்கல்

### 3.14 கற்றல் மற்றும் அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள்

- **உள்வாரிப் பயிற்சி நிலைகள்**

இலங்கையின் வணிகப் பிரிவுகளில், முக்கியமாக எந்திரவியல், மின்சாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த 88 பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- **2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்குரிய ஒட்டுமொத்த குழு L-D புள்ளிவிவரங்கள்**

| மொத்த கற்றல் மணித்தியாலம் | மொத்த முதலீடு (இ.ரூ.) | நடைபெற்ற பயிற்சிகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 6863.1 | 23,877,632.54 | 2786 |

- LTL ஹோல்டிங்ஸ், முதலாளி பிராண்டை மேம்படுத்துவதற்கும், திறன் விருத்தி கட்டமைப்பில் அதன் திறமை உத்தியாக முதலீடு செய்வதற்கும் தொழில் கண்காட்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

- **CSR செயற்பாடுகள் 'துய இலங்கை'** நிறுவனம் 2025 - 2027 ஆம் ஆண்டிற்குள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 10,000 மீ மரங்களை நடுவதற்கான "தூய இலங்கை" முன்முயற்சியுடன் இணைந்து "தச ஆயிரம் மீ துரு" (Dasa Dahasak Mee Thuru දස දහසක් මී තුරු) என்ற ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் தற்போது 1700 மரங்கள்






நடப்பட்டுள்ளன (கலபிதர வெவ, மொனராகலை சுற்றுப்புறங்கள்).

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இயந்திர பொறியியல் துறையின் இளம் பொறியாளர்களின் குழுவான "டீம் /பால்கன்இ" க்கு, இங்கிலாந்தில் நடைபெற்ற I MechE /பார்முலா மாணவர் போட்டியில் பங்கேற்பதற்காக, 2வது தலைமுறை காரை தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் உதிரி பாகங்களை வாங்குவதற்காக, நிறுவனம் சில்வர் பிளஸ் ஸ்பான்சர்ஷிப்பை வழங்கியது.

- இந்த நிறுவனம், அதன் துணை நிறுவனமான டுவுடு டிரான்ஸ்.ஃ.பார்மர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை மின்சார சபை (இமிச) ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து, இலங்கைத் தேசிய வைத்தியசாலையின் (NHSL) மின்சார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) முயற்சியின் முதல் கட்டத்தைத் தொடங்கியுள்ளது. அறுவை சிகிச்சைகள், மாற்று

அறுவை சிகிச்சைகள் மற்றும் தீவிர அறுவைச்சிகிச்சை பிரிவுகள் அடங்கலாக முக்கியமான செயற்பாடுகளுக்கு தடையற்ற மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்தல், வைத்தியசாலை முழுவதும் மின் விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் எதிர்பாராத மின் தடைகளைத் தடுத்தல், அத்துடன் அதே வேளையில் காலாவதியான உபகரணங்களிலிருந்து எழுகின்ற பாதுகாப்பு அபாயங்களைக் குறைத்தல் ஆகிய முதன்மை நோக்கங்களுடன், வைத்தியசாலையின் காலாவதியான மின் முறைமைகளை நவீனமயமாக்கி மாற்றுவதற்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 4. நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி நிலை

### 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான நிதி சிறப்பம்சங்கள் உட்பட, நிதியாண்டில் LTL ஹோல்டிங்ஸ் குழும நிறுவனங்களின் செயற்திறன்

2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் ஈட்டப்பட்ட மொத்த லாபம், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 6% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. 2025 ஜூன் மாதத்தில் வணிக ரீதியாகச் செயல்படத் தொடங்கிய 350 மெகாவாட் சோபாதனவி RLNG மின் உற்பத்தி நிலையத்தின் முழு செயற்பாட்டுடன், நிதியாண்டின் இறுதியில் இந்தப் போக்கு சுமார் 20% ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதிகள் மீது இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் சேர்ந்து, குறைந்துபோன அந்நியச் செலாவணி நிலைமை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது, இது குழும நிறுவனங்களின் செயற்திறனை மேம்படுத்த இறக்குமதிகளை கணிசமாக எளிதாக்கியுள்ளது.

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளில் நிதியியில் செயற்திறன் சாராம்சம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:-

| விபரம் | 2025ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 | 2024 ஜனவரி முதல் 2024 டிசம்பர் வரை | 2023 ஜனவரி முதல் 2023 டிசம்பர் வரை |
|---|---|---|---|
| வருமானம் | (ரூ.மில்லியன்) | (ரூ.மில்லியன்) | (ரூ.மில்லியன்) |
| உற்பத்தி மற்றும் இதர சேவைகள் | 10,757 | 15,387 | 13,906 |
| மின் உற்பத்தி | 32,394 | 43,343 | 42,717 |
| மொத்தம் | **43,150** | **58,730** | **56,623** |
| மொத்த லாபம் | | | |
| உற்பத்தி மற்றும் இதர சேவைகள் | 2,360 | 4,152 | 4,678 |
| மின் உற்பத்தி | 8,562 | 14,184 | 14,552 |
| மொத்தம் | **10,922** | **18,336** | **19,230** |

### பங்கு வருமானம் – 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை

நிறுவனம் தனது முதலீடுகளிலிருந்து பங்கு வருமானத்தைப் பெற்றது, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், கீழே பட்டியலிடப்பட்டுள்ள விவரங்களின்படி ரூ. 5,715,600,909.00 தெகையை நிறுவனத்திற்கு மிகவும் தேவையான நிதியை ஈட்டியுள்ளது.

| எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் குழுமத்தால் ஈட்டப்பட்ட பங்கு வருமானம் | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | தொகை. ரூ |
| லக்தனவி லிமிடெட் | 4,084,965,451 |
| டுவுடு கால்வனைசர்ஸ் (PVT) லிமிடெட் | 1,000,000,000 |
| ஆசியாடிக் எலக்ட்ரிக்கல் மற்றும் ஸ்விட்ச்கியர் (தனியார்) லிமிடெட் | 15,383,454 |
| பவந்தனவி (PVT) லிமிடெட் | 25,500,007 |
| டுவுடு டிரான்ஸ்ஃபார்மர்ஸ் (PVT) லிமிடெட் | 500,000,000 |
| நிவிது (PVT) லிமிடெட் | 89,751,997 |
| மொத்தம் | **5,715,600,909** |

## 5. 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

### (அ) ஆப்பிரிக்காவின் தான்சானியாவில் மின்மாற்றி உற்பத்தி வசதியின் விரிவாக்கம்

இறுதி வாடிக்கையாளரான கிராமப்புற எரிசக்தி நிறுவனம் (REA) மற்றும் தான்சானியா மின்சார விநியோக நிறுவனம் லிமிடெட் (TANESCO) அதிகாரிகளின் பங்கேற்புடன் இரண்டு தொழிற்சாலை ஏற்றுக்கொள்ளல் சோதனைகள் (FATகள்) வெற்றிகரமாக முடிந்த பிறகு, LTL மின்மாற்றிதான்சானியா, 375 மின்மாற்றிகளுக்கான முதல் மின்மாற்றி கட்டளையில் இருந்து 1 லாட் மற்றும் 2 லாட் 124 மின்மாற்றிகளை வெற்றிகரமாக அனுப்பியுள்ளது. அடுத்த 137 மின்மாற்றிகள் ஜுலை 2025 இறுதிக்குள் FATக்கு திட்டமிடப்பட்டுள்ளன, மீதமுள்ள 114 யூனிட்கள் செப்டம்பர் 2025 இறுதிக்குள் அனுப்ப தயாராக உள்ளன.

கிழக்கு ஆப்பிரிக்க பிராந்தியத்தில் கேள்விமனுக்களுக்கு வலுவான மற்றும் வழக்கமான வெற்றிகரமான கேள்விமனுதாராராக இருந்து, இதுவரை பெற்ற அனுபவம் ஆப்பிரிக்காவில் அதன் இருப்பை நிலைநிறுத்த வழிகளைத் திறக்கும் என்று LTL ஹோல்டிங்ஸ் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே, உயர் மட்டப் போட்டியில் ஊடுருவி, கேள்விமனுக்களை வெல்வதற்கான திறனைப் பயன்படுத்த ஒரு உறுதியான விலை நிர்ணய உத்தியைக் கொண்டு வர நிறுவனம் விரும்புகிறது, இதற்காக குறைந்த விலை மின்மாற்றி உற்பத்தி அவசியம் ஆகும்.

### (ஆ) கெரவலப்பிட்டி – சஹஸ்த்னாவி மின் உற்பத்தி நிலையத்தில் 350 மெகாவாட் RLNG – II ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தித் திட்டங்களின் அபிவிருத்தி.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான (CPC) எரிபொருள் விநியோக ஒப்பந்தம் (FSA), இலங்கை அரசாங்கத்துடனான அமலாக்க ஒப்பந்தம் (IA) மற்றும் BOI உடனான முதலீட்டு சபை ஒப்பந்தம் (BOI) போன்ற பிற திட்ட தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு செயலாக்கப்படுகின்றன.

# அத்தியாயம் 10

# இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 1 அறிமுகம்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் (CPC) பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், சுத்திகரித்தல், வழங்கல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு இதற்கான சட்ட ஏற்பாடுகளையும் வழங்குகின்றது.

## 2. 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் முன்னேற்றங்கள

நாட்டிற்குத் தேவையான பெற்றோலியப் பொருட்களின் தேவையில் பெரும்பகுதியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்தும் மற்றும் உள்நாட்டு வழங்கல் மூலமும் பூர்த்திசெய்கிறது. மேலும், சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தில் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயைச் சுத்திகரிப்பதன் மூலம் உள்நாட்டில் எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் இவ் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

### 2.1 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய் பொருட்களின் இறக்குமதிகள்

நாட்டின் பெற்றோலிய பொருட்களின் பிரதான உள்நாட்டு இறக்குமதியாளர் என்ற வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டின் மொத்தக் கேள்வியில் 52% மான பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோக்கிக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியுரிமையாளர் என்ற வகையில் 1969 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல் மற்றும் மசகு எண்ணெயை வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதோடு மொத்த உள்நாட்டு பெற்றோலியக் கேள்வியில் 27% தத்தை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து வழங்குகின்றது. இதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டு முதல் 2025.09.30 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் கீழே அட்டவணை 10.1 இல் விரிவாக தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.1**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்**
**(2022–2025.09.30)**


| உற்பத்தி வகை | தொகை (மெ.தொ) (‘000) | | | |
|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2024 | 2025.09.30 |
| 1.சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிப் பொருட்களின் இறக்குமதிகள | | | | |
| • ஓட்டோ டீசல் | 1,267 | 695 | 547 | 408 |
| • சுப்பர் டீசல் | 128 | 24 | 27 | 15 |
| • பெற்றோல் 92 ஒக்டேன் | 888 | 794 | 586 | 466 |
| • பெற்றோல் 95 ஒக்டேன் | 46 | 28 | 20 | 10 |
| • ஜெட் A-1 | 269 | 168 | 316 | 219 |
| • குறை சல்பா உலை எண்ணெய் (180 CST) | 124 | 124 | 35 | 0 |
| • நெப்தா | - | 16 | - | - |
| **மொத்தம்** | **2,723** | **1,849** | **1,531** | **1,118** |
| 2. மசகு எண்ணெய் இறக்குமதி | | | | |
| • மசகு எண்ணெய் | 743 | 1,666 | 1,519 | 1,319 |
| **மொத்த இறக்குமதி** | **3,466** | **3,515** | **3,050** | **2,437** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு முதல் 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை முறையே 2,723.000 மெற்றிக் தொன் மற்றும் 1,849,000 மெற்றிக் தொன் மற்றும் 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 1,531,000 மெற்றிக் தொன் ஆகும். அதேவேளை, 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை 1,118,000 மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுளளன.

மேலும், கடந்த வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யோடு ஒப்பிடுமிடத்து, 2022 ஆம் ஆண்டில் 743,000 மெற்றிக் தொன், 2023 ஆம் ஆண்டில் 1,666,000 மெற்றிக் தொன் 2024 ஆம் ஆண்டில் 1,519,000 மெற்றிக் தொன் மற்றும் 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை 1,319,000 மெற்றிக் தொன்னும் இறக்குமதி செய்யப்பட்டன.

**வரைபு 10.1**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்கள்**
**(2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை)**




**மூலம்:** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.2 சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் பங்களிப்புக்கள்

சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் நாளொன்றுக்கான சுத்திகரிப்புத் திறன் 5,300 மெற்றிக் தொன் ஆவவேதோடு, ஆண்டுக்கு அதிகபட்சமாக 1,934,500 மெற்றிக் தொன் சுத்திகரிப்பு திறனையும் கொண்டுள்ளது. 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை 1,355,201 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளதுடன், இது அதிகபட்ச சுத்திகரிப்பு திறனில் 70% ஆகும்.

2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை சுத்திகரிப்பு நிலையம் 08 பெற்றோலியப் பொருட்களை உள்ளடக்கியதாக மொத்தம் 1,287,215 மெற்றிக் தொன் பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளதுடன் இது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த உள்நாட்டு வழங்கலில் கிட்டத்தட்ட 53% ஆகும். சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களில் ஓடோ டீசல்,உலை எண்ணெய், ஜெட் A-1, பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் மண்ணெண்ணெய் என்பன பிரதான பெற்றோலியப் பொருட்கள் ஆகும். சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தால் சத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் விரிவாக தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 10.2
## சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் (மெற்றிக் தொன்)
## (2022 – 2025.09.30 ஆம் திகதி வரை)

| ஆண்டு | 2021 | 2022 | 2023 | 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **மசகு எண்ணெய் உள்ளீடு** | **529,773** | **1,677,033** | **1,528,719** | **1,355,201** |
| **உற்பத்திகள்** | | | | |
| • பெற்றோல் 92 ஒக்டேன் | 38,666 | 171,186 | 150,566 | 138,367 |
| • லங்கா ஓட்டோ டீசல் | 128,165 | 505,675 | 443,933 | 384,312 |
| • உலை எண்ணெய் | 25,289 | 49,484 | 72,618 | 58,490 |
| • உலை எண்ணெய் 800 | 57,346 | 233,652 | 207,434 | 196,559 |
| • மண்ணெண்ணெய் | 87,196 | 379,015 | 345,447 | 388,480 |
| • நெப்தா | 107,001 | 103,111 | - | - |
| • தாார் | - | - | 82,000 | - |
| • நெப்தா | 30,835 | 129,058 | 121,449 | 116,139 |
| • லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 2,690 | 1,524 | 1,267 | 515 |
| • ஜெட் A-1 | - | - | - | - |
| • சோல்வன்ட்(SBP) | 5,687 | 23,800 | 20,815 | 20,654 |
| **மொத்த வெளியீடு** | **482,875** | **1,596,505** | **1,445,529** | **1,287,215** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## அட்டவணை 10.3
## 2025.09.30 ஆம் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்

| உற்பத்திகள் | இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை (மெ.தொ) | சுத்திகரிப்பு நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை (மெ.தொ) | மொத்தம் (மெ.தொ) |
|---|---|---|---|
| பெற்றோல் 92 ஒக்டேன் | 465,751.15 | 138,367 | 604,118.15 |
| பெற்றோல்95 ஒக்டேன் | 10,277.91 | - | 10,277.91 |
| லங்கா ஓட்டோ டீசல் | 408,450.03 | 384,312.35 | 792,762.38 |
| லங்கா சுப்பர் டீசல் | 15,098.09 | - | 15,098.09 |
| மண்ணெண்ணெய் | - | 58,490 | 58,490 |
| ஜெட் **A**-1 | 219,142.59 | 196,559 | 415,701.59 |
| உலை எண்ணெய் 800 சுப்பர் | - | 388,480 | 388,480 |
| கப்பலுக்கான உலை எண்ணெய் 800 | - | - | - |
| குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST) | - | - | - |
| நெப்தா | - | 116,139 | 116,139 |
| சோல்வன்ட்(SBP) | - | 515.00 | 515.00 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு(LP Gas) | - | 20,654 | 20,654 |
| **மொத்தம்** | **1,118,719.77** | **1,287,215** | **2, 422,236.12** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.3 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட மொத்த பெற்றோலியப் பொருட்கள்

அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப, வீட்டுத்துறை மற்றும் வணிகத் துறைகளில் மட்டுமின்றி, மின் உற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழிற்துறைகள்,மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளிலும் எரிபொருள் நுகர்வு அதிகரித்துள்ளது. இதற்கிணங்க, தற்போதுள்ள பெற்றோலியப் பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனைத்துத் தொழிற்துறைகளிலும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதினைந்து (15) வகையான பெற்றோலியப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. 2023 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனைசெய்யப்பட்ட மொத்த எரிபொருள் விற்பனையை தொடர்பான விபரங்கள் அட்டவணை 10.4 இல தரப்பட்டுள்ளது. இவ் விவரங்களின்படி, 2025 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை மொத்த எரிபொருள் விற்பனை 2,506,953 மெற்றிக் தொன்னாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.4**
**மொத்த எரிபொருள் விற்பனை**
**(2023–2025.09.30 ஆம் திகதி வரை)**

| உற்பத்தி வகைகள் | மொத்த விற்பனை (மெ.தொ) | | |
|---|---|---|---|
| | 2023 | 2024 | 2025.09.30 ஆம் திகதி வரை உள்ளவாறான |
| பெற்றோல் 92ஒக்டேன் | 982,939.25 | 804,419 | 624,797 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 29,042.01 | 20,893 | 18,509 |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,257,303.75 | 1,025,160 | 770,631 |
| லங்கா சுப்பர் டீசல் | 29,809.39 | 23,531 | 20,121 |
| லங்கா மண்ணெண்ணெய் | 82,724.80 | 134,580 | 110,624 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய | 1,828.13 | 4,134 | 6,497 |
| லங்கா இரசாயன நெப்தா | 120,093.96 | 101,541 | 88,618 |
| லங்கா உலை எண்ணெய் 800 | 12.51 | 6 | - |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | 168,800.54 | 116,652 | 75,348 |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்)) | 237,192.23 | 155,816 | 86,649 |
| லங்கா சுப்பர் உலை எண்ணெய் | 117,198.22 | 155,857 | 118,607 |
| ஜெட் A-1 | 377,456.72 | 468,158 | 374,699 |
| லங்கா சோல்வன்ட்(SBP) | 1,362.94 | 1,161 | 751 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 23,877.74 | 19,676 | 19,918 |
| லங்கா AV வாயு | 120.67 | 132 | 108 |
| **மொத்தம்** | **3,429,762.86** | **3,031,716** | **2,506,953** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.4 மின்சார உற்பத்தி நிலையங்களிற்கான விற்பனை

மின்சார உற்பத்திக்கான எரிபொருளை வழங்கும் தனியுரிமை நிறுவனமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செயற்படுவதோடு, இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் மின் நிலையங்களிற்கும் தேவையான எரிபொருளை வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டு முதல் -2025.09.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியல் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்த எரிபொருளின் விபரங்களை அட்டவணை 10.5 காட்டுகிறது. இதற்கிணங்க, 2025.09.30 ஆம் திகதி வரை 402,730 லீற்றர் எரிபொருள் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.5**
**மின்சார உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்ட எரிபொருட்கள்**
**(2022–2025.09.30 ஆம் திகதி வரை)**

| | இலங்கை மின்சார சபை (லீற்றர் '000') | | | | சுதந்திரமான மின்சார உற்பத்தியாளர் (லீற்றா '000') | | | மொத்தம் (லீற்றா'000') |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | லங்கா ஓட்டோ டீசல் | நெப்தா | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல் | லங்கா ஓட்டோ டீசல | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல | |
| **2022** | 86,769 | 46,781 | 181,103 | 12,147 | 115,205 | 123,369 | 5,678 | **571,051** |
| **2023** | 102,877 | 174,136 | 228,885 | - | 3,175 | 256,580 | - | **765,653** |
| **2024** | 44,647 | 147,251 | 206,467 | - | 16,609 | 164,335 | - | **579,309** |
| **2025.09.30** | 12,813 | 128,496 | 119,979 | | 23,839 | 117,603 | - | **402,730** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.5 விமான எரிபொருள் விற்பனை (ஜெட் A–1)

இலங்கையில் விமான எரிபொருளின் தனியுரிமை வழங்குனர் என்ற வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்தில் பிரதான இடத்தை வகிக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விமான எரிபொருள் பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA), இரத்மலானை விமான நிலையம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகிய நான்கு விமான நிலையங்களுக்கும் அதன் சேவைகளை வழங்குகின்றது.


2025.09.30 ஆம் திகதி வரை மொத்த விமான எரிபொருள் விற்பனை 373,668 மெற்றிக் தொன்னாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் நாளொன்றுக்கான சராசரியாக கேள்வி 1,369 மெற்றிக் தொன் ஆகும். 2022-2025.09.30 ஆம் திகதி வரை விமான எரிபொருள் விற்பனை தொடர்பான விவரங்கள் அட்டவணை 10.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.6**
**ஜெட் A–1 விற்பனைகள்**
**(2022– 2025.09.30 ஆம் திகதி வரை)**

| ஆண்டு | தொகை (மெ.தொ) |
|---|---|
| 2022 | 245,838 |
| 2023 | 377,608 |
| 2024 | 468,158 |
| 2025.09.30 | 373,668 |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

வரைபு 10.2
ஜெட் A–1 விற்பனை (2022– 2025.09.30 ஆம் திகதி வரை)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்




## 2.6 உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனை

தொழிற்துறை துறையில் உராய்வுநீக்கி எண்ணெய் தொழிற்துறை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் மூலோபாய வணிகங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது உற்பத்திகளை "Ceypetco" என்ற வர்த்தக குறியீட்டின் கீழ் விற்பனை செய்யப்படுவதுடன் இவர்களின் உற்பத்திகள் சர்வதேச தரங்களுக்கு நிகராக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2022 முதல் 2025.09.30 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெயின் விபரங்கள் கீழே உள்ள அட்டவணை 10.7 இல் விபரமாக தரப்பட்டுள்ளது. தரவுகளின் படி, 2022 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனையில் குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சி காணப்பட்டபோதும், 2023 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெயின் விற்பனை மீளெழுச்சி பெறத் தொடங்கியுள்ளது.

அட்டவணை 10.7
உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனைகள்
(2021–2024)

| ஆண்டு | தொகை (கி.லீ) |
|---|---|
| 2022 | 901 |
| 2023 | 1,310 |
| 2024 | 1,532 |
| 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு | 1,862 |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.7 விவசாய– இரசாயனப் பொருட்களின் விற்பனை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஐந்து தசாப்தங்களாக விவசாய- இரசாயனப் பொருட்களின் வாத்தகத்தில் ஈடுபட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் விவசாய- இரசாயன தொழிற்துறையின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பல வகையான பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் சில ஆண்டுகளுக்குப் பிறகு, பல வகையான பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகள் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும், விவசாய-

இரசாயனப் பொருட்களுக்கான புதிய பயன்பாடு மற்றும் விவசாயப் பொருட்களை பொதியிடல் செய்வதற்கான QR குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.8 உட்கட்டுமான அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

- **எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபித்தல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) முன்னெடுக்கப்பட்ட ஆய்வில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் தொடர்புடைய மின்சார வாகன (EV) மின்னேற்றல் நிலையங்களுக்கான அதிக தேவை இருப்பது தெரியவந்துள்ளது. இவ் ஆய்வின் அடிப்படையில், நாடு முழுவதும் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள எரிபொருள் நிலையங்களில் மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை நிறுவுவதற்கு CPC திட்டமிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கு, இவ் முயற்சிக்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 10 மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது, அவற்றில் 7 நிலையங்கள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன, மேலும் அவை வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றன. இவ் செயற்பாட்டு நிலையங்கள் காலி, திவுலப்பிட்டி, அதுல்கோட்டே, கடவத்த, களுத்துறை, ஹிக்கடுவ மற்றும் பேலியகொட ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.






*Establishing EV charging stations*

- **திருகோணமலை மேல்நிலைத் தாங்கிப் பண்ணையில் இல. 24 ஐ அபிவிருத்தி செய்தல்**

2025.09.30 ஆம் திகதியில் பின்வரும் பணிகள் பூர்த்திசெய்யப்படும்

- கட்டம் -1 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல (12 தாங்கிகள்)
- கட்டம் -2 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல (9 தாங்கிகள்)
- தீயணைப்பதற்கான நீர் தாங்கி மற்றும் கழிவு நீருக்காக தாங்கி ஆகியவற்றின் நிர்மாணம் (75%)
- TK 40 மற்றும் 41 தாங்கிகளை பழுதுபார்த்தல் (75%)

- **விமான எரிபொருள் நிரப்பும் முனையம் மற்றும் தற்போதுள்ள எரிபொருள் ஹைட்ரண்ட் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் எரிபொருள் ஹைட்ரண்ட் அமைப்பை நிறுவுதல் - (BIA), கட்டுநாயக்க.**

மொத்த திட்டச் செலவு ரூ. 7,970.691 மில்லியன் ஆகும், மேலும் அசல் திட்டக் காலம் 2018 ஜனவரி முதல் 2020 ஜூலை

வரை (30 மாதங்கள்), பின்னர் 2018 ஜனவரி முதல் 2024 நவம்பர் வரை (82 மாதங்கள்) திருத்தப்பட்டது. 2025.09.30ஆம் திகதியில் உள்ளவாறு திரட்டப்பட்ட செலவினம் ரூ. 7,207 மில்லியனாக உள்ளது மற்றும் 2025.09.30ஆம் திகதியில் உள்ளவாறு அடையப்பட்ட திரட்டப்பட்ட பௌதீக முன்னேற்றம் 92மூ ஆகும்.

### 3. 2026 ஆம் ஆண்டுக்கான இலக்கு

- ஜெட் A-1 குழாய் மற்றும் களஞ்சியத் தாங்கி திட்ட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல்

- திருகோணமலையிலுள்ள 24 தாங்கிகளை அபிவிருத்தி திட்டத்தின் முதலாம் கட்டத்தின் இரண்டாவது படிநிலையை ஆரம்பித்தல்

- நாடுபூராகவுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு ஊக்குவித்தல்

- எதிர்காலத்தில் நிகர பூஜ்ஜிய காபன் இலக்குகளை அடைய புதைபடிவ எரிபொருட்களுக்கான மாற்றீடாக பசுமை ஹைட்ரஜன், பசுமை அம்மோனியா, உயிரியல் எரிபொருட்கள், சூரிய சக்தி போன்ற மாற்று சக்தி வள எரிபொருள் தொழில்நுட்பங்களைப் தொடர்பான ஆய்வு மற்றும் திறன் விருத்தி

- தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மலசலகூட வசதிகளை மேம்படுத்துதல்.

- திரவ இயற்கை வாயுத் திட்டம் (LNG) வருங்கால ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுப்பது 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைபெறும், அதைத் தொடர்ந்து உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து 30 மாதங்களுக்குள் இத் திட்டம் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அத்தியாயம் 11

# வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

## 1 அறிமுகம்

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் கம்பனிச் சட்டம் பிரிவு 2(1) ன் கீழ் தாபிக்கப்பட்டு 1987ம் ஆண்டு 23 ஆம் கம்பனிச் சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாவோ மாற்றப்பட்டு புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 1310.∴8 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் கொள்கலன் தொகுதி ஆகிவற்றை உள்ளடக்குகின்ற பொதுப் பயன்பாட்டாளர் வசதிகளை வழங்கும் நிறுவனமாகவும் உள்ளது. இந் நிறுவனம் பங்குரிமை மூலதனத்தின் 2/3 பங்கை உரிமையாக் கொள்கின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாவதுடன் மீதி லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு உரித்தானதாகும்.

நாடு முழுவதும் பெற்றோலியப் பொருட்களின் பாதுகாப்பான முகாமைத்துவம் மற்றும் குறித்த நேரத்தில் எரிபொருளை விநியோகிப்பதற்கும் வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம் பொறுப்பாக உள்ளதுடன், வீடுகள், போக்குவரத்து வலையமைப்புகள், தொழிற்சாலைகள், விமான நிலையங்கள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களிற்கு தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்கிறது. இலங்கையின் மத்திய பெற்றோலிய விநியோக மையமாக அதன் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் தேவையான செயற்பாடுகளையும் மேற்கொள்கிறது.

## 2. 2025 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட பணிகளின் முன்னேற்றங்கள்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதோடு, உயர் தரமான எரிபொருளை பாதுகாப்பான முறையில் தொடர்ச்சியாக வழங்குவதிலும் பிரதான பங்கு வகிக்கின்றது. மேலும், வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தால் பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விநியோகிப்பது தொடர்பான முன்னேற்றங்களை இவ் அத்தியாயத்தில் விபரமாக தரப்பட்டுள்ளது.

### 2.1. எரிபொருள் களஞ்சியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், இரண்டு பிரதான முனையங்களான கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல களஞ்சியசாலைகளில் களஞ்சிய செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. இதற்கிணங்க, கொலன்னாவை முனையத்தில் 265,305 மெற்றிக் தொன்னையும் மற்றும் முத்துராஜவெல முனையத்தில் 208,738 மெற்றிக் தொன்னையும் ஆக மொத்தம் 471,043 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட எரிபொருள் களஞ்சிய வசதிகளை நாட்டில் பராமரித்து வருகின்றது. இதற்கிணங்க, 2025ஆம் ஆண்டில் இரண்டு பிரதான முனையங்கள் ஊடாக எரிபொருட்களை களஞ்சியப்படுத்துவதில் செயற்திறன் மிக்க பங்களிப்பைச் செய்துள்ளது. மேலும், இவ் கஞ்சியசாலைகளின் களஞ்சித் திறன்களின் விபரங்கள் அட்டவணை 11.1 இல் காட்டப்பட்டுள்ளது

அட்டவணை 11.1
கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் களஞ்சியசாலை தகவல்கள்– வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

| உற்பத்தி வகைகள் | தாங்கிகளின் எண்ணிக்கை | | களஞ்சியத் திறன் (மெ.தொ) | |
|---|---|---|---|---|
| | கொலன்னாவை முனையம் | கொலன்னாவை முனையம் | கொலன்னாவை முனையம் | கொலன்னாவை முனையம் |
| நெப்தா | 4 | - | 14,209 | - |
| பெற்றோல்95 ஒக்டேன் | 3 | - | 18,249 | - |
| பெற்றோல் 92ஒக்டேன் | 6 | 14 | 65,473 | 95,105 |
| மண்ணெண்ணெய் | 1 | - | 10,488 | - |
| ஜெட் A-1 | 5 | - | 44,703 | - |
| ஓட்டோ டீசல் | 5 | 15 | 44,896 | 113,633 |
| சுப்பர் டீசல் | 3 | - | 17,232 | - |
| உலை எண்ணெய் | 8 | - | 48,120 | - |
| சோல்வன் | 1 | - | 342 | - |
| கைத்தொழில் மண்ணெண்ணெய் | 1 | - | 1,593 | - |
| பழுதுபார்க்கும் நிலையில் உள்ள தாங்கிகள் | 3 | - | - | - |
| **மொத்தம்** | **40** | **29** | **265,305** | **208,738** |

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

## 2.2 எரிபொருள் விநியோகம்

2025 ஆம் ஆண்டுக்குள், நான்கு எரிபொருள் விநியோக நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும், மேலும் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் அந்த நிறுவனங்களின் எரிபொருள் தேவைகளுக்கு ஏற்ப எரிபொருளை விநியோகிக்கும். கொலன்னாவை மற்றும் முத்துராஜவெலவில் உள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் இரண்டு பிரதான முனையங்கள் உட்பட பிராந்திய எரிபொருள் களஞ்சியசாலைகளில் இருந்து எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்கு எரிபொருள் விடுவிக்கப்படும், மேலும் 2025 ஆம் ஆண்டில் எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தின் முன்னேற்றம் அட்டவணை 11.2 இல் காட்டப்பட்டுள்ளது.


இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் மொதத்தத் தொகை 3,502,397 கிலோ லீற்றராக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 2,532,372 கிலோ லீற்றர், லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு 320,214 கிலோ லீற்றர், சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தற்கு 346,512 கிலோ லீற்றர் மற்றும் ஆர்.எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு 303,299 கிலோ லீற்றர் எரிபொருளும் விநியோகிகப்பட்டுள்ளது. இதற்கிணங்க, வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த எரிபொருள் விநியோகத்தில் 72% இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் மீதி 28% லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஆர்.எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கும் உரித்தானதாகக் காணப்படுகிறது.

அட்டவணை 11.2
**வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2025.09.30 ஆம் திகதியில் உள்ளவாறான எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள்**

| உற்பத்தி வகைகள் | தொகை (கி.லீ) | | | | |
|---|---|---|---|---|---|
| | CPC | LIOC | SINOPEC | R.M.PARK | மொத்தம் |
| உலை எண்ணெய் | 385,960 | - | - | - | 385,960 |
| ஜெட் A-1 | 453,410 | - | - | - | 453,410 |
| லங்கா ஓட்டோ டீசல் | 761,621 | 144,042 | 167,935 | 136,250 | 1,209,847 |
| லங்கா சுப்பர் டீசல் | 23,784 | 5,023 | 6,580 | 6,857 | 42,244 |
| நெப்தா | 193,018 | - | - | - | 193,018 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 690,258 | 160,226 | 166,189 | 153,665 | 1,170,339 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 24,321 | 10,923 | 5,808 | 6,527 | 47,579 |
| **மொத்தம்** | **2,532,372** | **320,214** | **346,512** | **303,299** | **3,502,397** |

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

வரைபு 11.1
**எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் –2025**




### 2.3 எரிபொருள் விநியோகம் தொடர்பான வசதிகளை மேம்படுத்துதல்.

எரிபொருள் களஞ்சிய வசதிகள் மற்றும் எரிபொருள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் குழாய்களைப் பராமரிப்பதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் (CPSTL) பொறுப்பேற்றுள்ளதால், உயர் தரம் மற்றும் தரப்படுத்தலை உறுதி செய்வதற்காக இந்த வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படி, எரிபொருள் கையாளுதல் மற்றும் விநியோகத்தில் செயற்திறன், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் நவீனமயமாக்கவும் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **கொலன்னாவையில் பெற்றோலிய களஞ்சியத் திறனை அதிகரிக்கும் வகையில் ஆறு (06) களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல்**

இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய வசதிகளை வழங்கும் பொது வசதி வழங்குநராக செயற்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், இவ் ஆண்டு செப்ரெம்பரில்




அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் புதிய களஞ்சியத் தாங்கிகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படடன

கொலன்னாவை முனையத்தில் எரிபொருள் களஞ்சிய வசதிகளை மேம்படுத்த ஆறு (06) புதிய எரிபொருள் தாங்கிகளை நிர்மாணிக்கும் பணியைத் ஆரம்பித்துள்ளது. முன்னைய கோவிட் தொற்றுநோய்களின் போது நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட இவ் ஆறு தாங்கிகளின் நிர்மாணப் பணிகள், நெருக்கடியான சூழ்நிலைகள் காரணமாக செயற்படுத்தப்படாமல் போனது. இருப்பினும், இவ் ஆண்டு அபிவிருத்தி பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, செப்டம்பர் 17 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் இத் திட்டம் திறந்து வைக்கப்பட்டது. இவ் 06 களஞ்சிய தாங்கிகளின் நிர்மாணப் பணிகள் 2027 செப்ரெம்பர் 29 ஆம் திகதி பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ் 06 தாங்கிகளின் களஞ்சியத் திறன் 64000 கன மீட்டர் ஆகும். இது கொலன்னாவை முனையத்தில் எரிபொருள் களஞ்சியத் திறனை கணிசமாக அதிகரிக்கும். இத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ. 3374 மில்லியன் ஆகும். இதற்கான் நிதி வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்திடம் (CPSTL) இருக்கும். செப்டம்பர் 30 ஆம் திகதியளவில், தொடர்புடைய ஒப்பந்ததாரர் இவ் இடத்தில் தாங்கிகளின் நிர்மாணப் ஆரம்ப கட்ட பணிகளை ஆரம்பிப்பார்.

- **கொலன்னாவ முனையத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் வரை 18 அங்குல விட்டம் கொண்ட புதிய குழாய்த் தொகுதியை நிர்மாணித்தல்**

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளை கொண்டு செல்லும் குழாய் அமைப்பு மிகவும் பழமையானதும் மற்றும் பழுதடைந்தும் உள்ளர். எனவே எரிபொருள் பரிமாற்றத்தை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் அமைப்பை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. இதற்கான, பெறுகை செயற்பாடுகள் தேசிய திட்டமிடல் திணை க்களம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடனும்

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ.2,853 மில்லியன்(வரி நீங்கலாக) ஆவதோடு இத் திட்டத்தின் காலம் 18 மாதங்களாகும்.

- **தற்போதுள்ள காங்கேசன்துறை பிராந்திய தொகை களஞ்சிய நிலையத்தை இடமாற்றம் செய்தல்**

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது, வட மாகாணத்திற்கு எரிபொருள் விநியோகிப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. இவ் களஞ்சிய நிலையமானது சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணியில் அமைந்துள்ளதுடன் தற்போது இது பாவினையில் இல்லாதுள்ளது. பின்னர், இவ் பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலியகளஞ்சிய முனையத்திற்கு உரித்தான காணியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த கொள்ளளவுத் திறன் 540,000 லீற்றர் ஆகும். இதன் நிர்மாணப் பணிகள் 2025 மே 08 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு தொடர்புடைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

- **தற்போதுள்ள 10 அங்குல விட்டம் கொண்ட குழாய்வழிக்குப் பதிலாக, கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய முனையத்திலிருந்து கொழும்பு துறைமுக முனைய சேரம் நுழைவாயில் வரை 18 அங்குல விட்டம் கொண்ட குழாய்வழியை நிர்மாணித்தல்**

இந்த திட்டத்திற்கான பெறுகை செயற்பாடுகள் மற்றும் கேள்விமனுக்களின் மதிப்பீடு பூர்த்தியடைந்துள்ளது. தொடர்புடைய ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவிடம் (CAPC) அறிக்கை சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- **கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய முனையத்தில் அமைந்துள்ள 30 மற்றும் 31 ஆம் இலக்கங்களைக் கொண்ட இரண்டு (02) தாங்கிகளை இடமாற்றம் செய்தல்**

இந்தத் திட்டம் தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, மேலும் அமைச்சரவைப் விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

- **கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய முனையத்தின் வலய இல 07 இல் எரிபொருள் நிரப்பும் வசதிகளை மேம்படுத்துதல்.**

2026 ஆம் ஆண்டுக்கு ரூ. 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, மேலும் அமைச்சரவையிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- **கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய முனையத்திலிருந்து களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திற்கு நாப்தாவை கொண்டு செல்லும் 10 அங்குல குழாய்க்கு பதிலாக 12 அங்குல குழாயை நிறுவுதல்.**

இத் திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன், அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுளளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துணைக் குழாய் மற்றும் துணை உட்கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தின் தெற்கு இறங்குதுறையில் கப்பல்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பிராந்திய கப்பல்களுக்கான எரிபொருள் வர்த்தகத்தில் இலங்கையின் திறன்களை விரிவுபடுத்துவதில் ஒரு மைல் கல்லாக உள்ளது.

## 2.6 2026 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

### 1. உட்கட்டமைப்பு மற்றும் திறன் விரிவாக்கம்

- எரிபொருள் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒட்டுமொத்த களஞ்சியத் திறனை அதிகரிப்பதற்கு கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல களஞ்சியத் தாங்கிகளின் நிர்மாணம் மற்றும் செயற்பாட்டைத் தொடருதல்
- பாதுகாப்பான மற்றும் நம்பகமான எரிபொருள் பரிமாற்றத்தை உறுதி செய்வதற்காக, மாற்று மற்றும் ஒருமைப்பாடு மதிப்பீடுகள் உட்பட குழாய் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.
- நாட்டின் அனைத்து எரிபொருள் தேவையையும் பூர்த்தி செய்வதற்கு மொத்த எரிபொருள் களஞ்சிய சாலைகளின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் திறனை மேம்படுத்துதல்.

### 2. சிறந்த மற்றும் பாதுபாதுகான செயற்பாடுகள்

- தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ அமைப்பை (OHS) செயற்படுத்தி, விபத்துக்களை குறைப்பதற்கும் அவசரகாலத் தயார்நிலையை மேம்படுத்துவதற்கும் பொருத்தமான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பிரதான விபத்துக்களை பூஜ்ஜியமாகப் பராமரித்தல் மற்றும் பணியாளர்கள் பயிற்சி மற்றும் வலுவான பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் காயங்கள் ஏற்படுதல் மற்றும் வாகன விபத்துகளைக் குறைப்பதற்கு பாடுபடுதல்.

### 3. தொழில்நுட்பம் மற்றும் நவீனத்துவம்

- கணினி பயன்பாடு, தரவு ஒருமைப்பாடு மற்றும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்த மென்பொருளின் சமீபத்திய பதிப்பை மேம்படுத்தி, பூஜ்ஜிய செயலிழப்பு நேரத்தை உறுதி செய்தல்
- மின்சார நுகர்வு மற்றும் செயற்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்கு பல இடங்களில் சூரிய ஒளிமின்னழுத்த அமைப்புகளின் (solar photovoltaic systems) ஒருங்கிணைப்பை விரிவுபடுத்துதல்.
- சொத்து ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க காந்தப் பாய்வு கசிவு (magnetic flux leakage) (MFL) கருவிகள் போன்ற உயர்தர சோதனை தொழில்நுட்பங்களை செயற்படுத்துதல்

### 4. மனித வள அபிவிருத்தி

- திருத்தப்பட்ட மனிதவளக் கொள்கைகள், வெற்றிகரமான திட்டமிடல், இற்றைப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு கட்டமைப்புகள் மற்றும் தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி திட்டங்கள் மூலம் பணியாளர்களை வலுப்படுத்தல்
- நிறுவன நோக்கங்களுடன் ஒத்துப்போகும் மேம்பட்ட பணியாளர் செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் பயிற்சித் திட்டங்கள்.

### 5. சேவைகள் மற்றும் வருமான வழிகளை விரிவுபடுத்துதல்

- மேலதிக வருமான ஆதாரங்களாக ஆய்வுகூட சேவைகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை பல்வகைப்படுத்துவதை ஆராயுதல்.
- வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், கப்பல் எண்ணெய் வணிகத்திற்கான களஞ்சியத் திறனை தொடர்ந்து விரிவுபடுத்தவும் எரிபொருள் எண்ணெய் விநியோக வசதிகளை உருவாக்குதல்.

# இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை

## 1. அறிமுகம்

2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் படி, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) தாபிக்கப்பட்டுள்ளதுடன், இந் நிறுவனம், இலங்கையில் அனைத்து பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு ஆய்வுகள், அபிவிருத்திகள் மற்றும் உற்பத்தி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாக உள்ளது. இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) கனிய வள எண்ணெய் மற்றும் வாயு ஆய்வுகள் மற்றும் உற்பத்திகளை முன்னெடுக்கும் போதுசர்வதேச தரத்திற்கு ஒப்பான நடைமுறைகள் மற்றும் சிறந்த சுகாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் நியமங்களை கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதோடு இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சக்தி வள பாதுகாப்பிற்கும் பங்களிப்பு செய்தல் வேண்டும். இது முன்னர் இருந்த நிறுவனமான பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் (PRDS) பணிகளை முன்னெடுக்கின்றது.

### நோக்கங்கள்

- வளர்ச்சி மற்றும் வினைத்திறனைத் தூண்டுவதற்காக, ஆய்வு மற்றும் உற்பத்தி இரண்டையும் உள்ளடக்கிய மேல்நிலை பெற்றோலிய செயற்பாடுகளை அதிகரித்தல்.
- தேசிய பெற்றோலிய தரவு களஞ்சியத்திற்குள் தரவுகளின் அளவை அதிகரித்து அதன் தரத்தை மேம்படுத்துதல், விரிவான மற்றும் நம்பகமான தகவல் தரவுத்தளத்தை உறுதி செய்தல்.
- மேல்நிலை பெற்றோலிய செயற்பாடுகள், நிலையான தன்மையை ஊக்குவித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் தொழிற்துறை தரநிலைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை முறையாக பேணுவதற்கான முறையான கட்டமைப்பை நிறுவுதல்
- பெற்றோலிய செயற்பாடுகளின் தொடர்ச்சியான கட்டங்களில் தேசிய சமூக-பொருளாதார நன்மைகளை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கத்தை வளர்த்தல்
- சுற்றாடல் மாசடைதலை தடுப்பதற்கும், பெற்றோலிய செயற்பாடுகளுடன் தொடர்புடைய சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் (HSE) அபாயங்களைக் குறைப்பதற்கும், சுற்றாடல் அமைப்புகள் மற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் இருவரின் நல்வாழ்விற்கும் முன்னுரிமை அளித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

### நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) முதன்மை செயற்பாடுகளில், ஆய்வுத் துண்டங்களை குறிப்பிடுதல், முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக இந்தத் தெதுண்டங்களை ஊக்குவித்தல், பெற்றோலிய வளங்கள் சட்டத்தின்படி தேவையான அனைத்து அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல், நகல் விதிமுறைகளைத் தயாரித்தல், பெற்றோலிய நடவடிக்கைகளுக்கான வழிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல், தொடர்புடைய ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் மற்றும் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதோடு மேலதிகமாக, சர்வதேச ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த

மேல்நிலைத் தொழிற்துறையின் திறமையான மற்றும் பொறுப்பான ஒழுங்குபடுத்தலை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

## 2. 2025 ஆம் ஆண்டின் திட்டம் மற்றும் செயற்பாட்டு செயற்திறன்

- மன்னார் கடற்படுகையின் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு துண்டங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு, அபிவிருத்தி மற்றும் உற்பத்திக்கான அனுமதிப்பத்திர சுற்று நடத்துவதற்கு 2025 மே 07 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர். அனுமதிப்பத்திர சுற்றை ஊக்குவிக்க பொருத்தமான சந்தைப்படுத்தல் ஆலோசகரை வாங்குவதும் இந்த ஒப்புதலில் அடங்கும், இதற்காக 2025 ஜூலை 15 ஆம் திகதி முன்மொழிவுகளுக்கான கேள்விமனுக்கோரல் விளம்பரப்ப-டுத்தப்பட்டது. பெறப்பட்ட திட்டங்கள் 2025 செப்ரெம்பர் 09 ஆம் திகதி திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு இணையாக, பெற்றோலிய வள ஒப்பந்தத்திற்கான (PRA) நகல் ஒழுங்குவிதிமுறைகள் தயாரிக்கப்பட்டு, சட்ட வரைஞ்ஞர் திணைக்களத்துடன் இணைந்து இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

- 2025 மன்னார் கடற்படுக்கை அனுமதிப்பத்திர சுற்றுக்கான தயாரிப்பில், புதுப்பிக்கப்பட்ட மாதிரி பெற்றோலிய வள ஒப்பந்தம், பிரதான கேள்விமனு ஆவணம் என்பன 2025 ஆகஸ்ட் 12 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திர சுற்றுக்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேல் குழு (CANC) மற்றும் பெறுகைக் குழு (PC) ஆகியவற்றை நியமிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை வலுசக்தி அமைச்சிற்கு தெரிவித்துள்ளது.

- செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை அதன் முந்தைய வளாகத்திலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்திற்கு மாற்றப்பட்டது, இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் மில்லியன் கணக்கான ரூபாய்கள் சேமிக்கப்பட்டன.

- தற்போது, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை வரவிருக்கும் அனுமதிப்பத்திர சுற்றுக்கு (2025-01) தேவையான அனைத்து ஆவணங்களையும் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது.


## 3. 2026 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள்

அனுமதிப்பத்திர சுற்று பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

- சந்தைப்படுத்தல் பிரச்சாரம் 2026 ஜூன் மாதத்திற்குள் நிறைவடைந்து திட்ட மதிப்பீடு ஆரம்பிக்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டாள-ர்களுடனான பெற்றோலிய வள ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கான பேச்சுவார்த்தைகள் 2026 ஆகஸ்ட் மாதத்திற்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- துண்டங்களை வழங்கி 2026 நவம்பர் மாதத்திற்குள் PRA ஐ செயற்படுத்துவதே இறுதி இலக்காகும்
- பின்னர் ஆய்வு அனுமதிப்பத்திரங்கள் செயற்பாட்டாயர்களுக்கு வழங்கப்படும், இதன் மூலம் அவர்கள் 2026 டிசம்பர் மாதத

வரைபடம் 12.1

2025 மன்னார் கடற்படுகை அனுமதிப்பத்திர சுற்றுக்கு ஒதுக்கப்பட்ட அண்ணளவான பகுதி: 2025 – 01)



අංක 437, ගාලු පාර, කොළඹ 03.
இல. 437 காலி வீதி, கொழும்பு 03.
**No. 437, Galle Road, Colombo 03.**
0112 574922
www.powermin.gov.lk
www.powermin.gov.lk